ஸ்ரீ

ரமண ஞான போதம்

மூன்றும் பாகம்

அநுபவ விளக்கம்

(முதற் பிரிவு)

ஸ்ரீ முருகனர்



ஸ்ரீ ரமண பகவான்

எல்லை யிலாதபே ரின்ப வெழில்வடிவு,
தொல்லமரர் காணுத் துரீயச் சுடர்வடிவு,
நல்ல சிவமா நடந்த குருவடிவு,
சொல்ல வொணுத சொரூபமாத் தோக்கதே.

—ஸ்ரீ முருகனுர்

(அநுபவ விளக்கம்—முதற் பிரிவு—112)



ஸ்ரீ முகவைக் கண்ண முருகனர்

ஸ்ரீ முருகனரது கையெழுத்து. பக்கம் XV-ஐப் பார்க்கவும்.

ஓம்

நமோ பகவதே ஸ்ரீ அருணாசல ரமணாய.

ஸ்ரீ
ரமண ஞான போதம்

மூன்றாம் பாகம்

அநுபவ விளக்கம்

(முதற் பிரிவு)

இயற்றியவர்

ஸ்ரீ முருகனார்

பதிப்பாளர்

ஸ்ரீ ரமண கேந்திரம்—புது தில்லி

1982

உரிமை பதிப்பாளருடையது

கிடைக்குமிடம் :—

ஸ்ரீ ரமணாச்ரமம் புத்தக சாலை
திருவண்ணாமலை — 606 603
தமிழ் நாடு.

Ramana Kendra,
8, Institutional Area,
Lodi Road, New Delhi-110 003.

Sri Sadhu Om
Tiruvannamalai-606 603
Tamil Nadu

Ramana Kendra,
No. 1, C. P. Ramaswami Iyer Road,
Madras-600 018

Ramana Maharshi Centre for Learning,
40/41, II-Cross, Lower Palace Orchards,
Bangalore-560 003

விலை ரூ. 8

மத்திய அரசின் உதவி பெற்று இந்நூல் வெளியிடப்படுகிறது.

Published with the Financial Assistance from the Government of India, Ministry of Education & Social Welfare (Department of Education.)

This book has been published on the paper supplied by the Government of India at concessional rates.

அச்சிட்டோர் :
விநாயக ஃபைன் ஆர்ட் பிரின்டர்ஸ்,
163, வெள்ளாளத் தெரு, சென்னை-600 084.

பதிப்புரை

ஸ்ரீ முருகனார் முதன் முதலில் ஸ்ரீ ரமண பகவானைத் தரிசித்தடைந்த ஆதிநாட்களில் பாடிய "ஸ்ரீ ரமண சந்நிதி முறை" யானது அவர் பகவானைப் பிரார்த்தித்து நின்ற சாதனைக்கால நிலையைக் காட்டும் தோத்திர நூலாக அமைந்திருந்தது. பிறகு ஸ்ரீ ரமண சந்நிதியில் அவர் உறைந்திருந்த காலங்களிற் சற்குருவினிடமிருந்து அறிந்த உபதேசச் செல்வங்களை யெல்லாம் திரட்டித் தொகுத்தளித்த பாடல்கள் 'குருவாசகக் கோவை'' யென்னும் சாத்திர நூலாயிற்று. அதன் பிறகு ஸ்ரீ பகவானது பேரருளால் ஸ்ரீ முருகனார் அடைந்திருந்த ஈடிணையற்ற ஞானப் பெரும் பேருகிய ஆன்ம சாட்சாற்காரம் எப்படிப்பட்ட தென்பதை "ஸ்ரீ ரமணாநுபூதி" இரண்டு பாகங்களிலும், மேலும் மிகச்சிறப்பாக "ஸ்ரீ ரமண ஞான போதம்" என்னும் இப்பெரு நூலிலும்தான் நாம் பரக்கக் காணக் கிடைக்கின்றது. அதாவது, ஸ்ரீ ரமண ஞான போதம் முழுவதும் ஸ்ரீ முருகனாரது சுவாநுபவப்பேற்றின் பெருமிதமாகவே விளங்குவதால், ஆன்மாநுபூதியை நாடி வரும் ரமண பக்தர்களுக்கு இந்நூல் பெருந் தேற்றத்தையும் திடத்தையும் அளிப்பதாக வுள்ளது.

பல்லாயிரக் கணக்கான செய்யுட்க ளடங்கிய இந் நூலில் எத்தகைய ஆன்மஞானச் செல்வராக ஸ்ரீ முருகனார் விளங்குகின்றார் என்பதை நாம் நோக்குவோமாயின், பகவான் ஸ்ரீ ரமணபிரானின் அருட் கொடை எவ்வளவு வலியது, பெரியது, நிச்சயமானது என்பது நமக்கு நன்கு விளங்கும். எனவே ஸ்ரீ ரமண திருவருண் மகிமையை ஸ்ரீ முருகனாரது சுவாநுபவத்தால் வெளிப்படுத்துவதே இந்த "ஸ்ரீ ரமண ஞான போதம்" என்னும் நூலாகும். இந் நூலினுள் சுமார் எண்ணாயிரம் பாடல்கள் ஸ்ரீ முருகனாரது ஞாநுபவ விளக்கமாகப் பாடப்பட்டுள்ளன. இப் பெரும் பகுதி முழுவதையும் 'அநுபவ விளக்கம்' என்ற தலைப்பின்கீழ்க் கொண்டு வருகிறோம். ஆனால் இவ் வெண்ணாயிரம் பாடல்களையும் ஒரே புத்தக மாக்குவதில் பதிப்பாளர்க்கும், படிப்பார்க்கும் உள்ள சிரமத்தைக் கருதி, சுமார் இரண்டாயிரம் பாடல்களைக்

கொண்ட நான்கு பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொன்றும் "அநுபவ விளக்கம் I (முதற் பிரிவு), II (இரண்டாம் பிரிவு) III (மூன்றும் பிரிவு) IV (நான்காம் பிரிவு)" என்றவாறு பெயரிட்டுப் பதிப்பிக்கின்றோம். இவ்வாறு அநுபவ விளக்கம் I (முதற் பிரிவு), என்னும் இந்நூல் 'ஸ்ரீ ரமண ஞானபோதம்' என்னும் பெரு நூலின் மூன்றுவது பாகமாக அமைகின்றது.

சுமார் 14,000 செய்யுட்களைக் கொண்ட கவிதைப் புதைய லாய்க் கிடைத்த செல்வத்தைப் பல தொகுதிகளாகப் பிரித்து, வரிசைப்படுத்தி, அச்சேற்றி, "ஸ்ரீரமண ஞான போதம்" என்ற பெயருடன் வெளியிடும் திருப்பணியில் தில்லி ரமண கேந்திரத்திற்குப் பெருமிதம் என்பது ஒருபுற மிருக்க, இந்தத் திட்டத்தைச் செவ்வனே நிறைவேற்றத் தீவிரமாய்ச் செயலாற்றி வரும் பதிப்பாசிரியர் தவத்திரு சாது ஓம் அவர்களது தளரா வூக்கமும், சலியா வுழைப்பும், திண்மையான நுண்ணுணர்வும் பரிதும் போற்றிப் பாராட்டுதற் குரியனவாம்.

ஸ்ரீ முருகனாரின் பல்லாயிரம் பாடல்கள் வெவ்வேறு தருணங்களில், பல்வேறு நிலைகளிற் பாடிக்குவித்த, விலைமதிக்க வொண்ணாத நவரத்தினங்களாகும். அவை ஒவ்வொன்றிலும் உறைந்து கிடக்குந் தனியழகைத் தனித் தனியாய் ஆழ்ந்து அனுபவித்து ஆனந்திக்கலாம். ஆயினும், மாபெரும் நவரத் தினக் குவியலொன்றை முத்து, பவழம், மரகதம், மாணிக்கம் என்று பாகுபடுத்தி, சின்னஞ்சிறு வரிசைகளாய்க் கோத்து, கோவையில் ஓர் புத்தழகு புகுத்தி, வண்ண விளக்கம் செய்வது எப்படி? மலை போன்ற குவியலை எப்படி பற்பல ஒளி வீசும் மாலைகளாக மாற்றித் தருவது? நிறைந்த கல்வி, கவிதை யுள்ளம், ஸ்ரீ ரமண பக்தி இவை யாவும் ஒருங்கே பெற்ற சிறந்த கலைஞர் அல்லவா இத்தகைய மகத்தான சிக்கலான வேலைக்குத் தேவை?

இவ் வகையில் பல்லாயிரம் பாடல்களைப் பிரதி செய்து, பிரித்தெடுத்து, வகை வகுத்து, வரிசைப் படுத்தி, தலைப்புக்களும் விளக்கங்களும் சேர்த்து, மாபெரும் மலையைப் பல வண்ண மாலைகளாக்கி நமக்குப் பதிப்பாசிரியர் தந்துள்ளார். இந்தத் தொண்டின் மூலம் முருகனர் அவர்களின் உள்ளத் தெளிவை யும் பகவானது திருவருள் வெள்ளத்தையும் திறமையுடன்

வெளிப்படுத்தி, தாம் பெற்ற வின்பத்தை வையகத்துக்கும் வழங்குகின்ருர் பதிப்பாசிரியர்.

இந்நூலை அச்சிட முன்வந்துள்ள அன்பர் ஸ்ரீ நிவாச ராவ் அவர்கள் ஸ்ரீ முருகஞரிடம் பெரு மதிப்பும் நல்லுறவும் கொண்டவர். இதன் பதிப்பாசிரியருடன் ஒத்துழைத்து அவர் சிறப்புப் பணி புரிந்து வருவதைக் கேந்திரம் பாராட்டுகின்றது.

கி. சுவாமிநாதன்

ஸ்ரீ ரமண கேந்திரம்,

19-8-1982. புது தில்லி.

ஓம்

நமோ பகவதே ஸ்ரீ அருணாசல ரமணாய

முன்னுரை

பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் உலக மக்கள் அனைவராலும் பரமான்ம ஞானி என்றும் ஜீவன்முக்தர் என்றும் தடையின்றி அறியப்பட்ட மகாபுருஷர். ‘அவர் எதைப் புருஷார்த்தம் என்று போதித்தாரோ அந்த பிரம்மசாட்சாத்கார நிலையை அவரை யடுத்து அவரது உபதேசப் படியே அடையப் பெற்றவர் யாரேனும் உளரோ?’ என, ஆன்ம ஞானத்திற்காக மட்டும் ஸ்ரீ ரமண பகவானை நாடி, இன்றும் புதிதாக வந்து கொண்டிருக்கும் உத்தம முமுக்ஷுக்கள் பலர் வினவுவ துண்டு. ஏன் இவ்வாறு வினவுகின்றனர்? ஏன் எனின், “ஸ்ரீ பகவான் காட்டிய குறிக்கோளை நாமும் அடைய முடியுமா? அதற்கு ஸ்ரீ பகவான் அருள்புரிவாரா? யாருக்காவது அவ்வாறு திருவருள் செய்துள்ளனரா? ஸ்ரீ ரமண திருவருளுக்குப் பாத்திரமாகி அவ்வான்ம சாட்சாற்காரம் பெற்றவர்களுள் யாரொருவராவது, எங்களைப் போன்ற புதிய ரமண பக்தர்களுக்கு, தாம் பெற்ற பெரும் பேற்றைப் பகிரங்கமாக மார்தட்டிக் கூறி ‘இது ஸ்ரீ ரமண கருணையின் விளைவே’ என்று தம் அனுபவத்தை விவரித்து, எங்களைத் தேற்றி, ஊக்குவிக்கக் கூடிய உத்தம உயரிய சற்சீடர் யாராவ திருந்தால், அன்னாரது வாய்மையான வாய்மொழியால் நாமும் மிகுந்த தைரியமும் பலமும் பெற்று ரமணோபதேசங்களை நடைமுறையிற் பின்பற்றலாமே!” என்று விரும்பி, ஏங்கி நிற்பதனால் தான்! இத்தகைய உத்தம ரமண பக்தர்களாகிய முமுக்ஷுக்களுக்குப் பெருந் துணையாக இன்றும், இனி என்றும் நிற்பது ஸ்ரீ ரமண பகவானால் தாம் அடைந்த ஞானநுபவ விளக்கமாக ஸ்ரீ முருகனார் தரும் இந் நூலே யாகும்.

ஸ்ரீ முருகனார் ஸ்ரீ பகவானது பேரருளாற் பெற்ற ஞானநுபவம் எத்தகையது என்பதை இந்நூலின் பாடல் ஒவ்

வொன்றும் தெற்றென விளக்குகின்ற தெனினும் அவற்றுள் சிலவற்றை அறிமுகப் படுத்துவோம்.

எத்தனை தான் தெய்வ தரிசனங்களும், யோகியாக ஆதா தாரங்களிலும் குண்டலினி அனுபவமும் ஒருவன் பெற்றிருந் தாலும் சரி, ஏதாவது ஒரு தேகத்தில் — அது எத்தகைய உன்னதப் பொன்மய தேகமாயினும் சரி — 'இது நான்' என்ற அகந்தையுணர்வு உள்ளவரை அவனடைந்த அனுபவங் கள் சம்பூரண ஞானநுபவ மாகா தல்லவா? இவ் வளவுகோலை ஸ்ரீ முருகனரிடம் வைத்துப் பார்ப்போம்.

"மனத்தாற் கருதவொணு மாட்சிசேர் பாதந்
தெனைத்தா னிருத்தினு னெம்மான்—முனைந்த
வகந்தையழிந் தோங்குசொரூ பானுபவ மோனம்
முகந்ததுளம் முற்றமாய் முற்று."   பாடல்-638

"இன்பவொளி வீசு மிறைவனருட் செஞ்சரணந்
தன்புணர்வா மோன வறிவாலே—அன்புசிவ
மாகக் கிளர்சொரூ பானுபவந் தற்றதுபொய்த்
தேகத் தகந்தை மதி."   பாடல்-1114

"இவ்வுலக வாழ்வாகிய நனவுக் கனவிலிருந்து ஞானவிழிப் புற்று லல்லவா அது விடு பேறு? ஸ்ரீ முருகனரின் அநுபவம் யாதோ" வெனின்.

"அழுக்குடம்பை நானெனற கங்கரித்துப் பாழில்
வழுக்கலுற்றேன், சுந்தவருள் வாலறிவன் றன்னால்
விழ்க்கலுற்று முற்ற விசுத தான்மா வாகச்
செழிக்கலுற்றேன் மோனவியற் சிற்பரவாழ் வுற்றே."
                பாடல்-1087

ஸ்ரீ முருகனரது ஜீவன் முக்தி நிலையை விளக்கும் பாட லாவது:

"சுந்தவருள் விந்தைதத் துலக்கந்தாற் சிச்சடப்பொய்ம்
மந்தவகங் கார மனக்கலக்கங் கெட்டொழியப்
புந்தமுத மோனனு பூதியளித் தான்டவனல்,
அந்தமியா முத்தி யபரோட்ச மானதே."   பாடல்-1101

ஸ்ரீ ரமண திருவருளால் தானடைந்தது பாரமார்த்திக மெய்ப் பதமே என்பதை முருகனர்;

"குருமூர்த்தி யாலெனக்குக் கூடியது சுத்தப்
பரமார்த்த மாமெய்ப் பதம்." பாடல்-1093

"விச்சையா லாண்டவருள் வித்தகனால் வஞ்சமலப்
பச்சைநான் மெய்ப்பதம்பெற் றேன்." பாடல்-1092

என் றிசைக்கின்றார்.

இனி "இறவாப் பிறவாப் பதம் பெற்றோ ரன்றோ இறைபயம் பெற்றோர்? ஸ்ரீ முருகனார் என்ன கூறுகின்றார்?" என்பார்க்கு,

"குருவடிவா லென்னையாட் கொண்டானாற் கண்டேன்
கருவடையா வாழ்வாங் கதி." பாடல்-1122

"பரணமோ ராது பதைத்தேன் பரிவா
லரணமா வாண்டா னருட்சிற் பதத்திற்
சரண மடைந்தேன் சதாசிவவாழ் வுற்றேன்
மரண ஜனன மயக்கமற் றேனே." பாடல்-1818

என்று விடையளிக்கின்றன.

"மோனமன்றோ ஞான வரம்பு? அது வன்றோ உயர்வற வுயர்ந்த நிலை யெய்தியதற்கு ஆன்றோர் கூறும் அடையாளம்? ஸ்ரீ முருகனாரது அநுபவமோ" வெனின்,

"எத்தகவு மற்ற வெனக்கு நிரோதுகமாச்
சத்தி நிபாதச் சதிர்விளைத்த வாண்டவனாற்
புத்திக் கலக்கமறப் பொங்கிற் றிதயத்து
முத்தியுணர் வானகப மோனானு பூதியே"

என்று விடை கூறுகிறது பாடல் 1154.

ஸ்ரீ முருகனா ரடைந்த நிலை பிரம்மாநுபூதியே என்பதும், அவரது நிலை ஒழிவி லொடுக்க நிலையே என்பதும்,

"நன்னருட்கூர் வாள்விழியாற் சிந்துஞ் சடமுமாய்
பின்னிக் கிடந்த பிணக்கா மகந்தையைச்செற்
றென்னைப் பணிகொண்ட வெம்மானாற் கண்டுகொண்டேன்
பின்னமற்ற சுத்தப் பிரம்ம சொரூபமே."

என்ற பாடல் 1144—இனாலும்,

"பரமார்த்த மோனவருட் பார்வை யெனக்குத்
தருமார்த்த காமமோட் சங்க ளெலாமாக்
குருமூர்த்தி யாலே குலவலா வுள்ளத்
தரைமாத் திரையி லடங்கலுற் றேனே."

என்ற 1111 ஆவது பாடலாலும் நாமறிய முடிகின்றது. ஸ்ரீ முருகனாரடைந்த அருள்வாழ்வு எத்தகைய பெருமிதமான வாழ்வு என்பது,

"தீனமனப் பான்மை சிறிதுமில்லேன், சுத்தவருள்
வானப் பெருமிதமா வாழ்வு மலர்தலுற்றேன்,
ஞானப் பிராப்தியெனு நாட்டத்தால் யானெனும்பொய்
யூனக் கலக்க வுணர்விறந்த வாற்றுலே."

என்ற 1166-ஆம் பாடலால் விளங்குகின்றது.

இத்தகைய மாகோன்னத பிரம்ம சாட்சாற்கார நிலையை ஸ்ரீ ரமண பகவானருளால் ஸ்ரீ முருகனார் அபரோக்ஷானுபவமாக அடைந்தமைக்கு நாம் துணிந்து கூறத்தக்க முக்கியமான காரணங்கள் இரண்டுண்டு. முதலாவதாக, முருகனாரிடமிருந்தது ஈடிணையற்ற குருபக்தியே. ஸ்ரீ ரமணபிரானைத் தவிர மும்மூர்த்திகளுள்ளுங்கூட யாரையும் நாடாத ஏக பக்தியே. இவ்வேக குருபக்தி ஸ்ரீ பகவான் ரமணரைப் பற்றி ஸ்ரீ முருகனார் கேள்விப்பட்டவுடனேயே அவருள்ளத்தில் மலரத் தொடங்கி விட்டது. அப்போது அவருக்கு அகத்தே ஏற்பட்ட உள்ளுணர்வுகளையும், புறத்தே மனைதுறத்த லாகிய நிகழ்ச்சிகளையும் அகப்பொருட் துறையில் வடிக்கப்பட்ட அவரது பாடல்களாலாகிய **"அகப்பொருள் விளக்கம்"** என்ற பெயரோடு இதற்குமுன் வெளியிடப்பட்ட 'ஸ்ரீ ரமண ஞான போத'த்தின் இரண்டாவது புத்தகத்தில் அன்பர்கள் காணலாம். ஸ்ரீ ரமண திருவருள் அவரை அகப்புறத் தீர்த்தநதோடு, வீடு விட்டுப் ஈர்த்து வந்து, அருணாசல வீடாகிய ரமண அக குகையில் அருட்காதலாற் சிறைப்படுத்தி வைத்துவிட்டது. சற்குருவை ஆசிரமத்திற் சந்தித்த முதல் நாளே, 1923 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 தேதி ஸ்ரீ முருகனார் தாம் பாடிக்கொணர்ந்த பதிகத்தைப் பகவான் சந்நிதியில் வாசித்துச் சமர்பித்த போது தோன்றிய அருளுணர்ச்சியால் நாவுங் குரலும் தழுதழுத்த, மெய்மயிர் பொடிப்ப, சீரிய ரமணக் காதலுடன் சந்நிதியில் அமர்ந்திருந்தார். பிற்காலத்தில் ஸ்ரீ ரமண ஞான போதப்

முழுவதையும் செம்பொன் மணிவாசகத்தால் உலகுக்கு அள்ளி வரையாது வழங்குவதற்கென்று ஸ்ரீ ரமண பகவானுலேயே குறி வைத்துக் கொண்டு வரப்பட்ட இவ்வருட்கவியின்—கருவியின்—பெருமையை அன்று அருகிருந்த சாமானிய மக்கள் எவ்வாற்றும் அறிந்து கொள்ள வியலா ரன்றே? ஸ்ரீ ரமண பகவானைத் தவிர குருவாகவோ தெய்வமாகவோ கூட வேறெவரையும் நாடாத ஏக பத்தியால் தான் ஸ்ரீ ரமண திருவருளைப் பூரணமா யடைய முடியும் என்பதை விளக்கக்கூடியதாக அப்போது ஓர் சம்பவம் நிகழ்ந்தது. அச் சம்பவத்தை ஒரு நாள் ஸ்ரீ முருகனர் என்னிடம் சவிஸ்தாரமாகக் கூறினர். அதனை அவர் வாய் மொழிப்படியே கேட்போம்.

"பகவானது அருட் சந்நிதியி லமர்ந்திருப்பதே போதும் என்ற திருப்தியுடன் நான் உட்கார்ந்திருந்தேன். சற்று நேரம் சென்றதும் ஸ்ரீ பகவான் எழுந்து வெளியிற் சென்றனர். அச் சமயம் விசுவநாதன் என்னும் அன்பர் என்னருகில் வந்து, 'பகவான் மிகப் பெரிய வஸ்து. அவரிடமிருந்து நேரடியாக நீங்கள் எதுவும் பெறவோ அறியவோ இயலாது. இங்கு கணபதி முனிவர் என்று ஒரு பெரியவர் இருக்கிறர். அவர் மந்திரேசுவரர்; அவரிடம் நீங்கள் முதலில் மந்திர தீக்ஷை பெற்றுக் கொண்டால் பிறகு தான் பகவானது உபதேசங்களைப் புரிந்து கொள்ள அறிவு மலரும். நீங்கள் விரும்பினுல் நான் உங்களை அவரிடம் அழைத்துப் போகிறேன்; யோசித்துச் சொல்லுங்கள்; நான் பிறகு வருகிறேன்' என்று மெல்லிய குரலில் இரகசியமாகக் கூறிச் சென்றார்!

"இது எனக்கு எதிர்பாராத தோர் புதிராக இருந்தது. ஆயினும் இவ்விஷயத்தைப் பொருட்படுத்தாமல், பகவானையே எண்ணி யமர்ந்திருந்தேன். பிற்பகலில் விசுவநாதன் வந்தார். 'என்ன யோசித்தீர்களா?' என்றார். அதற்கு நான், 'இங்கு நான் வந்தது ஸ்ரீ பகவானைத் தரிசிக்கவும் அவரருளுக்குப் பாத்திரமாகவும் மட்டுமே யாகும். இங்கு இவ்வா றெல்லாம் பழக்கம்—சம்பிரதாயம்—இருக்கு மென்று நானறியேன். அது எப்படியோ இருக்கட்டும்; பகவான் நேரடியாக எனக்கு அனுக்கிரகம் செய்தால் செய்யட்டும். அப்படி இல்லை யென்றாலும் பரவாயில்லை. அதற்காக வேறு யாரிடமும் தீக்ஷை எடுத்துக் கொள்ள எனக்கு விருப்ப மில்லை' என்று தீர்மானமாகக் கூறி

விட்டேன். பிறகு இரண்டு மூன்று நாட்கள் கழித்து விசுவநாதன் என்னைப் பார்த்த போது இப் பேச்சையே எடுக்க வில்லை. 'இது பயனற்ற காரியம்' என்று என்னை அவர் கைவிட்டு விட்டரர்!"

இந் நிகழ்ச்சியானது ஸ்ரீ முருகனுரைப்பற்றி ஏனையோர் ஆதிநாட்களிற் கொண்டிருந்த கருத்தைக் காட்டுகின்றது. மேற் கூறிய நிகழ்ச்சியைக் கூறிமுடித்த பிறகு அதன் தொடர்ச்சி யாக ஸ்ரீ முருகனர் என்னை நோக்கி, "அடியார்கள் கவலைப் படவே வேண்டாம்; அருள் நிறைவான அமுதக் கடலாகிய பகவான், நடுவில் பரிந்துரைப்பார் யாருந் தேவை யின்றியே, தாமே தமது பக்தர்கள் ஒவ்வொருவரோடும் இதயத்தில் நேரடி யாகவே தொடர்பு கொள்கின்ருர்" என்று தனது அனுபவத்தை மேலிட்டுக் கூறினர்.

இந்த ரமண ஏகபக்தி பிற்காலத்தில் எவ்வாறு முற்றிப் பழுத்து முருகனரிடம் விகசிதமடைந் திருந்தது என்பதை இந் நூலின் 1007 ஆவது பாடலில்,

"பெருமா னடிகளையே பேணலன்றி நான்மற்
றொருமா னிடவருளைச் செல்லேன்—பெருமா
னடிகளதற் கேற்ப வடியேற்கு ஞான
முடிகவித்தான் மோனமுற் றேன்."

என்றும்,

1023 ஆவது பாடலில்,

"அறியாதே னல்லே னனேகர்போற் றேன்று
மிறைவ ரெலாருமொன் றென்றே—அறிந்து
மவானவ ருள்ளு மவாவியென் சிந்தை
சிவரமணன் பாலே செலும்."

என்றும்,

1028 ஆவது பாடலில்,

"ஆண்டவனுக் கன்றி யயலவர்க்கு நானடிமை
பூண்டொழுகச் சற்றும் பொருந்த[illegible]—[illegible]
றன்ன பிறரா லடியேனுக் கெந்நிலைத்தே
யென்னைகிடைத் தாலு மினி!"

என்றும் கூறுவதிலிருந்து விளங்குகின்றது.

ஸ்ரீ ரமண திருவருளால் ஸ்ரீ முருகனர் பிரம்மசாட்சாற் காரத்தை அபரோக்ஷமா யடைந்தமைக்கு அமைந்த மற்றொரு முக்கிய காரணமாவது: ஸ்ரீ பகவானிடம் வருவதற்கு முன் ஸ்ரீ முருகனர் பெருந் தமிழ்ப் புலவரா யிருந்தாலும், மொழிப் பாண்டித்தியத்தை விருத்தி செய்யும் கலை நூல்களை மட்டுமே கசடறக் கற்றறிந் திருந்தாரே தவிர, ஆன்மிக நெறியைப் புகட்டும் சாஸ்திரங்கள் எதையும் அவர் வாசித்ததே யில்லை. "ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க முயிரினு மோம்பப் படும்" என்று வலியுறுத்துந் திருவள்ளுவரை மட்டும் நன்கு கற்று, கற்றாங்கு நிற்கத் தலைப்பட்டார். தத்துவங்களை ஆராயும் எந்த வேதாந்த நூலையுங் கற்ற தில்லை. ஜபம், தியானம், யோகம் என்ற பெயரால் நாடெங்கும் நடந்து வரும் ஆரவார அலைகளிற் சிக்கியது மில்லை. கடவுளிடம் உண்மையான பக்தி மட்டும் உள்ளத்தில் ஊறிக்கொண் டிருந்தது. தக்க சற்குரு ஒருவரின்றிப் பிறவிப்பயனை யடைத லரிதென் றறிந்து குரு தரிசனத்திற்காகக் காத்திருந்ததாகவே அவரது நிலை யிருந்தது.

வேதாந்த, யோக, ஞான சாஸ்திரங்களைப் பலமொழி களிலும் படித்துவிட்டு, அவசியமற்ற, அப்பியாசத்திற் குதவாத வீண் கருத்துக்கள் பலவற்றை மனதிற் றிணித்துக் கொண்டு, பெரிய பண்டிதர்கள் என்றும், கவிகள் என்றும், தவசிகள்—முனிவர்கள் என்றும் பெயர் சூட்டிக் கொண்டு, கும்பிடு போடுஞ் சீடர்களைக் கூட்டந் திரட்டிக் கொண்டு திரிந்தோர் பலரும் ஸ்ரீ பகவானிடம் வந்தனரேனும், கிறுக்கப்பட்ட கற்பலகைகள் (scribbled slate) ஆன அவர்களெல்லாம், வெகு சாமானியமானதும் ஆனால் நேரடியாகப் பிறவிப் பெரும்பயனை மோக்ஷத்தை எளிதிற் றரக்கூடியதுமான ரமணோபதேசங்களை நம்ப முடியாமலும், ஏதோ சிறிது நம்பினாலும் நடைமுறைக் குக் கொண்டுவர முடியாமலும் திணறி நின்றுத் தேங்கித் திரும்பினர். ஏனெனில், அத்தகையோர் ஸ்ரீ பகவானிடம் வரு வதற்கு முன்பே கடவுள், ஞானம், யோகம், சக்தி, சித்தி, தர்மம், கடமை முதலியவற்றைப் பற்றியெல்லாம் மனம் போனபடி கற்பனைகளாலும் கல்வியறிவாலுங் கிறுக்கப்பட்டி ருந்த மனத்தினராதலின், அக் கிறுக்கல்களூடே எழுதப்பட்ட ஸ்ரீ ரமண பகவானது மெய்யுபதேசங்களுங்கூட, மற்ற கிறுக்கற் கோடுகளிடையே மறைந்து, தாமும் அர்த்தமற்ற, பயனற்ற வெறுங் கோடுகளே யாகி விட்டன? ஆனால் ஸ்ரீ முருகனரது

உள்ளமோ மேற்கூறிய சாஸ்திர ஜால மகாரண்ய இருளாற் சூழப்பப்படாமலும், சூதுவாதற்ற சுத்த வெள்ளையுள்ளம் (unscribbled slate) ஆகவும் இருந்ததே அவரது ஞானப் பேற்றுக் கமைந்த மற்றொரு சிறப்புத் தகுதி யாகும்.

ஸ்ரீ முருகனர் மனைதுறந்து, மனத்தால் மற்றெல்லாப் பாசமுந் துறந்து பகவானின் சந்நிதான மடைந்தது 1926-ஆம் வருடத்திலாயினும், பிறகு நெடுங்காலம் வரை நீண்ட கேசமும் பூண்ட புரிநூலு முடையவராகவே இருந்து வந்தார். அவரது உள்ளம் பகவானருளால் சம்பூரணத் துறவுநிலை யடைந்திருந்ததேனும், துறவிகளுக்கான துவராடை (காஷாய உடை) அணிந்து கொள்ளவில்லை. உள்ளே மகா பக்குவியா யிருந்தும் வெளிவேடத்தால் ஏனையோரினும் வேறுபாடு காட்டாதவராகவே அவர் பழகி வந்தார். ஸ்ரீ ரமணத் திருமேனி மறைவதற்கு ஓரிரு ஆண்டுகட்கு முன்பு ஒரு நாள் காலை சுமார் 9 மணியளவில் ஸ்ரீ முருகனர் பகவானது அறையுள் வந்து பகவானைச் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினர். அவ்வமயம் பகவானருளால் அடியேனும் அங்கிருக்கும் பாக்கியம் பெற்றிருந்தேன். வணங்கித் தரையிற் கிடக்கும் அடியாரைக் கண்ணுற்றவாறே ஸ்ரீ பகவான், "ஓ, **அதுவும் போச்சா! சரி!**" என்றனர். உடனே அங்கிருந்தோ ரனைவரும் முருகனரை நோக்கினோம். அவரது தலையிலிருந்த நீண்ட சிகையைக் காணோம்; தலை மொட்டை யடிக்கப்பட்டிருந்தது. மார்பில் பூணூலுங் காணப்படவில்லை! அப்போது தான் அடியேனுக்கு அதன் விபரம் விளங்கிற்று. பகவான் தனது திருவாய் மொழிகளால் முருகனரது உள்ளும் புறமுமிருந்த நிலையை விளக்கியருளிய பாங்கை நினைந்து நினைந்து மகிழ்ந்தேன்.

"அதுவும் போச்சா, சரி" இவ்வருள் வசனம் எதைக்காட்டுகின்றது? இதற்கு முன்பே உள்ளே வாசனைகள் யாவு மொழிக்கப்பட்டு அவையெல்லாம் போயிற்று என்பதையும், வெளியில் ஒட்டிக்கொண்டிருந்த தோற்றமாத்திர முடியும் முப்புரியுங்கூட இப்போது போய்விட்டது என்பதையும் நன்கு விளக்குகின்றதன்றே? முருகனரின் துறவின் பூரணத்தை அங்கீகரிக்கும் சற்குருவின் மணிமொழிகள் இவை. இதைக் குறித்த மற்றொரு பாக்கியமாக, முருகனரிடம் இரகசியமாக இருந்துவந்த ஒரு சிறு துண்டுக் காகிதக் குறிப்பும் என் கையிற் கிட்டியது.

முருகனர் தனது கையெழுத்தால் அச்சமயம் அவசர அவசரமாக எழுதி ஸ்ரீ பகவானிடம் கொடுத்து வாங்கி வைத்திருந்த அங்கீகாரப் பத்திரமே அது! அதன் புகைப்படப் பிரதி இந் நூலில் ஸ்ரீ முருகனரது புகைப்படத்தின் பின்புறம் கொடுக்கப் பட்டுள்ளது. அதன் வாசகமாவது:—

> "பகவா னருளால் பகவான் பாதத்தி லுண்டான ஞான சொரூப பக்தி வைராக்கியம் அகத்தே திடப்பட் டியல்பாக வேண்டுவதோடு அதற்கேற்பப் புறநிலையும் சிகா யஞ்ஞோபவீத விஸர்ஜன வாயிலான் மட்டிற் காஷாய தாரணமின்றியே மாறுவதற்கான பகவானனுக்கிரகத்தை ஏகாந்தத்தில் அந்தரங்கமாகப் பிரார்த்திக்கின்றேன்.
>
> அடியேன் முருகன்"

இவ்வாறு முருகனர் சம்பூரண சரணகதி யடைந்து முற்றுந் துறந்து நின்ற ஞானப் பேற்றை ஸ்ரீபகவானே ஆமோதித் துள்ளனர். ஆனல் அவரது உடனுறைந்த ரமணபக்தர்கள் சிலர் முருகனரது மேன்மையை நன்கறிந்துகொள்ள முடியவில்லை. சிலர் ஓரளவு அறிந்தும் அழுக்காறுற்று ஏளனம செய்தும் வந்தனர். அத்தகைய ஏளன மொழிகளை ஒருமுறை ஸ்ரீபகவானும் செவிமடுக்க நேர்ந்தது. உடனே ஸ்ரீபகவான், "எப்போது சந்நிதி முறையுங் குருவாசகக் கோவையும் வெளி வந்தனவோ அப்போதே முருகனர் *தலையாய மெய்யடியார் களோடு வைத்து எண்ணப்பட்டு விட்டார் இனி இவர்கள் ஏளனப் படுத்துவதால் அவர்நிலை ஒன்றுங் குறைந்துவிடப் போவதில்லை" என்று அமைதியான குரலில் தெரிவித்தனர். இச் சம்பவம் ஸ்ரீநடனனந்த சுவாமிகளால் நேரி லறியப்பட்டு பிறகு அவர் 'ஸ்ரீரமணவழி' என்ற தமிழ் நூலின் ஆங்கிலப் பதிப்புக் களித்த சிறப்புப் பாயிரத்தின் ஓர் செய்யுளிற் குறிப்பாக உணர்த் தப்பட்டுள்ளது. இதுவே ஸ்ரீநடனனந்தர் 1951 ஆம் ஆண்டு ஜூலை மாதம் (தமது உடலை யுகுப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு) கடைசியாக இயற்றிய செய்யுளாகும். பூர்ணவதாரப் புமானகிய ஸ்ரீ கிருஷ்ணனைக் கூட,

* "தலையாய மெய்யடியார்கள்" என்று ஸ்ரீபகவான் குறிப் பிட்டது அப்பர், சுந்தரர், சம்பந்தர், மணிவாசகர், நாயன் மார்கள், ஆழ்வாராதிகளாகிய மெய்யடியார்களேயாவர்.

"அவஜானந்தி மாம் மூடா மானுஷீம் தநுமாச்ரிதம்"
"நான் மனித உடலினன் என்றெண்ணி மூடர்கள் என்னை அவமதிக்கின்றனர்" கீதை 9-11 என்றும்

"மூடோऽயம் நாபிஜாநாதி லோகோ மாமஜமவ்யயம்"

"இந்த மூட உலகம் பிறப்பிறப்பற்றவனாகிய என்னை அறிவதில்லை" கீதை 7-25

என்றும் கூற வைத்தது இவ்வுலகம் என்றால், ஸ்ரீமுருகனாரைப் பற்றி நாம் வருந்த வேண்டியதில்லையல்லவா?

சாது ஓம்

உள்ளுறை

பக்கம்

பக்கம்

ஓம்

நமோ பகவதே ஸ்ரீ அருணசலரமணாய

ஸ்ரீ ரமண ஞான போதம்

மூன்றும் பாகம்

அநுபவ விளக்கம்-I



பாயிரம்

1. அவையடக்கம்

(வெண்பா)

1. அகமே முழுப்பே ரவையென் றறிந்தவ்
வகத்தே யகமடங்கி நிற்கை—அகமகமென்
றெல்லவரு மொன்று விருந்துவிளங் கவ்வவைக்கு
நல்லடக்க மாக நமக்கு.

2. அனுபூதி பாட வருகதையெற் குண்டோ
வெனவேதி லார்வினவ வேண்டா—அனுபூதி
வள்ளலாந் தெய்வவருள் வல்லாளன் சிற்சத்தி
வெள்ளமா மிந்நூல் விளைவு.

2. இந் நூல்

(வெண்பா)

3. இறையா லியல்பா வினிதருளப் பெற்ற
நிறைஞான மோன நிலையை—முறையா
மனமொழியா லெண்ணி வழுத்திமகிழ் பொங்குங்
கனமதுரக் கட்டியிந் நூல்.

3. நூலின் அதிகாரியாவோர்

(வெண்பா)

4. உண்மை யுணர்வுருவா யுள்ளத் தொளிர்சொருப
வண்மைசேர் மோனவருள் வாழ்க்கையுற—
லார்வமீக் கூர்வா ரதிகா ரிகளாகத் [மண்மிசைநல்
தேர்கவிந் நூலின் திறத்து.

4. நூற் பொருள்

(வெண்பா)

5. உய்வ தறியா துழன்றமட நாயேனுக்
குய்வகையா லுள்ளத் துறுதிபெறத்—தெய்வ
வருளால் விளைந்த வனுபூதி ஞானப்
பொருளாம் புகல்வதிந் நூல்.

5. நூற் பயன்

(வெண்பா)

6. ஆண்டா னருட்சி ரனுபூதிப் பாட்டிலெனக்
கீண்டா தரங்கூ ரெழுச்சியுறத்—தூண்டுபர
மோனங் கிளர்சொருப முன்னிலையிற் பாடியபாட்
டூனங் கெடுக்கு முளத்து.

7. நிறைந்தவருட் செம்பதத்தை நெஞ்சார வெண்ணிப்
பறைந்தவருட் பத்திசேர் பாடல்—சிறந்தவருட்
செய்தவப்பே றாகத் திளைக்குறுமெய் யன்பருயிர்க்
குய்திவழி காட்டு முளத்து.

6. சமர்ப்பணம்

(வெண்பா)

8. மிக்கபய பத்தி விநயபுத்தி மிக்கூரத்
தக்கவாற் றலே சமர்ப்பிந்தேன்—தொக்க
சிவத்துவமெய்ஞ் ஞானமணஞ் சேர்ந்ததா மிந்தக்
கவித்துவமென் னுண்டான் கழற்கு.

(கொச்சகக் கலிப்பா)

9. உய்வித்த வாண்டவனென் னுள்ளந் தொளிவிளங்கத்
தெய்வப் பெரும்புலமை சோத் தெருட்டினன்;
மெய்வித் தகன்சீரே வேட்டிசைக்கு மென்கவியைப்
பொய்வர்த்த மானப் புலவோர்போல் வில்லேனே.

7. பிரசுரிப்போர்

(வெண்பா)

10. பூண்டவநு பூதிப் பொருள்சேர் பனுவலிதை
யீண்டவே யச்சிட் டிறைபணியா—வேண்டுறுமெய்
யன்பர்க் களிப்போ ரருட்பெருஞ் செல்வராய்
இன்பமுற வாழ்வ ரினிது.

குறிப்பு:— இதை இறைபணியாக அச்சிட் டளிப்போர் எனக் கூட்டுக.
இறைபணி - திருவருள் கூட்டுவிப்பதான சகவர கைங்கரியம்.

ஆக்கியோன் கூற்று

1. அருள்வாக் கடைவு

(வெண்பா)

11. ஆத்தமா வுள்ள வடிகளருட் பாதமே
சோத்தமா நாளுந் தொழுதலால்—கூர்த்துமதி
சீர்த்தஞா னனுபவ சித்தியொடு சேர்ந்ததென்பாற்
சீர்த்தவருள் வாக்குஞ் சிறந்து.

12. ஆண்டபிரான் மோன வருட்பதத்தில் வாழ்வொளிரப்
பூண்டமெய் யன்புப் பொலிவாலே—மூண்ட
சிவபாக் கியந்திளைப்பச் சித்தங் கசிந்து
சுபவாக் கொளிகிளருஞ் சூழ்ந்து.

2. எவ்வாறு பாடுவேன்

(கொச்சகக் கலிப்பா)

13. பின்னமற்ற சுத்தப் பிரம்ம சொரூபமே
என்னதுநா னற்ற வியலா விருயத்துத்
துன்னுபர மார்த்தந் துலக்கந்தா ளாண்டவன்சீர்
இன்னதென யானெவ்வா றெண்ணி யிசைப்பதே.

14. இருமையே மெய்போ லியன்றவெல் லாவுள்ளத்
தொருமைசே ருண்மை யுணர்வு புகட்டிப்
பெருமைசேர் சுத்தப் பிரம்மானு பூதி
மருவுவித்த வாண்டவன்சீர் வாழ்த்துவதெவ் வாறே.

3. பாட்டுவித்தான்

(வெண்பா)

15. அடியே னகத்தி லறிவொளியாய் ஞான
முடிவான வுண்மை மொழிவாள்—அடியேன்பாற்
காணிக்கை யாகக் கருத்தையுட்கொண் டோங்குபர
வாணிப் பரதே வதை.

குறிப்பு: ஞான முடிவான மோன வுண்மையாகிய அனுபூதி. பரவாக்காகிய பரதேவதை.

16. ஒன்றே யுரைப்பா னொருசொல்லே சொல்லுவான்
தொன்றேயொன் றுன சொரூபத்தான்—மன்றேறத்
தக்கவுயர் ஞானச் சதிர்சே ரனுபூதி
தக்கவா றேதுகின் றான்.

குறிப்பு:—மன்று - பட்டிமண்டபம்; அனுபூதி என்றது அஃதோதும் இப் பிரபந்தத்தை.

17. ஞானமொன்றே ஞாதுரு ஞேயமா முப்புடியும்
தானலா தில்லாவோர் தன்மயமாய்—மோன
வருட்பனுவ லாமில் வனுபூதி சொன்னான்
குருப்பனவ னென்புறச்சொற் கொண்டு.

4. குருபத மன்றிப் பாடேன்

(வெண்பா)

18. பிரானுருவே யெண்ணிப் பிதற்றலன்றி நான்மற்
றொராளொருவர் பேச்சை யுரையேன்—பிரானருட்பே
ரின்பக் களிப்பிலெனக் கெண்ணமுற்றும் பின்னமற்றவ்
வன்புமய மாயிற் றகத்து,

19. கருத்தனுக்கே யான கவித்துவத்தை நான்மற்
றொருத்தருக்குஞ் சற்று முகவேன்—பொருந்தமுற்
தோத்திரவா ணிக்குகந்த துங்கவொளி யாலுயர்சற்
பாத்திரனவ் வாண்டவனே காண்.

5. பாடும் பணி

(வெண்பா)

20. ஊன மகன்ற வொளிசே ரனுபவமெய்ஞ்
ஞான மணங்கமழ்செந் நாவினல்—மோனவருட்
பார்வையா லாண்டகுரு பாதானு பூதிசொலல்
சேவையாத் தேறுகின் றேன்.

21. உள்ளத்தி லின்புகின் றூற்றுப் பெருக்கான
வெள்ளத் தொழுகியல்சேர் வெண்பாவால்—தெள்ளத்
தெளிவான சுத்தவருட் செம்பதத்தை ஞான
வொளியோ டுபாசிக்கின் றேன்.

6. துதிக்கின்றேன்

(வெண்பா)

22. கேவலத்தி லென்னைக் கிளர்வித்த சுத்தவருட்
சீர்வலத்தி லாசை திளைத்தலாய்—நேர்வலித்துச்
சித்தத்தை முற்றச் சிவபதத்திற் சேர்த்தவவ்
வித்தகத்தைத் துத்தியஞ்செய் வேன்.

7. பாடுகின்றேன்

(வெண்பா)

23. ஆர்வங்கூ ரின்ப வருட்பாத வாழ்வளித்த
தேவன் குருரமணன் சீர்பாடி—நாவின்
பழிபாவந் தீர்ந்த பரிசுத்த வாணித்
தொழிலாமிவ் வெண்பாத் தொடர்.

24. ஆண்டானை யண்மி யடியே னடைந்தபே
றீண்டார் பெறுவரென் றெண்ணியெண்ணி—
மூண்டுபே
ரார்வமெழுப் பொங்க வகங்களித்து யானவன்மெய்ச்
சீர்வழுத்து கின்றேன் செகத்து.

25. அற்புதமெஞ் ஞான வருட்புலவர் வாக்கிலொளிர்
சிற்பரமா மோன சிவானுபவம்—தற்பரமாத்
தங்குங் குருரமணன் றன்னருளா லூட்சுரந்து
பொங்குவதென் வாக்கின் புலத்து.

26. அசத்தனு வுள்ள வடியே னகத்தில்
விசைந்தெழுந்த வாண்டான் விழுச்சீர்—இசைத்தல்
எளியேன் பரமன் றெனினுமவ் வாண்டா
னெளியா லுரைக்கலுற் றேன்.

(கொச்சகக் கலிப்பா)

27. சூரியதோ ருண்மைக் குறிக்கோ ளுடைமையாற்
சீரியசெந் நாவாற் சிறக்கநான் பாடுவது
காரியல்லெவம் பாசங் கலைந்திடக்கண் ணேக்கியஞா
னரியன்சீ பாத வருட்புகழின் மாட்சியே.

28. கற்றுத் தெரியவெல்லாங் கற்பனையா மாற்றியதோ
டுற்றுக் களிக்கமற் றென்றுமில்சாந் தானந்தந்
துற்றுவித் தாண்டான் சொருபமெய்ஞ் ஞானவருள்
வெற்றித் திறம்பாடி விம்மிதங்கொள் கின்றேனே.

29. வாட்கொண்ட கண்ணார் வலையிலகப் பட்டேனை
மீட்கலுற் றன்பால் வினைக்கேட றவெளிவந்
தாட்கொண்ட வம்மா னருளின் பெருமாண்பே
கேட்கலுற்றேன் கேட்டுக் கிளக்கலுற்றேன்
கேட்பார்க்கே.

30. நல்லேனோ பொல்லேனோ நானறியேன் முன்புநான்
பொல்லேனே யாயினுமிப் போதுமிக நல்லேன்காண்
எல்லேறு பாத விறையோனைச் செந்தமிழ்ச்செஞ்
சொல்லேறு மாலைத் துதிசொலப்பெற் றேனன்றே.

31. இறைவனருட் சீர்பா டினியரெத் தாலுங்
குறைவிலராய் உள்ளங் குதூகலிக்க வாழ்வார்;
அறிவறியேன் சற்றுமெய் யன்பறியேன் பாட்டுத்
துறையறியேன் சோத்தமெனச் சொல்லிவாழ்ந் தேனே.

32. நஞ்சினும் பொல்லா நவைசே ரகங்கார
வஞ்சமனந் தேனையருள் வாளறிவா வாண்டவனைத்
தஞ்சனேன் போற்றுந் தரமில்லேன் ஆசையுந்தப்
பஞ்சை மொழியாற் பராவிமகிழ் கின்றேனே.

8. அனுபவங் கூறுகின்றேன்

(வெண்பா)

33. அறிவுதெளிந் தான்ற வருட்காட்சி யுள்ளத்
துறுவதுகொண் டோராங் குரைப்பேன்—மறதியில்சற்
போதவருட் பூரணமாப் பொங்கு மனுபூதி
யாதரமுற் றூர்க்கு மகிழ்ந்து.

1. காப்பு

(வெண்பா)

34. பகவன் பதமே பரமசுக மாகப்
பகருமனு பூதிப் பனுவற்—ககமகமென்
றுள்ளுணர்வா மோன வொளியா லகந்தைமனக்
கள்ளமறக் கண்டவருள் காப்பு.

2. கடவுள் வாழ்த்து

(வெண்பா)

35. நிறைவான வுண்மை நிலையிலே சுத்த
வறிவான நிட்டை யமைய—உறவான
மெய்த்துணையா வென்னுள் விளங்கு சொருபவருள்
வத்துவைநான் வாழ்த்துகின் றேன்.

3. மங்கலம்

(கொச்சகக் கலிப்பா)

36. எங்குமா வென்றுமா வெங்குமென் றுங்கடந்து
துங்கமார் சுத்தத் துரியமா வுள்ளுணர்விற்
பொங்குசுப மோனவருட் புண்ணியன்சீ பாதவொளி
மங்கலங்கட் கெல்லாமோர் மங்கலமா மாட்சித்தே.

நூல்

1. குரு தியானம்

(கொச்சகக் கலிப்பா)

37. ஆய வொருணை வனர்த்த வலமரல்சேர்
மாயவாழ் வான மயக்கப் பிணியகற்ற,
நேய வறிவொளியா நெஞ்சத் தியல்சொருப
நாயகன்மெய்ஞ் ஞாபகமே நல்ல குருமருந்தே.

2. குரு வணக்கம்

(வெண்பா)

38. நமோரம ணாய நமோரம ணாய
நமோரம ணாய நமவோம்—அமோக
நமோரம ணாய நமோரம ணாய
நமோரம ணாய நம.

3. அடியார் வணக்கம்

(கொச்சகக் கலிப்பா)

39. இயற்பரமா வுள்ள விறைவன் சொருபந்
துயப்பெறுவா ரோர்த்துந்தம் முன்னை யுணர்ந்தோர்
வியப்புறுபே ரின்ப வெளியே வடிவா
வுயிர்ப்புறுமவ் வொள்ளியரை யுள்ளத்துக் கொள்வாம்.

4. அடியா ரிணக்க முறல்

(வெண்பா)

40. அருட்பரிவா ரத்தா டகப்பட்டு வாழ
விருப்புறுமெய் யன்பால் விழைந்தேன்—பொருப்
பருணைச்
சாரலிலே யென்னைத் தலையளித்து நானவர்க்கு
வாரமுற வைத்தான் மகிழ்ந்து.

குறிப்பு:— அவர்க்கு - அருட்பரிவாரமான அடியார்க்கு.

41. தன்னடியா னென்று தலையளித்துத் தஞ்சனைத்தன்
பொன்னடியா ருள்ளே பொருத்தினன்—என்னதியா
னென்னுங் கலக்கமற வெய்திற் றிதயத்து
மன்னும் பரசொருப மாண்பு.

42. அவ்வடிக்கு மட்டோ வவன்சொருப சேதனமா
மெவ்வுயிர்க்குந் தொண்டா வியல்கின்றேன்—இவ்வடியேன்
வாழ்வுசிவ மாக வருத்தான் மலரடிக்கே
யேழ்பிறப்புந் தொண்டுபட்ட யான்.

குறிப்பு: அவ்வடி (அம்+அடி)- அழகிய திருவடி.

43. அம்மையப்ப னாகவிளங் கங்கனன் பாதவருட்
செம்மையிற்பே ராதமனச் சீர்மையோர்—எம்முயிரை
இம்மையே யன்றிமற் றேழே மெழுமைக்குஞ்
செம்மையா வாளுடை யார்.

44. ஆதியா நின்ற வருட்பகவன் செம்பதத்தை
யார்கியா னிப்ப ரவர்பதத்தை —நீதியால்
ஆர்வங் கிளரத் தியானித்தென் சிந்தையருட்
சீர்பொங்க மல்குஞ் செழித்து.

45. அதீதமெய்க் காட்சி யநுபவமாத் தேர்ந்த
கதீயர்க்கு நானென்றுந் தாசன்—சதோதயமாத்
துன்றலுற மான்ம சொரூபானு பூதிமெய்
யொன்றலுறு மன்றோ வுளத்து.

46. குருவ ருட்கண் ணோக்கக் குலாஞானம் பெற்ற
வருள்வருக்கத் தாருக் கடியேன்—மருளகற்றி
மீளாக் கதியா விளங்குசிவ பூரணத்துக்
காளாக்கி வைப்பா ரவர்.

47. அவருக்கே முற்றமுற்ற வாட்பட் டொழுகுந்
தவமிக்க பாக்கியஞ் சான்றேன்—சுயமிக்க
ஞானநு பூதி நலத்தாலே தித்திக்குந்
தேனு விளைந்தேன் சிவத்து.

48. ஆண்டவன் சூர்ந்தமெய் யன்புக்கு மட்டுமன்றவ்
வாண்டவன்மெய் யன்ப ரடியேன்பால்—ஈண்டவே
பாராட்டு மன்புப் பரிவுக்குப் நெக்குநெக்கு
நீரா யுருகுமென் னெஞ்சு.

49. அடிகளுக்கே யன்றி யாகளுக்காட் பட்ட
குடிகளுக்கு மேநான் குடிகாண்—படிமே
லடியார்க் கடியனு யன்றோ வருட்சீ
ரடியாக்க மார்ந்த தகத்து.

50. உற்றதுணை யாகவெனக் குள்ளா ரடியேன்மால்
செற்ற குருரமணன் சீரடியார்—மற்ற
வுடற்சுற்ற முற்ற வொழிந்தேன் பழம்பார்
மடச்சித்த வாழ்வு மறந்து.

51. கொடைவள்ள லான குருரமணன் பாதத்
தொடர்புள்ள யாவருமென் சுற்றம்—விடிவெள்ளி
யாக வடியேன்பா லன்னுருட் சில்லோரென்
மோக மகலவந்தார் முன்.

52. விழுப்பொருளா யுள்ள விசுத்தவருட் பாதந்
தொழப்பெறுமெய் யன்பர் துணைத்தாள்—செழிப்புறு
யன்பால் வழியட் டருள்வருக்கச் சான்றோர்தம் [மெய்
பின்பே தொடர்ந்துநடப் பேன்.

53. அழகுக் கழகான வம்யான் சொருபந்
தழுவக் கிடைத்த தவத்தால்—கெழுமப்
பயின்றவருட் பாக்கியஞ்சால் பத்த ரினத்தா
டியன்றுசிவப் பேறுபெற் றேன்.

54. உள்ளக் கருவாக வுள்ள சொருபமாத்
தெள்ளத் தெளிந்தவருட் சிந்தையால்—உள்ளத்
திருள்காக்கத் தோன்றியநல் லீசனமக் காளாய்
அருள்வருக்கத் தைக்கியமா னேன்.

55. வைத்திலனே லென்னையருள் வர்க்கத்துள் வஞ்சனேன்
பைத்தியமே பற்றிமனம் பாழ்த்தொழிவேன்—வித்தக
ஞான சொரூபமா நண்ணுங் குருபாத [மெய்ஞ்
மோனநிலை முற்றுமோ தான்.

56. வகுக்க விரிக்கவோர் மட்டி லடங்கார்
மிகுக்கின்று ராயிரத்தின் மேலே—தொகுத்தேன்
அடியேனை யாண்டபே ரம்மா னடியார்க்
கடியார்க் கடியனடி யேன்.

57. யாதோ ரவாவுமறு யாவருளந் தெய்வவருட்
பாதார விந்தம் படிந்தொளிரும் மீதார்வம்
பொங்குசிவா னந்தப் புணரியா மவ்வடியார்
சங்கமுயர் சங்க நிதி.

58. அன்பு பழுத்த வடியா ரிடையிற்பே
ரின்பவுணர் வூறு மிதயத்தே—துன்பமனப்
பீடையற வேண்டிற் பெரியா ரிணக்கமிகத்
தேடியுற வேண்டுந் தினம்.

59. பாண்டம்போ லானவுடற் பற்றுருவா வுற்றுழலும்
வீண்டம்ப மான வெறுஞ்செருக்கின்—பூண்டற்
றழிந்தொழிந்து மெய்த்தென் றமைந்தொழுகும் மோனப்
பழந்தொழும்பர்க் காளாம் பயன்.

(கொச்சகக் கலிப்பா)

60. எவ்விதத்து நோக்கினுஞ்சற் றேற்கத் தகுதியிலா
அவ்வியதுக் குள்ள வவத்தனே னுட்புக்குச்
செவ்விதா வாண்டசிவச் செம்மலருட் சேவடிக்கீழ்
ஒவ்வுந்தன் மெய்யடியா ருடுசேர்ந் துய்ந்தேனே.

61. தூங்கவாழ் வான துரியசொரூ பானுபவ
மங்கலமா வென்னிலென்றும் வைகலுற்ற வாண்டவன்சீர்
எங்கூறுமே பொங்க விசைக்குறுமெய் யன்பரெனக்
கங்கம் புளகிக்க வானந்தஞ் செய்வரே.

62. கூட்டமாத் துன்றுங் குலதொல் லடியாருக்
காட்பட் டொழுகலுற்ற வாற்றலா சாபாச
மூட்டமார் வஞ்ச முனைப்பற் றொளிர்சொரூப
விட்டியல்வாய் வென்னுள் விசைத்தெழுமீப் பொங்கியதே.

63. ஆசுரவாழ் வான வகங்கார வேகமயற்
பாசரொடு கூடிப் பதைபதைத்து மாழ்கினேற்
கீசனடி யாரோ டிணங்கியபின் னெய்தியது
தேசுறுமெய்ஞ் ஞானவருட் சித்தோப சாந்தியே.

64. படியிலே பாசவிருட் பாழ்விடிய வஞ்சக்
கடியனேன் சிச்சடப்பாழ்ங் கட்டறவே நோக்கி
யடியருளு வென்னைநன் காண்டுகொண்டா னன்புக்
குடிகளாந் தொண்டரினங் கூடலுற் றேனே.

65. அருட்குலவ ராமெய் யடியர்பா லுற்றேன்;
மருட்குலவர் மாண்பை மதிக்கிலேன்; ஆண்டா
னருட்கலையி லாழத் திளைத்தேன்; உலக
மருட்கலையி னின்று மனங்கழன் றேனே.

66. மாழ்குமனோ மாயமற மாற்றி மனோதீத
வாழ்வொளியா வென்னுள் வளர்சொரூபச் செம்பிரானை
கேழ்கிளர்பா தத்திற் கிறிசே ரகந்தையற
வாழ்குவோர் பாதம் மணிமுடியென் சென்னிக்கே.

67. சொல்லருமெய்ஞ் ஞான சொரூபவியற் காட்சியால்
அல்லிருள்சேர் பொல்லா வகந்தைமா சற்றெழிவால்
நல்லகுரு நாதன்மெய்ஞ் ஞானவருட் பாதையிற்சே
ரெல்லவரு மென்னோ டியைந்த வருட்குலரே.

5. அடியார் மாட்சி

68. அத்தனருட் பார்வை யமர்ந்தமெய் யன்பர்தஞ்
சித்தமல மான செருக்கற் றொழிதலாற்
சுத்தசிவ மாகத் துலங்கலன்றிப் பொய்ம்மாயா
சத்தியின்கைப் பாவையாச் சற்றுஞ் சலியாரே.

69. மற்றார்க் கரியசிவ மாட்சியாம் பூரணமே
உற்றா ருணர்வூ டொளிர்தலாற் றன்னியல்பா
எற்றாக வாழ்க்கை யியல்கினு(ம்)மிக் கெண்பதத்தாற்
பற்றாக் குறையுணர்வு பற்றாது பற்றதே.

6. அடியார்க் கடிமை பூணல்

70. வித்தப் பரமசிவ வேட்கையே தன்னுயிர்ப்பாம்
பொத்நப்பி நன்றுட்டுப் புண்ணியக்கண் ணப்பரை
தித்திப்ப வெண்ணித் திளைக்குற்ற வுள்ளுணர்வு [நான்
சுத்தப் பரம சுகக்கடலாப் பொங்கியதே.

71. நேரியமெய்ஞ் ஞான நெறிக்கொண் டொழுகவுண்மை
வீரியமில் லாத வெறும்பதட்டு வீணனேஞா
னுரியனு வாண்டா னருட்பதமெய் யன்பின்மீக்
கூரியரென் னுள்ளங் குடிகொண்டு வாழ்வாரே.

7. குரு தரிசனம்

(குறள்)

72. ஆண்டவனைக் கண்டடைந்த வன்பற யகந்துலங்கிற்
றீண்டியவென் னுண்மை யியல்.

73. இங்கே யுளானைமற் றெங்கெங்குந் தேடிப்பின்
பிங்கே யடையலுற் றேன்.

குறிப்பு:—இங்கே என்றது இதயத்தை.

(வெண்பா)

74. பெம்மானைக் கண்டேன் பிறவற்றின் மோகமறச்
சும்மா வவனருளிற் சொக்கினேன்—இம்மா
நிலத்திலே யந்த நினைப்பே சொரூப
நலத்திலென்னை வாழ்வித் தது.

75. குருசரணங் கண்டேன் குருசரணங் கேட்டேன்
குருசரணஞ் சிந்தைகுறிக் கொண்டேன்—குருசரணம்
புத்தியிலே போற்றிப் பொதிந்தேன் குருசரண
சித்திபெற் றுய்ந்தேன் சிறந்து.

76. அம்மா னருள்வடிவைக் கண்டே னடியேன்மற்
றெம்மா நலத்துமனை மேய்ந்திலேன்—சும்மா
வவன்சொருபக் காட்சியிலே யான்றசிவ ஞானத்
தவஞ்செழிக்க வாழ்வுதலைத் தேன்.

77. காணப்பெற் றுங்கே கடவுட் குருபரனை
மாணப்பெற் றேன்ஞான வைப்பிலே—சேணிற்
கரந்தொழிய மோகக் கனவுலக வேட்கை
சுரந்ததுமெய்ஞ் ஞான சுகம்.

78. மோனகுருமூர்த்தி முகங்கண்ட போதேமெய்ஞ்
ஞானவொளி யென்னுளத்து நண்ணிடவே—தேனருவி
பாய்ந்தொழுகி யாங்குப் பரமோப சாந்தவருள்
வாய்ந்ததுவாழ் வாக மனத்து.

79. மாண்டொழிய நீண்ட மனமயக்கம் வாலறிவா
வாண்டவனை நான்கண்ட வவ்வளவில்—வேண்டு
மகிழ்ச்சிசூர் சாந்தி மடுத்ததுளம் மோன
நிகழ்ச்சியா லெங்கு நிறைந்து.

80. ஆணவமா யோக வகம்பேய் குருபரனைக்
காணவுமே நாணிக் கவிழ்ந்துமுகம்—பேணிச்
செருக்குற்று வாட்சித் திறங்குலையத் தன்பா
முருக்கெட் டுலைந்த துளத்து.

81. குருவான தெய்வவருட் கோலமே நோக்கிக்
கருவார் கலக்கங் கடந்தேன்—திருவாண
மோனவருட் கைவல்ய முத்திப் பதவுணர்ச்சி
யானவிரப் பெற்றே னிகத்து.

82. ஆர்வலர்தந் நெஞ்சத் தனுபூதி யாகவருட்
கேவலவாழ் வோங்கக் கிளர்சொருபன்—காவலனு
நின்றானை நோக்கி நிருவிகற்ப மோனபதத்
தொன்றுக வுற்றே னுணர்வு.

83. ஊனப்போல் வேன்முன் னுடையான் குருரமணன்
மோனப் பெருமலையா முன்னினன்—ஞானக்
கலையறியேன் கற்பனையைத் தாண்டினே னந்த
மலைமருந்தே நோக்கி மனத்து.

84. சிந்தைக் கரியசிவன் சிந்தைக் கெளிதாக
முந்தைத் தவத்தாலென் முந்தோன்றி—விந்தைகாண்
மானிடனே யாக மதித்துப்பல் லோர்மருளக்
கானிலந்தோய்ந் தென்னைக்காத் தான்.

85. அங்கமே சுத்த வருட்பரஞ் சோதிமயத்
தங்கமா மேரு தரிசனத்தால்--பொங்கு
சிவத்துவமாந் தெய்வச் செழும்பொன் மயமாய்த்
தவத்துலங்கிற் றென்கா ருயிர்.

86. கூத்தப் பிரானருட் கோலத் திருப்பதங்கண்
டேத்தக் கிடைத்தபே ரின்பமகிழ்—வார்த்தைக்
கடங்காப் பெருமிதமெய் யன்புணர்வா வுள்ளத்
திடங்கொலிக் கொண்ட தினிது.

(கொச்சகக் கலிப்பா)

87. ஆண்டவனைக் கண்டேன்கண் டாங்கேயவ் வாண்டவன்பாற்
காண்டவரு சுத்தவருட் கைவல்யங் கண்டுகொண்டேன்
மாண்டபோ னுபவ முத்திப் பெருங்கடலா
வாண்டவன்பா லுற்றதுபா ழாசாபா சங்களே.

88. ஆண்டவனைக் கண்டாங் ககப்பா ழிருட்கலக்கம்
மாண்டொழியத் துன்றும் மனோதீத மாட்சியால்
வேண்ட வெறுக்க விகற்பமொரு சற்றுமின்றாப்
பூண்டபோ னனுபவம் பூமாவாய்ப் பொங்கியதே.

89. ஆண்டவனைக் கண்டடைந்த வவ்வளவிற் பேதமறக்
காண்டலுற்ற சுத்தவருட் கைவல்ய ஞானத்தால்
ஈண்ட வெனக்கினிமற் றேதுமில்லே ரின்பவியல்
பூண்டதுநா னற்றமுழு மோனவெளி யாகவே.

90. ஆண்டவனைக் கண்டாங் ககத்தே குதூகலமிக்
கீண்டவுறப் பொங்கிற் றியற்பரமோ னனுபவம்;
வேண்ட வெறுக்கவென்னின் வேறென் றிலாதபடி
மாண்டதுநா னென்னும் மயக்கமனப் பேடையே.

91. தத்துவனைக் கண்டேன்; சமரசமா மேனவருள்
வித்தகசற் பத்தி விளைந்தேன்; சொருபவியற்
புத்தமுத வாழ்வு பொருந்தவாண் டானுளத்தோ
டொத்தொழுகு சீல வொளிப்பண்பா டுற்றேனே.

92. சுத்தவருட் போத சொரூபனை நான் கண்டளவில்
வித்தகசற் பத்தி விளைந்தெழலால் யானென்னும்
மத்தவகப் பேய்மயக்கம் மாய்ந்தொழியப் பொங்கியதோ
ரத்துவிதப் பூரணமோ னநுபவ வாழ்க்கையே.

93. காணக் கிடைத்தேன் கடவுட் குருபரனை
பாணப் படைந்தேன் பறைந்த வுண்மைநலன்
ஊனுக் குழன்றுலகப் பாழ்மயக்கந் தாழ்த்தொழிந்த
வீணக் கடையேன் அருள்வீட் டுணர்த்தாலே.

குறிப்பு:— ஊன் என்றது ஐம்புலன்களையும் ஒருங்கு குறித்தது. வீணக் கடையேன் - வீணாகிய கடையேன்.

94. நானு மவனுமா நானதனை நான் சந்தித்தேற்
கூடு னெனும்பா முயக்கமற வுள்ளத்து
மோனநூ பூதியா முத்தியுணர் வின்பமெல்
லாமு வியன்றதென் வாழ்க்கை வளம்பாவே.

95. காண்டலரு முண்மைக் கடவுள் விலாசமாத்
தூண்டுசிவ ஞானவருட் சோதிப் பிழம்பான
வாண்டான் சொரூப வருட்காட்சி யாலெனக்கு
மாண்டது நா னென்னு மயக்கமனப் புன்பிறப்பே.

96. மண்ணிலோ விண்ணிலோ மற்றெவ் வுலகிலோ
நண்ணா வெனக்கெந் நலனுமினி யின்றாகத்
துண்ணென வென் னுள்ளத்துத் தோன்றியதோ ரின்ப
நிலை
திண்ணியமோ னநுபவச் சிற்பரனாங் கண்டளவே.

97. மத்தக் களிசேர் மயக்க மறத்தெருட்டும்
முத்தன் குருபரனா மூர்த்தியைநான் கண்டளவிற்
சித்தஞ் சிவமாத் தெளிய விளங்கலாற்
செத்தங் கொழிந்ததென் சீவபோ தச்செருக்கே.

98. உண்மையபோ தானுபவிளைந் தீடறக் கட்டிவைத்த
வாண்டவனைக் கண்டே னகந்தே அருள்வெளியா
மூண்டெழுமோ னநுபவ முத்தி விலாசத்தால்
மாண்டதகங் கார மயக்கமனப் பாசமே.

99 எத்தனையோ காலமா யேய்ந்தவென் முற்றவத்தா
லத்தனைக்கண் டார்வமுற்றேற் காசைக் கலக்கமறச்
சித்தந் தெளிந்துசிவச் சிற்பரவாழ் வானவருட்
புத்தமுத மோனானு பூதி புணர்ந்ததே.

100. தூண்டியமெய்ஞ் ஞானவருட் சோதியா யென்னகம்புக்
காண்டவனைக் கண்டாங் ககப்பா ழுகன்றொழியக்
காண்டலற கைவல்யக் காட்சியே கண்ணாகப்
பூண்டவனு பூதி புலன்சிற் பரவெளியே.

101. தூண்டுசிவ ஞானச் சுடர்ப் பிழம்பாத் தோக்கமென்
றாண்டவனைக் கண்டாங் கலையால்சேர் புன்பிறவி
மாண்டொழியப் பெற்று மகிழ்ந்தே னிதயத்திற்
காண்டலரு ஞானவருட் கைவல்ய முத்தியே.

102. காண்டலுற்றுங் கென்னைக் கருணா கடாட்சத்தால்
ஆண்ட பிரானையென் னன்ம சொரூபமாத்
தூண்டலுற்ற சுத்த சுவானுபவ மோனத்தால்
மாண்டதுநா னென்னு மயக்கவலைப் பேய்முனைப்பே.

103. ஆருயிருக் குற்ற வருந்துணையாந் துன்றுசொரூ
பாரியனைக் கண்டாங் கருள்விளக்கப் பற்றலால்,
ஓரவெனக் கன்னியமாய் யாதொன்றுமற வுள்ளத்திற்
பாரவியற் கேவலமாப் பற்றியதோர் பார்வையே.

104. சூரியசற் போதவருட் சோமானைக் கண்டேனுக்
கோரியல்பா முன்னைநிலை யுள்ளத் தொளிவெளியாச்
சீரியல்வாழ் வான சுவானுபவந் தேற்றலாற்
பேரமுற்ற நாணவப்பாழ்ம் புன்பிறவித் துன்பமே.

105. கண்ணா ரமுத சொரூபன் கதிர்முகத்தைக்
கண்ணா ரமுதமாக் கண்டுகளித் தோகைபொங்க
உண்ணா ரமுதவெள்ளா ரூற்றெடுக்க லுற்றதால்
எண்ணோன் பொருளா விகபரங்கள் சற்றுமே.

106. ஒருசிற் பரத்தை யுதாசீனஞ் செய்து
திருசியப்பா ழூட்டே சிதைந்தழிந்து கெட்டேன்
பரசிவப்பே ரானானும் பார்ப்பானைச் சென்று
தரிசித் தடைந்தேன் சதாசிவமெய் வாழ்வே.

107. மூண்டவகங் கார முனைப்பான வாணவப்பேய்
மீண்டெழவொண் ணாது விளிந்தொழிவா னுள்ளத்திற்
காண்டலரு முண்மைக் கடவுள் சொரூபமாக்
காண்டலுற்றே னாண்டான் கதிர்முகநான்
கண்டளவே.

108. எந்நாளு நன்னாளா வெத்தலமு நற்றலமா
மெய்ந்நாட்ட மென்னுள் விளைவித் தருளியதால்
எந்நாளென் னாண்டவனை யான்காணப் பெற்றேனோ
வந்நாளென் னாருயிருக் காயிற்று நன்னாளே.

109. சொல்லரிய மோனத் துரிய வொளிவெளியே
யல்லதுவே றேராவென் னாண்டவனைக் கண்டளவிற்
றெல்லியலா முண்மைநிலை தோய்ந்தே னறிவுக்கோ
ரெல்லையா நின்ற வியற்சிற் பரத்திலே.

8. குரு சொரூபம்

(வெண்பா)

110. மூலமா நின்றொளிரு மோனமாந் தன்சொரூபக்
கோலமே யுண்மைத் துதுகலமாய்—மாலுறவா
மோகஞ் சிதைத்தெனக்கு மோனப் பதமளித்த
தேகஞ் சிவசொருபந் தேர்.

111. குருவடிவே ஞானக் தலைவருநந் தெய்வத்
திருவடிவாத் தேர்வர்சச் சீடர்—குருவடிவா
மஃதன்றே ஞானசொரூ பான்மாறு பூதியெனாங்
கிஃதா வெனவலித்த திங்கு.

112. எல்லை யிலாதபே ரின்ப வெழில்வடிவு
தொல்லமரர் காணாத் துரியச் சுடர்வடிவு
நல்ல சிவமா நடந்த குருவடிவு
சொல்ல வொணாத சொரூபமாத் தொக்கதே.

9. குரு சொரூப லாவண்யம்

(கொச்சகக் கலிப்பா)

113. பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்தமைத்த நன்சுவைசே ரின்னடிசில்
போலுங் குணத்தாலென் புந்திக் கமுதமாக்
*கோலம் பெரிதினிதென் கோயான் சொருபமே.

*கோலம் - அழகு

10. குரு நாமம் கூறலும பயனும்

(கொச்சகக் கலிப்பா)

114. மடுக்கலுற்ற கற்பனையின் மையாந் துழல்கால்
அடைக்கலமா வென்னையடிக் காண்ட பிரான்பேர்
படைக்கலமா நாவிற் பயின்றதாற் பற்று
தடர்க்கலுற்றேன் மாய வகப்பாழ்ம் பகையே.

11. ஆண்டவன் பரிகல சேடப் பயன்

(கொச்சகக் கலிப்பா)

115. விசித்திர சத்தியா மேவு மனத்தாற்
றிசைத்துக் கலங்கியவென் சித்தத் தொளிகூர்
விசுத்தவருட் பார்வை விளைவித்த மெய்யன்
புசித்தளித்த சேடமனு பூதியின் மாண்பே.

12. அருள்வாக் கடைவு

(வெண்பா)

116. உருவுபெய ரெல்லா மொளிவெளியா மோன
குருவடிவா வென்னையாட் கொண்டான்—திருவடியே
நோக்குசிவ ஞான நுழைபுலத்தா லின்பவருள்
வாக்கொளிவந் தாரு மனத்து.

117. தேக்குறுமெய்ஞ் ஞான சிவானந்த வாழ்க்கையிலே
யூக்கமுற வென்னை யொடுக்கினுன்—ஆக்கமுறு
வாக்குதித் திக்க வளம்படநன் குள்ளுணர்வைத்
தாக்கிற் றனுபூதி தான்.

118. அனுபூதி யீந்தா னருட்புலமை யோடு
மனவா சகங்கடந்த மன்னன்—எனவேயென்
பாழ்த்த மனக்கலக்கம் பாற்றியசிந் தாமணியை
வாழ்த்தலே யாயிற்றென் வாழ்வு.

13. ஆண்டவனுக் காளாதல்

(கோச்சகக் கலிப்பா)

119. கொடுமைசேர் பாசக் கொடும்பாட் டுலோப
மிடிமையினின் றென்னை விடுவித்த வாண்டாற்
கடிமையாய் மோன வருட்பெருவாழ் வுற்றேன்
உடைமையா வுள்ளத் தொளிவெளிபொங் குற்றே.

120. தானே தனக்குவமை யாவதன்றித் தன்னினுமற்
றேறே ரெவருமில்லா வேற்றஞ்சா லெம்பிரான்
கோனாக யானவற்குக் குற்றேவல் செய்குடியா
வானதை மெய்யன் பறிவுணர்ச்சி யார்ந்ததே.

14. அடிமையாதலும் பயனும்

(குறள்)

121. ஆண்டவனுக் கேகுடிநா னாயினேன்; ஆண்டவனே
அண்டங் கடந்த முதல்.

122. அண்டங் கடந்த வருட்சிற் பரமேயா
வுண்டெடன் றறிந்தே னுலகு.

123. அணுக்கத்தொண் டான வகம்படிமைப் பெரும்பால்
இணக்கமுற்றே னெந்தை யிடத்து.

124. ஆண்டவன்பா தத்தி லடங்கி யொடுங்கலுற்றேற்
கீண்டியது மோன வியல்.

125. கடக்க வொணாமெய்க் கடவுட் பதங்கண்
டொடுக்கமுற்றே ஞானமுனைப் போய்ந்து.

(வெண்பா)

126. அப்பனுக்கு நானடிமை யானே னருட்பரமெய்ச்
செப்பமுறச் சித்தந் தெளிதலாற்—சொப்பனமாச்
சூழுலக வாழ்க்கையின் சூதுசேர் வாதனைகெட்
டாழலுற்றே னாண்டான் பதத்து.

127. என்பிழை காணா விறைவன் சொரூபப்பே
ரன்புவசப் பட்ட வடிமையாய்—இன்பதுன்ப
மானதொந் தங்க ளநல்வண்ண மாவொளிர்மெய்ஞ்
*ஞானபந்தம் பெற்றதுவாழ் நாள்.

*ஞானபந்தம் - ஞானசம்பந்தம்

128. அறிவாக வுள்ள வநாதிமல முத்தன்
குறைவில்பே ரின்பவருட் கோமான்—நிறைவான
மோனவருட் கைவல்ய மூர்த்தியாஞ் சீர்த்தியான்
யானவனுக் கென்றுமடி யேன்.

129. ஆண்ட ரமணற்கே யாட்படுவே னிங்கெனக்
கீண்டுபிறப் பெத்தனையு மெய்திடுக—ஆண்ட
குருபாத பத்திக் குலாவா லெதையும்
வெருவாது வென்றொளிர் வேன்.

130. ஆண்டவற்கு மீளா வடிமைத் திறமல்லால்
வேண்டவெனக் கேதுமில்லை மெய்ம்மையே—பூண்ட
முறைமையா லாற்றும் முழுவடிமைப் பெட்பே
இறைமைசேர் மாட்சி யெனக்கு.

15. அடிமைத் திறன்

(வெண்பா)

131. யாவரும் யாவையு மெம்பெருமான் றன்னுருவே
யாவதா லாண்டாற் கடியனேன்—மேவுமெய்
யன்புகுன் றாத வடிமைகாண் மாநிலத்து
மன்பதைகட் கெல்லா மனத்து.

132. அடங்கி யிருக்கவெனக் காணையிட்டான் முற்றுங்
கடந்த சொரூப கனவான்—மடங்கிப்
பொருட்போத மோனம் பொலிந்தடங்கி நின்றேன்
அருட்பாத மாமெய் யகத்து.

133. அடியேன் றலையிவ் வடியேனை யாண்ட
வுடையா னடிக்கே யுரித்தாய்ப்—படிமேல்
மறுக்கிற் பிறரை வணங்கமெய்ச் சான்றோர்
திறத்துநா னென்செய்கு வேன்.

134. அடியனேன் சிந்தை யருட்பரமா நின்ற
வுடையானுக் கூறாக வைத்தேன்—படிமே
லடியனேன் சிந்தை யலக்கழியா தாண்டா
னடியிலே வாழவைத் தான்.

135. அடிமையா யாண்டானைக் கற்றறிந்த நாயேன்
படிமிசைமற் றோர்பவிசு வேண்டேன்—படிமேற்
குருரமணன் பொற்பதத்திற் குற்றேவல் பூண்டோ
னொருமகனா னென்பதனி னூங்கு.

136. அடிகள் சரித்த வடிச்சுவடே பற்றி
யடிமைநான் வாழுவே னாசை—அடிமைபூண்
டொப்புவமை யற்ற வுடையான்பொற் பாதநிலைக்
கெய்ப்பினில்வைப் பாக விசைந்து.

16. அணுக்கத் தொண்டடைவும் பயனும்

(கொச்சகக் கலிப்பா)

137. துண்டாடு மோகமனச் சூதா மகந்தையாற்
றிண்டாடிக் கற்பனையிற் சீரழிந்து மாழ்கியநான்
மிண்டாடு சுத்தவருள் விந்தையா லுக்கடிமைத்
தொண்டாடிக் கண்டுகொண்டேன் சொந்தப் பரவியலே.

138. ஓங்குயர்மே தக்கசீ ரொள்ளியமெய்த் தெள்ளிமையாற்
றீங்குறுமோ கப்பாழ் சிதைந்தொழிய வென்னைத்தன்
பாங்கனு வேற்றவருட் பார்ப்பானைப் பற்றினேற்
காங்க வணைந்ததகந் தான்றசிவ பூரணமே.

குறிப்பு:— தெள்ளிமையாற் சிதைந்தொழிய என
வியையும்.

139. நலமாக வுள்ளமெய்ஞ் ஞான சொரூபப்
புலமான சுத்தப் புரணமா வாண்டான்
குலமான தொண்டர்தங் கூட்டுறவிற் கண்டேன்
உலைவில்பே ரின்ப வுணர்வான வாழ்வே.

140. ஏதமே யோமா வெண்ணரியுழல் பேதைமையேன்
றோதகவோ ராதவரு ணோக்கத்தால் என்னகத்திற்
சாதலறப் பொங்குசிவ சாயுச் சியஞானப்
பாதமே யென்சொரூபப் பற்றாக வுற்றேனே.

குறிப்பு:—"பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்
கொண் டூதியம் போக விடல்" என்று. பேதை
மையினியல்பு திருவள்ளுவர் கூறுதல் காண்க.
ஓராத - இல்லாத; நோக்கத்தா லுற்றேன்,
அகத்திலுற்றேன் எனத் தனித்தனியே கூட்டுக.

17. ஆண்டுகொண்டான்

(குறள்)

141. தன்மையா லென்னைத் தடுத்தாண் டருளினான்
பன்மைதீ ரேகப் பரன்.

142. சித்தஞ் சிவத்தே திளைத்ததனூறு சுத்தசற்
பத்தியளித் தாண்டான் பரன்.

(வெண்பா)

143. அகங்கா ரிருளா லடர்ந்தநா ளுண்டான்
முகங்காண நோக்கிமுன் னின்றேன்—அகங்கா
நிசமனப் பேதை நிஜசொரூப மாவொளிரப்
பாசமறுத் தாண்டான் பரிந்து.

144. இயக்கமற மோக விகற்படையைச் சாடிச்
செயற்கரிய செய்தபெருந் திரன் மயக்கமற
வெங்களை நன் காண்டா னிதயத் துறிவொளியா
வங்கணர சானவம் மான்

45. அவமா வழியா தடியேனை யாண்டான்
சிவமாக நின்றவருட் செல்வன்—பவமாய
மோகமகல் சிற்சொருப முத்திப்பே ரின்பவருள்
போகமியல் சாந்திப் பதத்து.

14 . சீர்வளர்மெய்ஞ் ஞானவருட் செல்வனவிந் தெழுமேற்
சார்வாமியல் சாந்தியுற வாண்டுகொண்டான் சீர்
வளர்தன்
கோலவருட் பார்வையாற் சொந்தமனை யாவுமகைச்
சாலவடிக் காட்படுத்த தான்.

147. அனைத்துச் சுவையு மகத்தீசன் றுங்கு
மனைத்துண்மை மேரு வகந்தே—மனத்தா
மளவறுக்க வொண்ணு வமைதிசேர் வாழ்க்கைக்
குளவுணர்த்தி யாண்டா னுளத்து.

148. எந்நினைவு மில்லா வியற்கையே தன்சொருப
மெய்ந்நனவா முண்மை விளக்கியே—துன்னுமனக்
கற்பனை மோகக் கனவாப் புலங்கழிய
வற்பனு மென்னையாண் டான்.

149. ஒருத்தனுந் தன்னை யிரண்டா மவன்போல்
விருத்தமா வெண்ணி வெருண்டேன்—கருத்தா
டுருக்கிளர்தன் மெய்யி லுபயமதி யோய
வொருக்கினு னென்னை யுளத்து.

150. ஓதாத மோனி யுழையேன்றன் பல்சமய
பேதார வாரம் பிரிந்தொழிய—யாதானுஞ்
சுட்டற்ற ஞான சொரூப வருட்பதத்திற்
கட்டிக் கலக்கமறுத் தான்.

151. ஒலிடுமெய் யன்பர்பல ருள்ளோராந் தன்றிருமுற்
சீலமிலா வஞ்சமனத் தீயேனை—ஞாலமிசைப்
பல்லோர்கள் காணப் பரங்கருணை யாற்பரிந்து
நல்லேன்போ லாண்டா னயந்து.

152. தாரகமா வுள்ள சதாசிவனென் பாலிரங்கி
ஏரகமா வைகுற் றிதயமே—நேரகமாத்
தன்சொருப வுண்மை சதாகதியாத் தானுளிர
என்செயல்செற் றுண்டா னினிது.

153. கேளாத கேள்விக் கிளர்ச்சியுற வாண்டவன்மற்
றுளாக வென்னை யமைவித்தான்—நீளவே
மோன விலாசவொளி மூணடொளிரத் தூண்டுசிவ
ஞான வருட்பணிக்கே நான்.

154. செயிர்தீர் பரம சிவானுக் கிரக
நியதியே மோன நிறைவாய்—மயர்த்
ரனுபவமெய்ஞ் ஞான *மகண்டமாத் தோயப்
பனவனுவந் தாணடான் பரிந்து

*அகண்டம் - நிரந்தரம்

155 நடைமுறையில் வாழ்வு நடுங்காது மெய்யன்
பிடைமுரியா வாற்று லியற்றேன்—தொடைமரபால்
என்றென்று மன்பர்க் கினிதாற்றுந் தன்கருணை
நன்றுடையா னுண்டான் வலிந்து.

156. நானென்னும் புத்தி நழுவவே சாந்தசிவந்
தானென்னும் போதந் தழைப்பதாம்—வானென்றும்
போதமய மானவருட் பூரணத்தே யென்னகந்தை
சேதமுற வாண்டான் சிவன்.

157. நில்லே னருட்பாத நிட்டையிலே நெஞ்சமொன்றிச்
செல்லேன் சிவயோகச் செந்நெறிக்கே—கல்லே
னருட்பனுவல் வாயா லடிதொழே னன்பாற்
குருப்பனவ ளுண்டான் குறித்து.

158. பலியாக வென்னையருட் பாதத்துக் காண்டான்
தொலையாத மோன சொரூபன்—கலியான
மோக வகந்தை முனைப்பறலாற் றனே நா
னுக விளங்க வகத்து.

159. பொல்லார்க் கருள்புரியும் புண்ணியனெங் கோரமணன்
கல்லாமை போகக் கடைக்கணித்தே—பொல்லாக்
கடியனு மென்னைக் கருணையாற் றன்மெய்
யடியனு வாண்டா னகத்து.

160. நெஞ்ச முருக நிகழ்சச் சிதானந்த
மஞ்சன் பரங்கருணை மாட்சியால்—தஞ்ச
வெளியருக்கு வாழ்வாம்பே ரின்பநிதி யென்பா
லொளிபெருக்கி யாண்டா னுவந்து.

161. முகத்தே தவழுபுன் முறுவலா லென்ற
னகத்தே யிருளகற்றி யாண்டான்—அகத்தே
நிரந்தரமா நீடு நிகழ்சொருப ஞான
துரந்தரர்தஞ் சூடா மணி.

162. வாழ்வா று தேரு மடவேனைச் சிற்பதத்தா
டாழ்வதே வாழ்வாக வாண்டுகொண்டான்—மாழ்காது
நேசமுறு மன்பர் நிஜபதத்தில் வாழ்தலுறப்
பாசமறக் காணும் பரன்.

163. விளங்குசிவ ஞான விபூதியளித் தாண்டான்
களங்கமறு கண்ணுர் கழலான்—துளங்குபசு
பாசமாந் தொந்தப் படர்கெடுக்கு ஞானவருட்
*கோசமா நீடுங் குரு.

*கோசம்-பொக்கிஷம், பொக்கிஷ சாலே.

(கொச்சகக் கலிப்பா)

164. என்னுண்மை யாகவென் றென்று மியன்றவிறை
அன்னியன்போ லாகமருண் டல்லலுழந் தேனகத்திற்
பொன்னினும்வே றல்லாப் பொலங்கலம்போற் சிற்பர
மாந்
தன்னினுநான் வேறல்லாத் தன்மைதெரித் தாண்
டானே.

165. உறங்கல் விழித்தலுக் கூடே யுணர்வா
நிறங்கிளர்தன் னுண்மை நிலைதெரித் தாண்டான்
மறங்கி நினைக்குமன்றே மாயப்பாழ்க் கப்பாற்
பிறங்குமெய்ஞ் ஞானப் பிழம்பாம் பிரானே.

குறிப்பு:— உறங்கல் - விழித்தல். கேவல - சகலம்,
மயக்க - விகற்பம், உணர்வு - கேவலவறிவு.

166. அவத்தைமூன் றுந்தீ ரதீதத் துரீய
சிவத்துவமா முற்றத் தெளிந்தியல் சுத்தத்
தவத்திலே யென்னைத் தலைப்படுவித் தாண்டான்
சுவத்தமாத் தங்கு சொரூபப் பிரானே.

167. நினைக்கவொண் ணு வுண்மை நிலையான மோன
மெனக்கியல்பா வாய்க்க விதயம்புக் காண்டான்;
மனக்கலக்க மானபொய்ம் மாணுபி மானத்
துனிக்கவல்சே ராத துரீயஞ்சார்ந் தேனே

168. உயர்சிற் பரமா வொளிர்சொருபந் தன்னை
யயர்வுற் றுடலா வழுங்கு மகந்தை
மயர்செற் றெனைத்தன் மயமாக வாண்டான்
உயிருக் குறுதிசெய் யுண்மைப் பிரானே.

169. சதாசிவமா முத்தி தலைப்படவென் னுள்ளத்
ததாகவெனை யாண்டா னருள்வெளியே யான்ற
வுதாரகம் பீர வுளமாக வுள்ளோன்
எதாகிலும்பற் றுள்ளயெனக் கில்லா தறவே.

170. மூட்டுப் படாத முழுமுதலாய் மோகத்தாற்
கட்டுப்படாதவருட் கைவல்யக் காட்சியாற்
சுட்டப் படாத சொரூபமோ னனுபவ
நிட்டையிற்சேர்த் தாண்டான் குருரமண நீதனே.

171. என்னை யுடையான்மற் றேழுலகுந் தானுடையான்
மன்னியபே ரின்பவருள் வாரியா வுள்ளத்துத்
துன்னியவே கான்ம சொரூப சுயஞ்சோதி
அன்னியமோ ராம லடியேனை யாண்டானே.

172. பாரிலே மூழ்கிப் பரிதபியா தான்றவருட்
சீரிலே நான்செழிக்கச் சிற்பரமோ னனுபவ
வாரியா வென்னை வளப்படுத்தி தாண்டுகொண்டான்
சூரியார் தம்முட் குலாவு சொரூபனே.

173. கறைசே ரகந்தைக் கலிதீர் விசுத்த
வறிவான வுண்மை யகத்திலே மோன
நிறைவான தன்மெய்ந் நிலைகாட்டி யாண்டான்
குறிகுணந்தீர் சிற்பரமெய்க் கோபாலக் கோமானே.

174. தன்பெருமை யாலென் சிறுமைதவிர்த் தாண்டுகொண்டான்
தன்பெருமை தானறியா முற்றமுழுத் தன்மையான்
தன்பெருமை யாம்பாம சாந்தியுணர் வெங்கெங்குந்
தன்பெருமை சாற்றித் தழைக்கவெல்லோர் பாலுமே.

175. என்னை யதுவாக யான்றேர்ந் துறைக்கவுற்ற
நன்னயமார் சுத்தமெய்ஞ் ஞானநிட்டை யென்னகத்
துன்னுவித்த வாண்டான் சொரூப பரசிவமா [துத்
வென்னுளுறைந் தென்னை யிரண்டறவாள் கின்றானே.

176. கல்லா மனத்தாற் களிசே ரகங்காரப்
பொல்லே னறிவிற் புரண சொரூபமே
யல்லாது மோகப்பா பூாசாபா சம்பொருந்த
தில்லா தகற்றிக் கிறியேபோ லாண்டானே.

177. மாற்ற மனங்கழியக் காண்மவுன மாட்சியால
ஆற்ற மிகப்பெரிய வான்டவனை யண்டினேன்
நோற்றதவம் முற்றியது நோக்கியதே தீக்கையாச்
சாற்றவொணா தாண்டான் சுகிராண்மை காட்டியதே.

178. எளியே னறிவை இரண்டுபடா மோன
வொளிவளரக் கண்ட வுதார சொருபன்
வெளியே வடிவா விளங்கலால் உண்மை
யொளிவளர்மெய் யன்புருவா ஆட்சிசெய்கின் றானே.

179. இருப்பளவே யான வியற்பதத்தில் யானென்
றுருப்படவொண் ணாம லொடுக்கி மனத்தை
அருட்பரமோ னத்தா லழித்தவென் னாண்டான்
இருப்பறிவா வுள்ளத் திலங்கிற்றென் மெய்யே.

180. மலையினிற்பே ராதவருள் வல்லபத்தால் என்றன்
புலையகப்பே யானமருட் போராட்டஞ் செற்றான்
கலியகற்றிக் காக்குங் கடாட்சங்கூர் மோனக்
கலையினிற்கண் டேன்சொருபக் கைவல்யப் பேறே

181. பரமான தன்னைப் பறிகொடுத்து மோகப்
பிரமாத வாழ்விலகப் பேயான வென்னை
உரமான பார்வையா லூடுருவிச் செற்றான்
புரமான மூன்றுமறப் பொன்றக்கண் டானே.

182. துலக்கமா வுள்ள சொருபவருட் கண்ணால்
உலக்கலரும் பாழுலக்க வூடுருவிச் செற்றான்
இலக்கமா வுள்ளத் தியல்வதுநா னென்னுங்
கலக்கமறக் கண்டவருட் கர்த்தன் கழலே.

183. எண்ணமொரு சற்று மெழாதொழிய நள்ளிதயத்
தண்ண லகந்தைமுனைப் பற்றொழியச் செற்றதாற்
கண்ணுங் கருத்துமியற் கைவல் லியசொருப
வண்ணங் கலந்து வசீகரமாண் புற்றனவே.

184. குடிகே டியற்றுங் கொடும்பாழ் மயக்கச்
செடிசே ரகந்தையைச் செற்றதா லாண்டான்
அடியே னகத்துக் கருள்விளக்க மாக
நெடிதேய்ந் தொளிர்சொருப நேயமா னானே.

185. ஒளிபடைத்த வீட்டுக் குடையான் உலகக்
களிபடைத்த மோகவகக் காரிருளைச் செற்றான்
வெளிபடைத்த சுத்தவருள் வீட்டியல்வாழ் வுற்றேன்
இளிபடைத்த பாச வியற்கையறக் கெட்டே.

18. ஆண்டவன் குடைநிழலில்

(குறள்)

186. ஆண்ட விறைவ னருட்சிற் பதநிழல்யான்
காண்டலுற்ற கைவல் லியம்.

(வெண்பா)

187. கொடியோங்கு கொற்றக் குடைநிழலிற் கூடி
யடியோங்கள் வாழ்ந்தோ மடைவால்—படியோங்கத்
தோன்றியமெய்ஞ் ஞான சொரூபகுரு மூர்த்திபதத்
தூன்றியமெய் யன்பா லுவந்து.

188. யானேயா னாக வியல்வித் தொளிர்சொருபன்
வானாக் கவித்தவருள் வண்குடைக்கீழ்—ஆன
வருளமைதி யானஞா னனுபவத் தாற்செம்
பொருளியல்வாழ் வுற்றேன் பொலிந்து.

189. அற்றப்படாத வறிவுண்மை யானவருட்
கொற்றக் குடைநிழலிற் கூடிநான்—முற்றுங்
கடந்த பொருட்கே கடவேனாச் சிந்தை
படர்ந்தொழிந்தே னண்டான் பதத்து.

19. இறைபணி நிற்றல்

(வெண்பா)

190. ஆனந்த மாமெய் யறிவே சொரூபமா
வீனந் தவிர்ந்தே னிதயத்தே—மோனந்
தழைத்த சதாசிவமாத் தங்குகுரு பாதத்
திழைத்தசிறு தொண்டா லெளிது.

191. காந்தமா வென்னைக் கவர்ந்தசிவன் கண்ணிமையும்
பேர்ந்தொழியா துள்ளம் பிறங்கலாற்—சார்ந்த
வருட்போத வாழ்வே யடியேன் செயுமெய்த்
திருப்பாத சேவைத் திறன்.

192. நிலையா வணமாவென் னெஞ்சமே யென்னை
விலையா வவனுக்கு விற்றேன் — மலையாமற்
சித்தமொருப் பட்டுச் செயுங்கா லெலாஞ் சேவைநான்
நித்த மொருபடித்தா நீடு.

193. முடையார் புலங்களிலே முண்டொழிந்த மூடக்
கடையேனைக் கண்ணுற் றெழுந்தே—யுடையோன்
அருள்வழியே நான்சரிக்க லானே னொழிந்த
மருள்வழிநான் காணேன் மனத்து.

194. சித்திகொழு தன்சொரூபச் சிற்சத்தி யென்னுயிரை
நேர்த்திபெற யாங்கு நிகழ்த்துமோ—பூர்த்திபெற
ஆங்காங் குடைவாக வாவே வருட்பதத்து
நீங்கா தறிவு நிலைத்து.

(கொச்சகக் கலிப்பா)

195. கட்டுவி டாமையாற் கற்பனைசெற் றுள்ளத்து
நட்டமா நிற்றலெனும் ஞானப் பிரானுகந்த
இட்டமே யென்னிட மாச்சே றிறைபணியில்
மட்டமிலே பரம்பதிற் வாழ்வெனக்கு வாய்ந்ததே.

196. நித்தமா முத்தி நிலையிலே யென்னுயிரை
யத்த மலக்கமற வாழ்வித்த சற்குருபாற்
செத்தொழிந்த மோகச் செருக்காற்கர்த் தத்துவந்தே
ரெத்தனமர் நேய விறைபணிநிற் கின்றேனே.

197. செயிரப்படுபு னென்னுஞ் செருக்காலே துள்ளி
அயற்பொய்ம் மயற்பா ழுலமரலில் வீழா
தியற்செம் பதத்தி லினிதிருக்க வாண்டான்
இயக்குமா றேநா னியங்குகின் றேனே.

20. ஆண்டவன்

(குறள்)

198. அருமைசே ராண்டா னருட்சிற் பதமென்
னுரிமையா வுற்ற துளத்து.

199. உண்ணு ரமுத வுணர்வா யொளிர்சொருபக்
கண்ணுயிற் ருண்டான் கழல்.

200. பொருள்வளக்கை வல்லியமாய் முக்கிதன் னைவந்
தருள்விளக்க மாமெய் யடி.

201. காணலுற்ற வுண்மைக் கழல்விளக்கத் தாலடியேன்
மாணவுற்றே னோர்தன் மயம்.

202. கற்பனைதீ ருண்மைக் கழலே சொரூபமாத்
தற்பரஞா னஞ்சதிர்த் தேன்.

203. அகமா வவிர்சொருப வாண்டா னடியே
இகபரங்க ளெல்லா மெனக்கு.

204. சேயமா வுள்ளசிவச் செம்பிரான் பாதமெனைக்
கேமவாழ் வாயிற் றினிது.

205. ஆன்ம சொரூப வறிவொளியா யாண்டவன் றன்
யான்மகிழ்பே ரின்பவுணர் வூற்று.

206. கலைய மனைத்திலு நான் கண்டறுக்கக் கண்ட
கலைகடவுட் கண்ணுரர் கழல்.

207. காண்டலரு முண்மைக் கழலே சொரூபமா
ஈண்ட விளங்கிற் றினிது.

208. பரமான சுத்தவருட் பாத மெனக்குத்
திரமான வுண்மைத் திரு.

209. வேதமுடி பாக விளங்கியது மோனகுரு
பாதமா முண்மைப் பதம்.

(கொச்சகக் கலிப்பா)

210. சீர்வளர்மெய்ஞ் ஞானத் திருவருட்கண் ணோக்கத்தால்
ஓர்வணசற் பத்தி யுபாசனையோ டுண்மையுணர்
வூர்தரலா லுள்ளத் தொளிவெளியே தன்னுருவா
வார்தலுற வாருயிரை யாள்பவன்கா ணுண்டவனே.

211. தெள்ளத் தெளிந்தசிவ தீர்த்தத் திடைவிடா
துள்ளங் குளிர நா ளுட உபநிடத
வுள்ளக் கிடையான வுண்மைஞா னுனுபவ
வெள்ளவருட் காட்சிதரு மெய்யன்என் னையனே.

212. தன்னியல்சா ரக்கடவ சான்ருேர் திருக்கூட்டத்
தென்னையுமோ ராளா *விதயப் பரத்துய்த்து
மன்னியபே ரின்பவருள் வாழ்வரக் கூட்டினேன்
அன்னியமில் சொந்தசுத் தான்ம சொரூபனே.

*இதயப்பரம்-பரமான இதயம்

213. களங்க மிலாத கருத்திற் கலந்து
விளங்கு சொரூப விமலனென் னம்மான்
உளங்களைய நெக்குநெக் கோடவிட்ட பொன்போல்
வளங்குலவு ஞானவொளி வண்ணப் பிரானே.

214. எங்குமனைப் புன்கவலை யாதுமின் றகவெனைத்
தாங்கும் பெருமான் சதாசிவவாழ் வாகவகத்
தோங்கும் பெருமான் உறுதிசே ருண்மைநிலை
ஈங்கென் றிதயத்தைக் காட்டும் பெருமானே.

215. அகத்தா மரைமே லருட்பரமாத் துன்றும்
மகத்தான சுத்தசிவ மாட்சிசே ரம்மான்
அகத்தே யிராப்பக லற்றவிட மாகத்
தொகத்துலங்கு சுத்தத் துரீயப் பரனே.

216 இங்கூற்று மங்கூற்று மென்பரங் கங்கவனை
எங்கூற்று மென்னி லிதயத்தே நானுற்றுன்
இங்கங் கெனுஞ்சொல் லிகப்பாத்தன் னுண்மையுணர்
வங்கங் கலக்கிலவ னெங்கெங்கு முள்ளானே

217. தலைப்படு மாறு தவஞ்செய் திலேற்கு
நிலைப்படு மாறுமெய்ந் நேய முளத்திற்
புலப்படக் கூட்டி யருள்புரிந் தாண்டான்
சொலப்பட வொண்ணுத் துரியமெய் யோனே.

218. துருகமா வுள்ள துதற் சோதனையா லன்பர்
சொரூபமே யாகத் துலக்குவோன் யாதோர்
விரோதமற்ற ஞானவருள் வெற்றிசேர் வாளாற்
றிரோதமற வென்னகத்திற் செற்றருள்பெம் மானே.

21. ஆண்டவன் இன்னு னௌல்

(குறள்)

219. செம்பரமாந் தேறத் தெளிந்தேன் உயிர்க்குயிரா
மெம்பெருமா னுண்மை யியல்.

20. அணையாத ஞான வருட்சுடரா நின்றான்
இணையில்பே ரின்ப விறை.

221. அருட்சிற் பரமா வகத்தவிர்வே தாந்தப்
பொருட்கற் பகமென் புமான்.

222. அன்புருவா வுள்ளத் தலர்ந்த பிரானருட்பே
ரின்பவெளி நம்ப னியல்.

223. உறங்குவான் போலே யுலகிறந்து மெய்யிற்
பிறங்குவா னெந்தை பிரான்.

224. துங்கஞா னனுபவந் தோயவபுங் கற்புதமெய்ச்
சிங்கங் குருதே சிகன்.

225. எவ்வெவ ரெவ்வணத்தர் அவ்வவர்க் கவ்வணத்தன்
எவ்வணமு மில்லா விறை.

226. அருட்கோல மானவெ னம்மான் அனந்த
விருக்கோல மிட்டேத் திறை.

227. அருள்வெளியா வுள்ள வகத்தே யகமெய்ப்
பொருள்வடிவா வுள்ளான் புமான்.

(வெண்பா)

228. இனைந்தெ னவன்பெருமை யாரியம்ப வல்லார்
நினைந்திடுமுன் னெஞ்சநந்து நிற்பான்—பனித்துளோ
போலவுமுன் னின்றெனின்றோற் புந்திபுகுந் தென்சொரூப
வாலறிவாய் நின்றான் மலிந்து.

229. குருசிவமாக் கொண்டவருட் கொள்கையா லுள்ளம்
பரவசமா மோனம் படைத்தேன்—பரசிவமாத்
துன்று சொரூபத் துரியவெளி யாகமனம்
மன்றவிளங் கிற்று வடிவு.

230. அவனே பிறந்த வருவினையேற் றுண்மையத்
தவமோன வாழ்க்கையொளி தந்த—அவனுஞ்
சிவமேகாண் சித்தி சிவமேகாண் புத்தி
சிவமேகாண் முத்தித் திரு.

231. குருவா விளங்குசிவக் கோலமே யென்னைப்
பொருவாழ் வகத்தலாற் பெற்றேன் பெருவாழ்
வருட்கே வலமா வவிர்தலாற் காணேன்
மருட்கே வலப்பாழ் மனம்.

232. உற்பரா னொருவனே யென் பேதைமையால்
இப்பரா னைகமனத் தெண்ணரிதே—தற்பரமாந்
தன்பாற் பிழைத்தநான் சற்குருவாந் தன்னருளாற்
பின்பா லறிவுபெற் றேன்.

233. உருக்கத்தோ டுள்ளத் துணர்ந்துணர்ந்து வேட்ப
வுரைக்கத் தருஞ்சீ ருடையான்—இருக்குமுணர்
வின்பமே தானு மியல்பா லெவர்க்கும்பேய்
யன்பனு கின்று னவன்.

234. நினைப்புமறப் பாக நிகழ்சுட் டறிவுக்
கினைத்தென் றறிதற் கியலான்—முனைப்பாஞ்
செருக்கற்ற வன்றித் தினைத்தற் கரியான்
இருக்குமியல் பான விறை.

235 இலனென்று மெல்லா முடையா னியற்கை
நலனென்று மோன நடையான்—சலமொன்
றிலாதவருட் சாந்திசே ரெம்மான் சொரூப
மலாததொன் றேரா *னவன்.

*'னயல்' என்றும் பாடம்.

236. பொய்ம்மாண்ட கற்பனையைப் போக்கினன் பொங்கு மொளிச்
செம்மாண்பு சேர்ந்த சிவத்தொளியான்—அம்மா
நினைக்குந் தொறுந்தொறுமென் னெஞ்சுருக வுள்ளே
யினிக்கின்ற தாண்டா னியல்பு.

(கொச்சகக் கலிப்பா)

237. வாழ்வுக்கு நல்ல வழிகாட்டி யெம்மனோர்
தாழ்வைக் கெடுக்குந் தயாநிதியோ காவரணப்
பாழ்வெளியைத் *தாட்டிப் பரவெளியைக் காட்டு முண்மைக்
காழ்வயிர மானவருட் கண்ணோக்கா லாண்டவனே.

*தாட்டுதல் - தாண்டுவித்தல்

238. பரசிவமாந் தன்மெய்ப் பரங்கருணை யாலே
பரசிவநா னநுபவம் பற்றவகத் துண்மைப்
பரசிவமா மோனப் பதமளித்த வாண்டான்
பரசிவமா வெங்கும் பரந்துநின் ருனே.

239. யானை துரன்செய் யிறையோன் இகப்பரிய
மோனனு பூதியா முற்றலாற் சற்றுமெங்கும்
போனுனும் வந்தானு மல்லன்புந் திப்புலத்து
நானுனென் றென்றுமொரு தானுனு வுள்ளானே.

240. அந்தா மரையோ டெயன்றிருமால் காணுதான்
முந்தா னவந்தீர்ந்த மூர்க்கனேன் பாலருளிர்
சிந்தா மணியாகச் சிந்தையில்வந் தாண்டசிவம்
சொந்தான்மா வான சொரூபமன்றி வேறலனே.

241. தற்பரமா வுண்மை தழைத்தொளிரத் தன்னதியல்
கற்பதே மோனக் கலையாக வுள்ளுணர்வில்
விற்பனமார் சுத்த விசாரவருட் கூர்மையால்
அற்புதமா வாண்டவன்சொந் தான்ம சொரூபனே.

242. நுண்மையிலு நுண்மையாந் திண்மையிலுந் திண்மை யான்;
அண்மையிலு மண்மையாச் சேய்மையிலுஞ் சேய்மை யான்;
தன்மையிலுந் தன்மையா வெம்மையிலும் வெம்மை யான்;
உண்மையிலு முண்மையா வுள்ளசிவங் கேவலனே.

243. தள்ளவொண்ணுக் கொள்ளவொண்ணுச் சுத்தபரா தத்தா
னுள்ளமே யாக வொளிர்சொரூபத் தம்பிரான் [வென்
[illegible]
வெள்ளமா வுள்ளான்றாம் மெய்கண்டா ருள்ளத்தே.

244. விழியாலே பாச விமோசனஞ்செய் தாண்டான்
பழையான் புதியான் பராற்பரமாஞ் சோதி
பழிதீர் புகழாற் பரக்க விளங்குஞ்
செழியோன் கழியற் சிவச்செம் பிரானே.

245 தன்பரமா வென்னைத் தலையளித்துத் தன்மயமாய்
யன்பருளி யான்றேன்று வாற்று ஏகமுமென்
றின்பவருள் வாழ்வா விதயத் திகழுற்ற
நம்பரியல் சுத்தமெய்ஞ் ஞான சொரூபனே.

246. முடிந்த பரமார்த்த மோனமா வென்னைத்
தொடர்ந்து விடாத துரீய சொரூபன்
மடந்தரு பேத மனக்கற் பனையைக்
கடந்தொளிர் கைவல்யக் காட்சியா ஞனே.

குறிப்பு :— தொடர்ந்து விடாத - விடாது தொடர்ந்த.

247. சுற்றமற்ற வுண்மைக் குலார்சே ருபசாந்தி
யுற்றிடவென் னுள்ளந் தொளிவெளியா வுற்றபிரான்
இற்றெனயா ராலு மிசைக்கவொ ணாக் கைவல்யப்
பெற்றிசேர் சுத்தப் பிரம்ம சொரூபனே.

248. துள்ளித் துடித்துழைக் கூதிற் சுழன்றழன்ற
கள்ளமே னுள்ளத்திற் கற்பனைதீர் சுத்தவருள்
வெள்ளம்பாய் வித்த விசித்திரச்சிற் சத்தியான்
பிள்ள வொணாத பிரம்ம சொரூபனே.

22 ஆண்டவன் வியாபகநிலை

(வெண்பா)

249. மங்கலறப் பொங்கும் மனோதீத மங்களமாந்
துங்க சொரூபச் சுடரொளியால்—எங்குமொருங்
கொப்ப வியாபித் துதாரகம் பீரவருட்
செப்பமா வுள்ளான் சிவன்.

250. மங்கலப்பே ரின்பவருள் வாழ்வாக வுள்ளத்திற்
பொங்கலுற்ற ஞானனு பூதியால்—எங்கனையென்
றென்றுங்காத் தோப்பு மிறைவனருட் பாதவொளி
நின்றதெங் கெங்கு நிறைந்து.

251. எங்கெனினுந் தன்னை யிகந்துநான் போகவொண்ணா
தங்கங் கொருதானே யாயினான்—மங்கலாற்
காலதே சங்களருட் கண்ணா மவன்சொருபப்
பாலவாத் தாம்படர்ப வே.

252. கேடுபடா வுண்மைக் கிளரொளியா னென்னகத்திற்
பாடுபடா தின்பவருள் பாலித்தோன்—மூடுபடா
மோன விளக்கமாய் முற்றுங் கவர்ந்துபர
வானமா நின்றான் மலர்ந்து.

253. *கொஞ்சத்தா னல்லன் குருரமணன் சிற்பரமாய்
நெஞ்சத்தா னை நிர்ப்பினான்—துஞ்சித்
தொலையா தடியேன் சொரூப வருட்சீர்
நிலையார்ந் தொளிர நிறைந்து.

*கொஞ்சத்தான் - அற்பசொற்பன்

(கொச்சகக் கலிப்பா)

254. அப்பாலுக் கப்பாலா வான்ற வத்தனே
யிப்பாலுக் கிப்பாலா யான்யானென் றுள்ளெழு,
துப்பான சுத்தத் துரிய மடியோருக்
கெப்பாலு மாகு வியலவ் வெளிமையென்னே.

255. ஒன்றிரண் டல்ல வுலப்பில்பல் கோடியுல
கென்றெனவுந் தோன்றி யிருந்து கரந்தொழிய
துன்று மந்த சொரூபச் செழுப்பிரான்
யன்றவியல் கைவல்ய மாட்சியொளிர் வுற்றதே.

குறிப்பு:— உலப்பு - அளவு

256. எங்கெங் கெவரெவரெவ் வெவ்வகைமை யென்றுறுகின்றார்
அங்கங் கவரவர்க்கவ் வவ்வகையாத் தோன்றுகின்றான்.
எங்கு மெவர்க்குமெவ் வெப்பொழுதுந் தானியல்பா
அங்கங் கலந்தவறி வாகாரப் பெம்மானே.

257. ஈர்ங்கருணைக் காலே யினிது வசிகரித்துப்
பாங்கற வென்னைப் பரிந்தாண்டு கொண்டபிரான்
யாங்குநா னேகினும்பே ரின்பப் பரவெளியா
யிங்கவொளிர் கின்றான் வியாபகமென் னென்பதே.

23. ஆண்டவன் மாட்சி

(குறள்)

258. அங்கணனு வாண்டா னருட்சீர் அகண்டமாப்
பொங்கலுற்ற துள்ளம் பொலிந்து.

259. உள்ளமா வுள்ள சொரூபன்பால் எத்தகைய
கள்ளமும்யான் காண்கின் றிலேன்.

260. ஒட்பவுணர் வான வொளிபெருக்கி விட்புலமெய்ப்
பெட்புறநிற் கின்றான் பிரான்.

(வெண்பா)

261. மிக்க வருட்குணமா மேருவா வென்னுளத்துத்
தொக்க சிவாமுதியாஞ் சோதிபதம்—புக்கிவ்
வென்னுயிர்க்கு நல்கியசீ ரெம்மான் குருரமணப்
பொன்னியலுக் கில்லை யுரை.

262. எனக்குரைக்கச் சற்று மியல்வதன்று முற்ற
மனக்கலக்கந் தீர்த்தருள் மாட்சி—நினைக்கின்
முனைக்கலுறு மூலமா மோனத் தலத்தி
லினிக்கலுற வாழ்த்து மியல்.

263. இறைரமணன் மாட்சி யெடுத்தியம்பச் சற்றுந்
திறமையிலேன் முற்றச் சிறியேன்—மறைமுடிசால்
சுத்தப் பிரம்ம சொரூபமாய் நின்றவருட்
புத்தன் முனிபுங் கவன்.

264. என்னை நியமத்தா லென்னிதயத் தாதிபெரு
நன்னிதியா நின்றொளிர்மெய்ஞ் ஞானமாய் மன்ன
ளால்
இன்றென்றே யின்றியெனக் கெல்லாமா மென்னிறை
யென்னென் றியம்புவேன் யான். [யை

265. அடியேனைக் கொன்ற வவிச்சை யராவை
இடியேறுக் கொன்றமர் றென்னை—மடியா
வமுதமயப் புத்துயிரா வாக்கினன் ஞான
சமயசஞ் சீவிகுரு தான்.

266. அத்துவிதத் தத்துவஞா னனுபவக் கைவல்ய
சித்தியளித் தாண்ட சிவசொருபன்—சுத்தமனக்
கண்ணாடி யூடுபடக் காணிலன்றி வேறுவிதத்
தொண்ணாதென்மெய் காண வுயிர்க்கு.

267. குருமாட்சி யொன்றே குறிக்கொள்வதன்றித்
திருமாட்சி வேறுமனந் தேறேன்—பெருமாட்சி
துன்று சொருப சுவானுபவப் பேரொளியால்
வென்றிகொண்ட தென்னையதன் வீறு.

268. இறைவன் சொருபவுண்மை யேகான்மா வாகப்
பிறிவற்ற சுத்தப் பிரம்மம்—குறிகுணத்தாற்
றன்னியல்வே றாகத் தடுமாறும் பாமரனுக்
கன்னியன்போல் நின்றா னவன்.

269. சாந்த சமாதியாற் சாரத் திளைத்தலன்றி
யோர்ந்துணர லாகா துணர்வாலே—நீந்தவரும்
பேரின்ப மான பிரம்ம சொருபவருள்
வாரிதியா மெம்பெரு மான்.

(கொச்சகக் கலிப்பா)

270. நல்லான் சிவசொருப நம்பன் குருராமனை
வல்லார் மறலியைமுன் மாணிக்கா மாற்றியதாள்
பொல்லே னுயிர்க்குப் புகலா வளித்தபிரான்
அல்லே படாம லருள்வெளியா நின்றானே.

271. கண்ணா ரமுதமழை யானவருட் கண்ணீர்மை
உண்ணாடு மெய்யன்ப ருள்ளத் துதவுவோன்
அண்ணா மலையா மதிநுட்ப வொட்பவருள்
விண்ணாக வென்னுள் விளங்குசிவச் சிற்பரனே

272. அறக்கருணை யாளன் மறக்கருணை யாளன்
உறக்கவிழிப் பெங்கிலுந்தா னூடுருவி யுள்ளோன்
மறக்க நினைக்க மனத்திற் படாதான்
சிறக்கவென் னுள்ளஞ் செழிக்கலுற் றானே

273. மறக்கவரு சொர்சொருப மாட்சியால் உள்ளத்
துறக்கவிழிப் பற்ற வுணர்வாக வுள்ளான்
மறப்புநினைப் பான மனக்கற் பனையி
னறக்கழன்ற சுத்த வருட்பரவம் மானே.

274. களிசேர் புலத்தாற் கலங்கலுற் றேனுக்
கிளிசேர் வுருமற்பே ரின்பவருட் போத
வெளியா வகத்தில் விளங்கலுற்ற வாண்டான்
ஒளிசேர் பெருமாட்சி யோதவொண் ணாதே.

275. கூரான சுத்தவருட் கோமான் குணங்கடந்த
சீராளன் மோகச் செருக்கறச்செற் றண்டபிரான்
ஓராதார்க் கன்றிமற் றோர்ந்தார்க்குந் தேர்வரியான்
ஓராதே யோர்ந்தேற் குணர்வுருவா நின்றானே.

குறிப்பு:— உணர்ந்தார்க் குணர்வரியோன் என்பது திருக்
கோவையார்

276. மடுக்க மடுக்க மடுப்பரிதாய் மேன்மே
லடுக்கலுற்ற சுத்த வருட்பரவாழ் வானன்
இடுக்கணு லேங்கி யினைந்த வகத்தைக்
கடுக்கெனக்கண் டித்த கடுங்கட் பிரானே.

277. கருவாழ்விற் பட்டுக் கலங்கினே னுள்ளத்
தொருவாத வுண்மை யுணர்வொளிப்பே ரின்பப்
பெருவாழ்வா மோனவியற் பெற்றி துலங்க
யருவாநின் றன்சொருப மாண்போ பெரிதே.

278. தொக்க மயக்கமனச் சுட்டறிவாற் சுற்றலுற்ற
போக்கனேன் சுத்தவருட் போதமோ னனுபவத்
தொக்க வழுந்து முபாயமா வுற்றபிரான்
மிக்க சொரூப விபூதிவியத் தக்கதே.

279. துள்ளுமகப் பேய்க்கலக்கத் துன்பொழியச் சிற்பரமா
வுள்ளத னுண்மை யுணர்வூட்டி யுள்ளத்தில்
வள்ளியபே ரின்பவருள் வாழ்வளித்தாட் கொண்ட
பிள்ளவரு சுத்தப் பிரம்ம சொரூபனே. [பிரான்

280. மோனானு பூதி முகப்பவென் னுள்ளத்துத்
தானாகி நின்றொளிர்மெய்த் தம்பிரான் சுத்தவருள்
வானு வியல்சொருப மாட்சியிலே கட்டறிவாள்
யானென் றறியே னிதுவதுவென் றேதுமே.

281. காண்டலரு சுத்தவருட் கைவல் லியந்துலங்க
வாண்டவன்மெய்த் தன்மையையவ் வாண்டவன்கூ றின்
ஈண்ட வறிந்தே யிடைவிடா துள்ளத்து [லருளால்
பூண்டொளிர்சாட் சாற்கார மோனானு பூதியிலே.

282. பொய்ச்சார் பனைத்துமறப் புந்தியிலே சொச்சொருப
மெய்ச்சார் புணர்த்தி விசுத்த வருள்வெளியா
வச்சோ வெனவென்றே யத்துவித மாக்கலந்த
வச்சாணி யானவென் னம்மா னதீதனே.

283. ஆங்கார மோகமா னபிமா னங்கரக்க
நீங்காதென் னெஞ்சத்து நிற்கும் பரசொருபப்
பாங்கான சுத்தவருட் பார்ப்பான் குருத்துவத்துக்
கீங்காக வொப்பாக மற்றொருவ ரில்லானே.

284. உள்ளபடி யென்னை யுடையா னருட்டிருமுன்
உள்ளலொரு மித்த வுணர்வினராய்க் குந்தியிருந்
துள்ளமெழப் பொங்கு முபசாந்தி கண்டோர்பற்
றுள்ளுவரோ பல்வே றுலக சுகங்களே.

285. எவ்வெவர் எவ்வெக் குணத்தா லியல்வரோ
அவ்வவர் தந்திறத் தவ்வக் குணத்தனே
யொவ்வப் புலப்படினும் உண்மையாந் தன்றிறத்
தெவ்வெக் குணமு மெனைத்து மிலன்மெய்யே.

286. இமைதிறந்து மூட லெவனென் றிதயத்
தமைதிசேர் மோன வமுதத்தமுறு நிஷ்டை
அமிதமா *நீடு மருந்தவத்தான் என்னு
மமுதவாழ் வூட்டிநன் காண்டபெம் மானே.

*நீடல் - நெடுங்காலம் இடைவிடா தியல்பாக வியற்றல்.

287. யானவனே யாக விருத்தினென் றன்னையலா
தேனையொன் றுமில்லா விதயப் பரவெளியில்
ஞானமுனி யானவென் னம்பன் குருரமணன்
வானவரால் வாழ்த்தி வணங்கும் பதத்தானே.

24. ஆண்டவன் எனக்கெளியன்

(வெண்பா)

288. துன்னவருந் துல்லபன்மற் றெல்லோர்க்குந் தொண்டு
டென்னனைய தீனரா மேழையர்பால்—என்று [பட்
லவிய ரிவரென் றருட்பரிவா லாற்ற
வெளியனு மெங்க ளிறை.

289. ஒளிர்கின்ற காட்சி யுபாசனையா வுள்ளத்
தெளிநின்ற விசு ளியல்பே—தெளிவொன்று
சுத்தநறு மோனத் துரியவெளி நான்காண
மெத்தவெளி தான விதம்.

290. எம்பிரா னை விறைரமணன் மோனவருட்
செம்பிரான் சுத்த *சிவாத்துவிதன்—உம்பரான்
சுற்பனு பேதக் கருத்தர்க் கெனக்குமெய்
யப்பனு வுள்ளா னகத்து.

குறிப்பு:—சிவாத்துவிதன் - அத்துவிதமான சிவன்.

291. துயிலகற்றி மோனத் துரியத்தே யுண்மை
யியலுணர்த்து மெந்தை ரமணன்—மயல்சே
ரிருள்வாரி யுண்ட வியல்பாலென் னுள்ளத்
தருள்வாரி யான வமுது.

292. என்னை மறந்தே னெனினுமென் னாண்டவனை
யென் றுன் மறக்க வியலாதே—துன்னியசுத்
தாத்துவித மோன வருட்பரமாந் தன்மையா
லாத்தனு நின்றா னவன்.

293. நமவென் றடைக்கலமா நண்ணினேன் றன்னை
யமைகென் றருட்பதத்துக் காண்டான்—தமையனு
வெவ்வுயிர்க்கு முள்ளோ னெனக்கோ வெமையனுச்
செவ்வி சிறந்தான் சிவன்.

25. சரண

(குறள்)

294. பேச்சுமூச் சற்றசிவப் பெட்பான சுத்தவரு
ளாட்சியிற்காண் சுற்றே னரண்.

295. அழலுமுத் தாப மகற்றினன் கண்ணுங்
கழலலா லில்லை கதி.

(வெண்பா)

296. உண்ணுற ரமுத வொளிப்பெருக்காந் தண்ணருளே
கண்ணாக நோக்குங் கடவுளான — விண்ணான
சிற்பரத்தா லேய்ந்த திருமேனி நாதனருட்
கற்பகத்தா னுண்டே கதி.

297. கற்றடங்கி மோனங் கடைப்பிடித்து மெய்யவர்
சுற்றுமுற்றுந் தன்னடிமைச் சூழ்ந்திருப்ப — முற்றமுற்ற
வென்னை வலிந்துபற்றி யின்பமுறத் தோய்ந்தசிவந்
தன்னையன்றி யில்லேன் சரண்.

298. குருவடிவுக் கென்னைக் கொடுத்தேன் சொருபத்
திருவடியிற் சித்தந் தெளிந்தேன் — குருவடியை
அன்றியொன் றில்லா வகண்டாந் துவிதவொளி
வென்றியிலென் மிச்சை விளிந்து.

குறிப்பு:— மிச்சை விளிந்து சித்தந் தெளிந்தேன் எனக் கூட்டுக.

299. கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருளாங் கேடிலான் — பாழி
லதோகதியா நான்வீழ்ந் தழியாதே யாண்டானென்
சதாகதியாத் தானே சரண்.

300. *கொலுவகத்து வீற்றிருக்குங் கோமா னருளாற்
பொலிவுபெற்ற நான்பாலு பூதி — நலிவகற்றும்
போத சொருபவருட் போகமார் சாந்தியொளிப்
பாதமே யாமுடைய பற்று.

* அகத்துக் கொலுவீற்றிருக்கும் என மாற்றிக் கொள்க.

301. தரும சொருபன் சகஜநிஷ்டன் சாந்தப்
பரமசிவ மான பகவன் — கரும
கதிக ளனைத்துங் கடந்தவருட் பாத
கதியே யடியேன் கதி.

302. வழியும் பிறிதின்றி வைகுபரந் தாமச்
செழியன் குருரமணச் செல்வன்—விழியொளியிற்
பொங்குவதே பல்வேறு பூமிகளும் பூமாவாத்
தங்குமவன் றுளே சரண்.

303. உருத்தநோக் காலென் னுளத்தா டுருவித்
திருத்தமா மோனத் தெளிவாற்—குருத்துவஞ்சேர்
தன்சொருபக் காட்சி சதோதயமாத் தானருளித்
தஞ்சமா வாண்டான் சரண்.

304. எல்லாருந் தன்மயப்பே ரின்பவியல் காணவொரு
சொல்லால் வழங்கு சொரூபகுரு—அல்லா
லெனக்கோ ருறுதியில்லை யென்றுணர்த்தி யாண்டான்
றனக்கே யடியேன் சரண்.

305. அடியேனைக் காக்க வருட்கங் கணம்பூண்
டுடையா னுறைவா னுளத்தே—அடியிலுயிர்க்
காப்புக் கடம்பூண்ட கர்த்தனருட் பாதவொளி
காப்பாக வாழுங் கருத்து.

306. அருட்பரமாத் தானே யகிலமுந் தாங்கும்
பருப்பதமாஞ் சோதிப் பரமன்—அருட்செய்
பதமே தருமப் பரமபத மான
சதமா வடைந்தேன் சரண்.

307. பரதெய்வ மானவருட் பார்ப்பா னடியா
ரரதையறக் காணு மடிகள்—சரதமா
வெண்ணியலே யாக விருந்தொளிர்சற் போதகுரு
தன்னையலா லில்லேன் சரண்.

308. மயக்கமாம் பாச வலைகிழியப் பீறி
நயக்கவந் தாண்டகுரு நாதன்—வியக்க
வியாபகமா வெங்கும் விளங்கு சொரூப
தயாபரமாம் பாதஞ் சரண்.

309. பனச்சுடரைத் தாண்டும் மலையான தெய்வ
கனச்சுடராங் கண்ணூர் கழலே—தனிச்சரணாத்
தன்னடியார் சார்ந்து சதாசிவவாழ் வோங்கலுற்று
வென்னுடையான் பாதஞ் சரண்.

310. கரண மனைத்துங் கடவுளையே நாடிச்
சரண மடைந்தவருட் சார்பாற்—கரணச்
செயலினெல்லாந் தெய்வத் திருமுத் திரைசேர்ந்
தியல்வதுநான் றேறுகின் றேன்.

311. அணைதுணை யான வருட்பிரான் சற்று
மிணைதனக் கில்லா விறைவன்—புணையாய்ப்
பதத்தா லெனைத்தன் பரமபதஞ் சேர்த்தான்
சதத்தா ரகத்தாள் சரண்.

(கொச்சகக் கலிப்பா)

312. கட்டுக் கடங்காக் கடுவெளியாங் கைவல்யம்
பட்டப் பிரானருட்கண் பார்வையா லென்னிதயப்
பெட்டிக்குட் சிக்கப் பெறலால் அதுநானு
வுட்டெளியப் பெற்றேனுக் கோம்படைநா னவ்வுணர்வே.

26. துணை

(வெண்பா)

313. என்னையே யானறியா வேளையுங்கூத் தன்சொரூபப்
பொன்னையளித் தாண்டவருட் புண்ணியவா னென்—டன்
ணியபே
ரின்பவருட் பாதமே யெங்களையென் றென்றுமெனத்
துன்பமறக் காக்குந் துணை.

314. தரணிக் கரணைந் தருமந் தயாளு
சரணியனு மென்னருமைத் தந்தை—மரணக்
கலக்கமற மாற்றுங் கதிரொளிசே ருண்மைத்
துலக்கமுறு பாதந் துணை.

315. மாணுபி மான மயக்கமில்சற் போதவருள்
வாணனை வாழ்வகந்து மன்னனுமு—பேரானு
பூதியா லென்னைப் பொலிவித் தொளிர்சொரூப
சோதியெனக் குண்டே துணை.

316. உண்மைப் பெருக்கமா வுள்ளசிவத் தென்சிறுமை
யெண்ணப் படாய விகந்தொழிய—வண்ணப்
பணித்தபரஞ் சோதி பசுபாச மோகந்
துணித்தகுரு பாதந் துணை.

(கொச்சகக் கலிப்பா)

317. அற்பமனத் துச்ச வகப்பட்டி யோனறிவிற்
சொற்பரமன் றூன சொரூபமோ னந்துலங்கக்
கற்பனைதீர் நற்பாயெய்க் காட்சியாத் தான்கலந்த
அப்பனையே யன்றியுயிர்க் காருமிலர் மெய்த்துணையே.

318. சுற்றுமுற்று நோக்கிச் சுழல்வுற்ற சொப்பனத்து
மற்றதுணை யெல்லாமே மண்குதிரை யாக்கழிய
உற்றதுணை யாகவெனக் குள்ளதுசுத் தாந்துவிதப்
பெற்றியா லாண்ட பிரானருட்சீ பாதமே.

27. புகல்

(குறள்)

319. அற்றமற்ற சுத்த வருட்கே வலத்திலெனக்
குற்றதோ ருண்மைப் புகல்.

320. என்னை யடிமையா வேற்ற பிரான்பொருப்பாத்
துன்னியதென் பாரச் சுமை.

(வெண்பா)

321. அரணெங்குங் காணு தலைந்தே னுலக
பரணைஞ்செய் தன்பதத்தைப் பற்றிச்—சரணென்
றடைக்கலமா முற்ற வடைந்திடலும் மோனத்
தொடுக்கமுற்றப் பெற்ற துணர்வு.

322. வருஞ்சோக மோக மலைவகற்று ஞானப்
பரஞ்சோதி யான பகவன்—பெருஞ்சோண
சுத்தப் பிரம்ம சொரூபமா வுள்ளொளிரும்
புத்தனருட் பாதம் புகல்.

323. ஆணவங்கெட் டான்ற வருட்பரமோ குனுபவ
வேணவா முற்றி விளங்கநான்—தானுவாந்
தன்மயமா வென்னைத் தலையளித்த சற்குருதன்
பொன்மயமாந் தாளே புகல்.

324. காரியமாச் செய்தவ(ம்)நான் கற்றெழுகேன் மூடமனக்
காரறிவாற் கற்பனையிற் கட்டுண்டேன்—ஆருயிர்க்கு
நன்னயமிக் கான்றகுரு நாதன் றிருவருட்செம்
பொன்னடியே யுண்மைப் புகல்.

325. அருட்பாதந் தன்னி லடைக்கலமாப் புக்கேன்
மருட்பா ழவிச்சையற மாய—வெருட்பார்வை
யானவிக் கேப டகந்தைமூ லத்தோடும்
போனதா லுண்மைப் புலத்து.

(கொச்சகக் கலிப்பா)

326. பெம்மானை யன்றிப் பெறற்கரிய பேறுமற்
றெம்மா நிலத்து மெவர்க்கு மிலாமையாற்
பொய்ம்மா லகன்றொழியப் பொங்குந் திருவருளாந்
நம்மா னடியே சரணுகச் சார்ந்தோமே.

குறிப்பு :— தம்மான் - தலைவன்

28. திருவடி தரிசனம்

(குறள்)

327. அப்பனருட் கண்ணு லறிந்தேன் அகந்தைமனக்
கற்பனைக்கெட் டாத கழல்.

328. ஆண்டவன்கண் ணுைக்கா லகத்தே யருள்வெளியாக்
காண்டலுற்றே னுண்மைக் கழல்.

329. உலப்பிலா வுண்மையா வுற்றேன் மயக்கக்
கலப்பில்சற் போதக் கழல்.

330. மயக்கமறத் தோன்றுமியல் வாலறிவே யாக
வியற்கழல்யான் கண்டுகொண் டேன்.

331. சிற்பரமோ னத்தாற் சிறக்கநான் கண்டுகொண்டேன்
கற்பனைதீ ருண்மைக் கழல்.

332. காணக் கிடைத்தகரற் காட்சியா லுள்ளத்து
மாணப் படைத்தேன்மெய்ம் மாண்பு.

333. சிதாகாச மானவருட் சேவடி நான் கண்டாங்
கதாகவே நானவிர்கின் றேன்.

334. அமைதிசேர் சுத்த வறிவான மோனக்
கமையிலே கண்டேன் கழல்.

குறிப்பு:— கமையே கழல் என்று தாத்பரியம்.

335. மோனத்த மூர்த்தி முகநிலா சந்தெமெய்ஞ்
ஞானவொளி நண்ணலுற் றேன்.

(வெண்பா)

336. எல்லாமா யெங்கு மிலங்கிடாநுபவன் சாந்ததுணை
நல்லான்மை சார்ந்தநடு நாயகமாய்ப்—பொல்லா
மயக்கப் புலக்கலக்க மாற்றிஞன் சிந்தைக்
கயக்கமறக் கண்டேன் கழல்.

337. கன்றி நலிக்குங்கன் னாட்டமெனக் காண்டவன்மெய்த்
தொண்ட ருவக்குந் துணைப்பதமே—அண்டருண்டர்
வாழ்வுக்கு வாழ்வா மகிழ்ச்சிசேர் போதவருள்
வாழ்வுக் குலாவவ் வனப்பு.

குறிப்பு:— வாழ்வுச் குலா - வாழ்க்கைப்பொலிவு;
அவ்வனப்பு - அதன் அழகு.

338. காதம் பலகடந்துங் காண்பரிது சுத்தவருட்
பாதமென்றிப் பற்றுமற்றுப் பாடடுக்க—போகவியற்
பாதமாந் தன்சொருபப் பார்வையாற் பாசபந்தஞ்
சேதமுறச் சேர்ந்தேன் சிவம்.

339. மோனச் சதிர்சேர் முழுமுதலின் றாகத்து
ஞானக் கடல்விளக்கா நன்னலையநால்—ஊனச்
சதிகாய மோகவிருள் சாய்ந்தொழிய வுண்மைக்
கதியாகக் கண்டேன் கழல்

340. மூன்று கழற்றி முடிந்ததற் பின்னரகத்
தோன்ற சொரூப வறிவொளியா—லான்றுபரந்
தாமமா வோங்கு சதாசிவச்செம் பாதமெனக்
கேமமா வுற்ற தினிது.

(கொச்சகக் கலிப்பா)

341. மடந்தருபொய்ம் மாய மனக்கற் பனையைக்
கடந்தொளிர்கை வல்யக் கழல்கண்டேன் அன்பா
லடைந்தவடித் தொண்ட ரகப்பாழ் மயலைக்
கடந்தருள்செங் கமலமலர் கழற்கா லடைந்தே.

29. திருவடித் தியானம்

(குறள்)

342. இடர்களைந் தாண்ட விறைசிற் பதத்திற்
சுடர்வதென் சிந்தை தொடர்ந்து.
343. குறைவிலா மோனங் கொடுத்தான் பதத்து
நிறைவிலே நின்றதென் னெஞ்சு

(வெண்பா)

344. ஒன்றாமற் றவன்மை யனைத்தொளிர்ந் தாற் கற்பனையா
வென்றுமற்ற போத விகற்பமற—என்றுமுளத்
தென்றுங் கொடியிற் றிருக்கும் பிரான்பதத்தே
நின்றதியல் பாகவென் னெஞ்சு.

குறிப்பு.—ஒன்றுமற்ற வுண்மை-கேவலாத்துவிதத் தன்மையால், தன்னிலே தன்னைத் தவிர வேறொன்று மற்ற வுண்மை.

345. கட்டுக் கயிற்றிற் கருத்தைச் செலுத்துமகட்
பட்டிக் கருளியமெய்ப் பண்பாளன்—சிட்டப்
பிரான்பதமே யுண்மைப் பிராணபத மாக
ஒராவியறப் பற்றிற் றுணர்வு.

346. குறிப்பற்ற மோனக் குறியிலே நிற்குஞ்
சிறப்புற் றொளிர்சொருப தேவன்—மறப்பற்
றிருந்தொளிர்வ தான வியற்செம் பதத்திற்
பொருந்தியதென் புத்தி பொதிந்து.

347. பொருந்தக் கடவதுதன் பொற்கழலே யாகத்
திருந்தத் தெளிந்த தியானம்—வருந்திக்
கிடந்தழுங்கு சிந்தைக் கிலேசமற வாண்டா
னிடந்ததும்ப வூற்ற தெனக்கு.

348. சுத்தசிவ மான சொருப குருவையன்றிச்
சிந்தந் தொருகாலுஞ் சிந்தியேன்—பத்திசெய்யத்
தெள்ளிதா மந்தவருட் சீரமணன் பாதமே
ஒள்ளிதா வுள்ள வுரு.

(கொச்சகக் கலிப்பா)

349. பொக்கமறப் புன்கலக்கம் போகவெனக் நன்னொளி
மிக்க வருட்குணப்பொன் மேருவா நின்றபிரான் யாய்
தொக்கசிவச் சொக்கன் சொரூபந் தியானமன்றித்
தக்கதா மற்றோர் தருமமெனக் கில்லையே.

350. வள்ளியபே ரின்ப வளஞ்சே ரருள்விழியால்
ஒள்ளியமெய்ஞ் ஞான வொளிக்கதிரூ ழுப்பரப்பித்
தெள்ளியவாழ் வாகத் திகழ்சொருபன் சேவடியை
யுள்ளியுள்ளி யுள்ளம்பின் னுள்ளலற வோய்ந்ததே.

351. ஆர்வக் குரோத மகற்றியமெய் யன்பரகம்
பேர்வரிய கோயிலாம் பெய்மா னருட்பதமெய்ச்
சீர்வரிக்க வூற்ற தியானமே ஜீவனமாச்
சேர்வதால் வாழ்வு சிவப்படக்காண் கின்றேனே.

352. அத்தகவே நிற்கு மறிவற்ற வாணவப்பா
ழெத்தனே னெக்கன் டிரங்கி யருளியமெய்
வித்தகன் பாலெனக்கு மீக்கூர் விருப்பமெழத்
தித்திக்க வூற்றதுவன் சேவடிச் சிந்தனையே.

353. கற்பனைதி ருண்மைக் கடவுளருட் சிற்பரவாழ்
வற்புதமா வுள்ளத் தலர்வித்த வாண்டவன்செம்
பொற்பதமே மோனானு பூதியாற் றன்னியல்பா
வெப்பொழுதும் புந்திசெய்கின் றேனடியே னின்புறவே.

354. அன்பாலே யாற்று மனுசந்கா னத்திறந்தாற்
பொன்போலே போற்றிப் பொதிந்துவைத்தேன் புந்தி யிற்பே
ரின்பா வெழுந்தருளி யான்யானென் றென்னறிவைத்
தன்பாலே சார்வித்த சற்குருநதன் மாணடியே.

355. சொற்பால தல்லாத் துரிய சொருபவருட்
பொற்பான போதை பூதியா லுள்ளுணர்விற்
றப்பாக வுண்மைநிலை சார்வித்த வான்றவன்று
ளெப்போது முள்ளத் திடைவிடா தெண்ணுவனே.

30. திருவடித் தியானமும் பயனும்

(குறள்)

356. பிரானடி நான் பேணலாற் பெற்றே னகத்திற்
பராவமுத மோனப் பயன்.

357. பிரானடியே யெண்ணிப் பிறப்பறுத்தேன் உள்ளத்
தொராரனொருதன் னுண்மை யுணர்ந்து.

358. பாதானு சந்தானம் பண்ணலால் வாய்த்ததுசற்
போதானு பூதிப் பொருள்.

(வெண்பா)

359. பொய்ம்மை யைன்றுசிவ போதமுற்றேன் வித்தகமெய்ப்
பெம்மா னருட்பதமே பேணலால்—செம்மான்
பதமா லொளிர்சொருபப் பார்வையால் வாழ்க்கை
இதமாமெங் கெங்கு மெனக்கு.

(கொச்சகக் கலிப்பா)

360. ஏயகனு மோக மிகந்தொழிய மெஞ்ஞான
நாயகனா வுள்ளுருது நாதனைநான் சிந்தித்தேன்;
*பாயவகப் பாழ்பாயக்கப் பற்றறச்செற் றுள்ளுணர்வே
யாய சொருப வருள்வெளியா நின்றேனே.

*பாய - பரந்த.

361. என்றைது [illegible] விருக்குமுனார் வாயன்றி
யொன்றுது தன்சொருப வுண்மை யடை வென்பர்:
உண்ணு ரமுதமா வுள்ள சொரூபனடி
யென்னுநின் றேனிதயத் [illegible]

362. மிக்கபர வுண்மை விளக்கமா மோனவருட்
சொக்கனையே யென்னிலென்னிற் [illegible]
வுள்ளுணர்விற்
பொக்கமனக் கற்பனை போகுமாப் பொய்த்தொல்
ஒக்கவுல கந்தோ டொழுகுமா றேரேனே.

363. ஆற்றமே தக்க வருட்பிரம்பா வுள்ளத்து
மாற்றி யகந்தை மயக்கமற மற்றதன்மெய்
தேற்றினன் சேவடியே சிந்திக் [illegible]
போற்றலால் வாழ்வுசிவ போகஞ்சேர் வுற்றதே.

364. தாமதமின் றுகத் தடுத்தாண்ட சற்குருதன்
காமருசீ பாதங் கருதலுற் றேனுக்குக்
காம வெகுளி மயக்கங் கழன்றொழியச்
சேமவுணர் வான சிவானுபவஞ் சேர்ந்ததே.

365. [illegible]
தெள்ளியான் சுத்தவருட் சீபாத போதந்தாற்
கள்ள வகந்தை [illegible]
தெள்ளமுத மான சிவானுபவஞ் சேர்ந்ததே.

குறிப்பு:— சீபாத போதம் - திருவடி ஞானம்.

366. தீர்த்தமா வுள்ளசிவச் செம்பிரான் சேவடிநா
னேர்த்தலை [illegible]
போர்த்தலுற்றேன்; சுத்தவருட் பூரணமாய் வாகவிளங்
காத்தன் சொரூபமெனக் காரா வமுதமே.

367. ஆசையா லாண்ட வருட்பிரான் சேவடியை
நேசமாய் நீள நினைக்க [illegible]
பாச மயக்கப் படரொழியச் சிற்பரமெய்த்
தேசவுணர் வான சிவானந்தஞ் சேர்ந்ததே.

368. கூர்ப்பான மோனக் குறிசேர் குருரமணப்
பார்ப்பா னருட்சிற் பதமே பரமாக
ஓர்ப்பா மையேயுற் றுளந்தெளிந்தாங் கூனவகட்
பேய்ப்பாச மான பெருங்கவலைக்கட் பேர்ந்ததே.

369. ஊறு குரூட்பிறவித் துன்பகற்றாய் மெய்ஞ்ஞானத்
தேறு திருவடியே சிக்கெனச்சிந் திக்கவுற்றேற்
காறுத சுத்த வருள்வெளியாப் பொங்குசிவ
யோகானு பூதியிலே யுற்றிடவென் னெஞ்சவமே

370. ஆக்கமா வுள்ள வருட்சிற் பிராணடியே
[illegible] யுள்ளத் [illegible] யுன்னுற்றேன்
சூக்கமா வுள்ள துரியசொரு பானுபவ
யோக்கமே [illegible] மோனமே.

371. படர்கெட் டொழியப் பரிந்தென்னை யாண்ட
கடவுட் பிரான்மெய்க் கழலே கருத்திற்
சுடர்வுற் றியல்பாத் தொடர்வாற் பிறவிக்
கடல்வற்ற மூண்டதருட் கைவல் லியமே.

372. குலையாத மோன குருமூர்த்தி பாத
நிலையான மெய்ஞ்ஞான நிட்டையாற் சுற்று
மலையாத சுத்த வருள்வெளியே வாழ்வா
வலையாத வுண்மைநிலை யுற்றிற் றுளத்தே.

373. பரமான சுத்தவருட் பார்ப்பான் பதமே
சிரமே லணிந்து தியானித்த வாற்றுற்
பரமோப சாந்தப் பதங்கண்டு கொண்டேன்
புரமான மூன்றிற் புழுங்கியநா யேனே.

374. அங்கிங் கெனாமலெங் கெங்குநிற் பெருவெளியாய்ப்
பொங்குநுங் [illegible] பதத்தைப் புந்தியிலே போற்றலாற்
கங்குல்பக லற்றவருட் கைவல்ய பூமாவாத்
தங்கியது சுத்த சதாசிவசாம் ராச்சியமே.

375. அருள்வண்ணப் பெருமா னடிநினைந் தென்னுக்
கிருள்வண்ணப் பாழ்கெட் டிதய வொளிர்வால்
மருள்வண்ண மான மயக்கமோ வன்றி
வெருள்வண்ண மான விகற்பமோ வின்றே.

376. வேதத் தலையில் விளங்கு சொருப வருட்
போதத் துலக்கமாம் பொன்னடியென் னுட்பொதிந்
பாதிக்க லூற்றவெம் பாசப் பிரமாதர் [தேன்;
சூதற் றெழிந்ததுசூழ் சுத்த வெளியிலே.

377. கற்கக் கடவமெய்க் கல்வியாச் சேவடியைச்
சிக்கெனவென் னுள்ளே செறித்தேன் றிருவருளாற்
புற்கெனமற் றெல்லாக் கலையும் புலம்பவியற்
சிற்பரமா வஸ்து சிறக்கச் செழித்ததே.

31. திருவடி சூடல்

(குறள்)

378. ஒருசொலா லுண்மை யுணர்த்தினான் பாதஞ்
சிரசிலே சூடினேன் சீர்த்து.

(வெண்பா)

379. அடிக்கமலஞ் சூட்டி யருளினன் செம்பொன்
முடிக்கலமா வென்றன் முடிமேல்—அடைக்கலமாப்
புக்கதா லெந்தையருட் பூரணசாம் ராச்சியவாழ்
வொக்கவடைந் திட்ட துளத்து.

380. உரமாக மோன முளத்தில்வே ரூன்றப்
பரமான பாதம் பதித்தான்—பரமாக
வுய்விக்க வென்னைக் குருவா வுருக்கொண்ட
தெய்வப் பெருமான் சிவன்.

32. திருவடி கூடல்

(குறள்)

381. தற்பரமா வென்னகத்துத் தங்கியது சுத்தவருட்
கற்பகமா வாண்டான் கழல்.

382. தற்பரவாழ் வாகத் தழைத்ததென் னுள்ளத்திற்
கற்பகமா வாண்டான் கழல்.

(வெண்பா)

383. கூறலரி தாகக் குலவுமோ னுனுபவப்
பேறருளி யாண்ட பிரானடியை — வேறுபடா
வைக்கியஞா னத்தா லடியேன் சொரூபமா
வைக்கலுற்றே னெய்க்கலில் லேன்.

(கொச்சகக் கலிப்பா)

384. மூடா ணவப்பாழ் முனைப்பாலே நானெனதென்
றாடாடிக் கற்பனையு நிசலா நுற்றேனுக்
கோடாத வுண்மையா வுள்ளம்புக் கூன்றியது
வீடா விளங்கலுற்ற வித்தகன்மெய்ப் பாதமே.

33. திருவடி கூடலும் பயனும்

(குறள்)

385. உள்ள லறச்செற் றுபசாந்தி நல்கியது
கள்ளமற வாண்டான் கழல்.

356. எளியேனை யாண்ட விறைவன்சீ பாத
வொளியால் விளங்கிற் றுளம்.

(வெண்பா)

387. அருட்பேறு பெற்ற வடியேனுக் கின்பச்
சுரப்பாக வுள்ள சொரூபன் — திருப்பாத
நீழ லெனக்கு நிறைந்தபரந் தாமமாச்
சூழலுற்ற தோ ரியல்பாத் தொக்கு.

388. அனுபூதி வாயிலா வாண்டா னடிக்குத்
தனுவாதி மோகந் தணந்தே—பனுமா
மறையிதயச் செப்பொருளே வாழ்முதலாய் முற்ற
நிறையுணர்வுற் றேங்கியது நெஞ்சு.

389. ஆண்டவன்றன் போல வடியேனுக் காசைமிகப்
பூண்டொழுக மற்றோர் பொருளில்லை—ஈண்டுபரஞ்
சோதியா மந்த விறைவனடி மிக்கவனு
பூதிநலம் பொங்கும் பொருள்.

390. தொக்க சொரூபவருட் சோதிப் பிழம்பாகச்
[illegible] —பொய்க்
கனவாத்
தோன்றுலக [illegible]
சான்றகமாத் தப்புவித்த தால்

குறிப்பு :— அல் - சுற்றசை.

391. இசைபாடக் கூட்டினு னின்பவருட் பேற்றை
யசைபோட் டகந்நேநா ஞரப்—பசையற்
றருட்பாதப் பற்றே யனுபவவாழ் வான
விருப்பாயிற் றுள்ளத் தினிது.

392. தாணிற் சிறந்த சொருபகுரு பாதமே
பேணிக் கிடந்த பெரும்புண் ணியவசத்தால்
மாணச் சிறந்தவருள் வைப்பாக என்னகத்திற்
காணத் துலங்குவது கைவல்ய பூமியே.

393. சண்டியபல் வேறுபா டுிர்சைகளா(ய்) மிச்சையற
[illegible]
யாண்டருரு நாத னருட்பதத்தே ஆர்வமுறப்
பூண்டமெய் யன்புணர்விற் பொங்கும்பே ரின்பமே.

394. சூக்கமாத் துன்று சொரூபசாட் சாற்கார
பாக்கியவாழ் வாசுவகம் பற்றலாற் கைவல்ய
மோக்கமா மோன முழுமுதலா முற்றியது
[illegible]

395. எக்கமோ [illegible]
[illegible]
[illegible]
[illegible] பூரணமாய் பொங்கியதே.

396. உஞ்சிடநான் யாதோ ருபாயமுந்தே ராதுலகில்
[illegible]
[illegible]
கஞ்சமே கைவல்ய யாகக் கலந்ததே. [ருட்

397. சூதுசேர் கற்பனை சொப்பனமென் றென்றுமில்சற்
போத சொருபவருட் பூரணமாந் தன்னையன்றி
யாதுமே தோன்றா திதயம்புக் காண்டபிரான்
பாதமே சுத்தப் பராங்கதியாக் கண்டேனே.

398. செஞ்செவே நீடு சிவானுபவச் சீர்மையால்
விஞ்சைசேர் சுத்தவருள் வெற்றிமேன் மேல்விளங்க
நெஞ்சமே பக்கு நிரம்பினான் பாதமன்றித்
தஞ்சனே னுக்கோர் சதுபாயம் வேறின்றே.

399. மத்தச் செருக்காலே மாயப் புலங்களாம்
பொய்த்தத் துவங்களிலே புக்குழன்று நின்றேற்கு
மெய்த்தத் துவமா விளங்கியது நானெனும்போய்ச்
சித்தக் கலக்கமறச் செற்றபிரான் சேவடியே.

400. விஞ்சவே தாந்த வியன்பதத்தில் மேவிடப்பாய்
வஞ்சனேன் சுத்தவருள் வாழ்வடையக் கூர்விழியாற்
செஞ்செவே யென்னைத் திருத்திப் பணிகொண்டோன்
கஞ்ச மலர்ப்பதமே கைவல்ய மாயிற்றே.

401. சுத்த சிவமே சொருபமா வுள்ளத்தில்
வித்தகமெய்ஞ் ஞான விபூதியளித் தாண்டபிரான்
புத்தமுத வூற்றான பொற்பதமேன் றென்றுமகந்
தத்துமியா போன வருள்வெளியாப் பொங்கியதே

402. ஒற்கமற நானென் றுடல்வடிவா மோகித்துக்
கற்கலுற்ற பல்கலையுங் கற்பனையின் பாலனவாப்
புற்கனவே யங்கவென் புந்தியுட்புக் காண்டவன்றான்
சற்கதியா நன்கு சதோதயமாப் பொங்கியதே.

403. நிற்பதன்றி மோன நிலையிலே சுட்டறிவாற்
கற்பதற்கு வேறில்லைக் கைவல் லியசொருபச்
சிற்பதத்தி லென்னைச் செறிவித்த வாண்டவன்செம்
பொற்பதமே பூமாவாய்ப் பொங்கிற் றுளத்திலே.

404. அருட்பார்வை யாலே யடியே னகத்து
மருட்பாச பந்தமற மாற்றியவென் றாண்டான்
திருப்பாத நீழலாஞ் சித்தோப சாந்தி
இருப்பான முத்திப்பே ரின்பவிய லாமே.

405. இருப்புணர்வா வுள்ளபேரின்பவியல் வாழ்வா
விருப்பமுற வோங்கு விழுப்பதமா(ம்) மோன
குருப்பதமே ஞானக் குலாவான முத்தி
யுருப்பதமா வுள்ளத் துறுதியுற்ற வாறே.

406. இருத்திநீ சும்மா வெனப்பணித்த வோர்சொற்
கருத்தான மோனவருட் கைவல்ய சித்தி
பொருத்தியென் னுள்ளத்துட் பொங்கு சொரூபக்
கருத்தன் கழலேநான் கண்டபர மார்த்தமே.

407. இன்றியமை யாத வியற்பர வுண்மையாத்
தொன்றுதொட் டுள்ள சொரூபசிவ ஞானகுரு
மன்றவென் மாட்டு மலர்த்தியபொற் பாதவொளி
துன்றுமுயர் சுத்தத் துரீயமாத் தங்கியதே.

408. தீனர்க் குதவுந் திருவருளாற் கைவல்ய
ஞானக் களிபெறவஞ் ஞானக் கலக்கமற
நானற்ற மோனநிலை நன்னுவித்த வாண்டவன்ருட்
டானமே மிக்கபரந் தாமமென் னுருயிர்க்கே.

409. ஆன்ம சொருப வறிவொளியாற் பேரின்பத்
தேன்மயமா வென்னகத்துத் தித்திக்குந் தேமலர்த்
ஊன்மயமா வுற்றபா மூத்தையகப் பேய்வாழ்வை [தாள்
வான்மயமா மோனவருள் வாழ்வாக மாற்றியதே.

410. அடியே வடிவா அடிகளுக் கூண
அடியே னுருவற் றொழிந்ததற் பின்னர்
அடியே னெனுஞ்சொல் அசங்கத மாக
அடியேசுத் தாத்துவி தான்மாவா யிற்றே.

411. ஒன்றியவென் னுள்ளத் துணர்வொளிசேர் மோனவருள்
வென்றிசா திப்பித்த வித்தகன்பொற் பாதமே
என்றுமெனக் கின்ப வியற்பரவாழ் வாகவொளிர்
நன்றிசேர் வுற்றதுமெய்ஞ் ஞானனு பூதியிலே.

412. செடிசே ருடலுலகச் சிந்தனையற் றோய
அடியேன் மனத்தை யருள்வெளியாச் செற்றான்
அடியே யெனக்குமெய்ஞ்ஞா னான்ம சொரூப
முடிவான முத்தியா மூளப்பெற் றேனே.

413. பிழையான வெல்லாம் பிழைபட் டொழியப்
பிழையாத மோனவருட் பேறளித்த வாண்டான்
உழையே னுளத்துக்கோ ரொண்சுடராம் போதக்
*கழையான பாதரசங் காண்கவிட் டின்பே.

*கழை - கரும்பு.

414. மோழையேன் பொல்லாத மூர்க்கனேன் வெம்பிறவிப்
பிழைகளுக் கெல்லாம் பிறப்பிடமாம் மோகவகப்
பாழைப் பரவெளியாத் தேற்றினன் பாதவொளி
ஏழை யடியேற் கிதயமாப் பொங்கியதே

415. எத்தனை காலமோ என்னைநான் ஜீவனுப்
பொய்த்தொழிந்த மோகப் புலையேனைப் போக்கமற்ற
சுத்தப் பரமாத் துலக்கியமெய்ஞ் ஞானவருட்
கர்த்தன் கழலெனக்குக் கைவல்ய வுண்மையே.

416. அடியே கதியா வடைந்தேற் கடியேன்
முடிமே லரச முகுடம் புனைந்தான்;
தடையாது மற்றபர சாம்ராச் சியவாழ்
வுடையா னடிச்சீ ருணர்வலா வின்றே.

417. கயக்கவுடற் சிந்தை கலவா தகத்து
நயக்க விளைந்தமெய்ஞ் ஞானனு பூதி
மயக்கமனக் கற்பனையை மாற்றினன் பாதத்
துயக்கமறப் பொங்கு முவகை யுணர்வே.

418. வாளா மனமயக்கக் கற்பனையின் மாழ்குங்கால்.
மீளாப் பரமபத விடொன்றே வஃதன்றி
மாளா வமுதவியல் வாழ்வுமா வாய்த்ததெனக்
காளா வடைந்தேனை யாண்டவன்சீ பாதமே.

419. பங்கயன்மால் காணுப் பரம னெளியரா
மெங்களைநன் காண்ட வியைபா லிதயத்து
மங்கலவாழ் வாக மகிழ்ந்தளித்த நன்பதமெங்
கெங்குமவன் சந்நிதியா வென்றென்றும் பொங்கியதே.

420. சிற்பரமா வுள்ள சிவக்கே வலசொருபக்
கற்பகமா வென்னுட் கலந்தபிரான் கைவல்யப்
பொற்பதமே பூமாவாப் புந்தியிலே பொங்கலுற்ற
தற்புதமா மோன வனந்த சிவாம்புதியே.

34. திருவடி நீழல்

(வெண்பா)

421. கழல்சேர்ந்து வாழுங் கருத்தா லடியேன்
அழல்சேர் [illegible] தாப மகன்றேன்— அழல்சேர்
பெருந்[illegible] துன்[illegible] [illegible] வாழ்வில்
அருங்குளிர்சேர் தண்ணிழல்கா ணஃது.

422. இருப்பதற்கு நல்[illegible] [illegible]க் காண்டா
னருட்பதத்து நீழலே யாகும்—அருட்பதத்து
நீழலிலே யுள்ள ஙிரதிசயா னந்தமுயிர்க்
கேழுலகாண் டாலு மிலை.

35. திருவடி மாட்சி

(குறள்)

423. [illegible] கிடைத்[illegible] [illegible]குரு நா[illegible]
ஓடவிட்ட செம்பொன் னுரு.

(வெண்பா)

424. [illegible]குரு பா[illegible] [illegible] [illegible]நிறைந்
தீண்டுசிவ லோக மெதிர்ப்படவே—காண்டலருங்
காட்சிசே [illegible] [illegible] போனவருட்
சாட்சியா நின்றது தான்.

425. அயல்வழியி[illegible] [illegible] [illegible]வாயியா முன்னை
யியல்வழிக்கே சிந்தை யியங்க—உயல்வழியா
நின்றகுரு பாதமென் னெஞ்சத்தில் வேரிறங்கி
மன்றவளர் மோன மலை.

426. அன்பிற் பழுத்த [illegible] [illegible]ளிர்பே
ரின்பவருள் சான்ற விறைவனடி—வன்பிற்
கரும்பா றையினுங் கடியேன் கருத்தை
அரும்பாகத் தான்கரைத்த தால்.

குறிப்பு :—ஆல் ஈற்றசை.

427. இலக்காக வெங்முன் னிலவுவது நெஞ்சங்
கலக்கவந் தாண்டான் கழலே—நக்க
வடியேனை யாண்டா னருட்பதமே யானன்றுர்
குடியேறி வாழு முலகு.

(கொச்சகக் கலிப்பா)

428. உள்ளுநா ரத்தால் உபசாந்த போகமெனக்
கள்ளி வழங்கியெவ் [illegible] வைதநாகன்
உள்ளுந்தா [illegible] னுள்ளுணர்விற்
றெள்ளிநா வுள்ளயவன் செல்வந் திருவடியே.

429. பிடியேது மற்ற விழச்செல்வ மாந்தன்
னடியே பொருளா வகங்கிளரப் பொங்கக்
கடியேனை யாண்டவருட் கண்ணு ரமுத
னடியே யடியார்க் குபரிமித வாழ்வே.

30. ஊனவகங் கார வுணர்வா மயக்கமற
நானதுவா மோனமெய்ஞ் ஞானானு பூதியால்
வானவியல் வாழ்வு வழங்கியவன் றாண்டவன்றுள்
தேனமுத மாகத் [illegible] துள்ளத்தே.

431. அரணமாத் தன்னை யடைந்தே னகத்து
மரணமா மோக மனக்கலக்கம் பொன்றப்
புரணசற் போதானு பூதியளித் தாண்டான்
சரணமே யான்ற சதாமுத்தி வாழ்வே.

432. [illegible]
[illegible] வேறுபா டற்றொழிய
[illegible] டாண்டவருட்
குன்றமா மோனக் குலாக்கான் குருபதமே.

433. பற்றியசற் [illegible]
கற்றபாற் [illegible] முனைப்
பற்றொழியக் கண்ட வருட்பரத்துற் காமாதக்
குற்றமறுத்த துன்று குலாக்கான் குருபதமே.

434. திரிசமவஞ் சச்செருக்குச் சேரா தகற்றும்
பரசிவமெய்ஞ் ஞானவருட் பார்வையால் உள்ளத்
தரசுரிமை நல்கியவென் ளுண்டவன்சி பாதம்
பரசிடுமெய் யன்பரகப் பாழ்மயக்கம் போமே.

435. ஊரென்று மில்லா வுறுதிசே ருண்மைநிலை
தேறென் றிதயத்திற் சிற்பரமாந் நற்பரமெய்ப்
பேறென்று வித்தவருட் பேராளன் பெய்கழலே
வீறென் றியகடவுள் வெற்றிசா திப்பதே.

436. மீளாக் கதியா விளங்குசிவச் சிற்பரவாழ்
வாளா வடைந்தே னகங்கிளரக் கண்டபிரான்
தோளா முழுமணியாத் தொக்க சொரூபன்மெய்த்
தாளே யலாமற் சரணெவ் வெவர்க்குமின்றே

437. கற்பவற்றுக் கெல்லாங் கரையாக வுள்ளதுதம்
முற்பவமோர்ந் துள்ளத் தொடுங்கு மொளிநெறியாஞ்
சிற்பரமெய் விட்டிற் றிளைத்தலுற வென்போன்ற
வற்பரைநன் காண்ட வருட்பிரான் பாதமே.

36. திருவடி தத்துவம்

(குறள்)

438. வெளியாக வென்மெய் விளக்கினன் பாத
வொளியேகாண் முத்தி யுலகு.

439. சிற்பரவாழ் வாகத் தெளிந்தமோ னனுபவக்
கற்பகங்கா ணண்டான் கழல்.

440. வள்ளியமெய்ஞ் ஞானவருள் வாழ்வாஞ்சி பாதமெனக்
கொள்ளியபே ரின்ப வுலகு.

(வெண்பா)

441. அங்கணனு வாண்டா னருட்பதமே யற்றமற
வெங்கணுமென் னேக்கத் திலங்குவதாம்—எங்கணு
ரேதுமிடம் பொய்யா வொழிய விழுங்குறுசற் [மென்
போதமுரு வாகப் புணர்ந்து.

(கொச்சகக் கலிப்பா)

442. சோகமோ கங்கூர் துவிதக் கலக்கமற
மோக வகந்தை முனைப்பையே தான்முருக்கி
ஏக சொரூப வியற்பரமோ னனுபவ
மாக வவிர்வதகத் தாண்டவன்சீ பாதமே.

443. வாசியோ கத்தால் வருந்தவேண் டாதபடி
நேசமெஞ் ஞான நெறிகாட்டி யென்னகத்திற்
பாசமா லோடப் பரந்த வருள்வெளியா
வீசி விளங்குவதென் றாண்டவன் மெய்ப்பதமே.

444. ஒருவடிவு மில்லாற் கடமுமயக்கூற் றெவ்வா
பருவுடலைத் தாங்குறு பாதம்போற் றன்பால்
விரவுலக கோடிகளைத் தாங்கலால் விந்தைத்
திருவடிசச் சித்தாஞ் சிவசொரூபந் தானே.

445. அவ்வா றலாம லடிமுடிமெய் யாகவுண்டெனன்
றெவ்வ வுரைக்கவொணா தன்மைக் கடவுளுக்குச்
செவ்வே விளங்கு சிதாகாச மன்றிமற்
றெவ்வே றுருவுமெய்யா வில்லைத் திறத்தானே.

446. பேர்த்துநான் றன்னைப் பிரிந்தொழியா தத்துவிதச்
சீர்த்திசேர் மெய்ஞ்ஞானச் சேர்த்தியால் என்னகத்து
நேர்த்திசேர் மோன நிறைவா நிலைத்தகுரு
மூர்த்திபதங் காண்கபர முத்தித் திருப்பதமே.

447. ஆழா தடியே னனர்த்தப் பிறவிகளிற்
பாழா ணவவிருளைப் பற்றறவே செற்றருளி
வாழ்வாங் கிதயத்தில் வாழ்வித்தோன் பாதவொளி
சூழாநின் றோங்கியது சுத்தவெளி யாகவே.

448. தங்குதடை யில்லாத் தனிச்சிற் பரசொருபத்
துங்கமோ னனுபவந் தோயவென் னுள்ளத்திற்
பொங்கலுற்ற வாண்டவன்செம் பொன்னடியின் வன்
யிங்கங் கெனாமலெங் கெங்கும் பரந்ததே. [னவொளி

37. ஆண்டவன் வரித்தல்

(குறள்)

449. கண்டுகொண்டா னென்னைக் கழற்கே யுரிமையாத்
தொண்டுபட வென்னாண் டவன்.

450. சொருபவருள் சார்வாற் றுலங்கியது சுத்தப்
பரமசிவ மோனப் பதம்.

(வெண்பா)

451. வல்லதாம் யாது மெனிறுர் தனக்கென்றொன்
றில்லதா மோன வியற்பாமே—நல்லதாய்
என்றன் னியலுணர்த்தி யென்று மெனைத்தணவா
தோன்றியதா லென்றன னுயிர்.

452. முன்னின் றொளிர்சொருப மோன மெழு முதலை
என்னென் றுரைக்கநா னோங்குள்ளேன்—பின்னின்று
வென்னோர்ந்தா னாக வியத்துட் டான்காந்து
தன்னிற்று ணுக்குற்றுத் தான்.

453. கலங்குமனந் தாபவ கழிந்தொழிய மோனந்
*துலங்குமுப சாந்தத் துரியம்—புலங்கா
ணகந்தை மூனைப் பானபே யாட்டமற வென்னை
யுகந்ததுதா னாக வுளத்து.

*துலங்கும் - பெயரெச்சம்

454. மித்தையறி வாக விகற்பமெலாம் போக்கியது
சுத்தவறி வாகச் சுடர்சொருபம்—புத்திதெளிந்
தானந்த மோன வருள்வெளியிற் பாசபந்த
வூனந் தவிர்ந்த துயிர்.

455. புற்கெனவென் ஜீவமருட் போதமறத் தற்பரமே
சற்குருவா யென்னைத் தலையளித்து—நிற்குநிலை
யாந்தன் பதத்தி லனுயாச மாவகந்தை
சாய்ந்தழிய நோக்கிற்றுத் தான்.

குறிப்பு:—' தன்னிழப்பை யென்னகற்றுச் சாதிப்பான்''
எனவரும் ஒழிவிலொடுக்கச் செய்யுள் ஈண்டு
நோக்கற்பாலது.

456. சிவத்திலே யுண்மை தெளிதலாற் பொங்கு
சுவத்தமா மோன சொரூபம்—அவத்தமாப்
போனவா றுளைப் புதுக்கியருட் பூரணமெய்ஞ்
ஞானவாழ் வாக்கியது நன்கு.

457. மற்றுவமை யற்றபெரு மாண்புருமெய்ஞ் ஞானவருள்
வெற்றிசேர் சுத்த விழுப்பதமே—பற்றியவென்
கல்லாத மோகக் கருத்தை யறவிழுங்கி
வல்லாண்மை காட்டியதென் மாட்டு.

458. தன்பெயர்ச்செஞ் சொற்பொருளைத் தான்குருவா வென்
கன்பென் புருக வருளியதே—இன்பதுன்ப {னுளம்புக்
மாதி யிரட்டைக் கதீதமாய்ப் பொங்குசுயஞ்
சோதித் துரீய வுரு.

குறிப்பு:— தன்பெயர் - அகம் அல்லது நான் என்பது; அன்பால் என்புருக. அருளியது அபரோக்ஷா னுபவ மாக்கியது; இரட்டையென்றது, ஆகு பெயரால் அவ்வியல்பிற்றாய மனத்தை; சுயஞ் சோதி என்றது, சத்தானதானே சித்தாத லால்; துரீயவுரு - துரீய சொரூபம்

459. யாதொன் றுளமீதா வியற்பொருளாய்ப் பாழ்பாகச்
சூதொன் றறவென் சொரூபமா—மீதன்பு
கொண்டுநான் மோனக் குடாச்சே ரனுபவமெய்து
தொண்டுபட்டேன் பேதமறத் தொக்கு.

(கொச்சகக் கலிப்பா)

460. என்மெய யுருவா விதயத் திலகுசிவத்
தன்மை யறிந்தேனேர் சாத்திரங்கள் வாயடவேன்
வன்மைசேர் மாய மயக்கவகக் காரிருள்செய்
துன்மனியா வுள்ளத் தொளிர்சொருப நோக்காமே.

461. துன்றியபே ரின்பத் துரீய வருள்வெளியா
மன்ற வகத்து மலர்ந்த சொருபத்தால்
என்றுமொன் றுண வியற்பரமார்த் தந்துலங்கப்
பொன்றியது மோகவகப் பூசல்சே ராணவமே.

462. எண்ணினேன் யானே யிறைவனைமற் றவ்விறையே
எண்ணுவித்தா னென்னை யிதயத்துத் தனவிர்வால்;
எண்ணலரு மோன வியற்சிற் பரசொருப
வண்ணவருள் வாழ்வா மலர்ந்தருவன் கண்டேனுக்கே.

குறிப்பு:—"யானேயோ தவஞ்செய்தேன்" என்னுந் திரு
வாசகம் ஈண்டு ஒத்து நோக்கத் தக்கது.

38 இலச்சினை (முத்திரை) யிட்டான்

(வெண்பா)

463. இதயத் தியைந்த விகலவர் தம்மை
யிதயத்தி னின்றகல வெற்றிப்—பதியவ்
விதயத்திற் பாத விலச்சினை யிட்டான்
இதயத்திற் சேரா ரினி.

464. ஞானவருட் பார்வைகூர் நம்பன் குருரமணன்
மோனவிளக் காகவொளிர் முத்திரையால்—ஊனயகப்
பொய்தனைப் போக்கியே பூரணந்தா னென்றனிருக்
குய்திவரப் பெற்ற துணர்வு.

465. அருட்பெருந் தன்மைக் கடையாள மாக
வுருப்பரந்த மோன வொளியால்—விருப்பமுறு
சாந்தி விளைந்திடச் சார்ந்தோர் முனைப்படங்கக்
கூர்ந்தியல்வ தாண்டான் குறி.

குறிப்பு:—உரு-சொரூபம்.

466. நயக்கலுற்றுத் தன்னையே நம்பி யடைந்தேன்
வியக்க மனத்தை விழுங்கி—மயக்க
வறிவைத் தெளிவித்த வாண்டவன்றன் மோனக்
குறியைக்கூ டிற்றென் குறிப்பு.

467. நிகமா கமப்பொது நிச்சய மாமெய்
யகமா வகத்தே யவிரும்—பகவான்
முகமா வொளிர்சொருப மோனமே யெங்கட்
ககமா லகற்று மறிவு.

468. அருட்குறிப்புக் காணி லகந்தை யடங்கி
யிருக்கலன்றிச் செய்யமற்றென் றில்லை—உருக்கமொடு
சற்குருவாத் தன்னைச் சரணடைந்த தன்னிழப்பாற்
சிற்குறிநின் றேன்மெய் தெளிந்து.

(கொச்சகக் கலிப்பா)

469. வருத்தியவெம் பாச மயக்கப் பிணிக்கு
மருத்துவமா வென்னுயிர்க்கு வாய்ந்ததுயா தென்னிற்
பரத்துவமா மோனம் பழுத்தியல்சற் போத
குருத்துவத்தா லாண்டவருட் கோமான் குறிப்பே

470. அறிவினு லன்றி யடர்க்கப் படாமொய்ச்
செறிவான பாழகப் பேய்ச் செற்றமற மோனக்
குறிகாட்டி யாண்டவருட் கொற்றவன்மெய்ஞ் ஞான
நெறியினைல் வேதாந்த நிண்ணயஞ்சேர்ந் தேனே.

471. தீன வகந்தைக் கெருமாச்செற் றுண்டவன்சீர்
மோனச்சின் முத்திரையே பற்றுக்கோ டாகவென்
றானமற்ற வுண்மையையென் னுள்ளுணர்வாய்ப் பற்றினேற்
கூனமனக் கற்பனையாஞ் சுட்டுணர்வற் றேய்ந்ததே.

472 ஞான சொருப நலஞ்சேர்சுத் தானந்த
மோனவருள் வாழ்வெனக்க மன்றோவிரத் தாண்டியது
யானெனதென் னும்மா றியற்கையற வென்னகத்து
ஞானகுரு மோனமா நாட்டியதன் னுட்டமே.

473. குறிப்புணர்ந்தர் மோனக் குறிவழியே தன்னை
யறிகெனுந்தோல் லாற்றல் அகந்தைமனந் தன்னுட்
செறிவுறுமெய்ஞ் ஞானத் திறமான மோனக்
குறியுணர்ந்தே ஞைகக் குலாவியது மெய்யே.

474. சேர்கலரு சுத்த சிவத்துவமென் னுள்ளுணர்வு
டுர்தலுற மோன வுணர்வொளியா வுற்றபிரான்
கூர்தலுற்ற மோனக் குறிபிற்கோ டாவுணர்வாற்
பேர்தலுற மோகவகப் பேய்க்கலக்கம் பேர்ந்ததே.

475. செய்வதறி யாது சிவசிவா வென்றவெனக்
குய்வழிநேர் வித்தா னுபதேச மோனத்தால்,
ஐயறிவும் மோன வலைவொளியாந் தன்னடியிற்
பொய்தவிர்ந்து வாழப் புணர்ந்ததுமெய்ஞ் ஞானமே.

476. நேமா சரணை நிரம்பாதேற் காசிரியக்
கோமா னருட்சிற் குறியே குறிக்கொளலால்
ஓமாக வுள்ளத் தொளிர்ந்ததுசுத் தானந்த
பூமாவாப் பொங்குசிவ பூரணன்சீ பாதமே.

குறிப்பு.— ஆசிரியக் கோமான் - குருபிரான்;
ஓமாக - ஓங்காரச் செம்பொருளாக.

477. விட்டுணர்வு முற்றமுற்ற மேவிடவென் னுள்ளத்திற்
கூட்டியமெய்ஞ் ஞானவருட் கோமான்மோ னக்குறி
ஈட்டமாம் பல்பிறவிக் கேதுவா மூண்டமனக் [யாச்
கோட்டமா மோகவாகக் கோசங் கலைந்ததே.

478. நாக்குற்ற மான மதோன்மத்தப் பேய்மனத்தைத்
தாக்கித் தகர்த்தெறிந்த சற்குருவின் சிற்குறியாற்
றுக்கற் றியல்சொருபத் தத்துவஞா னனுபவந்
தேக்குற் றமையனேன் சிற்பரவாழ் வுற்றேனே.

479. விழியா விதயத்தில் வித்தகமா வாண்ட
செழியோ னருளியமெய்ச் சிற்குறியே போற்றி
நழுவா தியல்சொருப ஞானனு பூதிப்
பொழில்வா யுடனந்த போகமுண்கின் றேனே.

480. கறக வெனக்கோர கலையுமறக் கைவல்யத்
தற்குறியா வென்னைத் தலைப்படுவித் தாண்டபிரான்
சிற்குறியா மென்னகத்திற் சேர்ந்தவருட் சிற்பரத்திற்
புற்கெனமற் றெல்லாம் புலம்பிக் கழிந்தனவே.

481. அறிவா விளங்கலுற்ற வாண்டவன்சீர் மோனக்
குறியே குறியாக் குறிக்கொண்ட நோக்காற்
பிறிதேது மற்றவருட் பெற்றிசே ருண்மைச்
செறிவான சுத்தசிவச் செம்பதங்கண் டேனே.

482. பிரிவற் றுளிர்சொருபப் பெட்பால் அகந்தைக்
குறையற்ற மோன குருநாதன் கூட்டுங்
குறியிற் படர்ந்ததுறிக் கோளாளர் சித்தத்
திறையும் பிரியா திலகும் பரமே.

483. அருக்கனு வுள்ளத் தமர்ந்ததுகா ணுதே
தருக்கஞா னத்தாற் றடவியநான் மோன
குருக்களா வாண்டவருட் கோமான் குறிப்பாற்
பொருக்கெனநுன் றுள்ளம் புரிக்கக்கண் டேனே.

குறிப்பு :—'ஏதுக்களாலும்' என்னும் சம்பந்தர் தேவாரம் கண்டு நினைவு கூர்தற் பாலது.

484. குருவா வொளிர்சொருபக் கோமான் குறிப்பாற்
கருவா மகந்தைமனக் கட்டந் றொழிந்தேன்
வெருவே னுலக வியாமோகப் பாழிற்
சருவேன் சதாமோன சாந்தியுற் றேனே

485. நானு னெனவகத்து ஞான நடங்குயிற்றுங்
கோனுமென் னுண்மைக் குலாவிளங்கக் காண்டலாற்
றுனுன சுத்தசிவத் தன்மைமேச ரத்துவித
மோனனு பூதி முகக்கலுற்ற துள்ளமே.

39 ஆண்டவன் சின்முத்திரை

(குறள்)

486 ஊத்தை யகபபே யுருக்குலைய வுள்ளத்திற
கூர்த்த திறைசிற் குறி.

487 பருவரல்சேர துன்பமறப பாற்றியது ஞான
குருபரன்கூர் மோனக் குறி.

488. கூர்த்தமெய்ஞ் ஞானக் குறியாற் குலைந்தததுகாண
மூர்க்கவகங் கார முனைப்பு.

489. குலவுசற் போதக் குறியாற் குலைந்த
துலக மயற்பா முணர்வு

(வெண்பா)

490. நானடிமைப் பட்டகுரு நாதனர சாட்சிக்கு
மோன விலாசமே முத்திரையாம்—ஈனமா
மோகவகங் கார முனைப்பா லுறுங்கலக்கம்
போகவொளிர் போதப் புலம்.

491. நாட்டந்தா னையாக ஞானகுரு வென்னகத்திற்
கூட்டு சொரூபக் குறியேநான்—வாட்டமறச்
சித்தோப சாந்தத் தெளிவா மனுபவங்கூர்
முத்தோக மான முறை.

40. உபதேசமும் பயனும்

(குறள்)

492. ஆண்டவன்போ தித்த வருள்வித்தை யாலகத்து
மாண்டதுநா னென்னும் மயல்.

493. தரிசித் தடைந்தேன் ரமண னென்னைக்
குருசொற் குலாவொளி கொண்டு.

494. ஒருமொழியின் செம்பொருளென் னுள்ளந் தொளிர்
கருமயலின் வீடுகண் டேன். [வார்

495. சுத்த வெளியி லென் சொல்லற் றிறலைந்துகாண
மத்து வகற்றை மயல்.

496. கிறியாக வாண்டான் கிளத்தியது சுத்த
வறிவா விளைந்த தகத்து.

497. அருட்போ தனையால், அறிவே யுருவா
மருட்கலக்க மற்றேன் மனத்து.

498. ஆம்புடையா வாண்டா னறிவித்த வவ்வறிவு
டோம்படைநான் கண்டே னுயிர்க்கு.

குறிப்பு :— ஆம்புடை - உபாயம்; ஓம்படை - பாதுகாவல்

499. சொல்லாத மோனவருட் சொல்லா லகன்றதென்
கல்லா வகந்தைக் கலி.

500. என்னிலைமை யுன்னிலைமை யெல்லாமோர் நன்னிலை
தன்னிலைமை யென்றான் *சமன். [மாந்

*சமன் - சம சத்தாக வுள்ளவன்.

501. பொலிவுசேர் சுத்தவருட் புண்ணியன்சற் போதக்
கலையுருவிற் றென்றான் கருத்து.

502. கருத வொணுதவருட் கைவல் லியத்தால்
*உருவலுற்ற தென்றான் றுணர்வு.

*உருவல் - ஊடுருவல்.

(வெண்பா)

503. மூடக் கபவனேன் மோனப் பரவொளியைக்
கூடற் குபாயமாக் கூடினேன்—ஊடகத்துச்
சும்மா விருவென்றான் சுத்த சொரூபவொளி
யம்மா வகம்படர்ந்த தால்.

504. மாயா விலாச மயக்கமற நானெனும்பொய்ப்
பேயா மகந்தைப் பிழைப்பொழித்தான்—நேயமாய்
நீயார்சொல் லென்றானென் னெஞ்சத்தே மோனமாய்
நீயேநா னென்றே னியான்.

505. மாதிரங்க ளெங்கெங்கும் மண்டிப் படர்ந்தபரஞ்
*சோதியங்க மாகத் துலங்கவுயிர்—நீதியங்கக்
காரணமென் னென்று கழறினான் கட்டுவிட்டுப்
பூரணமென் றுய்ந்தேன் புலம்.

குறிப்பு:—*சோதியங்கமாக - சோதியே சொரூபமாக

506. பிறவறிந்து பண்டிதப்பேர் பெற்றேன் சொரூப
வறிவறியாப் பேதை யடியேன்—அறிவுசால்
பண்டிதநீ யாரென்றான் பாமரனு யென்மடமை
மங்கி யவிந்ததுபாழ் மாயா விலாசத்தோ
டங்கமே போலுருத்த வாணவப்பே யாட்டமே

817. பெரியசற் போதக் கதைவாள் உளத்தொளிர்நல்
லாருயிரா வென்னையடக் காட்கொண் டருளினைன் ;
ஓரியல்பா வுள்ளவவ் வுண்மைப் பிரான்சொரூபச்
சீரியல்வாய் வுள்ளுணர்விற் றேறத் தினைத்தேனே.

818 உத்துங்க மான வொளிப்பிழம்பா வென்னகப்புக்
கத்தன் சொரூபமா வாட்சி செலுத்தலாற்
சித்தஞ் சிவமயமாச் செத்தொளிர யானென்னும்
மத்தமனக் கற்பனை மாயங் கரந்ததே.

819. ஆளாக வென்னையடிக் காண்ட வருட்பிரான்
கோளாம் பிரமாதக் கூற்றங் கொலைவித்தான் ;
மாளாத சுத்தவருள் வாழ்வாக வாய்த்ததுமெய்த்
தாளா வியல்சொரூபத் தத்துவமாஞ் சித்துவமே.

820. அண்டருங்கா ணாதா னையையென யாண்டுகொண் டா
மண்டுசிவ போத மலர்ச்சியா வுள்ளத்திற்
கண்டவருட் காட்சிக் கருத்தை விழுங்கலால்
விண்டதுபோய்ப் பாச வியாமோகக் கற்பனையே.

821. எங்கெங்குந் தானா யிறைவனென் னுள்ளம்புக்
கங்காகம் புத்தியற வாண்டதால் அன்புருவாய்ப்
பொங்குசிவ போகப் பொலிவான மோனவுணர்
வெங்குமியல் பாக வெழுந்து பரந்ததே.

822. வேற்றுமைத் தீ நண்ணா விளக்கமா மோனவுணர்
வாற்றலா லென்னை யடிக்கீ ழறச்செற்றான் ;
கூற்றமா மோகக் கொடும்பிரா ரா தங்குலையத்
தேற்றவாற் சுத்தசிவச் செம்பதவாழ் வுற்றதே.

823. சித்தந் தெளிந்தேன் சிவானுபவச் சீர்மையுற்றேன்
மத்தவகங் கார மனக்கலக்க மாற்றினேன்
கர்த்தத் துவமற்றேன் கர்த்தவ் வியமுமற்றேன்
அத்தனென்னை யாட்கொண் டருள்செய்த வாற்றாலே.

824. இற்றெனவொன் றோத வியற்சிற் பரவெளியாய்ப்
பெற்றி பிறர்க்கரிய பொற்பானே சொரூபவாதன்
வெற்றிசே ராட்சி விளைதலா லுள்ளத்திற்
பற்றியது சுத்தப் பரமோப சாந்தியே.

825. மெய்யன் புணர்வு விளையவென் னுள்ளம்புக்
கையன் சொரூபமா வாண்டதால் ஆணவப்பாழ்ப்
பொய்யனேன் பாசப் புலையுலக வேட்கையகன்
றுய்யவுற்றே னுண்மை யுணர்வொளியாஞ்
[சொற்பதத்தே.

826. அந்தமலஞ் சேரா தனைப்பவ மன்புருவா வுள்ளுணர்வில்
வந்துறைந்த வாலறிவன் மாட்சிசே ராட்சியாற்
றொந்தக் கடந்த சொரூபமாஞ் சிற்பரத்திற்
பந்தவுணர் வானவகம் பாழ்பாழக்கந் தீர்ந்ததே

827. சொற்பரமல் லாத சொரூபன் குருரமணன்
கற்பனையா லேநான் கலங்காது கைவல்யச்
சிற்பதத்தி லென்னைச் சிறக்க வொடுக்கலாற்
அற்றதுநா னென்னு மகங்கார மோகமே

828. ஆங்காரு வரில்லா வுடையான் உலகியலா
டேங்கலற வென்னை யிதயத்தே யாண்டுகொண்டான்;
பாங்கரா வுள்ளசிவ பத்தரினங் கூடிநான்
ஓங்குசிவ பாத வுணர்வொளியால் வாழ்ந்தேனே.

829. பாட்செய் வளாவிநான் பாழ்படா தெய்வாரே
வாட்செய்ய லூற்ற வடியனேன் பாலிரங்கி
மாட்சிபெற வென்னை யடுத்த சொரூபவரு
ளாட்சியா லான்மநிஷ் டானுபவ மார்ந்ததே.

830. தேசுற்ற வுண்மைத் திருவருட்கண் ணோக்கமென்னும்
வீசிக் கருமாய மித்தையகப் பாழுடர்த்தான்:
மாசுற்ற மாணுபி யான மயக்கங்கூ
ராசைத் துயர்தீ ரனுபூதி வாய்த்ததே.

831. [illegible]
சார்பையா வென்னைக் குணம்பெறநன் காண்டு
[கொண்டான்;
சீர்மைசேர் சத்துவநற் சிற்பரமே யானுபவ
நீர்மைச் சுண்மைநிலை நெஞ்சமுறப் பற்றியதே.

832. தூய்மை துறைபு வரிய நன்மையான் பாவியேன்
பாலே பரிந்தென் பசுபாசக் கட்டறுத்தான்;
போலொருவ ரில்லாவெய்ப் புண்ணியனாற் கைவல்ய
வாலறிவுற் றுய்ந்தேன் மடங்கூ ரடியேனே.

833. சாவதற்குக் காரணமாச் சார்ந்த வகந்தையளாச்
சோர்வகற்றி யாண்டான் சொரூப வருட்பிரான்;
மூவலற்ற வுண்மை யுணர்வா லகமகிழ்மன்
ருர்வமுறப் பொங்கிற் றமுத சொரூபமே.

834. அடிமையா வென்னையடிக் காட்கொண்ட வம்மான்
கொடுமைசே ராணவப்பாழ்ங் குற்றமறச் செற்றான்;
மடமைசேர் நானெனும்பொய் மாயமற்ற வாற்றால்
கடமையா வாற்றக் கவிதொன்றி லேனே.

835. மாட்சிசே ராண்டவனென் மாட்டு நிகழ்த்தியநல்
லாட்சியால் நானெனுங்கா ராணவப்பா ழற்றொழியச்
சாட்சியா வேய்ந்தவருட் சைதன் னியசொருபக்
காட்சியா லுள்ளத்திற் கைவல்யம் பொங்கியதே.

836. மோனானு பூதி முகக்கவென் னுள்ளத்தில்
யானு விருந்தொளிர் நல் லெம்பிரான் சுத்தவருள்
வானு வியல்சொருப மாட்சிசே ராட்சியாற்
றுனை முற்றமுழுத் தன்மை தழைத்ததே.

837. தன்னிலையி லூன்றித் தரிப்பதே செய்தவமாத்
தன்னடியி லென்மனத்தைத் தானழுத்தி யாண்டு
[கொண்டான் ;
உன்னுவதோ வுன்று தயர்ப்பதோ வொன்றுமற
மன்னினேன் சுத்தவருள் வானறிவா மெய்ப்பதத்தே.

838. இத்தனுவே நானென் றெழுந்து சுழல்வுறுபொய்ய
மத்தவகங் கார மனைங்கெடச்செய் துண்டபிரான்
சுத்தவருள் வானுத் துலங்கு சொருபத்தில்
வைத்தெனை நன் கோம்பலால் வாழ்வுசிவ மானதே.

839. உறவு தனையன்றி யோரா விதத்தால்
அறிவே யுருவான வாண்டவன் மற்றய்
வறிவே யுருவா வடியேனை யாளப்
பெறலா லடியேன் பிரம்மமா னேனே

50. ஆட்சி வியப்பு

(வெண்பா)

840. உயிர்ப்பு முணர்வுமெனக் குள்ளத்து டன்னை
மயர்ப்பறநன் காண்டான் வடிவே—நயப்பால்
இதயப் பொருளா விருந்தொளிர்தன் னுண்மை
அதியற் புதமென் னகத்து.

(கொச்சகக் கலிப்பா)

841. கொடுமாய மோகக் குழியிலே வீழ்ந்து
தடுமாறுங் காலெனக்குத் தாரகமா வுற்றோன்
படுமாய மான பகற்கனவா மோகங்
கெடுமாறு மாயக் கிரந்திசெற் றானே.

842. என்னதான் கற்றுமற் றெத்தவந்தா னாற்றிடினுந்
தன்னிழப்பை யாருமே சாதிக்க வல்லரல்லர்
என்னிலெனக் கெவ்வா றியன்றதெனில் விந்தையது
மன்னுபெருஞ் சீயகுரு வாள்விழியா லாள்வினையே.

843. துறையோ ரெலாராலுந் தாழ்ந்தப்பட் டேனை
மறையா லறிந்து மடுக்கவொணு ஷன் மோன
முறையா லகத்தே முகந்துகொண் டாண்டான்
இறையோர் வியக்கயான் செய்தருவ மென்னே.

51. ஆட்படுதலும் பயனும்

(குறள்)

844. அருட் களிற்று யானையா லாட்கொளப்பட் டேனை
வெருட்கொளச்செய் விப்பதொன் றில்.

845. தனக்கேநா னைளத் தழைத்தலா னுற்றேன்
மனக்கேத மற்ற மகிழ்.

846. குற்றேவல் கொண்டவருட் கோமான்றாட் காளாகப்
பெற்றே பிறப்பிறப்பற் றேன்.

847. கதிகாட்டி யாண்டவருட் கர்த்தனுக்கு நானின்
மதிதோற்று நின்றேன் மறந்து.

(வெண்பா)

848. குறிகுணநீர் ஞானவருட் கோமானுக் காளா
யறிவறிந்து சாந்தி யடைந்தேன் —பிறிவிலா
மோன சொரூபமா முத்திப் பகலொளியி
னூனமொன் றில்லை யுயிர்க்கு.

849. கேளாப் பொருள்விளங்கக் கேட்பித்த வள்ளலடிக்
காளா யருள்பெற் றடியனேன்—மாளா
வமிர்த சொரூபஞா னுபவத் தாலவ்
வமிர்தமே யானே னகத்து.

850. குணங்கடந்த மோனவருட் கோமான் பதத்தோ
டிணங்கியதா *லவ்வியற்கை தீர்ந்தேன்—உணங்குமன
வாட்டந்தீ ருண்மை மகிழ்ச்சியுறத் தன்சொருப
நாட்டந் திளைக்கலுற்ற நான்.

* அவ்வியற்கை - குணவியற்கை.

851. கோயானுக் காளாய்க் குலவினோன் புன்புலத்துக்
கேமாறிப் போன வெளியனேன்—கோயா
னருளாட்சி யோங்கிற் றகங்கார வேக
மருளாட்சி சேர்ந்த மனத்து.

852. சிவனுக் கடிமையாச் சேர்ந்தே னருளா
லவனென்னை யாண்டா னவனா—லவனியிலென்
றென்மீய வாழ்க்கை யவன்பொ றுப்பாய் நான்ப[illegible]
வான்மசுகம் பொங்கிற் றகத்து.

853. சுடர்விளக்க மான சொரூபமாந் தெய்வக்
கடவுளுக்காட் பட்டுக் கழன்றேன்—பார்வினைக்குப்
பொல்லாப் புலன்களே யோர்ப்ப தன்றித் தன்புலந்தான்
கல்லா வகந்தைக் கருத்து.

குறிப்பு :—கருத்துக்கழன்றேன் என இயையும்.

854. துக்கமனப் பீடை துறந்தேன் குருரமணச்
சொக்கனருட் பாதந் தொழுதலாற்—பொக்கமனச்
சூதா மகந்தையறத் தொக்க சொரூபவொளி
யூர்தாம முற்றே னுளத்து.

855. துறவுக் கணிகலமாத் துன்றுகுரு பாத
வுறவிற் கலைத்தலா லுற்றேன்—பிறவற்றிற்
பற்றறற் றொளிர்சொருப பாரஞா னுடைமை
வெற்றித் திறஞ்சேர் விறல்.

556. தோளா முழுமணியாந் தோன்றல் குருரமணர்
காளா வடைந்த வடியனேன்—மாளாத்
திருவார் சிவசொருபத் தேஜோ மயத்திற்
கருவார் கலக்கமொழிந் தேன்.

957. நிதியா வெனக்கு நிறைந்தவருட் பாதத்
துதியாலே வாழ்த்தித் தொழுதேன்—பதியானை
வாண்டவனு மெந்த வருட்பதமே யென்றுமருவாக்
காண்டலாற் கண்டேன் கதி.

958. பாதம் பணிந்தவருட் பாக்கியத்தா லுற்றதுயிர்க்
கேதம் படாதபே ரின்பவியல்—காது
சிரமந்தீர் சார்ந்தவருட் சேமநிதி யாமெய்ப்
பரம பராற்பரன் பால்.

959. பூண்டோ டகந்தையறப் பொன்றினு லன்றியுளம்
மூண்டொளிர்வ தன்றுபர முத்திநிலை—ஆண்டா
னடிச்சா ரருளறியா லற்றதுநா னென்னும்
முடிச்சா மகந்தை முரண்.

960. பேதக் கலக்கமறப் பேறுறுமெய் யன்பர்க்கு
மேதக்க வுண்மை விளக்கமாம்—போதக்
கழலே கதியாகக் கண்டே னவிச்சை
கழன்றதுபொய்ப் பேதங் கரந்து.

961. யாண்டு மடவர்க்கு மெளியனா காதுமனை
யாண்டா னருட்பதத்துக் கற்றுமுற்றப்—பூரண
வடிமைத் திறத்தா லவிர்சொரூப போகப்
படியிற் பரக்கலுற் றேன்.

962. விபவமா மிக்கவருள் வெற்றிசேர் தன்பால்
அபயமாப் புக்க வடியேன்—உபயங்
கடந்தவருட் காட்சிசேர் கைவல்ய வுண்மை
படர்ந்தொளிரப் பெற்றேன் பதத்து.

963. வெள்ளமா மோனவருள் வள்ளலை நான் மேவினேன்
கள்ளமனம் போன கணக்கறியேன்—உள்ளவுறு
வுள்ளம் பரவெளியா வோங்கலான் மெய்ப்பொருளை
வள்ளமே யன்று வடிவு.

குறிப்பு: மெய்ப்பொருள் ...... வடிவு - மெய்ப்பொருள் (பிரத்யக்ஷத் தன்மையால்) கைக்கிண்ணப் போல்வது மட்டுமன்று, தன் சொரூபமேயாம்.

864. ஆகற் பனையூ டகப்பட் டகங்கார
வேகஞ்சேர் மத்த வெறியனேன் — யோகக்
கருமாய வாழ்விற் கழன்றெழுந்தேன் ஞானப்
பெருமானுக் காட்பட்ட பின்.

865. எனக்குமிடி யென்றுமே யின்றுக வாண்டான்
றனக்கடிமைப் பட்டுத் தழைத்தேன் — மனக்கண்
விசுத்தமெய்ஞ் ஞான விழிப்பார்வை யாலே
பசுத்த மயக்க மகன்று.

866. ஆண்டபரஞ் சோதிக் கடிமையாய் மெய்யன்போ
டீண்ட வியற்று மிறைபணியே — தூண்டலுற்ற
சுத்தசிவ ஞானத் துலக்கமாய் முத்தியுணர்
வுய்த்ததென் னுள்ளத் துறைந்து.

867. இன்பமய மான விறைவனுக்காட் பட்டவெனக்
கன்புமயப் பொய்யிற் றருண்மையாத் — தன்பதியென்
னுருயிருக் காரா வமுதமா வாக்கமுறு
வீரியமிக் கூட்டிற் றுளத்து.

868. ஊனமா போக வுடலகந்தை யற்றொழிய
வானமா வென்னை யடுக்கலுற்றான் — ஞான
விலக்கணங்கட் கெல்லா மிலக்கியமாய் மோன
நிலைக்களமா நின்ற பிரான்.

869. இளிவரலுஞ் சாக வெளியவனு னல்லேன்
வளவனுக்காட் பட்ட மனத்தேன் — பிளவுபடா
முற்றமுழுச் சிந்தையான் மோன வருட்பதமீக்
கற்றெழுகப் பெற்றேன் களித்து.

870. அம்மானுக் காளா யடைந்தேன் அகந்தைசேர்
பொய்ம்மாய மோகப் புலங்கெட்டேன் — செம்மான்
பரந்தாம மான பரஞ்சோதி பாதத்
திருந்தேம முற்றே னினிது.

871. மீண்டுபட்ட மோக வெறிசே ரகந்தையறத்
தொண்டுபட்டு ஞான சொருபனுக்கு — மண்டுமியற்
கைவல்ய வாழ்விற் கழன்றுமனப் பொய்ம்மயல்போய்க்
கைவந்த துண்மைக் கழல்.

(கொச்சகக் கலிப்பா)

872. அத்தநிற் கின்றோ ரன்றிமனக் கற்பனைசே
ரெத்தரா லோரவொண்ணு வெம்பிரான் சிற்பதத்திற்
செத்தொழிந்தேன் செத்துச் சிவமா யுயிர்க்கலுற்றேன்
அத்தனடிக் காளா வடைந்த வடியேனே.

873. மாட்சிபெற்றேன் ஞானவருள் வள்ளலை யாண்ட [வன்றாட்
காட்செய்யப் பெற்ற வடிமையா யுள்ளொடுங்கிச்
சாட்சியனா வானவியற் சைதன் னியசொருபக்
காட்சியா மன்னுசிவக் கைவல்ய ஞானமுற்றே

874. சாட்சியா வுள்ளவருட் சைதன் னியசொருப
மாட்சிசேர் காட்சி மகிழ்ந்தளித்த வாண்டவன்றாட்
காட்செயலா லுள்ளத் தடைந்ததுமற் றென்றென்றும்
மீட்சியற்ற பேரின்ப வீட்டுலக வாட்சியே.

875. காண்டவரு சுத்தவருட் கைவல் லியந்துலங்க
வாண்ட பிரானுக்கே யாட்பட் டொழுகலால்
கண்ட விளைந்தபே ரின்பநிலை யாராலுந்
தூண்டவரு சொந்த சொருபமாத் தோன்றியதே.

876. எல்லாமா வுள்ள வியற்சிற் பரசொருப
நல்லான் குருரமண நாதனடிக் காட்படலாற்
கல்லா மனத்தாற் கலங்கலுற்றே னுள்ளத்திற்
பொல்லா வகந்தையறப் பொங்கியது சாந்தியே.

877. காட்சிக்குத் தானேர் கரையான வாண்டவன்றாட்
காட்செயா நின்ற வடியே னிதயத்திற்
சாட்சியாத் தான்விளங்கு சைதன் னியசொருப
மாட்சியெனக் கற்புதமெய் வாழ்வாத் துலங்கியதே.

878. ஓதலா லேமட் டுணர வொண்ணாதசற்
போத சொருபவருட் புண்ணியனைத் தஞ்சமாச்
சார்தலா லுள்ளத்திற் சஞ்சலப்பே யற்றொழிய
மேதகுவாய் வான விமுத்தி விளங்கியதே.

979. விரிய விளங்கலுற்ற வித்தகசற் போதத்
துரிய சொரூபசுயஞ் சோதிக்கே முற்ற
வுரியனு வாட்பட் டொழுகலா லுற்றேன்
அரியபர மார்த்தஞா னுபவப் பேறே

குறிப்பு:—

"... பெரியார்க்காட் பட்டக்காற் பெறுதுயன் பெறுமாறு
வரிவாள்வா யரவணைமேல் வாட்டாற்றான் காட்டினனே"

என்று திருவாய்மொழி 10-6-10 கண்டு ஒத்து நோக்கத் தக்கது.

980. கணமொன் றற்ற விறைவன் றனக்குநான்
ஊனமற வாட்பட் டொழுகலா லுள்ளத்து
ஞான சொரூப நயப்பாகப் பொங்குசுப
மோனநிலை கைகலந்த முத்தியாந் தன்றியமே.

981. வெட்டும் பிறைவன் விசுத்தத் திருவமுத்தொண்
பாட்செய் தலும்பொய் யகந்தை யமதைகள்
மாட்பட் டொழியவெம் பாசப் படர்ச்சிசேர்
ஞாட்பிற் கிளைத்ததுமெய்ஞ் ஞானவருள் வெற்றியே.

குறிப்பு:—ஞாட்பு - போர்.

982. மற்றெதுவு மற்றபெரு மாட்சிசேர் வாழ்வடையப்
பெற்றேன் பிறந்த பிறவிப் பயன்பெற்றேன்
பற்றனைய யற்ற மகோன்னதமாம் பொன்னடிக்குக்
குற்றேவல் செய்யக் கொடுத்துவைத்த வாற்றாலே

983. சொப்பனக்கே தம்போற் றுலைகலாற் கேதங்க
ளெய்ப்பினிற்கே டின்றி இறைபணியென் றேதுசிவ
மெய்ப்பணிக்கே நின்று விளங்கலுற்றேன் வித்தகமெய்
யப்பனுக்கே யாட்பட்ட வாற்ற லடியேனே.

984. மங்காத வாழ்வை மறைக்கும் மயக்கமனை
வெங்கேதம் போக விளங்குசுப மோனவருட்
செங்கோ லரசு செலுத்துங் குருரமண
நங்கோன் குடிகளாய் ஞானவளம் பெற்றோமே.

985. ஆண்டவனுக் கேநா னடிமைப்பட் டேனறிவிற்
றூண்டா விளக்காச் சுடர்விட் டதுசொரூபம்
ஆண்டவன் பாத வருட்சீ ரவிரொளியால்
மாண்டதுநா னென்னும் மயல்சே ரவிச்சையே.

986. ஞானப் படிவனுக்கு நானடித்தொண் டானதால்
ஈனப் பசாச வியற்கையற வுள்ளத்தில்
வானப் பெருமிதமா வைகும் பரமசுப
மோனப் பரதெய்வ முத்திநலன் மூண்டதே

குறிப்பு: படிவன் - வடிவன், சொரூபன்: தொண்டு - தொண்டன்.

987. ஆமாறு காட்டிஅடியாரை யுய்விக்குங்
கோமான் உலகு குருவா விளங்கலுற்றான்
*சாமா னியமாத் தழைத்தொளிர்சற் போதவருட்
சீமானுக் காளாச் சிறந்தே னடியேனே.

*சாமானியமாத் தழைத்தொளிர்சற் போதம் - நிர்விசேஷமான கேவல சைதன்யம்.

988. பாச மனமயக்கப் பற்று மகங்கார
மோசனமா வூன்றுபரமோன வருட்பெருமா
னாசிரிய மூர்த்திக் கடிமைபூண் டேனறிவிற்
பேசரிய வுண்மைப் பிரம்மசித்தி சார்ந்தேனே

989. சுட்டறிவாங் கற்பனையின் சூதுசேர் மாயையற
விட்டொழிய வாண்டவருள் வித்தகனுக் காட்பட்டேன்
ஒட்டுறவு சற்று முறப்படா வொட்பநுட்ப
வெட்ட வெளி யாக விளங்கலுற்றே னுள்ளமே.

990. பட்டப் பகல்போற் பளிச்சிட் டொளிர்சொரூப
பட்டனுக்கா ளாகப் படைத்தவருட் பாக்கியத்தால்
சுட்டறிவாத் தூன்று சுழற்கற் பனைபோகக்
கட்டற் றொழிந்தேன் கடவுட்கை வல்லியத்தே.

991 மாறு படாததோ ருண்மையுணர் வின்பாகி
வீறு குரு மோனவருள் வித்தகனுக் காட்பட்டால்.
மாறுபடு மாய மயக்கமனப் பீழைதீர்
பேறுபெற்றேன் சுத்தசிவப் பேரின்பச் சம்பந்தத்தே.

992. ஒப்பாரு மோனவுணர் வொட்பமளித் தாண்டவன்
னப்பனடிக் காளா வடைவாற் பரமார்த்தச்
செப்பமெனக் குள்ளே செழிக்கலுற்றேன் கைவல்யத்
தப்பிரவா வான்ற சுவானுபவம் பொங்கவே.

893. உருவெளித்தோற் றப்பா ழுலகூடி மோதிச்
சருவு மகப்பேய்ச் சதியறக்காண் மோன
குருபரனைச் சார்வாற் குலாவுசுப ஞானத்
திருவருள்பெற் றுய்ந்தேன் சிவச்செம் பதத்தே.

894. ஒப்பாமை யுண்மை யுணர்வொளியா லாண்டுகொண்ட
அப்ப னருட்சே வடிக்குநா னாட்படலும்
வெப்புறுகா ரணவப் பேய் மாயவென் னுள்ளுணர்விற்
றொப்பமார் சுத்த சிவானுபவம் பொங்கியதே.

895. தீண்டவிரண் டின்றித் திகழ்கே வலசிவமா
வாண்டவன்றாட் காளாநா னாட்படலான் மற்றவரும்
மீண்ட வொருத வியற்பரவாழ் வாவகத்து
மூண்டதுமோ னானுபவ முத்திப் பெருக்கமே.

896. ஊன வுடற்பிறவி யோய வுளங்கிளர்மெய்ஞ்
ஞான சொரூபனாம் நண்ணலுற்ற வுள்ளுணர்வு
மோன வசீகரஞ்சேர் முத்திப் பெருவாழ்வா
வானளவப் பொங்கியது மாண்பா மதீதமே.

897. அடியனே னுக்கோ ரபரிமித வாழ்வா
வடியனோ டென்னை மறப்பிணித்த வாண்டான்
அடியிலே யென்றன் முடிதோய வைத்தேன் ;
குடிலவகப் பேய்குலையக் கூடியது வீடே.

898. கற்குறிய வென்னைத் தடுத்தாண்ட வேகாம்ப
ரற்குரு பாதந் தலைமேற்கொண் டேனுக்குக்
கற்றறிய தொன்றுமே காணாது கைவல்யச்
சிற்பதமான் மாட்சியாச் சேர்ந்தியல் கின்றதே.

899. வாளா மதோன்மத்த னாக மடம்பட்டுத்
தோளார் சுமையாத் தொலைந்தேனைத் தன்மைதெரித்
தாளாக வாண்டவன்றாட் கற்றே னிதயத்து
மாளாத வாழ்வா மடுத்ததென் னுண்மையே.

900. ஆலவென் றென்னை யருளிறைவன் சேவடிக்குற்
றேவல்பூண் டேனே றெழுமையுந் தொண்டுபட்டேன்;
மேவவொன் றில்லா விழைப்பதப்பே ரின்பவியல்
வாழ்வடைந்தேன் சுத்தவருள் வானமா வுள்ளத்தே.

901. வேதவே தாந்த விளக்கமா மீக்கிளர்சற்
போத சொரூபவருட் புண்ணியனுக் காட்படலால்,
ஏதமறப் பொங்கு மியற்பரநா னுனுபவ
மோதமார் வாழ்வு முகந்ததென் னுள்ளமே.

902. தேவர்க் கரிய சிவச்செம் பதத்திலென்னை
வாழ்விக்க வுற்றவருள் வள்ளற் குருபரன்பாட்
டேவற் றொழும்பா விணக்கமுற்றே னுள்ளுணர்வின்
சாவற்ற சுத்த சதாசிவம்பொங் குற்றதே.

903. சாவுபிறப் பென்றமனச் சற்பனைதீர் சிற்சொரூப
தேவனுக்கா ளாதலாற் சிச்சடக்கட் டற்றொழிந்தேன்;
பாவநா சஞ்செய் பகவனருட் பார்வையாற்
பாவனா தீதப் பரவெளிவாழ் வுற்றதே.

904. மாண்டொழியா தென்னை மயக்கக் கடலினின்
றாண்டவருட் பொற்பாதனுக் காளா யமையனென்
காண்டலுற்ற சுத்தசிவக் கைவல்யக் காட்சியால்
ஈண்டலுற்றே னெல்லையில்பே ரின்பப் பெரும்பதமே.

905. கோளா முழுமணியாக் கொக்க சொரூபனடிக்
காளா னடைவா லருள்வெளியே யொன்னுருவாய்
மாளா வமுதவியல் வாழ்வு மடுக்கலுற்றேன்
வாளா கழிந்தொழிந்த மந்தமனப் பேயேனே.

906. நானே னுவாவிர்சொருப சற்குருவைச் சார்ந்ததால்
ஞானானு பூதி நலங்கிளர வுள்ளத்துத்
தேனூறு விளைந்தசிவத் தேமாங் கனிரசமுண்
டானா வமுதவாழ் வார்ந்தே னடியேனே.

907. ஆருயிர்க்கு மிக்க வருந்துணையா வுள்ளத்துற்
சேரலுற்ற சுத்தவருட் சிற்பரனுக் காளாகத்
தீரலுற்ற வாற்றாற் சிவேசகமே யாகமனந்
தேரலுற்றேன் மாண்வானாய்ப் பொய்ச் சிச்சடக்கட் டிக்
[குலைந்தே.

908. ஆளா வடைந்தே னகங்கார மோகமறத்
தாளா லழித்தவருட் சைதன் னியசொருபன்
மீளாக் கதியா விளைத்தானென் னுள்ளத்து
மாளா வமுதவியல் வாழ்வான சிற்பதமே.

909. கேவல தனிக்குங் கிளரொளிச் சிந் தாமணியாந்
தானே சுதியாகத் தற்பரமெய்ச் சிற்பரனுக்
கான வடைந்தாங் ககந்தெளியத் துன்றியது
தோன மழமணியாத் தொக்க சொரூபமே.

52. பக்தி

(குறள்)

910. பகவனருட் பாதசற் பத்தியா லுள்ளத்
துகவைபொங் குற்ற துணர்வு.

குறிப்பு:—உகவை—மகிழ்ச்சி

911. அறிவான வுண்மையா வாண்டான் றொழு
வுறவே துறவென் னுயிர்க்கு.

912. அருட்கே வலமா வகத்தே மவிர்மெய்ப்
பொருட்கேசற் பத்திபூண் டேன்.

913. அறிவு விளங்கலா லன்புமய மாகச்
செறிதலுற்றேன் சுத்த சிவத்து.

914. சற்பத்தி பூண்டு சரிக்கின்றேன் ஆண்டவன்சிற்
பொற்பதத்த மோனம் புணர்ந்து.

915. முத்திப்பே றன்பான மோனவுணர் வுற்றதுசற்
பத்தியா லாண்டான் பதத்து.

916. பட்டி மனத்தைப் பரனேச பாசத்தாற்
கட்டினேன் சற்கதியுற் றேன்.

(வெண்பா)

917. எனக்கெனவான தில்லையெல்லா மீச னுடைமை
எனக்கெனுமவ் யானு மனைத்தே—மனக்கலக்கந்
அற்றுமற்ற சாந்த சதாசிவத்தே தன்மயமாய்
நிற்கலுற்ற தன்பு நிறைந்து.

418. என்னுயிர்க்கு மிக்க வியப்பான விசற்சே
[illegible]
பண்புசே ருள்ள [illegible] நிட்களமாய்த்
தன்பரிசு காணிழந்த தால.

அருஞ்சொல் :— அவனது நிட்கள சொரூபமேயாகி [illegible]
[illegible] விளங்குதலா
லிருக்கது. தன்பரிசு = அகந்தை மமதை வடி
வான அகப்புறப் பற்றுக்கள்.

419. [illegible] நிட த்தன்னில் [illegible]
அருட்பத்தி [illegible] — இருபத்துக்
[illegible]
[illegible]

420. மோனமே ஞான [illegible] சொருபமாத்
தானறிந்து [illegible] சார்தலால் — [illegible]
[illegible] கலக்கயகன் [illegible]
அற்பாறு [illegible].

421. அத்துவித ஞான [illegible] பராங்குசா
பத்தியியல் [illegible] படைத்தலால் — சித்த
விருத்தி யெனக்கு வியாபகமாய் மோன
[illegible].

422. விதியைக் கடந்து விளங்குமெய்ஞ் ஞானப
பதியிற் பதிந்தொளிர்சற் பத்தி — இதயத்
தலத்தி லியல்பாத் தழைக்க வெனக்குப்
பலித்ததென் பண்டைத் தவம்.

423. அருட்பதமே [illegible] தேற்
றிருப்பதனை [illegible] — விருப்பதன்மே
அன்புசிவ [illegible]
மின்பவுணர் வாயிற் றினிது.

424. அருட்காத லாலே யடியனேன் சிந்தை
மருட்காத லற்றொழிய வாழ்ந்தேன் — வெருட்காக்க
மானவியா கூல மகண்ட சொரூபசிவ
மோனவியோ மத்தின் முடிந்து.

925. நெஞ்சிலே சாந்தி நிகழ்தலாற் றன்னியல்பா
மிஞ்சியே நின்றதன்பு மெய்ப்பதத்தில்—விஞ்சைசேர்
பத்தி ரசானுபவம் பற்றலாற் புத்தியிலே
பொய்த்ததுபல் வேற்றுப் புலம்.

926. பாதமூ லத்திற் படர்ந்தொளிர்சற் பத்திமனக்
கேதஞ்செய் பாசமறக் கீண்டதே—பேத யற்
புத்திக்கு வித்தாப் பொருந்தியநா னென்னுமுனைப்
பற்றொழிய முற்ற வகத்து.

927. சுத்தவறி வாகத் துலங்கு சொரூபசிவ
பத்தியா முள்ளம் படைத்ததே—சுத்தவியற்
பத்தியே ஞானமாப் பற்றுசொரு பானுபவ
சித்தியா(ம்) மோனச் சிறப்பு.

928. அசத்த மனத்திற் சிவசிவவென் றன்பியல்சற்
பத்தியியல் பாகப் பழுக்கவே—சுத்தசிவ
பத்தியே பத்திப் பயனா மனுபூதி
சித்தித்த தென்பார் சிறந்து.

(கொச்சகக் கலிப்பா)

929. அவாத்துயர்பற் றற வருட்சிற் பரத்தா
டுவாமதிபோ லுள்ளத் துவகையெழு சுத்த
சிவானுபவ மோனந் திளைத்தலால், அன்பு
தவாதவியற் பத்தி கனிந்ததுதன் னாட்டே.

930. முத்திப் பரசுகமா மூண்ட சொரூபவருள்
வித்தாகி முன்பு மற்றனைத்தாய் விந்தையாப் பொய்த்
புத்திக் கழுதலாய்ப் பொங்கு சொரூபசிவ [தலாற்
பத்தி மெய்ஞ்ஞானமாய்ப் பற்றிற் றனத்திலே.

931. சுத்த வறிவாத் துலங்கலுற்ற வாண்டவன்சற்
பத்தி விளையவுற்றே ரக்கியத்திற் பாக்கியர்காண்,
புத்திக் கலக்கமறப் பொங்குஞ்சற் போதவருட்
பத்தியா லன்றே பரகதிநான் பற்றியதே.

932. தளைந்தபசு பாசந் தகர்ந்தொழிய வுள்ளத்
தளைந்தசிறி தன்பா லருட்பரமன் றாளில்
விளைந்ததுசற் போத வியன்பரவாழ் வாகத்
தெளிந்தபர முத்தி சிவோகவுணர் வாலே.

933. பேரின்ப வாழ்வாம் பிரம்ம சொரூபவருட்
சீரன் பகத்தே திளைத்தலால் ஆகரவெங்
கோர வகந்தைமனக் கொந்தளிப்பற் றேய்ந்ததுகொண்
டாரம்ப வேக மறக்கெட் டொழிந்ததே

934. சித்தத் தெளிவே சிவத்துவமெய்ஞ் ஞானவருட்
பத்தித் திறமாப் படைத்தேன் பரமுத்தி ;
முத்தத் துவங்களுமோர் முற்றமுழுத் தத்துவமா
யொத்துக் கலந்தனவவ் வுண்மைத் தெளிவாலே

935. அறிவிற் கலக்கமற வான்றமைந்த மோனச்
செறிவே பரமார்த்தச சித்தத் தெளிவாத்
திறவியசற் பத்தியொளி சேர்தலால் உண்மை
நிறைவான முத்தி நிலைதுலங் கிற்றே

936. இருள்வளர் பாச வியற்கையா லுற்ற
வெருள்வளர் சித்த வியாகுலந் தீர
அருள்விளை வானமெய் யன்பா லகத்தரு
பொருள்வளர் சாந்திப் புலந்துலங் கிற்றே

937. சுத்த வறிவு துலங்கவென்னை யாண்டுகொண்ட
வித்தகன்பா தத்தில் விளங்கலுற்ற வுண்மையால்
அத்தகநிற் கின்றமனத் தார்ந்ததுமெய் யன்புணர்வு
புத்தமுத மானசிவ போகமெழப் பொங்கவே.

938. முத்தித் துலங்கா முன்றிணர்விற் காண்டலுற்ற
சுத்தத் துரீய சொரூப வருட்பரன்பால்
அத்தகநிற் கின்றமோ னனுபவச் சீர்மைசேர்
வித்தகசற் பத்தி விளைந்ததென் னுருயிர்க்கே.

939. நஞ்சமா வென்னை நலிந்தபுலப் பாழுலக
வஞ்சமறக் கொன்றவருள் வள்ளியோன் சேவடியிற்
சஞ்சலமற் றேய்ந்த சதாசிவமோ னனுபவ
விஞ்சையா வென்னுள் விளைந்ததுசற் பத்தியே.

940. அறியத் தனையன்றி யன்னியமொன் றில்லாச்
செறிவான சுத்தசிவச் செம்பதத்திற் சற்றும்
பிறியாத மோனவருட் பேறளித்த பெம்மா
னுறவே துறவா வுளந்தெளிந் தேனே.

குறிப்பு:—அறிய - அறிந்தடைய.

941. அறிவேமெய் யன்பா வவிர்தலா லுள்ளத்
திறைவன் சொரூப வியற்சேம் பதத்திற்
செறிய விளைந்ததுசச் சிற்பரமா மோன
வுறவுகெழு பக்தியுணர் வூற்றுப் பெருக்கே

942. யானாகத் தன்னையறிந் தின்புறுமோ னானுபவத்
தேனை விளைந்தசிவச் செம்பிரான் செம்பதத்தில்
வானான சுத்தவருள் வாழ்வா மலர்ந்தமெய்யன்
பானா வருள்விருந்தென் னாருயிர்க்கெக் காலுமே

943. அன்பும் துரா வகத்தே யகமகன்மெய்
யின்ப வுணர்வெழப்பொங் கெம்மான் சொரூபவரு
ளொன்மலையிற் பொங்குசிவ பூரணவாழ் வெய்தலால்
அன்புமய மாக வளைகின்ற தெல்லாமே

944. நீதே யானமைந்து நேர்நின் னருளிற்சொரூப
மாகேவன் வார்கழுகே வாழ்த்தி வணங்குவுற்றேன
காய்தோறன் னிலை மதுரமுசொரூ பானுபவர்
தோய்தலா னன்பு சொரூபமாத் தொங்கதே.

945. பாச மயக்கவகப் பாழுறுமென் னுள்ளத்துத்
தேச வொளிபரப்பிச் சங்கரனா மெம்பிரான்
கோச வகந்தைத் தகைந்தொழியச் செற்றுமென் பேர்ந்
நேசத் தழுந்தி நிராமயவாழ் வுற்றேனே

946. பத்தனா னென்னுமகப் பாழ்மயக்கப் பீழையற
நித்தமா முத்தி நிலையுணர்ந்து முள்ளத்தில்
வித்தகமெய் வாழ்வு விளைந்தவருட் பெம்மானும்
பத்தி யுணர்வு பராவமுத போகமே

குறிப்பு:—பத்தன் - பந்தப்பட்டவன்.

947. இருந்தொளிர்சற் சிற்பரமா வென்னை யண்ணந்த
பெருங்கருணைப் பெம்மான் பிரம்ம சொரூபன்
சுரந்தருள்வாழ் வான சுவானுபவச் செந்தே
னருந்தலா லன்பி லழுந்தலுற் றேனே.

948. பம்புமனக் கற்பனையைப் பாற்றி யடியோமுக்
கெம்பிரா னாகி வியல்சற் குருரமணன்
செம்பரமாத் துன்று சிவத்துருவாத் தேர்ந்தோமுக்
கன்புணர்வு மேன்மே லமோகமாய்ப் பொங்கியதே.

949 முத்தியே தன்னுருவா மூன்றெளிர்மோ னனுபவ
சித்தியா லென்னைச் சிறப்பித்த வாண்டவன்சற்
பத்தியால் வாழ்கின்றேன் பற்றுமற் றேதுமிலேன்
மித்தையாத் தோன்றுலக மஞ்சள் வெளுத்ததே

950. கதியாக வுள்ளசிவக் காதலே ஜீவ
நுதியாக வுள்ளத்து நண்ணலால் ஜனச்
சுதியா மகந்தைமனச் சஞ்சலப்பா மூசைப்
பொதியாற்று வெள்ளத்திற் போயிற் றெழிந்ததே.

951. மாய மயக்க மனப்பே யகந்தையறத்
தூயசிவ யோகத் துலக்கமாம் போதவருள்
காய முயிர்க்குக் கலத்தலாற் சுத்தசிவ
நேய மியல்பா நிகழ்ந்தது நெஞ்சத்தே.

952 சூரியமெய்ஞ் ஞானவருட் கொற்றந் துலங்குசிவ
வீரியவாழ் வாக விளைந்தமெய் யன்புணர்வு
வாரியொரு காலும் வறந்தொழியாச் சீவநதிச்
சீரியல்பிற் றகத் தெளிந்துநிகழ் கின்றதே.

953. ஒத்தமன யான வுணர்வாமென் னுள்ளத்தில்
வித்தகமெய் யன்பு விளைந்ததென் . சிவசொரூபப்
புத்தமுத மானவருட் போகமகப் பொங்கலாற்
பொய்ந்நொழிய வுனைப் புலக்கலக்க வேட்கையே

954. நாணித் தலைசாய நாமென்னும் மோகமதி
பாணவகத் தேர்சொருப மெனாறு பூதியால்
ஆனைப் பெருநிதியெய் யன்புணர்வு பொங்கியெழுக்
காணக் கிடைத்தேன் கடவுட் பரசிவமே.

குறிப்பு : புர்கல் - எழுதல் ஆனம் - நேயர்

955. நல்ல [illegible] சிறபரந்தை யன்றிமற்
றில்லைநற் [illegible] நடாயமின்றென் றேர்தலாற்
பொய்யாபுன் போகப் புலநசைதீர்ந் தொண்புலை
மெய்யநசர் பந்தி விளைந்தேன் திளைத்தேனே.

956. நத்தியா னன்றுசிவச் சிற்பரமெய்ச் சிந்தனமாய்ப்
பத்தியே சாதனமாய்ப் பற்றலுற்றே னுள்ளுணர்விற்
புத்தியோ கந்தெளிவாய்ப் பொங்கலாற் கைவல்ய
முக்தி சொரூபமா மெண்டகுளத் தீண்டவே.

53. குருபக்தி

(குறள்)

957. ஆண்டா னருட்சிற் பதத்திலே யன்றிமற்
றீண்டா தெனக்கோர் விருப்பு.

958. குருபாத பத்திக் குலாவா லொழிந்த
திருவா தனைசே ரிருள்.

959. முத்தியா வுள்ளத்தே மூண்டெழுந்தனைக் கன்புணர்வாம்
பத்தியே யாண்டான் பதத்து.

960 புத்திக் கலக்கமறப் பொங்கியது சுத்தவருட்
பத்தியெனக் காண்டான் பதத்து.

961. ஆர்த்தியா லாண்டகுரு மூர்த்தி யருட்பதத்திற்
சீர்த்திசே ரன்புதிளைத் தேன்.

962. புத்திபுகுந் தாண்டவருட் புண்ணியன்சற் போதவியற்
பத்தி பரானுபவ வாழ்வு.

963. நீக்கமறப் பொங்குசிவ நேயவுணர் வென்னுயிருக்
காக்கமாச் சேர்ந்த தகத்து.

964. அத்துவித வுண்மை யறிவொளியா லாண்டவன்சற்
பத்தியிலே வாழ்வுபடைத் தேன்.

(வெண்பா)

965. உள்ளுணர்வா மோன வொளிபெருக்கி யாண்டவனைப் பாற்
கள்ள மனம் பொன்றக் கரைதலால்—உள்ளப்
பரவசமா யன்பு பழுத்ததெனக் கின்பப்
பரவெளியா யோங்கும் பதத்து.

966. ஆண்டான் சொரூப வருட்பெரு வெள்ளத்தில்
வேண்டார்வம் முற்ற விளைதலால்—ஈண்மையது
சுத்தாத் துவித சொரூபஞா னானுபவம்
முத்தாபம் முற்ற முடிந்து.

967 அத்த னருளியமெய் யன்பா லடியேற்குச்
சித்தமொடுங் கிற்றுச் சிவபதந்தே—வித்தகமெய்ஞ்
ஞானானு பூதி நகப்பெற்றேன் மோனவருள்
வானான தன்சின் மயத்து.

968. அத்துவித சித்தியளித் தாண்டவன்மெய்ப் பாதவருட்
சத்தியிலே சித்தப் பதிந்ததனால்—மெய்த்தவமென்
னுள்ளத் தியல்பா வொளிகூ ருபசாந்த
வெள்ளத்தே வீடுகண் டேன்.

969. உத்தமனைக் காட்டு மருவியசற் போதகுரு
பத்திபனைத் தாழ்ந்துவேர் பற்றலாற்—சித்தமே
சற்போத மான சதாசிவமாத் தானமைந்த
தெப்பே தழைந்தா னிகந்து.

970. சுத்தசிவ மாகத் துலங்குங் குருபாதப்
பத்தியா லென்னுட் பவித்ததே—சுத்த
வெளியான தன்னில் விருப்பல்லா னில்லாத்
தெளிவான சிற்பூ ரணம்.

971. ஆண்டவனைப் பற்றி யமையாமையொரு சிந்தைதனைக்
கொண்டவிலே யுள்ளத் தியல்பாலே—வேண்டவெனக்
கொன்றுமில்லா வுண்மை யுபசாந்தி சேருளத்தே
துன்றுமோ மற்றோர் தொடர்பு.

972. அருள்விளங்கு பத்தி யனந்தசிவ போகப்
பொருள்வளங்கை கூடப் புணர்த்தும்—இருள்விழுங்கு
மெய்ப்பரிபூ ரணமோன விற்பரமாம் போதவெளி
மெய்ப்பாந்த வாண்டான் பதத்து.

973. ஆண்டகுரு நாத னருட்பாத பத்தியெனக்
கீண்டவென் னுள்ளத் தியல்பாக—வண்டோசீர்ச்
போத சொரூபானு பூதியில்வெம் பாசமனச்
சூதகன்று தோய்ந்தேன் சுபம்.

974. என்னி லெனக்கருமை யெம்பிரான் சிற்சொருபந
நன்னிலே யன்ப தழைத்ததனால்—பொன்னிலம்பெண்
ணேனமே வாசைபற வார்ந்ததகம் பேரின்ப
மோன வமைதியொளி மூண்டு.

975. சுத்தசற் போத சொரூபகுரு பாதவருட்
பத்திலே சத்தாம் பதம்பெற்றேன்—சித்தந்
தளைந்தவருட் பாதஞா னுடைவங் கூர
விளைந்ததுப சாந்தி விசைத்து.

976. பெருக்கமா வுள்ள பிரானருட் பாதத்
திருக்கமாய் பத்தி புனைவர்வாய்—வெருக்கான
அகந்தைமுனைப் பாம்பொய் யறிவான மோகம்
இகந்தொழியத் தோன்றிற் றியல்.

977. யாதுமோர் சிந்தை யிலாதே சிவசொரூப
பாதமு ளத்திற் படிந்திருக்கை — நீதமாம்
புண்ணியமெய்க் கீர்த்திப் பரமனாருட் சொரூபத்தி
பண்ணியசற் பத்திப் பயன்.

978. குருவடிவா வந்தென்னைக் கோதாட்டி யாண்ட
வொருவடிவே தேறு புணர்வால்--உருவிற
[illegible]
விண்ணுருவா நான்விளைந் தேன்.

979. தன்னையே முற்றச் சரணாக் குருபாதத்
துன்னியார் வாழ்வுமிகத் தோன்றுதொடம் — தன்னை
பாரமாத் தாங்கும் பரங்குநிலை யளியாகந் [கியாற்
சேரமேற் கொண்டேன் சிறந்து.

கொச்சகக் கலிப்பா

980. அவனளித்த வன்மை யவனுக்கே யாக்கி
அவமயக்க மானபா ழாசை யறுத்தேன்:
எவரிடத்தும் பாசமிலி யில்லேன். இயல்பாக
தவவொழுக்கஞ் சார்ந்த [illegible] யாமே.

குறிப்பு : பாழ் - பாழிற் கற்பிதமான [illegible]
காரண வாகுபெயர்

981. [illegible]
[illegible]
வண்மைசேர் வாழ்வா மமர்ந்து பிரானடிக்குத்
[illegible]

982. நாயகயா வுள்ளமெய்ஞ் ஞானப் பிரான்சொரு
நேயமெனக் கின்மை நிதியாய் நிறைதலால்
ஏயதுபே ரின்ப வியல்வாழ் விதயத்திற்
போயிட நா னென்னுமயர் பொல்லா வறுமையே

983. பேரின்ப வீடாப் பிறங்கு சொரூபனடிக்
கோரன்பு சார்ந்த வுளத்தாற் றிளைக்கலுற்றேன்
சீருஞ் சிறப்புஞ் செழித்தவருட் சிற்பரமாய்ச்
சாரும் பரயோக சாந்திப் பரசுகமே

984. பரசிவமாய்ப் பொங்கும் பகவனருட் பாதம்
பரசுவழி பாட்டாற் படைத்தேன் பெரும்பேற்
றரசுரிமை யான வனந்தசிவ லோகத்
துரியமோ னைபவ சொந்தவியல் வாழ்வே

985. பராக்கா வுடலுலகப் பார்வையாற் பாழ்பட்
டிராக்கதமாம் மாயைக் கிலக்கா வருந்தா
திராக்கமாக் கூர்மெய் யுணர்வளித்தாண் டருளும்
பராக்கிரமவென் னுள்ளுணர்வு பற்றியது கண்டே.

986. தனனியல்விட் டன்னியமோர் சற்றுமிலாத தன்மையா ற்
றன்னியல்பே [illegible] சார்ந்தொளிர்மெய்த்
தன்மைதெரித்
தன்னையினும் மிக்க வருட்குருவா வாண்டவன்பால்
முன்னையினும் பன்மடங்கா மூண்டதுபே ரன்புணர்வே

987. அயர்ச்சிசேர் மோக வகந்தையற் றுய்யப்
பயிற்சியளித் தாண்டவனை பற்றலால் யாதோர்
முயற்சியுமில் லாதே முழுமுதலா மோன
வியற்கை [illegible] பகுத்தி [illegible] றேனே

988. குருவடிவ [illegible] ஞானக் கொழுந்தாந்
திருவடியை [illegible] ளிக்க நான்பற்
றொருவ [illegible] ணர்வாற் கடவுட்
பெருவாழ்வை [illegible] பிறங்கலா னேனே.

989. முவலவ்வ [illegible] பத்தா லாண்டவனுள்
[illegible] நருக்க வுழுவுருகக்
கவ்வைசே [illegible] காசமாம் பாசவகச்
சல்லு [illegible] சார்ந்ததே.

990. மான்ற மயக்கமனக் கற்பனையில் வற்புறலாற்
சான்றபரி பாகமற்ற தஞ்சனேன் னெஞ்சிலே
ஆன்றபர தத்துவமே யானவ னருட்சேவடி நன்
கூன்றியஞா னரியணை யுள்ளுநாட்டி நல்குதுமே

991. பொருபற் பலவாய்ப் புலன்களைப் போக்கித்
தெரியத் துலங்கு சிவத்தியா னத்தாற்
குருதற் பரமாக் குறித்தலா லுள்ளத்
தொருசிற் பரமா வொளிர்தலுந் றேமே

992. முத்தியுணர் வானகட வுளாமே சுத்தவருள்
வித்தையா வென்னுள் விளங்குவான் றான்பதத்தில்
வைத்தவியல் பாக விளைந்ததுகாண், பக்கபர
பத்தியுணர் வான பராவமுத போகமே.

993. துளங்க வொளுதை துரியப் பரமா
வுளங்கிளரப் புக்க வொருத்தன் பதத்தில்
வளங்குலவு சாந்த வசீகரத்தா லன்பு
விளங்கியது வித்தகமா மெய்ப்பட்டி லூர்ந்தே

994. கருத்தைத் திருத்திக் கடவுட் பதத்தி
லிருத்துசிவ யோகத்தே னின்பவாழ் வாகுந்
திருத்தலுற் றன்பாற் சிறக்க விளக்கிற்
றருத்திமேச் சக்கமெய் யன்புணர்வின் பண்பே.

995. நாயா நலங்குலைந்து மாழ்காது நாளுமார்
பேயாட்ட மானவெறும் பித்தலாட் டம்பேர
மாயாசத் திப்புணர்ப்பை மாற்றினன் பாரந்து
நேயானு பூதி நிரப்பினதென் னெஞ்சமே

குறிப்பு:—மாழ்காது மாற்றினன் என வினையும்.

996. ஆணவமோ கங்கெடுத்த வாண்டவன்சீ பாதவொளி
மாண வகத்தில் வசீகரமாய்ப் பொங்கலால்,
வேணவா வாகவருள் வித்தகனுக் கந்தரங்க
ராணமெய் யன்புணர்ச்சி யாரா வமுதமே.

குறிப்பு:— அருள் வித்தகனுக்கு - அருள் வித்தகனை ஆண்டவன்பால்.

997. அன்பு மறிவுமொன் றுக விளங்கலே
நம்பன் சொரூபமெய்ஞ் ஞானவருட் பத்தியா
இன்ப வுணர்விதயத் தெய்தலுற்ற வாழ்வெனக்குச்
செம்பரமாத் துன்று சிவானுபவ முத்தியே.

998. யான்றவகங் கார மயக்கமனக் கற்பனையாத்
தோன்றுலக பேதமறத் துன்று சொரூபவொளி
யான்றவருட் பார்வையா லாண்டவன்பா தத்திலெனக்
கூன்றியது மெய்யன் புணர்வான பத்தியே.

999. கரும பயக்கங் கழன்றொழியப் பொங்கும்
பரமசிவ ஞானவருட் பார்வையால் உள்ளத்
தருமைசேர் சாந்தியளித் தாண்ட பிரானுக்
குரிமைபூண் டென்மெய் யொருமையுணர் வாமே

1000. கற்றறிய மற்றெதுவுங் காணுமற் கற்பனைதீர்
முற்றமுழு மோனவெளி முற்றுவித்தென் னுள்ளத்து
நற்றவுற்ற வாண்டவனை நேயமோ றனுபவப்
பெற்றிசே ருள்ளுணர்வாற் பேணுகின்ற துள்ளமே.

1001. தாணையா வூன்று சொரூப குருவருள்
பேணலுற்றே னுள்ளத்திற் பேதைமைதீர் வாலறிவாக்
காண விளங்குங் கழலே கதியாக
யாணவுயர் கைவல்ய வைப்படியேற் றுற்றதே.

1002. ஓரியல்பா வுள்ளத் தொளிர்சொரூப சாந்திநிலே
சீரியல்பே ரின்பவருட் செல்வமாச் சேர்வித்த
வாரியனை யண்மையிலென் னுருயிருக் கோருயிராக்
கூரியதோர் பத்திக் குலவுணர்ச்சி கூடியதே.

54 ஏகபக்தி (அல்லது) பிறதெய்வம் நாடாமை

(குறள்)

1003. சிறபரமாப பொங்கு சிவத்தே யலாமலெனக
கெப்பதத்து மாசை யிலே

1004. விருத்தியற்று மோன விளக்கமா வுள்ள
வொருத்தனுக்கே யாயிற் றுணர்வு.

(வெண்பா)

1005. அறவை யடியேனுக் காண்டவனே யெல்லா
வுறவின் முறையுமா வுள்ளான்—உறவுதுற
வொன்றுங் கருதா துடையா னருட்பதத்தே
நின்றதென் னெஞ்சு நிலைத்து.

1006. அமணமா காய லறிவுருத் தேற்றிக்
குமணமா யோகங் குலைத்தோன்—ரமண
குருவடிவாக் கொண்ட திருக் கோலமன்றி மற்றை
யுருவறியா தென்றன் னுணர்வு.

1007. பெருமா னடிகளோ டேபேசா லன்றி நானமர்
றிருமா னிடவருளைச் செல்லேன்—பெருமா
னடிகளதற் கேற்ப வடியேற்கு ஞான
முடிகவித்தான் மோனமுற் றேன்.

1008. கைவந்த நெல்லிக் கனியாக் குருரமண
தெய்வந் தலைப்பட்ட தேற்றத்தால்—தெய்வம்
றிதொன்று தேறேன் பிரம்ம சொரூ
நிறைவொன்றி நின்றதென் னெஞ்சு.

1009. குணமே [illegible]
வணமேயென் சிந்தை வளைக்கா [illegible]
இருவர்தம் பாலு மொருநாளுஞ் சற்றும்
[illegible] ளைந்து

1010. பூரணமா [illegible] பொருந்துமகைக் கேவலமாய்ச்
சீரணவு ஞான நிட்டானுபவம்—காரணமும்
[illegible]
[illegible] துரியா [illegible]

1011. தன்னை யடியேற்குத் [illegible] தாயனைய
வள்ளலே யுள்ள [illegible]
மடக்கிலேன் மற்றவர்போ [illegible]
னடிக்கடிமைப் பட்டமை யேன்.

1012. துரியமே சேர்ந்த சொரூபமாய்க் கூடி
துரியபத மாக வுணர்ந்தேன்—துரிய
துருபதத்தை யன்றித் தலாவலுற நான்மா
ரொருபதத்தை *யுள்ளே னுளத்து.

*உள்ளேன் - கருதேன்

1013. திரோத மகன்று சிவாய நமவென
விரோதெய்வப் பேறு முணர்ந்தால்—விரோதமோ
சற்றுமற்ற ஞான சமரசமா முண்மைநிலை
முற்றவுற்றே னன்பு முதிர்ந்து.

1014. கண்ட[illegible] காட்சியா மென்னையுவ
தாண்டவன் [illegible] வருட்பதத்திற்—பூண்டசொல
பாலுவத் [illegible] மனன்னியசற் பக்தியோர்
வானளவப் பொங்கும் மனத்து.

1015. திருவருட் கோலச் செழுமலர்த்தா [illegible]
திருவார்ந்த வன்புமுற்றக் [illegible]—[illegible]ருவு
வன்பு பிதிர்பட் டரைகுறையாய் [illegible]க்கு
மின்பகிர மாட்டேன் பிழைத்து.

[illegible] பழுத்தல் - பிறை[illegible] [illegible]
[illegible]ளர்க்கும்.

1016. சொல்லும் பொருளுங் கடந்த சொரூபவரு
கல்வியறி வூட்டியவென் கண்மணியைச்—செல்லுமவ
யெல்லாந் தொழுலன்றி யான்மறு தொருதொழிலு
மல்லா வடிமைபூண் டேன்.

1017. சரண மடைந்தேன் சகலவிதத் தாலும்
பரணமெனக் காணுன் பரமன்—கரண
மனைத்தாலு நானவ் வடிகளையே பற்றி
யெனைத்தாலும் பேர்தலொழிந் தேன்

1018. காட்சிக்கோ ரெல்லை கடவுளாங் கோரமண
ராட்சிக்கே யன்றிநா னுட்படேன்—மாட்சிசே
ராண்டவன்பொற் பாத வருட்கழல்செம் பொன்முடி
புண்டன்றோ வாழ்கின்றேன் யான். [யாப்

1019. எம்மானுக் குற்ற விதயப்பே ராசையிலொ
ரிம்மியுமே நான்பிறருக் கீயகில்லேன்—அம்மா
னருட்பூ ரணவொளியென் றாசைமுற்றக் கொண்ட
விருப்பூர்பே ரின்ப வெளி.

1020. உதியா வொடுங்கா வுணர்வுருவா மோனட
பதியான தன்மெய்ப் பதத்தே—மதியின்
பதைப்பறநிற் பித்தவருட் பார்ப்பானை யன்றி
மதிப்பறியா தென்றன் மனம்.

1021. ஊனவகங் காரவொழுக்கமாம் பந்தமற
மோனவருட் சிற்பரமா முத்தியருள்—ஞான
குருபதத்தை யன்றிக் கொளேன்பொருளா நான்மற
றொருபதத்தை மன்ற வுளத்து.

1022. ஆண்டா னளித்தவரு ளாக்கதனா லென்னகத்
தீண்டுமிறு மாப்ப லியம்புகின்றேன்—ஆண்ட
வனுக்கே யானடிமை யல்லா லகிலத்
தெவருக்கும் யானடிமை யில்.

1023. அறியாதே னல்ல னநேகர்போற் றேன்று
மிறைவ ரொருவனென் றென்றே—அறிந்த
வவரனைவ ருள்ளு மவாவியென் சிந்தை
சிவரமணன் பாலே செலும்.

1024. அன்றிநா னென்று மறியே னகங்கிளாத்
துன்றுசற் போத சொருபமா—வொன்றும்
பரசொருப மாகப் பரந்து விளங்குங்
குருசரண மாட்சிக் குலா.

குறிப்பு:—ஆளாவன்றி ஒன்றுமறியேன் என ஐயைபுப்.

1025. அற்றமற நோக்கி யடியோமை யங்ஙனென்
மற்றறியா வாறு மயக்கறுத்தான்—சற்றுங்
குடிகளு மல்லோங் குருரமண தெய்வ
வடிகளுக் கல்லா லயர்த்து.

1026. ஆண்டவனுக் காற்று மடிமைத் திறஞ்சற்றும்
யாண்டு மெவர்க்குமினி யான்செய்யேன்—ஆண்டவன்
மிக்கவியல் பாக விளங்கும் பரத்துவத்திற் [பால்
புக்கொடுங்கு மேனைப் புலம்.

1027. அவனையலா லொன்று மறியாத ஞானத்
தவநியமந் நன்னியல்பாற் சார — அவனியில்வந்
தாண்டா னடியே னகத்தே யருளினான்
மாண்டதுமா மாயை மனம்.

1028. ஆண்டவனுக் கன்றி யயலவர்க்கு நானடிமை
பூண்டொழுகச் சற்றும் பொருந்துகிலேன் — ஈண்டுமற்
றன்ன பிறரா லடியேனுக் கெந்நிலத்தே
யென்னகிடைத் தாலு மினி

1029. அவனை நா னண்மி யடைந்தவருட் பேற்றாற்
சிவனலறத் தேறத் தெளிந்தேன் — அவனடிவாழ்
வல்லாலோர் செல்வ வரும்பசவாழ் வோர்பொருளாப்
புல்லாகென் புந்திப் புலம்.

1030. ஆண்டவனுக் கல்லா லடிமைய னல்வணங்கிப
பூண்ட வணக்கம் புரிவதன்று — பூண்டதிரு
நல்லா ளதுவணக்கம் நாயகன்மாட் டன்றிவெளிச்
செல்லாது மற்றோர் திறத்து.

1031. கல்லே னெனினுங் கல்லுருவம் தப்புரவோன்
றில்லே னெனினு மெளியனேன் — இல்லேன்
இறைவனிடத் தன்றிமற் றியாரிடத்துஞ் சென்று
துறையிரக்குந் தீனக் குறிப்பு.

(கொச்சகக் கலிப்பா)

1032. பொன்னொளி சேர்ந்த முகப்பொலிவால் என்னையெய்து
ஞான நெறிக்கு நடாத்திய தன்சொருப
மோனமடை வித்தருளு முத்தப்பன் பாதமன்றி
யேனையவி லொன்று மிலேன்காண் எதிர்ப்படவே.

1033. எங்குமாத் தங்கு மியற்சிற் பரசிவமே
பங்காயிலொப் பாகவகம் பற்றலால், பாசகுரு
வங்காமிங்குஞ் சென்றுபஞ் குறையுநான் போற்று
என்கவிநூ னூற்றாட் டிதயத் திறைவற்கே. [கில்லேன்

1034. காப்பான சுத்தவருட் கைவல்யத் தற்பரமே
காப்பாக வுள்ளங் கலந்தொன் றாகிர்தல் கண்டுகொண்டேன் :
காப்பா வகிலங் களுக்குமுள்ள தன்னையன்றிக்
காப்பா வனாக்குக் கருதேன்மற் றோரையுமே.

1035. ஆரே துணையுள்ளா ரான்றடவனை யன்றியெனை
கோரே னுலகி லொருவரைநான் மெய்த்துணையா !
சேரேன் சிவசொருபச் செவ்வண்ண னன்றிமற்றோர்
சீரோ சிறப்போ செகமாயா சொப்பனத்தே

1036. ஒராசிரய மாக வுயிர்த்தொகைக்கு மிக்க
பிரானருளே டேனுமா [illegible] நீ
[illegible] வருவர் [illegible] [illegible]
தாரதரமோர் [illegible] நன்மையிலார் தாமே

1037. பு[illegible] [illegible] [illegible]
புரங்கெடவெய்[illegible] [illegible] பிறக்க நாளு
ரமணனேயே பாடுகிற [illegible]
[illegible]

1038 திருமா மணிமாத் [illegible]
பெருமா னருட்பதமே [illegible]
தொருமா விலாமெய் யுணர்வா லுணர்ந்தேன்
கருவாய் பிறவிவெள்ளங் கடந்தோமே [illegible]

1039 சணா வுலப்பில்லே யின்பநித் யாவசத்து
[illegible] [illegible] பொருந் வுறர்த்தி [illegible]
நீண்டுவதன் [illegible] [illegible]
றென்சிந்தை
யாண்டருச் [illegible] வழுத்துமழ்க் [illegible]

1040. சுற்றகலே யாணடான் கழற்[illegible] [illegible]
விற்றிலேன் சற்றும் விலைப்பொருளா லேவெறவர்க்கும்
[illegible] நந்நட் ராணைருட் பே றுற்றதால்
முற்றியதென் னுள்ளக்க முற்றமுமழச் சொற்பொருள்

1041. அருமையா வாண்டவென் னம்மானுக் கேநா
னுரிமைபூண் டேன்மற் றொருவரையுந் தேடேன்,
இருமைதீர் மெய்யன் பிதயத் தியல்பா
லொருமை யுணர்வா லுடை யனவாமே

1042. ஈசனுர்க் கன்பா யினையந்தோ மிருயத்துற்
பாசநே சம்பரமற் கன்றிமெவர்க் கும்பகிரோம:
ஆசையறப் பெற்றேம்பா ழைம்புலக்கோ லாகலத்தில்;
வேசையாம் பொல்லாப் புகழ்ச்சிமயல் விட்டோமே

1043. மூண்டவகங் கார முனைப்பறக்கூர் கண்ணோக்கால்
ஈண்டவெனை யாண்ட விறைவனுக்கே நானடிமை
பூண்டொழுக லுற்றேன் புறம்போ யுழல்கிலேன்
காண்டலரு சுத்தவருட் கைவல் லியங்கழன்றே.

1044. கல்லா வறிவிற் கடைப்பட்டேன் புன்கலக்கப்
பொல்லாங் கொழிந்துசிவ போதவாழ் வெய்தவென்னுட்
சொல்லார்செஞ் சொல்லாலோர் குக்குமந்தே
நல்லானை யன்றியென் னைவாழ் பரவேனோ [ற்றெரிந்த

1045. மூண்டகா ரானவந்து மூழ்கிநான் மாழ்காது
காண்டருஞா னனுபவக் கைவல் லியச்சிறப்புக்
காண்டவன்பே ரின்ப வருட்பதத்துக் கன்றிமற்
றீண்டவென் னுள்ளத் தெதற்கு மிடமின்றே.

1046. குற்றமற்ற தன்மெய்க் குலநல் லடியரிற்சேர்த்
தற்றமற வென்னைநன் காண்டவருட் சிற்பரன்பா
லற்றொழிந்தே னுக்கினிமற் றூர்பாலுஞ் சென்றறிதிற்
பெற்றுவக்க யாதுமிலாப் பெற்றிசேர் வுற்றதே.

1047. பெட்டவா றெல்லாம் பிழைபட் டொழுகுமனச்
சுட்டறிவா மோகச் சுழற்சியறத் துன்றுசிவ
நிட்டையிலே யென்னை நிறுவியசற் போதவருட்
சிட்டனையே யன்றித் தெரியேனோர் தெய்வமே.

1048. தட்டழிந்து கற்பனையிற் றுவித்தா விக்குதிக்குஞ்
சுட்டறிவா மோகச் சுழற்சியறத் துன்றுபர
நிட்டையிலே யென்னை நிறுவியமெய்ஞ் ஞானவருட்
பட்டனையே யன்றிப் பரவேன்மற் றுரையுமே.

1049. தனுகரண மோகத் தடுமாற்றந் தீர்மெய்
யனுபவமே நல்ல வருங்கலையா வுள்ளத்
தனவரதம் பொங்க வருளியசற் போதப்
*பனவனன்றி யோரேன் பரதெய்வம் வேறே.

*பனவன் - பிராமணோத்தமன்.

1050. அருவினை செற்ற வருட்குரு வான
வொருவனைப் பற்றிநா னோரகத் துள்ளேன்;
பருவர லுற்றுப் பதைக்கு மகப்பாழ்ங்
கருவரு மோகக் கலக்கமற் றேனே.

55. சொரூப பக்தி

(குறள்)

1051. நிரம்ப வழகிய நேயன் சொரூபத்
துரம்படவே யூன்றிற் றுணர்வு.

1052 அண்ணிக்க லூற்ற வருட்சிந் தனையிலமிழ்ந்
துண்ணெணக் குருகு முணர்வு.

1053. நீளத் தொடர்ந்தமெய்ந் நேயமீக் கூடருணர்வால்
ஆளனுரு வாயிற் றறிவு.

1054. மனத்தைக் கடந்தறிவா மாணத் துலங்கும்
எணைக்கற் பணையென் செயும்.

1055. நாயகமா வுள்ளமெய்ஞ் ஞானப் பிரான்சொருப
நேயமுற வாழ்வதென் னெஞ்சு.

(வெண்பா)

1056. உள்ளம்பூ ரிக்கவெனக் குத்தமசற் போதவருள்
வெள்ளம்பா லித்தபெரு வித்தகன்பால்—அள்ளும்பே
ராசையா லன்புசிவ மானஞா னுனுபவ
நேசமே யாயிற்று நெஞ்சு.

1057. சிவத்திலே யென்சொருபந் தேறலான் மோனத்
தவத்திலே வாழ்வு தழைத்தேன்—அவித்தைசேர்
மாயவகப் பேய்கரப்ப வாய்த்ததுகத் தாத்துவித
நேயவியற் சீர்மை நிலை.

1058. மட்டறுமெய்ஞ் ஞானவருள் வள்ளலாற் பொய்ம்மயக்கச்
சுட்டறிவு கெட்டுச் சுடர்ப்பதத்தே—துட்டமனப்
பேயகந்தை தீர்ந்து பிரம்மசொரு பானுபவ
நேயபந்த முற்றதென் னெஞ்சு.

1059. உள்ளதே தானு முணர்வாற்பே ரின்பவருள்
வெள்ளமா மோனம் விளைதலாற்—கள்ளமனப்
பாசங் கரந்தொழியப் பற்றறத் ருளிர்சொருப
நேசங் கலந்ததென் னெஞ்சு.

1060. உள்ளதே மோனவருள் வெள்ளமாம் பேரின்ப
வுள்ளமா வெங்கு மொளிர்தலால்—கள்ளமன
மாயமறக் கெட்டு வசீகரமாப் பொங்குசிவ
நேயமிகப் பெற்றதென் னெஞ்சு.

1061. பாச வகந்தைப் பதைப்பொழிந்தாற் சுத்தசிவ
நேசமியல் பாவகத்து நீடுமென—நீசமனப்
பாசக் கலக்கமறப் பார்த்தசிவ ஞானகுரு
நேசத் தழுந்தியதென் னெஞ்சு.

1062. உண்மையிலே யூறி யுணர்வுமெய்ஞ் ஞானவருள்
வண்மையிலே சாந்திபெற்ற வாழ்க்கையோர்—கண்
பாசக் கலக்கமில்சற் பத்தி ரசாயுஜ்ய [யமயல்சேர்
நேசத் தழுந்திநின் றோர்.

உணர்வு-ஐயுணர்வான மனம்.

1063. உள்ளம்புக் காண்டவற்கென் னுள்ளம் பரவசமாய்
உள்ளுங் கருத்தவற்கே முற்றூட்டாய்—அள்ளுறுமெய்
யன்புணர்ச்சி யாரா வமுதவூற் றுகப்பே
ரின்பமெழு கின்ற தெனக்கு.

1064. ஏழையேன் வாழ்வுபே ரின்பமய மாகவருட்
கேழொளிபெற் றுள்ளங் கிளர்தலால்—பாழியல்வெம்
பாசக் கலக்கமாம் பற்றறற் றெளிர்சொருப
நேசத் தழுந்திற்று நெஞ்சு.

1065. எத்திக்கு முள்ளோ ரிதயத் தொளிர்சொருப
பத்திக் கடலிற் படிதலுற—முத்திக்
கிதுவே கதியென் றிறைரமணன் காட்டு
மதுவேவாழ் வாயிற் றகத்து.

(கொச்சகக் கலிப்பா)

1066. வேற்றுலகப் புன்கலக்க வேட்கையற வுள்ளுணர்வாற்
போற்றக் கடவதுசற் போத சொருபபத்தி;
ஆற்றமே தக்களூ ஞனுபவம் மோகவகக்
கூற்றுதைத்த சிற்சொருபக் கோமான்பாற் கூடியதே.

56. சதாபூஜை.

(வெண்பா)

1067. சதாகால பூஜை சகஜமாப் பொங்குந்
ததாகார மோனவருட் சார்பால்—உதார
சதோதயமா வென்றுமொரு தங்குதடை யின்றி
யதாவியல்வ தாயிற் றகத்து.

1068. புத்திக் கலக்கமறப் பொங்குசிவ ஞானவருட்
பத்தி யுணர்ச்சியகம் பற்றவே—சுத்த
சொரூபானு பூதித் துலக்க வியல்பால்
ஒருவா துபாசிக்கின் றேன்.

1069. நானற் றிருத்தலே நல்லசிவ பூஜையா
யூனமற வுள்ளத் தொளிர்தலால் மோனமாச்
சும்மா விருந்தே சொரூபசிவ பூஜையென்னல்
இம்மா நிலத்தியல்வ தாம்.

1070. நானற் றியல்வதே ஞானவருட் பூஜையது
தானே யியல்பாத் தழைப்பதால்—வானத்
தகண்ட வியாபகமா வன்புமலர்ந் துள்ளந்
திகழ்ந்தொளிரும் மோனஞ் செழித்து.

(கொச்சகக் கலிப்பா)

1071. ஞானாகை யுள்ள சதாசிவசற் போதவருள்
வானாகை யென்னை வளைத்துக்கொண் டாண்டவனுக்
கானாதை மெய்யன் பறிவே யுபாசனையா
மோனாநு பூதி முகந்தே னடியேனே.

1072. ஒட்டமற் றொன்றுமற்ற வுன்னைப் பரவெளியில்
நிட்டையே தன்னியல்பா நீடுங் குருபதத்தை
முட்டுப் படாவகண்ட மோனானு பூதியால்
விட்டுவிட் டன்றி விடாதுதொழு கின்றேனே.

1073. *இணக்கிலா வீச னிலுந்நான்வே றாகா
விணக்கமா மோன வியல்பே சிறந்த
வணக்கமா முண்மை வழிபாடா வாற்றும்
பணிக்கே யெனைத்தான் பணித்தா னிறையே.

*இணக்கிலா வீசன் - (யானென்றெழுந்த அகந்தை
முனைப்பற்றா லன்றி) இணக்கமுறாத ஈசன்;
இணையிலா வீசன் என்றுமாம்.

1074. அருட்சிற் பரவெளியே யாண்டா னுருவா
வருச்சிக்கின் றேன்யா னதாவொளிர்மோ னத்தால்;
தருச்சிற் பதவொளியாற் கோசவகங் கார
விருட்சற் பனையிகத் தெற்றினேன் முற்றே.

1075. எங்குங் கலந்தியல்பே ரின்ப விளக்கமாத்
துங்க சொரூபவொளி சூழ்நரலா லுள்ளத்திற்
பொங்கு சொரூபவருட் போதானு பூதியாத்
தங்கியது மோன சதாகால பூஜையே.

1076. கேட்கலுறு ஞானக் கிளர்ச்சி யிலாமையாற்
பாட்கலுற்ற வென்னைப் பரிவாற் சிவகதிக்கு
மீட்கலுற்ருன் தேற்றியதோர் வேதாந்தச் செம்பதத்தில்
வேட்கலுற்றேன் யானியல்பா மெய்ஞ்ஞான வேள்வியே.

1077. ஓராத வுன்மத்த வூத்தையே னுள்ளத்திற்
காரா ரிருளைக் கடந்தசிவ ஞானவருட்
சீரா ரனுபூதிச் செல்வமளித் தாண்டவனை
யாராதிக் கின்றே னடியனே ஞேவாதே.

1078. அன்னியமன் றாக வடியேனை யாண்டபிரான்
என்னியலே யாக விதயத் தொளிர்கின்ருன்;
துன்னியமெய்ஞ் ஞான சொரூபானு பூதியால்
அன்னவனை நானியல்பா வாராதிக் கின்றேனே.

1079. யானவனே யாக வினிது விளங்கலுற
மோனக் கலைபயிற்றி றன்னின்ற வாண்டவனை
நானாற் றெளிர்சொரூப ஞானானு பூதியா
லூனப் பிழையறவென் றென்று முபாசித்தேனே.

1080. பொற்பார் சொரூபானு பூதிபெறு வுள்ளத்தே
சற்போத மாகவொளிர் சற்குருவை நானறவா
லெப்போது மெண்ணி யியல்பா வழிபடுவேன்
தப்பாத வாழ்வான சாந்த பதத்திலே.

1081. பொருள்விளக்க மாகப் புணர்ந்த சொரூபத்
தெருள்வணக்கம் முற்ற முழுச் சிந்தையாச் செய்வேன்
மருள்வளக்கா ராட்சிசேர் மாயவகங் கார
விருள்படுபே தப்பா ழியற்கையற் றேனே

57. ஆண்டவனை அடைந்தவை.

க. உய்ந்தேன்

(குறள்)

1082. அறிவான வுண்மையா வாண்ட பிரான்மெய்
யுறவா லுயிர்தழைக்கின் றேன்.

1083. மலர்ந்தபரஞ் சோதியா மன்னுமிறை தன்னால்
அலர்ந்ததென் னுள்ள வரும்பு.

(கொச்சகக் கலிப்பா)

1084. அருத்தியாற் றன்னை யடைந்தே னகத்திற்
குருத்துவவாழ் வாகக் குலவுசுப மோனம்
பொருத்தினன் சுத்தவருட் புண்ணியத்தா லுய்ந்தேன்
விருத்தமா மோக வெறிப்படுமே யேனே.

1085. புலக்காட்சி போலப் புலம்பா தொளிர்மெய்ந்
நலக்காட்சி யானமெய்ஞ் ஞானப் பிரானாற்
கலைக்காட்செய் தூனக் கலக்குமுற்ற மோகத்
துலக்காம லொட்பநுட்ப மோர்த்துணர்ந்துய்ந் தேனே.

குறிப்பு:—பிரானால் ஓர்த்துணர்ந் துய்ந்தேன் எனக்
கூட்டுக.

உ. விழித்தேன்

(கொச்சகக் கலிப்பா)

1086. தற்பரமா வுள்ளமெய்த் தன்மைநலந் தேருது
கற்பனையே நோக்கிக் கலங்கலுற்று மாழ்கியநான்
சொற்பனமா மோகத் துயிலுணர்த்தி யாண்டவனாற்
பொற்பவுணர்ந் தேன்சொருபப் பூரணமாந் தன்மையே.

1087. அழுக்குடம்பை நானென் றகங்கரித்துப் பாழில்
வழுக்கலுற்றேன், சுத்தவருள் வாலறிவன் றன்னால்
விழிக்கலுற்று முற்ற விசுத்தான்மா வாகச்
செழிக்கலுற்றேன் மோனவியற் சிற்பரவாழ் வுற்றே.

1088. கள்ளமனக் கற்பனையிற் கண்மயங்க லுற்றநான்
உள்ளுணர்வா யுள்ளத் துதித்த சொரூபனால்
தள்ள வொண்ணாதசிவ சச்சிதா னந்தவருள்
வெள்ளவெளி யாக விழித்தேன்முப் பாழ்கடந்தே.

குறிப்பு :—சொரூபனால் விழித்தேன் என வியையும்.

௪. உலகு பரமாயிற்று

(வெண்பா)

1089. அறிவொளியா லென்னுயிரை யாவரித்துச் சற்றும்
பிறிவறியா தாண்டவருட் பெம்மான்—செறிவுதரு
மோனமய வானொளியான் முற்றுங் கவரப்பட்
டூனமில்வா னாயிற் றுலகு.

௫. சற்கதி

(வெண்பா)

1090. போதவடி வானவருட் புண்ணியனாற் கற்பனை
பேதவறி வோட்டமாப் பேரவே—வேதகமாக்
கைவல்ய மோனக் கடவுட் பரம்வெளியாய்க்
கைவந் ததுசற் கதி.

(கொச்சகக் கலிப்பா)

1091. சுத்தசிவத் தன்மையாத் துன்று சொரூபத்தில்
வித்தகசற் பத்தி விளைவித்த சிற்பரனால்
மைத்தவகங் கார மனக்கலக்கப் பாசமறப்
பொய்த்தொழிய மெய்த்ததுசற் போதவருட் பூரணமே.

௬. மெய்ப் பதம்

(குறள்)

1092. விஞ்சையா லாண்டவருள் வித்தகனால் வஞ்சமனப்
பஞ்சைநான் மெய்ப்பதம்பெற் றேன்.

1093. குருமூர்த்தி யாலெனக்குக் கூடியது சுத்தப்
பரமார்த்த மாமெய்ப் பதம்.

1094. ஆண்டா னருளா லடைந்தே னகத்துமற்றென்
நீண்டாத வுண்மை யியல்.

1095. அருள் வெளிவாழ் வானவென் னம்மானு லுண்மைப்
பொருள்வளஞ்சேர் வுற்றேன் பொலிந்து.

1096. சொரூபானு பூதியாத் தோய்ந்து சொரூப
குருவா லடைந்தேன் குணம்.

(வெண்பா)

1097. நாயகமா மோனகுரு நாதனுல் மோகவகப்
பேயறிவா முப்புடியும் பேர்ந்தொழியத்—தாயகமா
வோங்கும் பரவெளியே யுள்ளமா வுள்ளுணர்வுற்
றோங்கியது மெய்வாழ் வுயிர்க்கு.

(கொச்சகக் கலிப்பா)

1098. ஜன்மஜன் மாந்தரந் தானென் னகத்துடனுய்
என்மனந்தூய் தாக வெழுந்தருளி விஞ்சுசிவ
தன்மசன் மார்க்கந் தலைப்படுவித் தாண்டவன்பாற்
கன்மபந் தங்கழலக் கண்டடைந்தேன் மெய்ப்பதமே.

1099. தன்னையே கோவணமாச் சாத்தினுன் சோத்தனு
மென்னையே கொண்டுதன் னின்னருட்சீர் சாற்றினுன்;
உன்ன வொணுத வொருமைபா ராட்டியவவ்
வென்னைய னலெனக்கோ ரேற்றமுண் டானதே.

௩. முத்தி

(கொச்சகக் கலிப்பா)

1100. பாதமே சற்கதியாப் பற்றுமா றுற்றறியா
ஆதனே னுள்ளத் தறிவுருவாப் புக்ககுரு
நாதனு லற்புதமெய்ஞ் ஞானந் துலங்கலால்
மேதகுவாழ் வான விழுத்தி விளைந்ததே.

1101. சுத்தவருள் வித்தைத் துலக்கத்தாற் சிச்சடப்பொய்ம்
மத்தவகங் கார மனக்கலக்கங் கெட்டொழியப்
புத்தமுத மோனனு பூதியளித் தாண்டவனுல்
அத்தமியா முத்தி யபரோட்ச மானதே.

1102. காண்டலரு ஞானக் கதிர்வாட் படைவிழியால்
மாண்டொழிய மானுபி மானச் செருக்கையடர்த்
தாண்டவனு ளுள்ளத் தருளமுத வாழ்வாக
மூண்டதுமோ னனுபவ முத்திப் பெருக்கமே.

1103. கண்மயல்சேர் மாயக் கலக்கமற வாண்டவனுல்
உண்மையுணர் வான வுளத்திலே சுத்தவருள்
வண்மைசேர் சாந்தி மலர்தலாற் கைவல்யத்
திண்மைசேர் முத்தித் தெளிவியல்வாழ் வுற்றதே.

1104. உறங்கலுற்ற வென்னை யுணர்த்தியே யுண்மைத்
திறம்படுஞா னனுபவஞ் சேர்த்தலால் ஊனக்
குறும்படர்த்த மோனவருட் கோமானு லுற்றேன்
அறம்பொருளின் பங்கழன்ற வற்புதமெய் வீடே.

எ. பெருமிதம்

(கொச்சகக் கலிப்பா)

1105. அருட்கே வலத்தை யயர்த்தே யடியேன்
மருட்கே வலப்பாழ் மனத்தா லழிந்தேன்;
அருட்கேழ் படைத்தநல் லாண்டா னகம்புக்
கிருட்பாழ் கெடுத்தலா லேமாப்புற் றேனே.

1106. தீனமனப் பான்மை சிறிதுமில்லேன், சுத்தவருள்
வானப் பெருமிதமா வாழ்வு மலர்தலுற்றேன்,
ஞானப் பிரான்சொருப நாட்டத்தால் யானெனும்பொய்
யூனக் கலக்க வுணர்விறந்த வாற்றாலே.

அ. மயலறல்

(குறள்)

1107. ஞான சொருபகுரு நாதனல் யானெனும்பா
மூனமய லற்ற துளத்து.

(வெண்பா)

1108. மயர்வற்ற ஞானகுரு மாமணியால் யானெனு
னியல்கற்று மோகவிடாய் தீர்ந்தேன்—அயர்வற்ற
சுத்தமெய்ஞ் ஞானவருட் சோதிப் பிழம்பாகச்
சித்தமய லற்றேன் சிவத்து.

(கொச்சகக் கலிப்பா)

1109. ஒருமைசேர் மோன வுணர்வான வுண்மைப்
பெருமைசேர் வாழ்வு பிறங்க வியல்பாத்
தரும சொரூபசிவ சற்குருவாற் கண்டேன்
கரும மயக்கமனக் கட்டறக்கண் டேனே.

1110. மைக்கா ரறிவான மாயப் புறவுலகிற்
சிக்கா நின் றேனுக்குச் சிற்பரனு ளுள்ளத்து
மெய்க்காட்சி யாக விளங்கலுற்ற சிற்பரத்திற்
பொய்க்காட்சி யான புலைக்கலக்கம் போனதே.

௯. அடங்கலுற்றேன்

(கொச்சகக் கலிப்பா)

1111. பரமார்த்த மோனவருட் பார்வை எனக்குத்
தருமார்த்த காமமோட் சங்க ளெலாமாக்
குருமூர்த்தி யாலே குலவலா லுள்ளத்
தரைமாத் திரையி லடங்கலுற் றேனே.

௧0. அகந்தை யறல்

(குறள்)

1112. துட்டவகங் காரத் துடுக்கோ டிறைவனாற்
கெட்டதுவெம் பாசக் கிறி.

1113. பைத்தியமா மோகவகப் பாசமறக் கண்டவருள்
வைத்தியனா லுற்றதியல் வாழ்வு.

(வெண்பா)

1114. இன்பவொளி வீசு மிறைவனருட் செஞ்சரணத்
தன்புணர்வா மோன வறிவாலே—அன்புசிவ
மாகக் கிளர்சொரூ பானுபவத் தற்றதுபொய்த்
தேகத் தகந்தை மதி.

(கொச்சகக் கலிப்பா)

1115. ஓதி யுணரா வொருதைசுத் தாத்துவித
நீதிசேர் கைவல்ய நிட்டானு பூதியால்
ஊதியமா வுள்ளத் தொளிர்சொருபப் பெம்மான்பாற்
பீதிசேர் பேதமயற் பேயகந்தை பேர்ந்ததே.

1116. கற்பனையின் மூழ்கிக் கலங்கியகா ராணவப்பா
முற்பனே னுள்ளத் ததிசயமாப் பொங்குவதோர்
சிற்பரவாழ் வான சிவானுபவ மாட்சியா
லற்புதமா வாண்டவன்மாட் டற்றதுநான் முற்றவே

1117. செஞ்செவே சித்தத்திற் சிற்பரயாத் தானொளிர்ந்து
வஞ்ச மயக்க மனக்கலக்கஞ் செற்றவருள்
விஞ்சைசே ருண்மை விழியான சற்குருவால்
எஞ்சா தொழிந்ததுநா னென்னுமகப் பேய்முனைப்பே.

1118. கற்பனையிற் சிந்தை கலங்காது சுத்தவருட்
சிற்பதமே சிந்தித்துச் சிக்கெனவுள் ளாழ்ந்துறைக்கும்
பொற்புறுசற் பத்தி பொருந்தவளித் தாண்டவனுக்
கற்பனேன் யானெனும்பா மூாணவக்கா டற்றேனே.

1119. கரக்கலுற் றுள்ளதனைக் கவ்வுறுபாழ் மோகச்
செருக்குருவ மான சிதட்டு மனத்தால்
வெருக்கொளா தென்னுள் விளங்கு சொருப
குருக்களா லற்றுக் குலைந்ததகப் பேயே.

1120. துங்கமா மோனமெனக் கெங்குந் துலங்கவருட்
சிங்கமா வென்னுட் செழிக்கவொளிர் சற்குருவால்
அங்கமே தானு வகங்கரித்த வாணவப்பேய்
பங்கமுற்ற தூண்மைப் பரவெளியாஞ் சிற்பதத்தே.

கக. சாவாமை

(கொச்சகக் கலிப்பா)

1121. கூற்றமா மோகக் கொடும்பிர மாதமறப்
போற்றக் கடவசற் போத சொரூபமெய்த்
தேற்ற மெனக்குச் சிறக்கவளித் தாண்டவனை
ஆற்ற வடைந்தே னழியாமெய்த் தன்மையே.

கஉ. பிறவாமை

(குறள்)

1122. குருவடிவா வென்னையாட் கொண்டானுற் கண்டேன்
கருவடையா வாழ்வாங் கதி.

(கொச்சகக் கலிப்பா)

1123. கேவலமெய்ஞ் ஞானக் கிளர்ச்சிசே ருள்ளமா
வாழ்வலரப் பொங்கு வசிகரமோ னானுபவம்
ஏவலனா யென்னையினி தேற்றுக்கொண் டாண்டவருட்
காவலனா லார்ந்து கடந்தேன்கா ராழியே.

குறிப்பு:—காராழி - மயக்கவடிவான பிறவிக்கடல்.

1124. தாறுமா றாகத் தடுமாறும் மாயமனக்
கூறுபா டெல்லாங் குலைந்தொழிய வாண்டவனாந்
தேறுமோர் சேமவியற் சிற்பதத்திற் கைவல்யப்
பேறுசேர் வுற்றேன் பிறவிமயல் பேர்ந்தேனே.

குறிப்பு:—தேறுதல் - தெளிய விளங்குதல்.

௧௧. சிறுமை யறல்

(கொச்சகக் கலிப்பா)

1125. நொந்தே யடைந்தவென் னொய்யமனத் தாபமறச்
செந்தேன் பிலிற்றுசிவச் செம்பதவாழ் வூட்டினான்;
பைந்தா மரைக்கட் பகவன் குருரமணச்
சிந்தா மணியாற் சிறுமையறத் தீர்ந்ததே.

1126. ஊனங் கலந்தபா ழுத்தைமனக் கற்பனைதீர்
மோனங் கலந்தசதா முத்தியுணர் வூட்டியநல்
லானந்த மான வருட்பரஞ் சோதியால்
ஈனந் தவிர்ந்தே னியற்பரமெய்த் தன்மைகண்டே.

௧௨. இருளறல்

(குறள்)

1127. இருட்படுபாழ் முற்ற வகந்தொழிந்தேன், என்னை
யருட்பரமா வாண்டவ னால்.

1128. உணர்வைக் கடந்த வொருத்த னியைபால்
உணர்வற் றொழிந்த துளத்து.

1129. மோக வகப்பாழ் முறுகக்காய் ஞானவிழி
நாய்கனுல் வேகமற் றேன்.

குறிப்பு:—நாய்கன்-நாயகன், குருநாதன் ;
வேகம்-ஆணவ முனைப்பு.

1130. கரணங் கடந்த கருத்தன் கருத்தாற்
காரணங் கழன்றொழிந் தேன்.

(கொச்சகக் கலிப்பா)

1131. ஆராத் தியனென்னை யாண்டான் சொரூபவுருச்
சீரார்த்தி யாலிதயச் சீர்மைதெளிந் தொட்பமுறப்
பேராட்சி யாகப் பிறங்குசிவக் கேவலத்திற்
காராட்சி சேர்ந்தமனங் காணாதுக் காந்ததே.

குறிப்பு:—ஆராத்தியன் - ஆராதிக்கத் தக்கவன், பூசிக்கத் தக்கவன்; சீரார்த்தி - சுபேச்சை ; மனம் - மனக் கற்பனை பேதக் கலக்கத்துக் காகுபெயர்.

1132. ஒன்றான வுண்மை யுணர்வாலே யன்றிமற்
றென்றாலும் பொன்று முலக மனக்கலக்கம்
தொன்றான சுத்தமெய்ஞ் ஞான சொரூபவருட்
குன்றான சற்குருவாற் பொன்றுக் குலைந்ததே.

*தொன்று-அநாதியான பழமை.

1133. செம்பரமா வுள்ள சிவானுபவச் சீரலர்மெய்
யன்பு துலங்க வகந்தெளிவித் தாண்டவன்பால்
இம்பரும்ப ரென்ன வெதிர்நோக்கி மாழ்கவுழல்
வம்புறுபொய்ம் மாய மனக்கலக்கங் கெட்டதே.

௧௩. கற்பனை யறல்

(குறள்)

1134. தேச வொளிப்பிழம்பாஞ் சிற்பரனாற் றீர்ந்ததுவெம்
பாசமனப் பாழ்ங்கற் பனை.

(கொச்சகக் கலிப்பா)

1135. உணர்வுருவா வுள்ளவோ ருத்தமனு முள்ளத்
தணவியது சுத்தஞா னன்மானு பூதி;
புணர்தலுற்ற வந்தவருட் பூரணத்தாற் பேத
வுணர்வுகளாங் கற்பனையற் றேய்ந்ததுகட் டோடே.

கசு. நானறல்

(குறள்)

1136. மோன வுணர்வா முகந்தென்னை யாண்டவனாற்
போனதுநா னென்னும் புணர்ப்பு.

1137. மோனமுறக் கண்டகுரு மூர்த்தியாற் யானெனும்பா
ழீனமறக் கெட்ட தெனக்கு.

1138. புத்தனை வாண்டவருட் பூரணன்சற் போதத்தாற்
செத்ததுநா னென்னுஞ் செருக்கு.

(கொச்சகக் கலிப்பா)

1139. வானவர்பல் லோரையுந்தன் னாட்டு வசீகரிக்கும்
மோனவொளி சான்ற முகப்பொலிவா லென்னகம்புக்
கீனவகப்பா னிருள்கடிந்த வாண்டவனாற்
போனதுநா னென்னுமனப் புன்கலைக்கப் பூசலே.

கஎ. பாசமறல்

(குறள்)

1140. வீறு படைத்தவருள் வீரனல் வேறுத்
தகர்ந்ததுவெம் பாசத் தளை.

(வெண்பா)

1141. வீட்டுலகி லென்னை விழிப்பித்த வாண்டவன்மெய்க்
கூட்டுறவிற் கொண்ட குதூகலத்தால்—வாட்டமுறக்
கூட்டும் பசுபாசக் கூட்டுறவு மாயமா
வோட்டந் *தொழிந்த துளத்து.

தொழிந்தது - சிதறிற்று.

கஅ. மயக்கறல்

(கொச்சகக் கலிப்பா)

1142. தம்பமாத் துன்றுபர தத்துவமா ந் தன்னைமறந்
திம்பரும்ப ரென்ன வெதிர்பவே நோக்கியுழல்
வம்பனேன் றன்னை வலியவந் தாண்டகுரு
நம்பனு லற்றதுபொய்ஞ் ஞால மயக்கமே.

1143. திண்மைசேர் சுத்த சிவத்துவஞா னானுபவ
வண்மைசேர் வாழ்வு மடுக்கவென் னுள்ளம்புக்
குண்மைத் திறத்தா லுயக்கொண்ட வொள்ளியனை
மண்மயல்சே ரூன மயக்கமறப் பேர்ந்ததே.

௧௯. பிரம்மானுபூதி

(கொச்சகக் கலிப்பா)

1144. தன்னருட்கூர் வாள்விழியாற் சித்துஞ் சடமுமாய்ப்
பின்னிக் கிடந்த பிணக்கா மகந்தையைச்செற்
றென்னைப் பணிகொண்ட வெம்மானாற் கண்டுகொண்
பின்னமற்ற சுத்தப் பிரம்ம சொரூபமே. [டேன்

1145. கொச்சையார் தம்மோடு கூடிக் குதூகலித்து
மிச்சைசேர் மாயா விலாசத்தே யாழ்கலுற்ற
துச்சனேன் சுத்தத் துரியவியல் கண்டுகொண்டேன்
அச்சுதை வாண்ட வருள்விழியா ளுள்ளத்தே.

௨௦. தானாதல்

(குறள்)

1146. மோனா பூதியா முற்றலுற்ற வாண்டவனாற்
றானான தன்மைசதிர்த் தேன்.

(கொச்சகக் கலிப்பா)

1147. வானவர்சென் னிக்கோர் மணிமுடியாந் தன்பாத
ஞானமென் னுள்ளத்து நண்ணவயர்ந் தாண்டவன்
ஊனக் கலக்கஞ்சே ருத்தையகங் காரமறத் [பால்
தானதுவா முண்மை தலைப்பட் டொளிர்ந்ததே.

1148. ஊனக் களிச்செருக்கா லேமராப் பேதைக்கு
ஞானப் பிரானை நம்பனால் யானெனும்பா
மூனக் கலக்கமற்ற வுள்ளத் தொளிர்ந்ததோர்
வானப் பரசொருப மாண்பான தன்னியலே.

1149. நினையவு மொண்ணா மறக்கவு மொண்ணா
வனைய திறத்தா லடியேனை யாண்ட
தனியனால் யான்கண்ட தற்பர வுண்மை
எனதியல் பாக வியன்ற தொராங்கே.

1150. மத்த மனத்தால் வறுஞ்சடமே நானென்று
செத்துப் பிறந்து செருக்கலுற்ற தீனனேன்
சுத்தத் துரீய சொரூபமா மெஞ்ஞான
சித்தனை யுய்ந்தேன் சிவத்திலென் மெய்தெளிந்தே.

குறிப்பு:—வறுஞ்சடமே நானென்று செத்து என்பதை உடலைநா னென்றுவரு மந்தகற் காளாகவோ என்னும் தாயுமானவருடன் ஒப்பு நோக்குக.

[illegible] மோனானுபூதி

(குறள்)

1151. மோனானு பூதியா [illegible] துருவும் [illegible]
வானா குகம்பொரு ளருள்.

(வெண்பா)

1152. கட்டனேன் பட்ட கடுந்துயரங் கண்டிரங்கிச்
சிட்டர்தொழு தேந்துஞ் சிவரமணன்—பிட்டனேன்
பாறை மனத்திலருட் பாதம் பதித்தலால்
ஊறியது மோன வுணர்வு.

1153. பரிதியா முண்மைப் பரசிவமே நானைத்
தெரிதியா னத்திற் செழிக்கப்—புரிதயா
மூர்த்தியா லூன முயற்சிதீர் மோனவருட்
சீர்த்தியா னுற்றேன் சிவத்து.

குறிப்பு:—பரிதி - ஞானசூரியன்; தயாமூர்த்தி - தயா சொருபமான குருமூர்த்தி.

(கொச்சகக் கலிப்பா)

1154. எத்தகவு மற்ற வெனக்கு நிரேதுகமாச்
சத்தி நிபாதச் சதிர்விளைத்த வாண்டவனற்
புத்திக் கலக்கமறப் பொங்கிற் றிதயத்து
முத்தியுணர் வானசுப மோனனு பூதியே.

1155. தஞ்சமாத் தன்னைச் சரணடைந் தேனுக்கவ்
விஞ்சைசேர் சுத்தவருள் வித்தகமெய்த் தத்துவனால்
வஞ்ச மயக்க வறும்பாழ் கழன்றொழிய
விஞ்சியது மோன விலாசஞ்சேர் தற்பரமே.

1156. சுத்த வருட்பிழம்பாத் துன்று சொரூபசற்
பத்தியளித் தென்னைப் பணிகொண்ட வாண்டவனால்
மத்தவகங் கார மனக்கலக்கங் கெட்டொழியப்
புத்தமுத மோனானு பூதி புணர்ந்ததே.

1157. துள்ளுநம் பசாசத் துடிப்பா மகந்தைமனக்
கள்ளந் தவிர்சொரூபக் காட்சியளித் தாண்டவனால்
உள்ளந் தெளியவிளங் கொட்ப நுட்ப மோனவருள்
வெள்ளவியல் வாழ்வா விளைந்ததனு பூதியே.

1158. பொய்த்தொழிய மோகச் செருக்கையடர்ந் துள்ளந்து
மெய்த்தன்மை யாக விளங்குசிவ போதவருட்
புந்தமுத மோனப் பொருள்சே ரனுபூதி
முந்தன் குருராமண மூர்த்தியாற் சார்ந்ததே.

1159. நானாக வென்னைக் கெடுத்தாண்ட நம்பிரான்
யானாகத் தன்னை யிதயத் திலக்கலால்
மோனானு பூதியா முண்டாதிரண் டற்றவொரு
நானான சுத்த சதாசிவமெய்த் தற்பரமே.

1160. மாரகமாந் துன்றுயிர மாகத்தேன் யானெனும்பொய்க்
காரகமா மோகக் கலக்கமற வாண்டவனாற்
றூரகமா வுள்ளசிவ தற்பரமோ னானுபவப்
பேரகவாழ் வென்னியல்பாப் பெற்றேன் பிறங்கவே.

குறிப்பு: — ஆண்டவனைப் பெற்றேன் என வினைமுடியும்.

1161. கற்றிலேன் சற்றுங் கலைஞானம்; பாசமறப்
பற்றிலேன் யாதோர்சற் பாவனையும்; சிற்பரையா
லற்றொழிய நானெனுங்கா ரணவப்பாழ், மாணவகம்
பற்றியது சுத்தப் பரானுபவ மோனமே.

உஉ. ஞானம்

(குறள்)

1162. ஆதரமா வாண்டா னருளாற் சொரூபஞா
னேதயவாழ் வுற்ற துளத்து.

1163. ஆண்டவனு னுள்ளத் தவிர்ந்ததோர் மெய்யுணர்வா
லீண்டியது சொந்த வியல்.

1164. தளைந்த மயக்கறக்காண் சற்குருவா னுள்ளத்
தளைந்ததுநல் லுண்மை யறிவு.

(வெண்பா)

1165. அருட்சிற் பரமான வாண்டா னடியேன்
மருட்சொப் பனக்கலக்கம் மாற்றித்—தெருட்சித்
திறமளித்த வாற்றாற் றெளிதலுற்றேன் போத
விறவிலே யென்மெய் யியல்.

1166. அறிவுருவா நின்ற வமலப் பிரானே
டுருவுபட்டே னுள்ளுணர்ச்சி பொங்க—உறவுணர்ச்சி
மீக்கூரக் கூர விசுத்தமெய்ஞ் ஞானவொளி
யாக்கமுண் டாயிற் றகத்து.

1167. மாலுறவற் றெங்கும் மகிழ்ந்த வாலறிவே
கோலமாத் தோன்றுங் குருவருளாற்—*போலும்
பிறிவருமோன் றன பிரம்ம சொரூப
வறிவுண்மை யார்த லகத்து.

*போலும்—ஒப்பில் போலியான உரையசை

1168. ஆன்ம சொரூப வறிவொளியா வாண்டவனுற்
றன்புருவா மாட்சி தழைத்தமால்—வான்மருவு
நீலநிறம் போன்ற நிகிலங் களுக்குமோ
ராலயமே யாயிற் றகம்.

1169. ஒருவாக் கியந்தேற் றுறுதியா லென்னை
யுருவாக்கி யாண்ட வுடையான்—குருவாக்
கிளர்சொரூப போனவருட் கேவலத்தா னுள்ளத்
தொளிபெருகப் பெற்ற துணர்வு.

(கோச்சகக் கலிப்பா)

1170. ஆணவமே மாயை யுடற்கலிச்சேர் நானெனும்பொய்ம்
மானமா மீனமற மாற்றியருள் கொண்டவனால்
வானமா மோன வளஞ்சேர் சொரூபமெய்ஞ்
ஞானமே யுண்மை நலனாக நண்ணியதே.

1171. மத்த மயக்க மனக்கற் பனாஜாலப்
பொய்த்தந் துவங்களறப் புந்தியிற்புக் காண்டவனாற்
சுத்தத் துரீய சொரூபானு பூதியா
வித்தகமெய்ஞ் ஞான விளக்கம்பொங் குற்றதே.

1172. பாழ்வயினா டாடிப் பரிதபித்தேற் காண்டவனால்
வாழ்வுசிவ மாக மலர்ந்த வருட்பதத்திற்
றாழ்வுமனப் பான்மை தணந்தொழியத் தானதுவா
வேழ்சொரூப ஞானம்பே ரின்பவொளி யாயிற்றே.

குறிப்பு:—பாழ் - கற்பனையே நற்பிரபஞ்சத்துக்குக் காரண
வாகு பெயர்; தாழ்வுமனப் பான்மை - ஆணவ
வடிவான அகந்தைமனப்பான்மை, ஜீவபாவம்;
ஏழ்தல் - எழுதல், உதித்தல்.

1173. மருளனை யென்னை மயங்கிய நான்மெய்ப்
பொருளனும் போதானு பூதி புணர்ந்தேன்
கருணையா லென்னைக் கடைக்கணித் தாண்ட
அருணையான் மோன வரவணைப் பாலே.

1174. அசுத்தமாந் துன்றழு மழுக்குடம்பை நானென்
றசுத்தா வொழிந்த வசட்டடியேன் என்றன்
நிசத்திறமா வுள்ளமெய்ந் நேயவுணர் வுற்றேன்
விசித்திரமெய்ஞ் ஞானவொளி மேனியனா னேனே.

உ௪. பக்தி

(கோச்சகக் கலிப்பா)

1175. சொக்கமாந் தன்னடியே தோய்ந்தேன் சொரூபவருட்
சீர்க்கிய வுள்ளந் திகழ்கின்றேன்: பேரின்ப
நீத்தமாப் பொங்குசிவ நேயானு பூதியெனக்
காத்தனு லாரமுத வாழ்வா வடைந்ததே.

1176. தீனனேன் மோகச் செருக்கா லுலகத்து
நானெனதென் றெண்ணி நலங்குலைந்து மாழ்காது
ஞான சொரூபகுரு நாதனு லுள்ளத்து
மோன வுணர்வுருவா மூண்டதுசற் பத்தியே.

1177. சுத்தசிவ மாகத் துலங்கு சொரூபவருட்
பத்தியுணர் வான பராவமுத மூறியது,
மத்தவகங் கார மனக்கற் பனுபேத
மித்தையினின் றுய்வித்த வித்தகனு லுள்ளத்தே.

உச. பூமா

(கொச்சகக் கலிப்பா)

1178. துங்கத் துரீய சொரூபமா வாண்டுகொண்ட
வங்கணனு மோன வருட்பிரா னுலகத்துத்
தங்கியது சுத்தசிவ சாம்ராச் சியமாகப்
பொங்கு சுவானுபவப் பொற்புறுசற் பூமாவே.

1179. துஞ்சுஞ் சடவுடலே சொச்சொருப மாமருண்ட
தஞ்ச மனத்தாற் றளைப்பட்டேற் காண்டவனல்
விஞ்சைசேர் சுத்தவருள் வித்தகஞா னந்தெளிந்த
நெஞ்சமே முத்தி நிலயமாத் துன்றியதே.

உரு. சொரூப சாட்சாற்காரம்

(குறள்)

1180. தனியனு வென்னைநான் சாட்சாற் கரித்தேன்
அனியனல்லா வாண்டவ னுல்.

1181. அருள்புரிந்த வாண்டவனு லான்ம சொரூபப்
பொருள்விளங்கிற் றுள்ளப் புலத்து.

1182 சுத்தப் பரவெளியாத் தொக்க சொரூபவுணர்
வத்தனுற் பொங்கிற் றகத்து.

1183. சுத்தாத் துவித சொரூபவியற் சிற்பரவாழ்
வத்தனுற் சேர்ந்த தகத்து.

1184. ஆரியன் றன்னு லடியனே னென்சொருபச்
சீரியல்பெற் றுய்ந்தேன் றெளிந்து.

(வெண்பா)

1185. இதுவன் றதுவன் றெனக்கலந்த வேத
மிதுதா னிதுதா னெனவோர்—புதுமுறையாற்
சாற்றினுற் போலகத்திற் சார்ந்தெனைக் காண்பவனைப்
போற்றுமனு பூதிப் புலன்.

1186. இன்பமெழப் பொங்க விதயத் தியல்பாய்பே
ரன்புருவ மாகவிளங் காண்டவனை—யன்பரிக
ளோதாமன் றொழியத் துலங்கிடு நாதன்றேவனாம
வான்றசொரூ பானு பவம்.

(கொச்சகக் கலிப்பா)

1187. செம்பொருளை வெள்ளைநந் திகழ்வித்துச் சுத்தசிவ
நம்பனு முன்மை நலங்கிளரப் பொங்கவைத்
திம்பரோ டும்பர்மற் றெம்பெருந்தேவர் தொழுசிற்
றம்பலமே யாயிற் றடியேன் சொரூபமே.

1188. தாயிற் சிறந்த தயாவான சற்குருவால்
ஆயற் கரிய வருங்கலையின் சாரமாத்
தோயத் துலங்கு சொரூபானு பூதிநிலை
நாயிற் கடையான நாபெற்று நண்ணியதே.

1189. பாழான மோகப் பசாச வகந்தையால்
மாழாந் தொழிந்த மனோதீதச் செம்பதத்தை
ஊழாலென் னுள்ளுணர்வைத் தூண்டியெமை யாண்டவன்செய்
கேழார்ந்த ஞானக் கிளரொளியாற் கண்டேனே.

1190. ஊனக் கலக்கமற்ற வுண்மைப் பரவெளியே
ஞானப் பிரானுன நம்பன் சொரூபமென்பர்;
ஏனைப் பிறவோ டியைபறச்செற் றுண்டவனல்
யானச் சொரூபநிலை யெய்தலுற்றேன் மிக்கெளிதே.

1191. மோகுமார் முத்தி முகக்கவென் னுள்ளுணர்விற்
பேதமற்ற சுத்தப் பிரம்மமா வாண்டவனற்
பாதமூ லத்திற் பரமோப சாந்தவருட்
போத சொரூபானு பூதி புணர்ந்ததே.

1192. அருளா வகங்கலந்த வம்மானுற் பாச
விருள்சே ரகந்தை யிறக்கவே இன்பப்
பொருளா வொளிசொருபப் பூரணவாழ் வுற்றேன்
மருள்சேர்ந்த கற்பனை மாயமறத் தீர்ந்தே

1193. மத்தவகங் கார மனக்கற் பனையினகன்
றத்தகநிற் குஞ்சி ரனையுறுந்தி யாண்டவருள்
விந்தகமெய்ஞ் ஞான விளக்கமாத் துன்றிதயப்
புத்தகங்கற் றேன்சொருபப் பூரணவாழ் வுற்றேனே.

1194. சிவத்துவமெய்ஞ் ஞானவருட் செங்கதிராற் பொய்க்கா
ரவித்தையற மாற்றுமென் னாண்டவன்பா லார்ந்தேன்,
விவந்தைசேர் சுத்த வியோமமாத் துன்ற
சுவத்தநிலை யான சொரூபசித்தி யான்பே.

1195. அருட்சிற் பரவொளியால் ஆணவப்பா ழான
மருட்சர்ப் பனையிருளை மாற்றலா லாண்டான்
வெருட்சிப் படர்தீர் விசுத்தத் துரீயப்
பொருட்சொச் சொருபம் பொலியவுற் றேனே.

குறிப்பு :— ஆண்டான் மாற்றலால் எனக் கூட்டுக

1196. யானற் றெழுமெய்ப்பே ரின்பமென யானெனும்பா
ழூனச் செருக்கற் றொழியவோ ருண்மைசொல்லி
நானற்ற மோன நலந்துலங்க வாண்டவனும்
வானப் பரசொருப வாழ்வு மலர்ந்ததே.

1197. அயர்வற வாண்ட வருட்சிற் பரனுல்
உயர்வற வோங்கு முயர்நல வாழ்வா
மயர்வற வுள்ளம் மடுத்தது சற்றுந்
*துயர்வறி யாத சொருபப் பதமே.

*துயர்வு - துயர்

1198. சிந்தனை மோகச் சிதாபாச ஜீவியத்தா
லுந்தனை மூழ்கி யமிழ்ந்திடா தாண்டவனுர்
பந்தமுத்தி யாங்கற் பனைக்கி டங்கயகக்
நந்தமில்வாழ் வாயிற் றஜாத சொரூபமே.

௨௩. சிவ சாயுஜ்யம்

(கொச்சகக் கலிப்பா)

1199. மீட்டுப் பிறவா விசுத்தவருட் கைவல்ய
வீட்டுக் கதிபதியா விஞ்சுங் குருரமணன்
காட்டிக் கொடுத்த கனமாம் சொரூபத்தாற்
றேட்டுங் கரியசிவச் சிற்பரஞ்சார் வுற்றதே.

1200. நானே வொளிர்சொருப சற்குருவாம் தன்னடியேன்
ஈனை றுடலகந்தை யோய்ந்தொழிய வான்மா
வானா வியல்சொருப வாழ்வுசிவ போகமா
வானைத மோனநா னனுபவந் தலர்ந்தியதே.

1201. தற்பரமா வுள்ளசிவ சாட்சாத்கா ரானுபவச்
சிற்பரமா மோனவருட் செல்வமளித் தாண்டவனற்
கற்பதற்கு மற்றென்று கானைக் கடவுளியற்
பொற்புறுவாழ் வானசிவ பூரணம்பொங் குற்றதே.

1202. மருளனேன் பாச மயக்கற நோக்கி
யருள்வடிவா வுள்ளத் தமர்ந்த பிரானால்
இருள்சே ரகப்பா ழிகப்ப வொளிர்மெய்த்
தெருள்சேர் சிவானுபவஞ் சேர்தலுற் றேனே.

1203. ஊன வுடல்வடிவா லூழ்த்தொழிந்தே னுக்கிரங்கி
மோனவருட் கேள்வி முடித்துக் கொடுத்தமெய்ஞ்
ஞான சொரூபகுரு நாதனை யுள்ளத்துத்
தானவிரப் பெற்றேன் சதாசிவமெய்த் தன்மையே.

1204. ஜீவனை வென்னைத் தெருமந் துழன்றநான்
பாவனை தீதப் பரசொருப சற்குருவால்
யாவனை னென்றிதயத் தோர்தலுற்றுங் கென்னுருவு
ஜீவமயல் போகச் சிவமா விளங்கியதே.

1205. கூறுபடச் சிச்சடத்தைக் கொன்றவருட் கோமானால்
மாறுபா டான மயக்கமனக் கற்பனையின்
வேறுபா டற்ற விசுத்த சிவத்திலெனக்
கூறுபா டற்ற வொருமையுணர் வுற்றதே.

1206. பந்தபா சக்கற் பனையின் படர்ச்சிதீ
ரந்தமிலா மோன வருள்வாழ்வா வாண்டவனாற்
புந்தியிலே பொங்கிப் பொலிவதெனக் கத்துவித
சொந்தமா வுள்ள சொரூபசிவச் செம்பதமே.

1207. ஐயறிவா மோக மனைத்தொழியப் பொங்குபர
மெய்யறிவா மோனவருள் வெற்றிசேர் வீடுகண்
டுய்யவென்னை யுள்ளத் தொடுக்கலுற்ற வாண்டவனாற்
செய்கையற வோய்ந்தேன் சிவானந்த பூமியிலே.

1208. கள்ளம் படுமயக்கக் கற்பனையெக் காலுமற்ற
வுள்ளம் பொருளா வொளிர்சொருப வாண்டவனால்,
துள்ளுமகங் காரத் துடிப்பாங் கடுப்பகலத்
தெள்ளுருப சாந்த சிவானுபவங் கூடியதே.

1209. மற்படுவெம் பாச மனைத்தால் வருந்தினேற்
கற்பவகப் பேய்காப்ப வாண்டவனா லுள்ளத்திற்
சிற்பரவாழ் வாகத் தெளிந்தியல்பா நீடியது
கற்பனைதீ ருண்மைக் கடவுட் பரசிவமே.

1210. சுவத்தமா வுள்ள சொரூபமே யாக
விவத்தைசே ருண்மை விளங்கியது மிக்க
சிவத்திலே வாழ்வு செழிக்க வெனக்குத்
தவத்தியல் காட்டிய தற்பரன் பாலே.

குறிப்பு:—உண்மை சொரூபமே யாகத் தற்பரன் பாலே விளங்கியது என முடிவு காண்க.

1211. உள்ளத்தே மோன வுணர்வொளியா லூறுசிவ
வெள்ளத்தே னுண்டு வியாமோகப் பீடையறக்
கள்ளத்தேன் சுத்தவருட் கண்ணுடைய வள்ளலாற்
றெள்ளத்தேர் வுற்றேன் சிவாத்துவித வுண்மையே.

1212. அத்துவித மானமெய் யம்மா னருளொளியாற்
பொய்த்துவித மோகப் புலம்பாங் கனவகன்றேன்;
வித்தகமா முற்ற விளங்கியதென் னுள்ளத்திற்
புத்தமுத வாழ்வாகப் பொங்குசிவ பூரணமே.

1213. புத்திக் கொளிதரும் போத சொருபவருட்
பத்தியே நாளும் பயிற்றவல் லாரறிவிற்
றித்தியா நின்ற சிவானந்தச் செம்பதவாழ்
வத்தனை யுள்ளத் தனுபூதி யாயிற்றே.

1214. உள்ளதே வாழ்வாக வுள்ளதைஉள் ளோராது
கள்ளமே வாழ்வாக் கனவில் மயங்கியநான்
உள்ளமே யாக வொளிரும் பரசொருபத்
தெள்ளியனால் வாழ்வு சிவமயமாத் தேர்ந்தேனே.

௨௭. அருள் வாழ்வு

(குறள்)

1215. அடியனேன் வாழ வகம்வளரப் பொங்கிற்
றுடையபிரான் மோன வுணர்வு.

1216. சிவமாத் திகழ்சொருபச் செம்மலை யுண்மைத்
தவவாழ் வடைந்தேன் சதிர்த்து.

1217. அறிவுருவா யுள்ளாத் தான்ம சொருப
விறைவனால் வாழ்வுபெற் றேன்.

1218. வாழ்வாக வென்னை வளைத்தா னருட்பதத்திற்
பாழ்வா தனைபாற்றி னேன்.

1219. வேகமோ கங்கெடுத்த வித்தகனா லூற்றதருட்
போகவாழ் வுள்ளப் புலத்து.

1220. துயிலுணர்த்தி யாண்ட துரியனால் உண்மை
யியலுணர்ந்த வாழ்க்கை யினிது.

(வெண்பா)

1221. என்னைத்தன் பாலே யிருத்தியெனக் கின்னமுதத்
தன்னருள்பா லித்த தயாசொருபன் — அன்னையிறை
மிக்கமே லன்பு விளங்குசிவச் சிரோமணியென்றே
சிக்கெனவே தொக்கது சீர்த்து.

1222. கண்டுகொண்ட மோனவருட் கைவல்ய சித்தியையக்
கொண்டதரு காட்டிக்கொடுத்தாங்கே — தொண்டுபட
வாழ்வெனக்கு மிக்கபெரு மாட்சிசேர் சுத்தவருள்
வாழ்வா மமைந்ததவன் மாட்டு.

(கொச்சகக் கலிப்பா)

1223. பதுமமா வஞ்சப் பதங்களை னுள்ளாம்
சதிர்சேர் சமாதிபெறச் சார்சற் குருவாய்
மதர்சேர் விசுத்தவருள் வாழ்வா மடுத்த
தெதிரொன்று மற்ற வியற்சிற் பரமே.

1224. மயல்சே ரகங்கார மாறுபி மானச்
செயலறச்செற் றண்டசிவச் செம்மலால் வாழ்ந்தேன்
இயல்பா விதயத் திருந்தொளிர்தன் னுண்மைக்
கயல்போ யழிந்தகா ரணவப்பே யேனே.

1225. வங்கணமெய் யன்பு மதர்ப்புறநன் காண்டவனும்
எங்கணுமாப் பொங்கும்பே ரின்பவியல் கண்டுகொண்
கங்கமக மாத்தோன் றலங்கோலத் துன்பமற [வே
மங்கலவாழ் வாக மலர்ந்திதயம் பொங்கியதே.

குறிப்பு:—வங்கணம் - நட்புறவு.

1226. உள்ளலற்ற வுள்ளமா வுள்ள சொரூபவருள்
வெள்ளநீ ராட்டி வெறும்பாச வாசைதீர்
தெள்ளமுத மான திருத்தினைத் தாண்டபெரு
வள்ளலால் வாழ்வு வசீகரமாப் பொங்கியதே.

1227. கவ்வியமோ கப்பாழ்ங் கருவிலகப் பேய்ச்செருக்கால்
வவ்வலுற்று வஞ்சிதனாய் மாழ்கலுற்ற மத்தனேன்
எவ்வமில்பே ரின்ப வியற்சிற் பரசொருபச்
செவ்வியனால் வாழ்வு செழிக்கலுற்றேன் சிற்பதத்தே.

1228. ஐயமகல் சுத்தனா னனுபவத் தாலடியே
னுய்யுமா றுள்ளத் துயிர்க்குயிரா வாண்டபிரான்
பொய்யிலா வுண்மைப் பூரணவடி வாகவிளங்
கையனால் வாழ்ந்தே னருட்சிற் பரத்திலே.

1229. கன்றுணை யத்தாங் கலங்கியவுள் ளத்தனேன்
நன்றான சுத்தமெய்ஞ் ஞானகுரு நாதனால்
ஒன்றான வொன்ற வுணர்ந்தபரா மார்த்தநிலை
பொன்றாத சுத்தவருட் பூரணமாய்ப் போதியே.

குறிப்பு.—ஒன்றானவொன்ற — இரண்டற்ற வொன்று.

1230. நானா வெளிச்சொரூப சற்குருவாற் சஞ்சலப்பா
டூனா ருடலகந்தை யோய்ந்தொழியப் பொங்குசுக
மோனானு பூதியே முத்திப் பெருக்கமா
ஆனா வருள்வாழ் வகத்தியல்பா வார்ந்ததே.

1231. வெறியனேன் றனைவப்பாய் வேதமுறு முற்றச்
செறிய நிறைந்தவருட் சிற்பரத்திற் சற்றுந்
றறியவொணா தென்னை மடக்கிவைத்த மோன
வறிவனை யூற்றோ னசஞ்சலமெய் வாழ்வே.

1232. கன்மமய லோங்கிக் கருவுறாதிற் றட்டழிந்தேற்
றன்மை புணர்வொளியா னுள்ளத் தபசாந்த
வன்மைசேர் கைவல்ய வாழ்வளித்த வாண்டவன்பாற்
றிண்மைசே ரத்துவிதச் சீர்மையால் வாழ்ந்தேனே.

1233. தானாக வென்னைத் தலைப்படுவித் தாண்டவெம்
மானை யடியேன் வணங்கிச்சான்ற வாழ்வுபெற்றேன்;
ஆனந்த சுத்த வருள்வெளியா வார்ந்தசுப
மோனானு பூதியிலே முற்றியதென் னற்றவமே.

1234. வம்பனேன் மோக மயக்க விகற்பமற
வெம்பிரா னான விறையருளாற் கண்டுகொண்டேன்
இம்பரும்பர் யாதுமிலா வேற்றஞ்சால் கைவல்யச்
செம்பரவாழ் வான சிவானுபவச் செம்பதமே.

1235. உண்மையொளி சான்ற வுடையோனு லென்னகத்து
நுண்மைசேர் கைவல்ய நோக்கங் கிளர்தலாற்
றிண்மைசேர் சுத்தவருட் சிற்பரமோ னனுபவ
வண்மைசேர் வாழ்வு வசீகரமாய்ப் பொங்கியதே.

1236. கள்ளக் கருத்தான கற்பனை சொப்பனஞ்செற்
றுள்ளத்தே யுண்மை யொளிப்பிழம்பா வாண்டவனார்
றெள்ளத் தெளிந்த சிவானுபவச் சிற்பரவாழ்
வுள்ளத்தே சுத்த வொளிவெளியாய்ப் பொங்கியதே.

1237. களியார்ந்தோன் யோகவகங் காரமறச் செற்று
வொளியாரு வுயர்ந்தே யொளிவெளியா வுள்ளத்
தளவில்பே ரின்ப வருட்பெருவாழ் வார்வா
வெளியதனா லிலே விரங்கமற்றோ ராமே.

௮. ஒளி வெளி

(வெண்பா)

1238. ஆண்டவனைல் வாழ்ந்தே னடியே னவனென்பார்
பூண்ட வருட் பார்வைப் பொலிவாலே—காண்டரும்
கண்ணானை தன்சொரூபக் காட்சியாம் மோனவொளி
விண்ணுறை விளங்குகின் றேன்.

(கொச்சகக் கலிப்பா)

1239. அடிமுடி யற்ற வருட்பர மான
வுடையா னடிச்சீ ரொளிபாய் வுறலால்
அடியே னகம்பே ரருள்வெளி யாக
வடைய விளங்கிற் றமுதப் பதமே.

1240. புரட்சிசெய் மோகப் புலக்கலக்க மான
விருட்கா ரவத்தை யெதிரா திகப்ப
அருட்சீ ரகங்கிளர்ஞா னனுபவ மாண்பால்
வெருட்சிதீர் சுத்த வெளியாவுள் ளேனே.

1241. ஊனக் கலக்க முருதவருட் கைவல்ய
மோனக் கலாஞான மூர்த்தியால் யானென்னுந்
தீனச் செருக்கொழியத் தெள்ளியதென் னுள்ளத்தில்
வானமே யாக வளம்படவென் மெய்யுருவே.

1242. மலைந்தவெம் பாச மயக்கமற வுள்ளங்
கலந்த சொருபவருட் கண்மணியாற் கோசங்
குலைந்திடமோ னுனுபவங் கூடியது மெய்யன்
பலர்ந்தபே ரின்ப வருள்வெளியாத் தானே.

1243. ஆங்கதுவா நின்றதனை ஆண்டா னடியேனுக்
கீங்கிதுவாக் காட்டி யிதயத் தருளலால்
ஏங்க வெணக்கினிமற் றேதுமில்பே ரின்பமா
வீங்கியதென் வாழ்வு விசுத்தவெளி யாகவே.

1244. ஞானங்க ளான நதிகளுக்கோர் தெண்கடலா
மோனந் துலங்குகுரு மூர்த்தியால், யானெனும்பா
ழீனங் கரக்க வியற்சிற் பரவெளியாத்
தானந்த பற்றொளிர்மெய்த் தன்மை சதாசிவமே.

1245. கண்ணுனை தன்னையன்றிக் காட்சிகள்மற் றில்லையென
விண்ணுள ளுனவருள் வித்தகனுற் கண்டுகொண்
டண்ணு தெதிர்புலத்தை யாளு ரெனவேயென் [டேன்;
றுன்னுடை லூற்றேற் றுளந்திற் பரவெளியே.

1246. சிற்பரவாழ் வாகத் தெளிந்த சிவானுபவக்
கற்பகமா வென்னுட் கலந்த வருட்பிரான்
நற்பரமா மோன சதாசிவத்தில் யானெனும்பொய்க்
கற்பனையை முற்றக் கரந்துவெளி யானனே.

1247. போதக் கனவெழுவுட் பொங்கு சொருபவருட்
சோதிப் பிரானை துணையாக நானெனும்பா
ழேதக் கலக்கமற வெற்றியே சிற்பரமா
மேதக்க சுத்தவெளி மெய்யா வியன்றேனே.

1248. ஈனப் பதகனு யெத்தனை னெத்தரத்தேன்
வானப் பரசொருப வள்ளலைனே யுள்ளவென்
மோனப் பரவெளியா முண்டதென் னுள்ளத்து
ஞானப் பிரானுனை நம்பனருட் செம்பதமே.

1249. நித்தமென் னுள்ளத்து நீங்கா துறைசொருபக்
கர்த்தன் கழலொளியிற் கைவல் லியந்துலங்க
முத்திப் பெருவாழ்வா மூண்டதுபே ரின்பநிலை
பொய்த்தத் துவப்புணர்ப்பாம் பூட்டுக் குலையவே.

1250. கோட்டமற்ற ஞான குருபரனுற் சிச்சடப்பொய்க்
கூட்டமா மோகக் குடில வகந்தைமனப்
பூட்டுக் குலைந்தொழியப் பொங்கு சொரூபவருள்
வீட்டியலின் மாட்சி விசுத்தப் பரவெளியே.

௨௧ ஏகத்துவம்

(குறள்)

1251. தருமகுரு வான தயாநிதியால் வாழ்வு
டொருமையுணர் வூறிற் றுளத்து.

(கொச்சகக் கலிப்பா)

1252. மருண்ட வகப்பேய் மனக்கற் பனையில்
வெருண்டவெனை யாண்டவருள் விஞ்ஞானப் பிரானால்
திரண்டசற் போத சிவத்தி லழுந்தி
இரண்டற்ற வுண்மையியல் கண்டுகொண் டேனே.

1253. தன்னையிரா வென்னைத் தடுத்தாண்ட தற்பரமெய்ப்
புண்ணியருள் வாழ்வுசிவ பூரணமாய்ப் பொங்குவான்
மண்ணிலோ விண்ணிலோ மற்றெவ் வுலகிலோ
தண்ணாளு மென்னையன்றி நான்பிறிதொன்
றேரேனே.

1254. இளிவரல்சேர் பாச மிகப்பவென் னுட்புக்
கொளிவெளியா வென்னை யுணர்த்தினன் மாட்டுத்
தெளிதலுற்றேன் சுத்த சிவாத்துவிதம் யோகக்
களியளைந்த பேதமனக் கற்பனைதீர் வுற்றே.

1255. சற்குருப வெல்லாமே கற்பனையாத் தாங்கழியச்
சிற்குறியி லென்னைச் செறிவித்து முற்றமுற்றத்
தற்குறியா மோனந் தலைப்படுவித் தாண்டுகொண்ட
சற்குருவா லத்துவிதத் தற்பரஞ்சார் வுற்றேனே.

1256. என்னில்யா னுக விருந்தொளிர் நல் லிசனைமற்
றென்னில்லே ருகநா னெண்ணிப் பிழைபட்டேன்:
துன்னியவே கான்ம சொரூபமா வாண்டவனுல்
அன்னியமாம் பேதமதி யற்றே னருட்பதத்தே.

1257. கன்றுமகங் காரமனக் கற்பனை தீண் டாதவருள்
வென்றிசேர் கைவல்ய மெய்யுணர்வு கூட்டுவித்த
நன்றிசேர் சுத்தமெய்ஞ் ஞான சொரூபனுல்
என்றுமொன் றுன வியற்பரஞ்சார் வுற்றதே.

௯௰. கைவல்யம்

(வெண்பா)

1258. விட்டு முதல்வனு மேவும் பரஞ்சோதி
பூட்டுமெய்ஞ் ஞான வுணர்ச்சியா—லேட்டுக்
கலைகளாற் காண்டவரு கைவல்ய மோன
நிலைகலந்து நின்றதென் னெஞ்சு.

(கொச்சகக் கலிப்பா)

1259. நீளப் படைத்தசிவ நேயமே ஆண்டவனை
லாளக் கிடைத்த வருநிதியச் சேமவைப்பு;
தாளிற் படைத்தசிவ சாட்சாற்கா ரத்தினிலாற்
*கோளைக் கடந்து கதித்தேன்கை வல்யத்தே.

* கோள் - கூற்றம், மிருத்யு.

1260. தொழுமியல்சான் றேங்கு துரிய சொரூப
மழுமுதலாந் தட்சிணா மூர்த்தியாற் கண்டேன்
பழுமுதல்வாழ் வான பராங்கதியா லென்னுட்
கழுமலுறு சுத்தசிவக் கைவல்ய மாண்பே.

குறிப்பு:—தட்சிணா மூர்த்தியால் என்றது சற்போதவடிவான தட்சிணா மூர்த்தி தத்துவமே சற்குரு சொரூபமாதலால் என்க, "... ஆதி குருமூர்த்த மாகக் குலாமோனக் கோமளமே" என ஸ்ரீ ரமண சந்நிதிமுறை-ரமண புராணத்திலும் வருவது காண்க.

1261. ஊன வகப்பே யுணர்வை யொழிவித்த
ஞான சொரூபகுரு நம்பனால், என்னுருவு
தீனமறப் பொங்குசிவச் சீர்மைசேர் சுத்தவருள்
வானமே யாக மலர்ந்ததுகைக வல்லியமே.

1262. காரிருளிற் கண்கலங்கிக் கற்பனையின் மாழ்குங்கால்
வீரியமிக் கான்றவருள் விட்சணத்தா லுள்ளம்புக்
காருயிருக் கோருயிரா வாங்கமர்ந்த வாண்டவனாற்
சீரியநற் கைவல்ய சித்தியெனக் கார்ந்ததே.

பேரின்பம்

(குறள்)

1263. போத சொரூபவருட் புண்ணியனை யுற்றதுளத்
தேதமில்பே ரின்ப வியல்.

1264. அருட்சிற் பிரானை யடைந்ததுபே ரின்பப்
பொருள்வளஞ்சேர் வாழ்க்கைப் பொலிவு.

(கொச்சகக் கலிப்பா)

1265. பேதப் புலங்களே பேணும் பிரமாத
போதப் புதைப்பாற் புலம்பு மகந்தையேற்
கேதப் படாதபே ரின்பவெளி காட்டியசற்
போதப் பிரானாற் பொலிந்ததென் னுள்ளமே.

சாந்தி

(கொச்சகக் கலிப்பா)

1266. உள்ளத் தியல்பா மொளிர்சொருப சுத்தவருள்
வெள்ளத் தமிழ்ந்தியவென் மெய்யன் குருரமண
வள்ளற் பிரான்மலர்த்தாள் வாசனையால் வாசனையின்
கொள்ளைக் குலங்குலையக் கூடியது சாந்தியே.

1267. கலந்ததொரு சாந்திக் கடலிதயம் பொங்க
வலர்ந்த வருள்விளக்கத் தாலகண்ட மாக,
நலந்தருமெய்ஞ் ஞானகுருநாதன்பாற் சிந்தை
நலிந்தடைந்து நம்பி நமற்கரித்த நாய்க்கே.

குறிப்பு:—நம்பி யடைந்து என மாற்றிக் கொள்க.

1268. உகந்தென்னை யாண்ட வுடையான் றனக்கே
முகந்துகொண்ட தாலென்னை முற்றுமுட்ட வுள்ளத்
தகந்தைமுனைப் பான மலபலங்கெட் டோய்ந்
நிகழ்ந்ததுப சாந்தவியற் செப்பருத்து வாழ்வே.

1269. கடையனேன் கைவல்யங் கண்டுகொண்டே னென்று
னுடையான் சொரூபமா வுள்ளொளியால்; வஞ்சந்
தடையான பாசமனச் சஞ்சலந்தீர் சாந்தி
யடையப்பெற்றே னுடையா னருட்பெற்றி யாலே.

1270. தாங்கொணாக்கா வாருயிரைத் தாங்கி வருத்துமக
நோக்கமறத் தன்னுண்மை நோக்கமளித் தாண்டவ
போக்குவரத் தற்றவருட் பூரணவாழ் வாவகத்து நிறைத்
தேக்கவுற்றேன் சுத்த சிவானுபவ சாந்தியே.

1271. வெறிசே ரகந்தையால் வெம்புலப்புன் பாழிற்
பிறியா தழுங்கலுற்ற பேதையேன் சுத்த
வறிவே சொரூபமா வாண்டவனு னுண்மை
நிறைவான சாந்திமயந் நெஞ்சுறப்பெற் றேனே

1272. பட்டிமை சேர்ந்தவெம் பாசமனக் கூட்டுறவாற்
கெட்டழிந்த வென்னைக் கிளர்சொரூ பானுபவ
நிட்டையிலே நன்கு நிறுவிப்போயந் ஞானவருட்
பட்டனா லுற்றேன் பரமோப சாந்தியே

1273. கறைசே ரகந்தைமனக் கற்பனை மோக
மிறைதீர் சொரூப விலாசத்தா லாண்ட
விறைவனா லுள்ளம்பே ரின்பவெளி யாக
நிறைவுற்ற சாந்தி நிலாவியது வாழ்வே

1274. பார்வையா லென்னைப் பரிந்தாண்டு கொண்டபிரான்
கூர்மைசேர் ஞானங் கொளுநலமா லுள்ளத்திற்
பார்மயல்சேர் பாசப் பயிர்ச்சியறப் போக்கியது
சீர்மைசேர் சுத்தவருட் சித்தோப சாந்தியே

1276. துங்கநிலை யான துரிய மதீதமாப்
பொங்கு சொரூபானு பூதியென் னுள்ளத்துத்
தங்க விளைவித்த சற்குருவாற் றுன்றியது
பங்கமில்வாழ் வான பரமோப சாந்தியே.

1276. தானே வொளிர்சொருப சாட்சாற்கா ரத்திறமே
ஞானானு பூதி நலனாக வுள்ளத்து
மோனானு பூதி முடித்துக் கொடுத்தவருட்
கோனான சற்குருவாற் கூடியது சாந்தியே.

1277. நஞ்சமா வென்னை நலிந்த வகங்கார
வஞ்சவே தாள மயக்கினின்றுஞ் சுத்தவருள்
சிந்தையா லென்னை விடுவித்த சற்குருவாற்
நெஞ்சனே னுள்ளத்திற் சார்ந்ததுப சாந்தியே.

1278. பந்தவகங் கார மனக்கலக்கந் தானுமன்ற
விக்குமியே னுள்ளத்தில் யான்யானென் றுன்னுமற்று
சுத்தவறி வாகத் துலங்கலுற்ற வாண்டவனாற்
சத்தாக வாழ்வாகப் பொங்கியது சாந்தியே.

[illegible]. நிட்டை

(கொச்சகக் கலிப்பா)

1279. பற்றற்ற வாண்டவனாற் பற்றற் றொளிர்சொருபப்
பெற்றியுணர்ந் தூனப் பிறப்பறநான் கண்டுகொண்
நிற்றலுக்கே யன்றி நிஜானுபவ நிஷ்டைபெறக் [டேன்:
கற்றலுக்கொன் றில்லையருட் கைவல்யச் சிற்பதத்தே

1280. எந்தை பிரானா லிதயத்தே சுத்தவருள்
சிந்தைசே ருண்மை விளங்கலாற் கற்பனா
பந்தபா சங்களிலே பாயா தடியனேன்
சிந்தை சிவத்திலே சிக்கெனவூன் றுற்றதே.

1281. ஒன்று வுணர்ந்ததன் னுண்மையிலே தானூன்றி
நன்று விளங்கிடலே ஞான சமாதியென்பர்
பொன்றாத வந்தவருட் பூரணசற் போதநிலை
என்றுமதை யாலியல்பா வெய்திற் றடியேற்கே.

1282. கண்ணா ரமுதமாக் கண்ணெதிர்நின் றுண்டபிரான்
உண்ணா ரமுதமா வுள்ளத் தொளிர்கின்றான்;
விண்ணா ரியல்சொருப வித்தகமெய்த் தத்துவனால்
எண்ணா வுயர்த்தலில்பே ரின்பநிஷ்டை சார்ந்ததே.

58. ஆன்ம சமர்ப்பணம்

(குறள்)

1283. தன்னை யெனக்களித்த தம்பிரான் சிற்பதத்துக்
கென்னையளித் தின்பமுற் றேன்.

1284. என்னவனாள் வாழ்வு விளைக்கவரு சிற்பரன்பாற்
கொள்ளைகொடுத் தேனென் மனம்.

1285. சரணு கதியாத் தனையடைந்தே னுள்ளத்
தரணுக வூன்றிற் றருள்.

1286. ஆண்டவனுக் கென்னை யடிமையா விற்றநாள்
மீண்டெவர்க்கும் வில்லே னினி.

1287. சற்குருபா தத்திற் சரண்கண்டு கொண்டேனச்
சற்குறுவாழ்* வுற்ற தகத்து.

* அற்குறு வாழ்வு - நிலேபேருன வாழ்வு

1288. ஞானவருட் பார்வையால் நல்கியமெய்ஞ் ஞானவடிவ
வானவனுக் காமென் மனம்.

1289. தனக்கே சமர்ப்பணமாச் சார்ந்தேன் அகந்தை
மனக்கேத மற்றொழிந்தேன் மற்று

(வெண்பா)

1290. என்னைக் கொடுக்கமகிழ்ந் தேற்றுக்கொண் டாகத்
தன்னை யெனக்களித்த தம்பிரான்—அன்னையினும்
மிக்கபே ரன்பு விளைநிலமாம் பொற்பதத்திற்
சொக்கலே போலும் சுகம்.

குறிப்பு:—போலும் - ஒப்பில் போலியான உரையசை

1291. ஆண்டவனுக் கென்னை யறக்கொடுத்தே னென்னை
யீன்றுவதாய்க் கண்டதுமே ரின்பநிலை—மூண்ட கத்தா
வளர்த்தத்துக் கேது வகந்தைப்பொய்த் தன்மை
யெனத்தகத் துவங்கண்டேன் யான்.

1292. இறையருளால் யாதுறினு மானவற்கு முற்று
முறியடிமை யான முறையால்—துறையிலே
யாதுங் குறைவின்றி யேக்களித்தேன் கற்பனைக
மேதகவா மோனம் விளைந்து.

1293. உடல்பொரு ளாவி யொருங்கிவனென் றுணர்வு
டுடனு வமைந்தா னுடையான்—திடமா
வவனேநா னென வறிந்தே னவற்றை
யவனடிக்கே யாக்கிய தால்.

1294. இளைத்தவுயி ரின்றுதன் றிரங்கியே யாண்டான்
களைந்தன னாய் போதவருட் கற்பால்—உளத்தினிற்ப
தன்னிறைப்பா மோனச் சரணு கதியுணர்வு
மெல்லுழைப்புக் கில்லை யிடம்.

(கொச்சகக் கலிப்பா)

1295. மும்மைச்செற் றண்டபிரான் பாதமே யல்லதெனக்
குற்றதுணை பொய்வெவ் வுலகிலென மோன் றின்மையுணர்ந்
தற்றெழுந்தேன் யானவ் வடிகளுக்கே; அற்றெழுந்தார்
கற்றைமற்ற சுத்த வருள்வெளியிற் பொங்கியதே.

1296. பரமான வைப்பிலே மாணடியர் தம்மை
யுரமாக நாட்டு முடையான்சீர் கேட்டுச்
சரணு கதியாகச் சார்ந்தேற் கழியா
வரணை யமைத்ததுந் காண வன்மெய்ந் தானே.

1297. காண்டபரு சுத்தவருட் கைவல் லியந்துலங்க
வாண்டவனுக் கென்னைநா னர்ப்பணஞ்செய் தாங்க
கீண்டியது மோன வியற்சிற் பரவெளியாத் [கபரு
பூரண்டமரு சொந்த சொரூபானு பூதியே.

1298. என்னை யணைந்தபே ரின்பவருட் பெருமானுக்
கென்னையே பூணு வியல்வித்துச் சிற்பரமாந்
தன்னையே யென்னுருவாச் சாட்சாற் கரித்தலாற்
பின்னியவொர் பாசப் பிணைக்கற் றெழுந்ததே.

1299. சோணு சலமெய்த் துரிய சொரூபனடிக்
கூணு வொழிந்நாங் குளிப்போங் கநுபவந்தான்
விருளைச் யெல்லாம் விலித்தொழிய மிக்குயர்
வேறாதனை முற்றியது வேண்டாமை நன்னிதே

1300. கற்றிலேன் ஞானங் கடைப்பிடியேன் சாதுக்களையும்
பெற்றிலேன் சற்குருவைப் பேணிச் சரணடைந்தேன்
அற்றதுமா மோக வகப்பேய் பரகதியா
முற்ற விளக்குமே மோனவருட் சிற்பரத்தே

1301. ஆண்டவனுக் கென்னை யளித்தாங் கதற்கிடா
வீண்டியது சத்த வியற்சிற் பரசொருபம்;
ஆண்டமோ நானுபவ முத்திப் பெருக்கவுணர்
வாண்டவன்பா தத்தி லனவரதம் பொங்கியதே

1302. ஆண்டவனுக் கென்னை யடிமையா உக்பரமென்
றீண்டவேற் பித்தாங் கிதயத் தியற்பரமா
மாண்டொழிய வென்னறிவை மாற்றியாட் கொண்டு முத்தி
மூண்டதுமோ நானுபவ முத்தியுணர் வோட்டமே.

1303 மோனவுணர் வாக முகத்தலுற்று சத்தமெய்ஞ்
ஞானவுரு காட்சி நயந்தளித்த வாண்டவற்கு;
நானுடைமை யாகவிந் நாள்வரை நன் கீட்டுவந்த
மானமனைத்து முற்றவளித் தோடிப்ய் சார்ந்தேனே.

1304 அறியா வறிவே சொரூபமா வாண்டாற்
கறிவற் றொழிந்தே னகத்திற் பிறிதி
னறிவறி யாமை யகன்றொழிய உண்மை
யறிவா விளங்கிற் றருட்கே வலமே.

குறிப்பு:— அறியா வறிவு - இரண்டின்மையால் வேறொன்றை யறியாததும் வேறொன்றாலறியப் படாததுமான கேவல வறிவு; அறிவு (இரண்டாமையில்) - யானென்றெழுந்த அகந்தை யறிவு.

1305. ஆண்டவனுக் கென்னைநா னர்ப்பித்த வாற்றுமென்
னாண்டவன்னை நானு வறிவு தெளிந்துற்றேன்:
ஆண்டவன்பா லாக வமிர்ந்தசொ ரூ பானுபவத்
தாண்டவன்றா யன்றியகல் காரணமா தூமின்றே.

1306. தன்பெருமை தானறியாத் தன்மையனுக் கியானென்
என்பெருமை யல்லை நில்லையேற் றதோர் நல்லதிறை [னும்
பன்னலந்த மோனப் பரமசிவ மாட்சிபெற்றேன்
என்னை நா னர்ப்பணமா வேற்பித்த வாற்றலே

1307. எனக்கெனக்கென் றெண்ணுமவ் யான்முதலா யாவுந்
தனக்கெனவே முற்றத் தழைப்பதன்றி யாதும்
எனக்காக வன்மை யினிதுணர்ந்த வாற்றல்
மனக்கேத மற்றபெரு மாட்சியடைத் தேனே.

1308. இட்ட மெனக்கென் றெதுவுமற வாண்டவன்செய்
யிட்டமே முற்றவெனக் கிட்டமாய் யானென்னும்
முட்டுப்பா டற்றபர மோனந் திளைத்தலாற்
கட்டநட்டம் யோகமனக் கற்பனையாப் பேர்ந்ததே.

1309. நன்றாந மோனங் கொடுத்தென்னை யாண்டவற்கு
நன்றாக வென்மனத்தை நல்கினேன் முற்றாட்டா;
ஒன்றாக வுள்ளந் தொளிர்சொரூபச் செம்பதமே
பொன்றாத சுத்தவருட் பூமாவாப் பொங்கியதே.

1310. மிக்கபெருந் தெய்த்தவமா விணனே னுள்ளத்துத்
தொக்கவருட் செம்மல் சொரூபவியற் செம்பதத்தில்
வைக்கலுற் றுளக்கென் வாழ்வே நிவேதனமா
நிற்கலுற்றே னந்தமெய்ஞ் ஞேயப் பதத்திலே.

1311. யானென்ற மோக வெழுச்சியற வுள்ளத்து
மோன வருள் வெளியா மூண்ட சொரூபவிறைக்
கூன வுணர்வுடனோ டுதியம்போ லிட்டியமுற்
றூனந் தவமனைத்துந் தட்சிணையாச் சேர்த்தேனே.

1312. காண்டகுமெய்ஞ் ஞானக் கழலைநினைந் தேனறிவு
தூண்டவேண் டாத சொரூப வருட்பிழம்பா
வாண்டவன்பா லாழ்ந்தவாற் றலவ் வறிவைமறைத்
தீண்ட வருவதோ ரின்பதுன்ப மில்லையே.

1313. தன்னை யலாமற் சரணெனக்குச் சற்றுமில்லை
யென்னவே சிக்கென நன் கீசனை நான் பற்றலுற்றேன்;
பின்னமில்சற் போதவருட் பெற்றியா லுள்ளத்து
மன்ற வொளிர்ந்ததுதன் மாத்திரமாந் தன்மையே.

59. ஊணுதலும் பயனும்

(குறள்)

1314. ஆணவந்தீர் சுத்த வருட்சிற் பரவொளிக்கு
மாணவூ ணுமென் மனம்.

1315. தானேநா னாகத் தழைத்தவருட் சிற்பரத்துக்
கானேனு னூணு வகத்து.

1316. உள்ளமே யாகு வொளிர்சொருப யானேக்கென்
கள்ள மனங்கவளங் காண்.

1317. உள்ளமே கோயிலா வுற்றவருள் யானேக்கென்
கள்ளமன மேகவளங் காண்.

1318. போத சொரூபவருட் புண்ணியனுக் கூணாகச்
சேர்தவா ஞற்றேன் சிவம்.

1319. ஆண்ட சிவத்துக்கூ ணுண வனுபவத்தால்
மாண்டதுநா னென்னும் மனம்.

1320. ஊணு யொழிந்தேற் றடையான் சொரூபமா
மாண வொளிர்ந்ததென்மெய் வாழ்வு.

1321. அறிவா விளங்கவுற்ற வாண்டவனே யன்றி
நெறிவே றறியாதென் னெஞ்சு.

1322. தானேயா வென்னைத் தலைப்படக்கண் டானருளுக்
கியானேயோ ரூணு யினேன்.

1323. உண்மையுணர் வாலென்னை யுய்யக்கொண் டானுக்
னுண்மையலூ ணுயிற் றுளத்து. [கென்

1324. இறைவனுக்கூ ணுக வெனைக்கொடுத்தாங் கன்மை
நிறைவுணர்வு பற்றிற்று நெஞ்சு.

1325. தடுத்தாண்ட சுத்தசிவ தத்துவனுக் கூணு
மடுத்ததுநா னென்னும் மனம்.

1326. தானே பரமார்த்தத் தத்துவமா வாண்டவனுங்
காணே னுணவா வகத்து.

1327. காணாக் கிடைத்தவருட் கைவல்யச் செம்பதமாந்
*ஊணமா போன வுணர்வு.

*ஊணம் - ஜீவபோதம் சிவபோத[illegible]

1328. ஒவ்வொருகப் பெற்ற வுதாரவருட் பாக்கியத்தால்
வேறொன்றைச் முற்றலுற் றேன்.

குறிப்பு :—ஈண்டு வேறுணை பெற்றது மனதைக்[illegible]
முடிந்த மவுன நிலையை.

1329. அருணைக்கே யென்னை யதீனமா வுய்த்தேற்
கருள்வடிவே யாயிற் றகம்.

(வெண்பா)

1330. பொருளான குருவை மயங்கியவென் னுவிப்
பொருளான துகவுளம் பொங்கி—வெருளுந்
தழுங்கற்று மாற்றுலென் றுணையிடைப் தானே
விழுங்கினேன் பொய்ம்மெய் விடுத்து.

1331. அவக்கே வலத்தி லழுந்திய வென்னைச்
சிவக்கே வலமாத் தெரித்தான்—அவற்கே
நினைபபுயறுப் பானவென் னெஞ்சமே னைக
முனைப்பற்ற மோனமுற் றேன்.

1332. கண்ணுனை தானே கடவுளாக் கற்பனைதி
நண்ணு ரமுதவொளி யூற்றுமன்—விண்ணுமா
விளங்கு சொரூப வியன்பரத்துங் கூணு
வளங்குலவு மென்றன் மனம்.

1333. முன்புணர்ந்த போகமறப் பொங்குசிவ நன்புலத்தோ
டன்புறவு காட்டி யருளினன்—தன்பதத்தை
வணங்குநின் றேன்றன் விதையம்புக் கொண்ணமழு
வுண்ணுநின் றனென் னுயிர்.

1334. விரிவாந் துரிய வெளியாக வுள்ளம்
பிரியாத மோனவருட் பெம்மான்—கரியாகக்
காணுதே காணுங் கடவுட் பரஞ்சோதிக்
கூறு வொழிந்த துணர்வு.

1335. அணுக்கஞ நின்றே னடிகளான் முற்றப்
பணிக்கவெ னக்கதோர் பண்பால்—இணக்குறமு
முற்ற வதீனமாய் மூத்தப்ப ஞனதனக்
கற்றொழிந்தேன் யானெனதெல் லாம்.

1336. அன்னையருட் பாதவொளி யார்ந்துநான் பரம்பொருள்
தென்னையுநும் பேரின்ப மெய்தினேன்—நன்னயமு
மென்
புன்மையவல் லாஞ்சமறும் போனகப ரம்புரிக்குங்
கன்மயமா யென்மாயந்தீர்ந் தேன்.

1337. அச்ச முறுத்தற் கடிப்படை யாணவஞ்சேர்
துச்சவகங் காரத் துவிதமுயல்—சச்சித்
தருட்பரத்துக் கூறு வகந்தை யழிய
மருட்பகைதப்பு மாறிற்று வாழ்வு.

1338. அருட்பரத்துக் கூறு யறிவாம்பே ரின்ப
விருப்பகந்து மோன மியைந்தேன்—விருப்புறமேற்
பற்றொன்று மில்லேன் பரமென் னியல்பாக
வுற்றன் றுளேனுள் ளுயிர்த்து.

1339. வெற்றி விநோதவருள் விந்துகன் றட் கூறாக
வுற்றகந்தைச் சுட்டறிவற் றேயிதலால்—வெற்றறிவா
முன்மையா வுள்ளத் தொளிர்சொரூ பானுபவ
வண்மைசேர் வாழ்வுபெற் றேன்.

1340. காணக் கிடையாக் கடவுட் பரசொருப
மாணிக்க மாக மடுத்தவற்குக்—காணிக்கை
யாக வகந்தை யகன்றதா லாணவங்கெட்
டேகவிபு வாயிற் றகம்.

குறிப்பு:—அகந்தை - பரிச்சின்னபுத்தியான பசுஅகந்
தை. விபு - அகண்டமான அருட்சிற்பரவெளி

1341. அந்தரி யாமியா வாண்டவனுக் கூணுக
விந்தையா மாய்ந்ததென்பாழ் வினைகந்தை—பந்தவுண
வானவெம் பாசமற வான்ம சொரூபவருள்
வானமா வுள்ளதென்மெய் வாழ்வு.

1342. இன்பமய மாக வியல்சொருப நாதனுக்கென்
னன்புமனந் தூய வவியாக்கி—நன்பதமாஞ்
சித்தோப சாந்த சிவபதந்தே தொந்தமற்ற
சுத்தோக மாச்சுடர்கின் றேன்.

(கொச்சகக் கலிப்பா)

1343. யானற் றெழுந்த வியற்சிற் பரசொருப
மோனப் பொருளே முடிந்த முழுமுதலாந்
தானத்தி லென்னைச் சமைவித் தருளியகோ
மானுக்கூ ணாக மதர்த்ததென் னுள்ளமே.

1344. ஆண்ட சொருபற் கடியே னகந்தையுணா
விண்டவா னாணு விதயத் தமைதலுற்றேன்.
காண்டலரு சுத்தவருட் கைவல்ய மோனவொர
மூன்றெழுநா னென்று முத்தோக மாகவே.

1345. மன்னனவே வாழ்த்தி வணங்கித் தியானித்துந்
நன்னையே தாரகமாச் சார்ந்தவென் னுள்ளப்புக்
கன்னையே யாக வருள்புரிந்த வாண்டவன்றற்
கென்னையே யூணுக்கி யின்புறவாழ் கின்றேனே.

1346. சற்பத்தி யோகந் தழைத்தா ரிதயத்திற்
பொற்பத் துலங்குசிவ போதானு பூதியால்
அற்பத் தியேனுக் கருள்வாழ் வடைவித்த
வப்பற் குணவா வடைந்ததகப் பேய்மனமே.

1347. ஊணாகப் பெற்றேன் உலப்பிலா வொன்றிலுயிர்த்
தேனான மோன வியல்வாழ் வடையலுற்றேன்;
வானாள் செழிக்க மனத்தியல்பாத் துன்றியதென்
வேணுவை யான விசுத்தப் பரசிவமே.

1348. காண்டருமெய்ஞ் ஞானக் கடவுளா வுள்ளம்புக்
காண்டபரஞ் சோதிக் கறிவு பறிகொடுத்தேன்;
விண்டநுக் கத்தை வெறுத்தேன் அருள்வெளியா
மூண்டதுமோ ஞானுபவ முத்திப் பெருநலமே.

1349. புணர்வகைதேர் புத்திச் செயலற்ற போழ்தில்
உணர்வே சொருபமா வுள்ள சிவத்துக்
கணவா வகந்தைமதி யோய்ந்தொழிவால் உள்ளத்
தணவியது சுத்தமோ ஞனுபவ வாழ்வே.

குறிப்பு:—போழ்தில் ஒய்ந்தொழிவால் அணவியது எனக் கூட்டுக.

1350. காணு மனைத்துமனக் கற்பனையாத் தாங்காக்கச்
சேணவிர்கை வல்யச் சிறப்பான வுண்மையால்
ஊணமாத் தன்னைநுக் குற்றவென் னுள்ளத்து
மான வொளிர்வது தன் மாத்திரமாஞ் சீர்மையே.

1351. உள்ளமற்ற வுள்ளமா வுள்ள சொருபத்துத்
தள்ளவரு வானவுள மூன்று வொழிதலாற்
கள்ளமனப் புன்கலக்கக் கற்பனைதீர் சுத்தவருள்
வெள்ளவெளி யாக விளைந்ததுப சாந்தியே.

குறிப்பு:—உள்ளமற்ற வுள்ளம் - இதயம்; உள்ளவரு வானவுளம் - மனம்.

1352. மாணுக் கலக்க மயக்கவகப் பேய்மனத்தால்
வீணுச் செருக்கி வெறித்துழன்ற வாணவத்தேன்
சோணு சலமாத் துலங்கு சொருபத்துக்
கூணு வொழிந்ததா லுற்றே னெளிவடிவே.

1353. சுத்தப் பரசொருபச் சொக்கன் குருரமண
சித்தனருட் கன்படியார் சித்தங் கவளங்கொல்
சித்தத்தை யுண்டவருட் சிற்பரத்திற் பொய்த்ததுபொய்ம்
மத்தவகங் கார மயக்கப் பசுத்துவமே.

1354. சித்தந் தெளிந்தவருட் சிற்பரமோ ஞனுபவ
வித்தகவாழ் வாக விளங்கு சொருபனுக்கென்
சித்தமனம் புத்திநா னென்னச் செருக்ககந்தை
அத்தனையு மூணுய்மெய் யன்புமய மானவே.

1355. ஈன மயக்க விளிவரல்சே ரென்னகத்து
மோன வருட்பதமா முத்தி சுபேப்படவெய்ந்
ஞான சொரூபமா நன்னெறியவான் பொருக்கென்
னான வகந்தையுணர் வூறு வொழிந்ததே.

1356. செய்வ தறியாச் சிறுநாயேன் பாலிரங்கி
மெய்வளர்வாழ் வான விசுத்தத் துரீயமுற்
றுய்வகையா னுள்ளச் சுதாளிபெருக்கி மண்டவழியு
ணையுணர்வு முற்றுமற்றாட் டாகக் கழிந்ததே.

1357. எவ்விறைக்கு மேகநா னென்னோ வியல்பிக்கு
தன்னிழப்பே மோனத் ததாகார நிலைடையார்
துன்னியசற் போதத் துரீயசொரூ பானுபவத்
தன்னியச்சுட் டாட்சிக் கவகாச மற்றதே.

1358. சிந்தந் தெளியிலன்றிச் சேர்தலரும் போதவுரு
பத்தியளித் தாண்டவன்பாற் பாச வகங்கார
மத்தமனக் கற்பனையை மாற்றினோன் அத்துவித
சுத்தவிஞ் ஞான சொரூபந் துலங்கவே.

1359. இருளிற் கிடந்துழந்த வேழையேன் ஆன்ம
னருளொளிக்கூ ணைக வழிந்த மனத்தால்
தெருளும் மருளுமறத் தீர்ந்த சொரூபப்
பொருளே பொருளாப் புணர்தலுற் றேனே

1360. கட்டுப் படாமெய்க் கடவுளைத்தம் புத்தியால்
எட்டிப் பிடிப்ப தெவர்க்கு மியல்வதன்று
மட்டுப் படாதபெரு மாட்சிசேர் சிற்பரத்துட்
குட்பட் டொடுங்கித்தா மூணுதை லன்றியே.

1361. காணு முலகு கடவுள் விலாசமாப்
பேணு முணர்வளித்த பெம்மா னருட்பதத்துக்
கூணமா நானற் றொழிதலா லுள்ளத்திற்
சேணுயர்வாழ் வாகத் திகழ்ந்ததுவ மெய்யதே

1362. சுழற்கே யுணவாக் கழிந்த மனத்தால்
இழைக்கவொன் றும் மற்ற வியப்பூ ரணையாச்
செழிக்க விளங்கு சிவானுபவ மோன
வொழுக்கமே வாழ்வா வுளைந்திலங்கின் றேனே

1363. உணர்வாக வுள்ள வுடையா னருளுக்
குணவாக வுற்றே னுபசாந்தி பெற்றேன்;
துணவாத மோன சமாதியா லுள்ளத்
தணவா தொழிந்ததுபா ழாசைப் பசாசே.

1364. மோனந் துலங்குசுப முத்திரையா லாண்டவற்கு
ஊனந் தகந்தையுணர் வூண வொழிதலால்
ஈனந் தவிர்ந்தே னிதயமாத் துன்றும்பே
ரானந்த மான வருட்சிற் பதத்திலே.

1365. தானாக வென்னைத் தடுத்தாண்ட தம்பிராற்
கூறா னுடலகந்தை யூண வொழிதலால்
மோனானு பூதி முகத்தலுற்ற வுள்ளத்தில்
வானே சொரூபமா வாழ்வு மடுத்ததே.

1366. கற்பனையா லன்றிக் கருதலரு கைவல்யத்
தற்பரமெய்ஞ் ஞான சதாசிவத்துக் கூணாகச்
சற்பான மோகச் சலவகந்தை யற்றொழிவால்
அற்புதவாழ் வாக வவிர்ந்ததுமோ னப்பதமே.

1367. ஊணமா நானற் றொழிந்ததா லாண்டவன்பால்
வேணவா வான விசுத்தமோ னாந்தினைத்தேன்;
தூணமா நின்றவருட் சோதிப் பரசொருபம்
மாணவெங் கெங்கும் மலர்ந்ததுதா னாகவே.

1368. தானான தன்னையன்றித் தன்னில்வே றொன்றுமற்ற
வானான சுத்தவருள் வாலறிவற் கூணாக
யானான வென்னை யிழந்தொழிந்தே னுள்ளுணர்வில
மோனானு பூதியா முற்றியது முத்தியே.

1369. தன்னிலே தன்னை யிருத்தலாற் சிற்பரமாந
தன்னிலே யென்னைத் தழைப்பித்த தம்பிரார்
கென்னையே யூண வியல்வித்தாங் குள்ளுணர்வி
றுன்னியதென் மெய்வடிவு சுத்தவெளி யாகவே.

60. ஆண்டவன் பரம் (பொறுப்பு)

(வெண்பா)

1370. தெளிந்த சிவத்திற் சிவோகமென் றன்பால்
அளைந்தவறி வான வகத்தே—விளைந்தபே
ரின்பமா மோன வியற்பதவாழ் வுள்ளமே
யென்பரமன் றீசன் பரம்.

(கொச்சகக் கலிப்பா)

1371. என்பர மன்றே யெதுவும் இதயச்சிற்
றம்பலந் தன்னி லருள்விளை யாட்டாகத்
தன்பர மாமுற்றும் பம்பர மாட்டுமியற்
செம்பா மான சிவத்துக் கலாமலே.

61. இயக்க வியங்கல்

(வெண்பா)

1372. மயக்கும் விகற்புமற மாற்றியே சுத்தத்
தியக்குகின்ற னெந்தை ரமணன்—துயக்கு
மகந்தைமுளைப் பாம்பொய் யறிவொடறி யாமை
முகந்தமனப் பாசம் முசித்து.

1373. மயக்கந் தெளிந்த மனத்தா லிறைவ
னியக்கவே யானியங்கு கின்றேன்—நயக்கமனக்
குள்ளுணர்வா வுள்ள வுடையான் பதவொளியென்
னுள்ளமே யாக வுணர்ந்து.

62. அருண்மாட்சி

(வெண்பா)

1374. வானுருவா வாண்டவருள் வள்ள லருட் பெருமை
யானுரைக்க வெண்ணினே னென்றுமோ—ஞான
வருட்பரமே நானு வனுபவித்த லன்றி
யருட்பெருமை சாற்ற லரிது.

(குறள்)

1375. மெய்ஞ்ஞான வாழ்வா விளைந்ததகத் தானாயபர
முஞ்ஞானஞ் செற்ற வருள்.

1376. சிவத்திலே வாழ்வு செழிக்கவென் றுள்ளத்
தவித்தையறப் பொங்கிற் றருள்.

1377. பேரான வெனக்குப் பிரானருளே போதியதாக்
காணலுற்றேன் கைவல் லியம்.

1378. எங்கும்பே ரின்பா வியல்சொருப போனவுனை
வங்கணன் செய்த வருள்.

1379. தெளியவே யென்னைச் சிவமயமா வுள்ளத்
தளையலுற்ற தாண்டா னருள்.

1380. சித்தக் கலக்கமறத் தேறத் தெளிந்தமெய்யன்
பத்த னளித்த வருள்.

1381. தூண்டுசிவ ஞானச் சுடரா விளைந்ததகத்
தாண்டவன்சா தித்த வருள்.

1382. என்பரமன் றனபே ரின்ப வியற்பரவாழ்
வன்புருவ வாண்டா னருள்.

1383. ஊன்றுகோ லாகவெனக் குள்ளதுளத் தூன்றுணர்வா
வான்றகுரு நாத னருள்.

1384. இருட்பா ழுலக வியற்கையறத் துன்றிற்
றருட்பார வாழ்வென் னகத்து.

1385. தண்ணருளே யாருயிர்க்குத் தாரகமாக் கண்டடைந்
துன்னனவு பொங்கிற் றுளத்து. [தாங்

1386. பொருள்வண்ண வாழ்வு புணர்ந்ததெனக் காண்டா
னருள்வண்ண மான வகத்து.

1387 யானே யிறைவனை யெண்ணா திருந்தேன்; உள்ளிருந்து
தானே தகநினைவித் தான்.

1388. நினைந்தாருங் கன்றித் தெரியாது தானே
வளித்தென்னை யாண்டா னருள்.

1389. தெளிந்தமைந்த சாந்நியாற் சித்தஞ் செழிக்க
அளைந்ததுநல் லாண்டா னருள்.

1390. தெளிந்ததமோ ஞையுமவச் சீர்மையா யுள்ளத்
தளைந்ததுஞா னேசா னருள்.

1391. துவிதமனச் சுட்டறிவு தோற்றமட்டே யாக
அவிர்தலுற்ற தாண்டா னருள்.

1392 குறையற் றொழிந்தேன் குருவருட்பே றின்பா
நிறைவுற்ற வாற்றாலென் னெஞ்சு.

1393. குலவுமெய்ஞ் ஞானகுரு வாருளிற் கண்டேன்
பலவுமொன் றுஞ்சிற் பரம்.

1394. துருவமா முள்ள சொரூபமே மோனம்
குருவருளா லுற்ற குலா.

1395. என்றுமுண்மை யாக வியல்சற் குருவருளால்
என்னுண்மை கண்டுகொண் டேன்.

1396. கண்டுகொண்ட சற்குருவருட் கைவல் லியமொருமை
மண்டியதெங் கெங்கும் மலர்ந்து.

1397. இனிதென்னை யாண்ட விறையருளா லற்ற
தெனதுயா னென்னும் மயல்.

(வெண்பா)

1398. கரும்பு கடிக்கக் கடினமெனக் கெனது
கரும்புரச மேயாக் கலந்தான்—அரும்பரமு
மண்ணை லடியேன்பா லத்துணைமெய் யன்புடையான்
அண்ணல் வடிவே யருள்.

1399. காண்டகுமெய்ஞ் ஞானவருட் கண்ணன் குருரமணன்
தூண்டுபரஞ் சோதித் துரியவெளி—ஆண்டா
னருள்வலையின் முற்ற வகப்பட்ட வென்னை
மருள்வலையென் செய்யும் மறுத்து.

1400. சூத்திரமோ வார்த்திகமோ சோதியேன் மற்றெந்தச்
சாத்திரமுங் கற்றுநிஷ்டை சாதியேன்—கூர்த்தவை நன்
கோதினரு முய்த்துணர்ந்துட் கொள்ளவொணு வுண்மை
நாதனருள் கொண்டடைந்தேன் நான். [குரு

1401. மூர்க்கக் கருத்தைமுழ மோனவருட் செம்பதத்திற்
சேர்க்கவெனக் காமோ சிறிதேனும்—காக்கக்
கடவனு நின்றவருட் காவலனே மோனங்
கடவதா நின்றான் கலந்து.

1402. மூலத்தை நாடி முனைக்கும் மதியோக
சீலத் தியல்சொருப சித்தியே—சாலச்
சிறந்தொளிர்தெய் வீக சிவானுபவ வாழ்வாச்
செறிந்தவிளை வாண்டான் செயல்.

குறிப்பு:—மதியோக சீலம் - புத்தி யோக மென்னும் ஆன்ம விசார வடிவான ஞானயோகசீலம்; செயல் - அருட்செயல்.

1403. செம்பொருளா மோங்குசிவச் சிற்றம் பலமகமா
மொய்ம்புறுமோ னநுபவம் முற்றியது—என்பரமோர்
சற்றுமின் றேகத் தனுதுசிவ பூரணத்தால்
அற்றமற வாண்டா னருள்.

1404. தன்னை யறிந்ததுநான் றன்னருளா லன்றிமற்
றென்னறிவா லன்றேயன் றென்னறிவோ—தன்னியல்
அன்னியமே யோர்ந்தறிவ தல்லா லறிவுருவாந் [பாம்
தன்னை யறிவதன்றே தான்.

1405. தெருமர லில்லேன் சிவபதங் கண்டேன்
பருவரல் பாழ்பட் டொழிந்தேன்—கருத்தில்
வெருவரலில் சாந்தி விளைந்தே னிதுநான்
குருவருளாற் பெற்ற குலா.

1406. பத்திலே சந்தாற் பரம சொருபசிவ
சித்திநான் பெற்றதிறந் தேறுங்கால்—முத்திக்
குபாயமா நானென் றுரைற்றிலே னண்டா
னபாரவருள் செய்ததையல் லால்.

குறிப்பு:—'என்றே கூறத் தகும்' என்னுஞ் சொற்கள் ஈற்றில் எச்சமாகத் தொக்கன.

1407. பெற்றபே றெல்லாம் பெருமா னருட்பெருமை:
கற்றறியேன் யாதோர் கலைஞானம்—கற்றறிந்த
பண்டிதர்தம் மோடும் பயின்றிலேன் பாவனையாக்
கண்டதுமொன் றில்லேன் கழற்கு.

1408. அறிவிலே யென்னை யடக்கினான் பாதச்
செறிவிலே சாந்தி திளைத்தேன்—பிறிவிலா
தொன்றிநின் றண்டா னுறுதிசேர் மோனவரு
ளன்றியின் றுர்க்கு மரண்.

1409. அறியாமை யாம்போய் யறியாமை நீங்க
வறிவாக வாண்டா னருளால்—வெறியான
வூனவகப் பற்றற் றொழியவுளத் துற்றதுமெய்ஞ்
ஞானவருட் பார்வை நலன்.

1410. ஆண்டா னருளா லவன்சொருப மென்னகத்துத்
தூண்டா மணிவிளக்காத் துன்றலால்—ஈண்டே
இமையாத வாழ்க்கை யினிதாரப் பெற்றேன்
தமியேன் சதாசிவஞ் சார்ந்து.

1411. ஆண்டா னருளன்றி யாதரிக்க நாயேனுக்
கீண்டவளர் மெய்த்துணைமற் றேதுமில்லை—ஆண்டகுரு
நாதனருட் சோதிபத ஞானனு பூதியெனக்
காதரவா வுள்ள தகத்து.

1412. ஆண்டா னருளுக் கடியே னிலக்காகப்
பூண்டதென்முன் னேர்செய்த புண்ணியமே—பூண்ட
பாக்கியம்பெற் றுய்யவதும் பற்றுதெனவேலல் [சிவ
வாக்கமுந்தா னவ்வருளே யாம்.

1413. ஆண்டா னருளேநா னாக வுமைதலால்
ஆண்டா னருளே யவாவலெங்ஙன்—ஆண்டா
னருளே யடியே னகத்தகமாப் பொங்கும்
பொருளா முணர்வே புணர்வு.

1414. கற்றிலேன் கேட்டிலேன் கள்ளநெஞ்சே யுள்ளத்தா
லுற்றிலே னேர்வந்தன் றெண்பதந்தே—அத்தகையே
னீண்டவே பெற்ற தியல்பா வனுபூதி
யாண்டபரஞ் சோதி யருள்.

1415. தனக்குவமை யற்ற தனிப்பரமா மூர்த்தி
அனைக்கனையா வாண்டா னருளால்—எனக்கு
நவமணியுங் குப்பையாய் ஞான சொருப
சிவமணியே யுண்மைத் திரு.

குறிப்பு:—திரு ஆயிற்று என ஆக்கச்சொல் வருவிக்க

1416. தொடர்புமற் றென்றுந் தொடாது நெஞ்சி
லடர்தலுற்ற வாண்டா னருளே—சுடர்தலுற்
றெங்குமவன் சந்நிதியா வெல்லா மவனுருவாத்
தங்கியது சாந்தி தழைத்து.

1417. நீக்க மிலாநிறைவா நீடுசிவ போகப்பே
ராக்க முறு நோக்க மளிக்குமின்ற—தேக்கவெனக்
கின்பவருட் பார்வை யினிதளித்த வாண்டவன்மெய்
யன்படியேற் காரா வமுது.

1418. படிப்பற்ற மூடப் பதடியா மென்னை
மடுப்புற் றலக்குமன மாயை—கெட,புத்
திடங்கொண்ட போத வியல்வடிவே நானு
நடங்குயிற்ற வாண்டா னருள்.

குறிப்பு:—படிப்பு - கல்வியறிவு, சாஸ்திரஞானம். பதடி - பதர்; கண்டுப் புற்றென்றது இதயத்தை. போத... குயிற்றல் - போத சொருபமே அகமக மென்று - அகம் ஸ்புரிப்பாக - அகத்தே அசல நாண்டவஞ் செய்தல். மனமாயை கெட வடிவே நானு நடங்குயிற்றல் எனக் கூட்டுக.

1419. பாழ்வளர்மோ கக்கற் பனையகல்சற் போதசிவ
வாழ்வா வகத்தில் வளர்சொருபம்—தாழ்வறநான்
கண்டுகொள்ளத் தன்னைத்தான் காட்டிக் கொடுத்தவரு
ளுண்டுறுதி யாக வுயிர்க்கு.

1420. பழிசே ரகந்தைப் பதைப்பற் றெழியத்
*தெழிசெய் யருளின் றிறத்தால்—விழியாய்
விளங்கப் பரமே விகலமா மோன
முளங்கலந்த தொன்றிற் றிரண்டு.

*தெழி - தெழித்தல், மிதித்து உழக்குதல்.

1421. மணிவா சகர்கண்ட மாண்பதப்பே ராட்சிப்
புணர்வா மனுபூதி பொங்கத்—திணிவான
மோனஞ் சுரந்து முழுமுற்றுந் தன்மயமே
யானதெனக் காண்டா னருள்.

1422. மாசிலா ஞான மணியா வொளிர்சொருபத்
தேசிலே முற்றநான் சிக்கியதே—நேச
நிறைவீடு காணவென் னெஞ்சத்திற் பாசச்
சிறைவீடு பெற்ற திறம்.

குறிப்பு:—நிறைவீடு - நிறைவான முத்தி, பரமுத்தி; சிறை
வீடு - சிறையினின்று விடுதலே.

1423. முத்தி யுணர்வெனக்கு மூண்டொளிரத் தன்சொருப
சித்தியளித் தாண்ட சிவபிரான்—வித்தகமெய்ஞ்
ஞானவருள் வெற்றி நவைசே ரகங்கார
வூனமயல் போக்கிற் றுளத்து.

1424. யேதையே னல்லேன் மிகப்பேதை யெவ்வாறு
சாதியா நிற்பேன் சதாசிவமென்—றோதியான்
சும்மா விருந்தேன் சொருபமா யான்யானென்
றம்மான் கிளர்ந்தா னகத்து.

1425. யமநியம மில்லே னிறையருளா லூற்றேன்
காமனியமாந் தன்சொருபக் காட்சி—தமனியச்செம்
பொன்மயமா வொன்றினபல்பூண்போற்பல் காட்சிகளுந்
தன்மயமா வொன்றின தாம்.

1426. விற்றுநா னென்னை விடுத்ததா லாண்டவனுக்
கற்றமொன் றில்லா வருள்பெற்றேன்—மற்றுமொன்
றென்று லறிந்தடைதற் கில்லாமெய்ப் பூரணமாம்
பொன்னுயிற் றந்தப் பொருள்.

1427. வெறுவிதாம் புற்புதப்பொய்ம் மெய்யேநான் போலக்
கெறுவியாய்க் கெட்ட வெனக்கு—நறுவிதாம்
போத சொரூபானு பூதியுளஞ் சேர்ந்ததுசம்
போத குருவருளாற் போன்ம்.

1428. ஆதிக்க மான வருட்சிற் பராசத்தி
யாதிக்கு மில்லாத வென்மனத்தே—நீதிக்
கிலாதவனென் றேங்கலெவன் யானிருக்க வுள்ளத்
திலாததென்னென் கின்று ளிசைந்து.

1429. வெற்றியா லென்னுள் விளங்குவது ஞானவருட்
பெற்றியா லண்டான் பெருமையே—சுற்றுமுற்றும்
எல்லாமே தன்மயப்பே ரின்பமய மன்றிமற்றென்
றில்லாமே யுள்ள தியல்.

1430. எதிராவார் யாருமெனக் கின்றுக மோனச்
சதிராளன் செய்தவருட் சார்பால்—விதிரா
வியரா மயரா வெகுளா மகிழா
வயரா வமைதியுற் றேன்.

1431. உலகங் களுக்கோ ருயிராகத் தானே
யிலகுங் கழல்சே ரிறைவன்—குலவும்
பரஞ்சோதி யானவருட் பார்ப்பா னருளாற்
சிரஞ்சீவி யானேன் செழித்து.

1432. குருவருளே முற்றக் குறிக்கொண்டேன் கண்டேன்
பொருவருவே தாகமஞ்சொல் போதம்—தெரிவருமோ
ரனுபவ மான வருள்வாழ்வு டாயிற்று
வானுலக மோர்தன் மயம்.

1433. அருள்வடிவ மாக வவதரித்த சுத்தத்
தெருள்வடிவ மானருரு தேவன்—அருள்வசியப்
பார்வையா லென்னைப் பராமரித்துத் தன்சொருபப்
போர்வையாற் போர்த்தான் புலம்.

1434. இனைத்தென் றனுபவத்தா லெம்மனோர் தேறும்
அனைத்தா மலான்மற் றயலார்—மனத்தாற்
பரிச்சித் தறியவொண்ணுப் பண்பிற் றிறைவ
னருட்சித் திரத்தி னடைவு.

1435. பொன்னே மணியே புலமோமற் றேதுமன்றப்
பொன்னம் பலசொருபப் பூரணமாம்—தன்னோ
டொருமை யுணர்வே யுடையா னடியேற்
கருமையாப் பெய்த வருள்.

1436. என்னே யெனக்கத்தா னேதுங் கொடானென்று
முன்னெருகா லெண்ணியதோர் மோகமாய்ப்—பின்னே
கொடாததுயா தென்று குறிக்க வெதுங்கண்
டிடாதடியேன் வெட்கலுற் றேன்.

(கொச்சகக் கலிப்பா)

1437. பரவியல்வாழ் வாகப் பலித்ததுமெய்ஞ் ஞான
வரவொளியா லென்னை யுணர்த்தி உளத்து
டிரவுபக லில்லா விடங்காட்டி யாண்ட
குருவருளா(ம்) மோனக் குலாநிலையின் சீரே.

1438. தெளிந்த சொருபவருட் சீர்மையா லன்றி
அளைந்திட வொண்ணு வமுதானு பூதி
விளைந்ததென் னுள்ளத்து வெய்யமனத் தாபக்
களைந்துன்று வாழ்க்கைக் கலக்கமறச் செற்றே.

1439. உள்ளத்தே யுள்ளமா வுள்ளதுகை சோர்ந்தொழியக்
கள்ள வகந்தைமனக் கற்பனையா லேகலங்கித்
தெள்ளத் தெளிந்தவருட் சிற்பரன்றேற் றந்தெளிந்தேன்
விள்ளவொணு வத்துவித மெய்ப்பொருளா லென்னையே.

குறிப்பு:—கலங்கித் தெளிந்தேன் எனக் கூட்டுக.

1440. ஒப்பதா மற்றென் றுமாநபெரு மாட்சிசேர்
சிற்பரமா மோனச் சிவமேதா னுவொளிர்மெய்
யப்பனருட் பேறு வடைந்ததெனக் கென்சொருபச்
செப்பமா வான்ற சிவானுபவச் செல்வமே.

1441. திரவுணர்வின் மோனத் தெளிவா லகத்திற்
கரவுசேர் மாயக் கறைவொழிய, உள்ளம்
பரவெளியா வோங்குசிவப் பான்மை யுறலாற்
தருவருளின் மாட்சிகண் கூடாக்கண் டேனே.

1442. பரமான சுத்தசிவ பாக்கியவாழ் வுற்றேன்;
உரமோன வுண்மையுணர் வுள்ளமாப் பெற்றேன்;
தரமான சொச்சொருபத் தன்மையிலே ஆண்டா
னருளா லகந்தையினைப் பற்றொழிந் தேனே

1443. ஞானப் பரசொருப நாதன் பசுபாச
வூனக் கலக்கமற வோட்டும் பரஞ்சோதி
யானிற்கு மாற்று விறைபதத்தே என்னகத்துத்
தானிற்க லுற்ற தயாபரன்சிற் சாற்றரிதே.

1444. மன்னுசிவ போதவருள் வாய்மெய் வாழ்வாக
நன்னயமா மோன நலங்கூ ரனுபூதி
என்னையினி தாண்ட விறைவரு லுற்றதன்றி
முன்னரதற் கேதுவா மூண்ட தவம் யாதுமின்றே

1445. அருளே யலாதொன் றவாவாதே னுக்கவ்
வருளே வடிவா வலர்வித்தா னென்னை;
அருளா விளங்கவ் வடிப்படையில் யானவ்
வருளா யுயிர்க்கின்ற வாறுகண் டேனே.

1446. கொள்ளக் குறையாக் குருவருள்வெள் ளத்தடத்திற்
குள்ளக் குளிரக் குளித்தேன் களிக்கவுறத்
தெள்ளத் தெளிந்த சிவானுபூ தித்திறத்தால்
எள்ளித் தெழித்தே னினிவரல்சேர் பாசமே.

1447. நீண்டவருள் வேட்கை நிரம்பவென் னுள்ளம்புக்
காண்டவனைக் கண்டுநா னுதரங்கூர்ந் தேனறிவில்
மூண்டமோ னனுபவ முத்திப் பாசுகந்தாற்
காண்டலுற்றே னண்டான் கருணைப் பெருந்திறமே.

1448. கள்ளங் கழன்றேழியக் காணுங்கண் ணேக்காலென்
னுள்ளந் தனக்கேமுற் றூட்டா வுடையபிரான்
உள்ளும் புறம்புமொருங் கோக்கவருட் பேரின்ப
வெள்ளவெளி யான வியன்பரமா நின்றுனே.

1449. பாற்றற் கரியவெம் பாசக் கலக்கமறப்
பாற்றியென் னுள்ளுணர்விற் பார வொளிவெள்ளயாச்
தேற்றலுற்ற சுத்தவருட் சிற்பரவாழ் வென்னையாக்
கேற்றுக்கொண் டாண்ட விறைவன் கருணையே.

1450. ஏங்குவா ரேங்க விகத்தே இயற்பரவாழ்
வீங்கே யிதயத் தியல்பா வெனக்கருளித்
தாங்குவா னம்மான் சதோதயமாந் தன்மையாற்
பாங்கனு வென்னைப் பரிந்தினிதாட் கொண்டானே.

1451. எல்லாமொன் றுக விதயத் தியல்சொருப
நல்லா னருளியமெய்ஞ் ஞானனு பூதிநிலை
தொல்லாங் ககத்துத் தொடர்ந்தொளிரவ் வுண்மையா
லெல்லா மவனருளே யெல்லா மவன்செயலே.

1452. கள்ளத் தனம்முற்றக் கண்டிருந்துங் காணுன்போல்
எள்ளித் தெழிக்கவே யேற்றவெனக் காண்டவன்சற்
றள்ளித் தெளித்த வருட்பிச்சை யாலகத்துத்
தெள்ளத் தெளிந்தேன் சிவசொருபத் தன்மையே.

1453. இருளுக் கிடமா வியைந்த மனஞ்செம்
பொருளுக் கிடமாப் பொலிந்திட வாண்டான்
அருளைத் தவிரமற் றன்னியங் காணேன்;
மருளித் தனமோர் மாயமே கொல்லோ.

63. ஆண்டவன் திருவடியில்

க. குருபக்தி

(வெண்பா)

1454. அறிவே சொரூபமா வாண்டகுரு பாத
வுறவே வுறுதியா வுற்றேன்—துறவுக்
கவசியமே யின்றி யகிலமுமோர் காலை
யவிர்சொருப மாயிற் றது.

1455. ஊங்கொருவ ரில்லா வுடையா னடியாரைத்
தாங்குபரஞ் சோதிபதஞ் சார்தலால்—ஓங்குபர
வித்தையோ டொன்ற விளங்கியது சுத்தவாநட்
பத்தியென் னுள்ளப் பழுத்து.

(கொச்சகக் கலிப்பா)

1456. புத்திக் கமுதமாப் பொங்கு சிவானுபவ
முத்திப் பெருவாழ்வு முற்றுவித்த வாண்டவன்றாட்
கத்தகநிற் கின்ற வறிவே யுபாசனையா
வித்தகசற் பத்தி விளங்க விளைந்ததே.

உ. குருபாத வுண்மை

(கொச்சகக் கலிப்பா)

1457. விருப்பாகச் செய்யும் விசாரக் கருத்திற்
புரிப்பாகத் தன்னைப் புலப்படுத் திக்கொண்
டிருப்பாக வுள்ள வியற்சிற் பரமே
குருப்பாத மாகநான் கூர்த்தறிந் தேனே.

1458. உலகப் புலநோக் குருதே சொருப
நலனிற் பழுத்தமெய்ஞ் ஞானநு பூதி
இலகக் கருத்தை யிதயத்தா டுய்த்தோன்
மலர்சிற் பதமே மனமா யினதே.

ங. குருபாதப் பற்று

(குறள்)

1459. வற்றுப்பே ரின்ப வளஞ்சுரக்கும் பாதமே
துற்றுகப் பற்றிற் றுணர்வு.

(கொச்சகக் கலிப்பா)

1460. மடுத்தவெலா மோர்தன்சிந் மாத்திரமாப் பொங்குங்
கடத்தவெளி யேசொருபந் தந்துமயா மென்னில்,
தடுத்தென்னை யாண்ட சிவ சற்குருபா தத்தை
விடுத்துநான் சற்றும் விலகலெவ் வாறே.

௭. குருபாதத் தியானம்

(குறள்)

1461. சிந்தையறச் செய்தவருட் செல்வனடிச் சிந்தையினைச்
சுந்தமில்லே யின்ப வமுது.

1462. பேசற்கரிய பிரான்பதமே வாழ்வாக
நேசத் தழுந்திற்றென் னெஞ்சு.

(வெண்பா)

1463. நானம் பெழுந்துகுரு நாதனடிக் கீழ்நான்
மோனப் பெருவாழ்வு முற்றினேன்—ஞானத்திற்
கள்ளமிலா மற்ற கருந்தாற் கருத்தனை நன்
குள்ளவா வுள்ளிற் றுளம்.

(கொச்சகக் கலிப்பா)

1464. மாயா விநோத மயக்கமறக் கேவலமெய்ஞ்
ஞானானு பூதியா னெஞ்சில் விளங்கலுற்றான்
நாயான வென்னை நயந்தாண் டருள்சுரந்த
தாயான சற்குருதாட் சார்பே தவச்சார்பே.

1465. பாசா டவியிற் பாக்கவலேந் தேனுக்குத்
தேசா ரருட்பார்வை சேர்த்தினன் சேவடியில்
வேசா றெழிய விளங்கியது சுத்தசிவ
நேசானு பூதியா நீடு நிராமயமே.

1466. ஏயாநின் றுள்ளத் தியல்பாக யான்யானென்
றோயா தொளிர்சொரூப வுண்மைப் பிரானடிக்கீழ்
மாயா விலாச மயக்கமகல் வாலறிவா
நேயானு பூதி நிரம்பவுற்ற துள்ளமே.

௬. நிட்டை

(குறள்)

1467. நிதம்பரவித் தேற நிலைத்தேன் சொரூபப்
பதப்பெறுவித் தாண்டான் பதத்து.

(வெண்பா)

1468. அதீதயா நின்ற வருட்பரமே யான்ற
சதோதயமா வுள்ளந் தழைக்கத்—ததீயனா
வென்னையடிக் காளாட விறைபதத்தே தன்மயமா
மன்னியதென் னுண்மா மகிழ்ந்து.

(கொச்சகக் கலிப்பா)

1469. அறிய வொணாத வதீதப் பிரான்மெய்
யறிவனா வென்னையடிக் காட்கொண்டு மோனக்
குறியிலே யின்பநிஷ்டை கூடுவித்தான் பாத
நிறைவிலே மற்றொருமெய்ஞ் ஞேயங்கா ணேனே.

1470. இட்டமா நாயே னிதய மரங்கமா
நட்டமா டுற்றமெய்ஞ் ஞானப் பிரானடிக்கீழ்
இட்ட மனிட்ட மிரண்டுமில்சுகந் தானந்த
நிட்டானு பூதியா நெஞ்சம் மலர்ந்ததே.

1471. சற்குருதாள் சற்கதியாச் சார்வா லடியேனுக்
கெக்குறையு மில்லாப்பே ரின்ப வியல்விளங்கத்
தொக்கதுவாழ் வாகத் துரீய மதீதமா
நிற்கவுற்ற மெய்ஞ்ஞான நிஷ்டானு பூதியே.

1472. பாதமே சற்கதியாப் பற்றினேன்; பாசமனக்
கேதமறப் போக்குறுமெய்க் கேள்வியுளத் தூடுருவச்
சேர்தலா லூனச் செருக்கான பாழிருள்கெட்
டார்தலுற்றேன் சுத்த வருட்பரமாந் தன்னிலே.

1473. சற்பத்தி யான சமாதிகூ டிற்றடியேற்
குற்பத்தி நாசமற வுள்ளத் தொளிவெளியாப்
பொற்பத் துலங்குசிவ போதானு பூதிநிலை
யற்பத் தியேனுக் களித்தபிரான் சிற்பதத்தே.

1474. தோன்றவகங் கார மயக்கமனக் கற்பனைசெற்
றென்றெனை நன் காண்ட விறைவனருட் சேவடிக்கீழ்
ஆன்றமைந்து சுத்த வறிவே சொரூபமா
யூன்றலுற்றே னுக்குமற் றோர்த்துணர வொன்றுமின்றே.

1475. பூசுற்ற வாணவப்பாழ் மொய்யிருண் முற் றக்காக்க
மாசற்ற சோதி மலர்ந்தவருட் சிற்பதத்திற்
றேசுற்ற வாழ்வாச் சிறக்கலுற்ற தாருயிர்க்கு
நேசக் களிபெருகு நிஷ்டானு பூதியே.

1476. நானாவே தக்கவஞ் ஞான வகந்தைமனக்
கோணறவே யுண்மைக் குறியிற்கோ டாதுநில்லென்
றாணைவழி நிற்பித் தருளினன் சிற்பதத்திற்
காணலுற்றேன் சுத்தவருட் கைவல்ய நிஷ்டையே.

குறிப்பு: நில்லென்று ஆணையிட்டது மட்டுமின்றி அவ்வாணைவழி நிற்பித்தும் அருளினன் என எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது.

1477. மத்தமனக் கற்பனையின் மாழ்கலுற்றே னுக்கருளாற்
சித்தமல மான செருக்கறச்செற் றானடிக்கீழ்த்
தத்துவமெய்ஞ் ஞான சமாதியாற் சார்ந்ததகத்
தத்துவித மான வகன்பெருமெய்த் தன்மையே.

குறிப்பு:—அடிக்கீழ் கூடிய என ஒரு சொல் அவாய் நிலையால் வருவித்துக்கொள்க. அத்துவித... தன்மை - தன்மையி னுண்மையைத் தானுய்ந்து தன்மையறின் முன்னிலை படர்க்கை முடிவுற்று ஒன்று யொளிரும் பரமார்த்த சொரூபமான முழுமுதற்றன்மை. (உள்ளதுநாற்பது).

1478. மோனவருட் பூரணமே முத்திப் பெருநலமாத்
தானவிர்சற் போத சமாதி தழைத்தியல்வாழ்
வூனமற வுள்ளத் துதவியபெம் மானடிக்கீழ்
ஆனந்த மாக வமர்ந்தே னடியேனே.

௬. ஸஹஜ ஸமாதி

(வெண்பா)

1479. நாளவிந்து செத்தொழிமுன் ஞானனு பூதியளித்
தாளவந்த வாண்டா னருட்பதத்தே—கோளவிந்து
சாம்படியா மோன சகஜ சமாதியெனக்
காம்பரிசு பெற்றே னகத்து.

(கொச்சகக் கலிப்பா)

1480. தரமிலா நாயேன் சகசநிலை சார்ந்தேன்,
பரமா வொளிர்சொருபப் பார்வையா லுள்ளத்
துரமா வெனைத்தன்னோ டொன்று வுடையான்
வரமான சுத்தவருள் வைப்பாம் பதத்தே.
குறிப்பு :—சகசநிலை-சகசநிஷ்டை.

௭. சொருப சாட்சாற்காரம்

(குறள்)

1481. மோனவருட் கைவல்ய முத்திப் பிரானடியில்
யானதுவாத் தேர்ந்தே னியல்.

(வெண்பா)

1482. ஞானக் கொழுந்தான நம்பனருட் செம்பொனடித்
தானத் தொளிர்போத சாந்தியால்—மோனத்
துரியவாழ் வான சொருபானு பூதி
மரீயதருள் வானு மனத்து.

குறிப்பு :—போதசாந்தி-போதவடிவான சாந்தி.

1483. அடியே னறிவுசொரு பாகார மாக
வுடையான் பதத்தி லொளிரும்—தடையாது
மற்றவருட் சார்பா லடைந்தேன் பெருந்தக்கோர் ;
நற்றவஞ்செய் துற்றபயன் நான்.

1484. அத்தமியா ஞான வருட்பெருஞ் சோதியைநன்
கித்தமியே னுள்ளத் திலக்கின்றேன்—பொய்த்தறியா
வுண்மைப் பொருளா முடையான் பதத்தினிலென்
னுண்மயல்போய்க் கண்டே னுரு.

1485. ஆழ்ந்துயர்ந் போத சொரூபவொளி யென்னிதயத்
தெழுந்துயர்ந்து நின்றகன்ற பூரணமாய்—வாய்ந்த
பரமா மோன சிவானுபவக் காட்சியால் [துயிர்
தற்பரமா வாண்டான் பதத்து.

(கொச்சகக் கலிப்பா)

1486. ஏனோ ரெவருமெனக் கேதிலராத் தாமகலத்
தானே யகலாச் சதமாகத் தங்கலுற்றான்;
ஞானோ தயமா நலங்கிளர்செம் பொன்னடிக்கீழ்த்
தானே சொரூபமாந் தன்மை தழைத்ததே.

குறிப்பு :—ஏதிலர் - அன்னியர்.

1487. மனக்கேக மார்ந்த மயர்பிறவி தூரத்
தனிக்கே வல சொருபத் தன்மை தழைத்தேன்.
நினைக்க வொண்ணாத நிரதிசயா னந்தத்
தெனைக்கலந்த வெம்மா னியற்செம் பதத்தே

1488. ஆற்றமே தக்க வருட்சிற் பரவெளியா
வீற்றிருந்தென் னுள்ளத்தில் வெய்ய பிரமாதக்
கூற்றுதைத்த வாண்டவன்சிற் கோலத் திருவடிக்கீழ்
நோற்றிருக்கின் றேன்சொருப நோக்கமெனக் காக்கவே.

1489. அருட்பிரா ணனவென் னம்மா னடிக்கீழ்
விருப்பரு மோன விளைவா லுணர்விற்
சுரப்பதா நின்ற சொருபானு பூதிப்
பரப்பிலே வாழ்க்கைப் பரவசமுற் றேனே.

1490. தாழ்வா மகந்தைச் சதியா லடைந்தபா
ழூழ்வா தனையை யுடற்றியென் னுள்ளத்தில்
வாழ்வாக வாய்த்தவருள் வள்ளற் பிரானடியே
சூழ்வா லியைந்தேன் சொரூபானு பூதியே.

1491. மிண்டுபட்ட மோக வெறிக்களியே யென்னகத்தே
மண்டுசிவ போதவருள் வள்ளற் பிரானடிக்கீழ்
விண்டொழிய வொண்ணு விசுத்த சொரூபமாக்
கண்டுகொண்ட வுண்மை கடவுளியற் சிற்பரமே.

1492. பல்விக் கினஞ்சேர் பதைப்பா மகந்தையறத்
தொல்வித் தகசொருப சாட்சாற்கா ரந்தோய்ந்தேன்
செல்வ மயக்கமறத் தேற்றியே சுத்தவருட்
கல்வியறி வாகக் கலந்தபிரான் பாதத்தே.

குறிப்பு :—விக்கினம் - தீது.

1493. சுவட்டி வருத்துமனத் தாவமற வுள்ளத்
துவட்டா வுவகைதரு மொள்ளியால் பாதச்
சுவட்டிற் சரித்தலாற் றேய்ந்தே னடியேன்
சுவத்தவாழ் வான சொரூபப் பதமே.

1494. கற்பனு பேதங் கழன்றொழியக் கைவல்யச்
சிற்பரமா வுள்ளத்திற் சேர்ந்தபிரான் சேவடியிற்
பொற்புறுமோ றனுபவம் பொங்கலாற் றங்கியது
சொற்பரமன் றன சொருபானு பூதியே.

1495. பேதமனப் பான்மை பிரிந்தொழியத் துன்றுசிவ
போதவருட் பூரணமாப் புந்தியிற்புக் காண்டபிரான்
பாதவியற் சீர்மை பரந்தாம மாகவெனக்
கார்தலுற்றேன் மிக்கபர மான்மானு பூதியே.

1496. சொந்த சொரூபமாத் தொக்கபிரான் கண்ணேறக்கால்
அந்தமில்பே ரின்ப வருள்வெளியாஞ் சிற்பதத்திற்
பந்தமோட் சக்கலக்கம் பாற்றினேன் சொச்சொருபச்
சந்தவனு பூதி சதோதயமாப் பொங்கவே.

1497. முயர்ச்சிசேர் மோக முனைப்பறச்செற் றாண்ட
வியற்சிற் பரமான வெம்மா னடிக்கீழ்த்
துயர்ச்சிகூர் பாசமனச் சூதகலக் கூடிற்
றயர்ச்சியற வுள்ளத் தவிர்சொரூப வாழ்வே.

குறிப்பு :—துயர்ச்சி - துயக்கம் - சோர்வு.

1498. மானுபி மான மயக்கமறப் பொங்குசுப
ஞானானு பூதி நலஞ்சேர் திருவடிக்கீழ்
நானாறு விகற்பமற நானெனென் றுள்ளத்துத்
[illegible]னை சொரூபமாத் தற்பரம்பொங் குற்றதே.

1499. சுத்தவறி வாகத் துலங்குமோ னனுபவத்
துய்த்தெனை நன் காண்ட வுடையான் பதவொளியி
செத்தொழிந்த மோகச் செருக்காற் செழித்தசுட்
புத்தமுத வாழ்வாகப் பொங்கு சொரூபமே.

௨. பிரம்மாநுபூதி

(வெண்பா)

1500. பரமாங் குருரமண பாதார விந்தத்
துரமா வுயிர்க்கு முணர்வால்—வரமா
வளர்சற் பிரம்மபத வாழ்வே யியல்பா
வொளிர்தலுற்ற தென்னு ருயிர்க்கு.

(கொச்சகக் கலிப்பா)

1501. அறிவளித்த வாண்டா னருட்சே வடியின்
செறிவிலுற்ற வுண்மைத் தெளிவா லகத்து
நிறைதலுற்ற மெய்ஞ்ஞான நிட்டானு பூதி
பிரிதலற்ற சுத்த பிரம்மபத வாழ்வே.

1502. ஊறுபா டற்ற வுதாரப் பரசிவமாத்
தேறவென் னுண்மை தெரித்தா னருட்பதத்தில்
வேறுபா டற்ற விசுத்தமோ னனுபவப்
பேறு விளங்கல் பிரம்மானு பூதியே.

1503. மாயமா முப்புடியை மாற்றியென் னுள்ளத்து
ஞேய சொரூபமா நின்ற பிரானடிக்கண்
மாயலா ஞானமனப் பாழுகந்தை. மாபதுரப்
பேய மெனக்குப் பிரம்மானு பூதியே.

குறிப்பு:—அகந்தை மாயலால் எனக் கூட்டுக.
பேயம் - பானம், பருகப்படும் உணவு.

1504. செறிவித் திதயத்திற் சிந்தையை யொன்று
அறியக் கிடைத்த வருட்சே வடியாற்
பிறிவுற் றிடப்பிர மாத வகப்பேய்
நிறைவுற் றுளிர்ந்தது ஞேய பரமே.

1505. உதியா வொடுங்கா வுறுதிசே ருண்மைப்
பதியா விளங்கு பரங்கண்டு கொண்டேன்,
மதியாலே சற்றும் மதிக்கவொண் ணுத் நன்சற்
கதிகாட்டுங் கண்ணுர் சுழல்விளக்கத் தாலே.

குறிப்பு:—கண்ணுர் கழல் - திருவாசகம், அம்மானை 10.

௰. பூமா

(கொச்சகக் கலிப்பா)

1506. ஆர்வதற்கோ தேர்வதற்கோ வன்னியமில் பூமாவாச்
சேர்பதத்தே யென்னைத் தெருட்டி னென் சேவடிக்கீழ்ச்
சார்புகளுக் கெல்லாமோர் சார்பாந் தறைத்தசிவச்
சீர்பழுத்த வாழ்வு செழிக்கத் திளைத்தேனே.

1507. துற்குறியாந் தோன்றியபொய்ச் சூதா மகந்தையாற்
கற்கலுற்ற மற்றனைத்துங் கல்லாமை யாக்கழியத்
துற்குறியா வாண்டசிவ தற்பான்மெய்ஞ் ஞானவருட்
பொற்கழலென் னுள்ளத்திற் பூமாவாப் பொங்கியதே

1508. சன்னகல மாட்சியிலோர் சற்றுங் குறைவின்றி
என்னெறிதா னென்று விதயத் தொளிர்சொரூபன்
பொன்னடியே யான்றவருட் பூமாவா வுள்ளத்து
மன்னியமோ னுடைவ வாழ்வு மலர்ந்ததே.

௪௦. பரம பதம்

(கொச்சகக் கலிப்பா)

1509. கடிய வொறுத்த கடும்பா ழிருட்கார்
விடியவென் னுள்ளம் விளங்கலுற்ற மெய்யன்
அடியே முடியா வணிந்தே னடைந்தேன்
படியிலா வுண்மைப் பரமபத வீடே.

1510. உம்பரா னேனு மொழிந்தார்க்கெம் போல்வாருக்
கெம்பிரா னாக வெளிவந் தருளினான்;
தம்பிரான் பாதச் சரணடைவாற் சஞ்சலமற்
றிம்பரே பெற்றேன்மற் றெம்மையுமா மம்மையே.

1511. உட்டுறவா லென்னை யுளந்தெளிவித் தாண்டபிரான்
சுட்டறிவா மோகச் சுழல்வறந்தற் சுட்டுவித்தான்,
கெட்டொழியா வுண்மைக் கிளரொளிசேர் சுத்தவருட்
பட்ட னடியிற் பரலோகங் கண்டேனே.

௪௧. முத்தி

(குறள்)

1512. பரத்துவத்தா லென்னைப் பணிகொண்டான் பாதத்
திரத்துவத்திற் சேர்ந்தேன் *சிறப்பு.

* சிறப்பு—மோட்சம்.

(வெண்பா)

1513. பெருமா னருட்பதத்திற் பேராசை நாளும்
பெருகுமோ னனுபவம் பெற்றேன்—கருமாய
மோகக் கலக்கமற முத்தி சொரூபமே
யாகக் கலந்த தகத்து.

1514. சுத்தவருட் போதச் சுடரா வொளிர்சொருப
முத்தன் பதமெனக்கு முத்திநிலை—சித்தமலக்
கட்டறுத் தாண்டவருட் கண்மணியின் காட்சியால்
உட்டுறவு பற்றிற் றுணர்வு.

1515. ஒருமையே யென்னை யுடையான் பதத்தில்
இருமைதீர் ஞான வியைபால் – அருமைசேர்
மோன சொருபமா முத்திப் பெரும்பதவாழ்
வூனமற வாய்ந்த துளத்து.

(கொச்சகக் கலிப்பா)

1516. அத்தகநிற் கின்ற வருட்பரமோ னனுபவ
மெய்த்தகவா முத்தி விளங்க விளைதலுற்றேன்,
வித்தகமெய்ஞ் ஞான விளக்கமா வோங்குபர
பத்தியளித் தாண்டருந பாத வொளியிலே.

1517. விண்டருக்க வாத வெறியராற் சற்றேனுங்
காண்டலரு நுட்பவொட்பக் கைவல்ய வுண்மையா
ஆண்டுகொண்ட சுத்த வருட்பிரான் பாதவொளி
மூண்டிதய மாகவென் முத்தியுருக் காட்டியதே.

1518. சண்டந் தனக்கயலா யாதுமில்சிற் பூரணத்து
மாண்டொழிய வென்புன் மயக்க வகந்தையைச்செற்
றுண்டுகொண்ட வம்மா னருட்பதத்தென் னுருயிர்க்கு
மூண்டதுமோ னனுபவ முத்திப் பெருவாழ்வே.

1519. அற்றமற நாயேனை யாண்டுகொண்ட சுத்தவருட்
பெற்றிசே ருண்மைப் பிரான்பதத்து மெய்ஞ்ஞான
வெற்றியாற் பாச விமோசனஞ்சேர் முத்தியுறப்
பெற்றுவாழ் கின்றேன்பே ரின்ப வெளியிலே.

1520. பந்தமுத்திக் கற்பனைக்குப் பற்றுக்கோ டானமயற்
சிந்தமற வேகச் செருக்கறச்செற் றனடிக்கீழ்
விந்தைசே ருண்மை விளக்கமாச் சேர்சொருபச்
சந்தவியல் வாழ்வு சதாமுத்தி யானதே.

1521. தருரமணன் பாதங் குறுகினேன்; மோகத்
தெருமரல்சேர் வெம்பிறவி தீர்ந்தொழிந்தேன்; ஆசைப்
பருவரல்சேர் பாசமறப் பற்றியது சுத்தத்
துரியவியல் பான சொருபமுத்திப் பேறே.

1522. ஆண்டபரஞ் சோதி யடிக்கமலஞ் சூடினேற்
நீண்டவினி யெங்குமென் றும் யாதுமில்லே றின்பமாக்
காண்டகுமெய்ஞ் ஞானவருட் கைவல்ய வாழ்வாக
ஈண்டதுமோ றனுபவ முத்திப் பெருக்கமே.

1523. ஈனச் செருக்கா லெழுந்துநா னென்றுழல்பா
ழூனக் கலக்கமற வுள்ளத் தொளிகிளர்மெய்ஞ்
ஞானப் பிரானடியே நண்ணினே னுக்கியல்பா
மோனப் பயன்மலிந்த முத்தியுணர் வீண்டியதே.

1524. பேத மயக்கமனப் பிழையறச் செற்றவருட்
போத சொரூபப் புமானே புகலாகப்
பாத மடைந்தசிவ பாக்கியத்தா லுள்ளத்து
மோதவுணர் வூறுசுப முத்திநலம் பொங்கியதே.

1525. பந்தமற்ற வுண்மைப் பரத்திற் பரமார்த்த
சொந்த சொரூபந் துலக்கு சுயஞ்சோதி
சந்தமார் பாதவொளிச் சார்பா லிதயத்து
விந்தைசேர் சுத்தவெளி வீடா விளங்கியதே.

1526. சிற்பரவாழ் வாகத் தெளிந்தியல்சுத் தாத்துவிதக்
கற்பகமா வுள்ளங் கலந்தகுரு பாதமே
தற்பரமா மன்னுசிவ சாயுச் சியமுத்தித்
துப்புரவா நீளத் துலங்க விளங்கியதே.

குறிப்பு:—சுத்தாத்துவிதச் சிற்பர வாழ்வாக என்க.

1527. வீடாக வென்றுற் றிலக்க விளங்குவது
தாடாள னுகநான் சாதனையொன் றுற்றுதே
நீடாத வுள்ளமெய்ஞ் ஞேய சொரூபத்தில்
வாடா தெனைவைத்த வள்ளற் குருபதமே.

1528. மோனவியல் வாழ்வு முடித்துக் கொடுத்தவருட்
பானசொரூ பாரியன்மெய்ப் பாதமே பத்திசெயற்
கானதெய்வ மாக வடைந்தவெனக் கத்துவிதத்
தானமா வோங்கு சதாமுத்தி சார்ந்ததே.

1529. விடியா மயக்க வியன்பா ழிருள்செற்
றடியேனை யாண்ட வருட்செம் பதத்தென்
முடியேற வைத்த முகூர்த்தமே ஊன
மிடியா மகந்தையற விட்டுணர்வெய் திற்றே.

1530. தோன்றான வுண்மைத் துலக்கமாத் தானவித்த
பொன்றாத சுத்தவருட் போதானு பூதியால்
ஒன்றாக வென்னை யுளத்தொளிர்பெம் மானடிக்கீழ்
நன்றான முத்தி நலங்கிளரப் பொங்கியதே.

1531. ஈனக் கலிசே ரெளியனேன் யானுதிக்குந்
தானத்தை யாய்வித்த சற்குருசிற் பாதத்து
நானற் றொளிர்சொரூப ஞானானு பூதியால்
மோனப் பரவெளியா முத்திநிலை சார்ந்தேனே.

1532. ஈனப் பசாச வியல்கெடவென் னுள்ளத்துத்
தானற் புதமாகத் தங்கு சதோதயமெய்ஞ்
ஞானப் பிரானா நம்பன் குருரமணன்
மோனப் பதத்திலுற்றேன் முத்திப்பே ரின்பமே.

1533. யானேயென் புன்மைநினைந் தெள்ளியவவ் வென்னை
வானானை மாண்புபெற மாற்றினன் மாணடிக்கீழ் [யருள்
மோனானு பூதிசேர் முத்திப் பெருநலவாழ்
வானா தடியேனுக் கோராங் கடைந்ததே.

1534. ஞானானு பூதி நலம்பெறவென் னுள்ளத்துத்
தானாக வென்னைத் தடுத்தாண்ட சுத்தவருள்
வானான வெம்மான் மலர்ப்பதத்தே விடுகண்டேன்
மானாபி மான மயக்கமுனைப் பற்றேனே.

1535. மீட்டுவா ராததோர் மெய்ந்நெறியென் னுள்ளத்திற்
காட்டினான் ஞானக் கழலடிக்கீழ்ச் சீவமதிச்
சேட்டையறச் சேர்ந்த சிவானுபவ மோனமே
வீட்டியல்வாழ் வாக விளங்கக்காண் கின்றேனே.

1536 தேக்கமா வுள்ளசிவச் சிற்பரத்தே கூரியதன்
னேக்கத்தா லென்னறிவை நூக்கினான் சேவடிக்கீழ்
ஆக்கமா மோன வருள்வெளியாக் கைவல்ய
மோக்க வுணர்வு முகக்கலுற்ற துள்ளமே.

கஉ. சிவசாட்சாத்காரம்

(குறள்)

1537. அறிவாக வாண்டவென் னையா னடியிற்
செறிவா லடைந்தேன் சிவம்.

1538. அணுக்கனை வாண்டா னருட்சிற் பதத்தில்
இணக்கமா யிற்றென் னியல்.

(வெண்பா)

1539. உள்ளதே ஞானமென வோதினன் செம்பதத்திற்
கள்ளமன முற்றுங் கரக்கவே—தெள்ளத்
தெளிந்த சிவானுபவ சித்திபெற்று மோன
மளைந்தே னறிவா லகத்து.

1540. அற்றமா மோகத் தலைந்தவென் னுருயிர்க்குத்
தெற்றத் தெளிந்த சிவமாகச்—சற்றும்
சலியா மலையான சற்குருதன் பாத
நிலையே யுலையா நிலை.

1541. நமோரம ணையவென ஞான சொரூப
சுமேருவாந் தெய்வபதந் தோய்ந்தே—தமோரகித
மாகவுளம் பொங்கு மனந்த சிவாம்புதியாம்
போகவளம் பெற்றேன் பொலிந்து.

(கொச்சகக் கலிப்பா)

1542. தாரகமா வென்னைத் தடுத்தாண்டு கொண்டவன்மெய்ச்
சீரணவு சுத்தவருட் சிற்பதத்தில் யானெனும்பொய்க்
காரணவு மோகவகங் காரப் பசுத்துவங்கெட்
டாரமுத வாழ்வா வளைந்தேன் சிவத்துவமே.

1543. நீதியாற் றன்னை நினைந்தறியே னுள்ளத்திற்
றீதிலாத் தன்சொருபச் சீர்மைதெரிந் தாண்டபிரான்
பாதமே சற்கதியாப் பற்றலா லுற்றவனு
பூதிசேர் வாழ்வுசிவ பூரணமெய்த் தன்மைத்தே.

1544. அங்குரு வாண்ட வருட்பிரான் சேவடிக்கீழ்த்
தங்கலா லுள்ளத்திற் சஞ்சலமற் றேய்ந்தொழியப்
பொங்கியது சுத்தசிவ பூரணமெய்த் தன்மையுணர்
வங்குமிங்கு மோடி யலைந்தவகப் பேயெய்த்தே.

1545. கற்பனை மோகவகங் காரக் களியனேன்
சிற்பரவாழ் வான சிவானுபவம் பெற்றொளிரத்
துப்பறிவா லுண்மை துலக்கியாண் டானடியின்
கற்பகத்தன் னிழலெங் கெஞ்சுங் கலந்ததே.

1546. கள்ள மனைமையப்பாழ்ங் கற்பனையற் றேயவுளத்
கொள்ளியதோ ருண்மை யுணர்வாக வுற்றபிரான்
உள்ளமே யாக வொளிர்சொருபச் செம்பதத்திற்
றெள்ளியது சுத்த சிவானுபவ மோனமே.

1547. வெள்ளமா வுள்ளவருள் வித்தகனச் சிற்பதமென்
னுள்ளமே யாக வுணர்ந்தியம்பெம் மானடிக்கீழ்க்
கள்ளவகங் காரமனக் கற்பனை துக்கமறத்
தெள்ளமுத மான சிவானுபவந் தேக்கியதே.

1548. காரா ணவங்கழலக் கண்டேனைக் காலூடுருவு
சீரானன் மோனவருட் கோமனச்செய் பாதத்திற்
போராது வாழும் பிரஞ்ஞையால் உள்ளத்திற்
சீரான சுத்த சிவானுபவஞ் சேர்ந்ததே.

1549. தன்மயமா வென்னைத் தலையளித்த வாண்டவன்செம்
பொன்மயமாந் தாளை புகலாகப் பற்றினேற்
கின்மையோ வன்மையோ யாதுமற வெல்லாமோர்
சின்மயமாத் துன்று சிவானுபவஞ் சேர்ந்ததே.

1550. இம்பரே யானறச்செற் றென்னையினி தாண்டுகொண்ட
வெம்பிரா னான விறைவனருட் சேவடிக்கீழ்
உம்பரா ருங்கா ணொண்ணாவுலக வாழ்வுபெற்றேன்
செம்பரமா வுள்ள சிவானுபவம் பொங்கவே.

1551. சுத்த வருள்வெளி யாத் தூன்று சுவானுபவப்
புத்தமுத வாழ்வுசிவ போகமாப் பொங்கியது
மத்தனே னுள்ளத்தில் வாலறிவாப் புக்குறையும்
முத்த சொரூபகுரு மூர்த்திமோ னப்பதத்தே.

1552. முயல்சே ரகந்தை முனைப்பற்று ருள்ளத்
தியல்பாத் தெளிந்துவிளங் கின்பவுணர் வூற்றுப்
பயில்சிற் பரமாம் பகவன் பதத்திற்
செயலற் றொழிந்தேன் சிவசுகமுற் றேனே.

1553. விறப்புற்ற மாயமனோ வேகமற விட்டுச்
சிறப்புற்ற சாந்தி செழிக்கவென் னுள்ளத்
தறப்புணர்ந்த வாண்டா னருட்சிற் பதத்திற்
பிறப்பிறப்பற் றோங்குசிவப் பேறுபெற் றேனே.

1554. வஞ்சம் பொதிந்த மயக்கவகப் பாழினகன்
றுஞ்சிடவென் னுள்ளத் தொளிவெளியா யூடுருவி
விஞ்சையா லாண்டவருள் வித்தகச்சி மானடிக்கீழ்ச்
செஞ்செவே வாழ்வு சிவோகமாச் சேர்ந்தேனே.

1555. தீர்த்தங் களுக்கெல்லாந் தீர்த்தமா வுள்ளபெருந்
தீர்த்தங் கரரமண தேவன் திருப்பாதத்
தீர்த்தமா மிக்கபெருந் தீர்த்தமா டப்பெற்றுத்
தீர்த்தமே யாகத் தெளிந்ததென் சித்தமே.

குறிப்பு :—ஆசிரியர் தம்மனுபவங் கூறுவார் போலக் குறிப்பாலே குருபாத சிந்தனைச் சிறப்புக் கூறியவாறும்.

1556. நிறைவிலே யென்னை நிறுவினான் பாத
வுறவிலே யோகவுணர் வுள்ளூறப் பெற்றேன்
அறிவிலா யோக வகந்தைமதி வெள்கி
மறையவே சுத்தசிவ மாட்சியுற் றேனே.

1557. இளிவரல்சேர் மோகக்கா ரென்றுமிலாத் தூங்க
வொளிவெளியாத் துன்று முடையான் பதந்நிற்
களிவளர்ஞா னுபவக் கைவல்யங் கண்டேன்
தெளிவுசால் சுத்தசிவச் சீர்மைபெற் றேனே.

1558. வீடார விளங்கு விசுத்த சொரூபவருட்
பீடார்ந்த மோனம் பெருகவளித் தானடிக்கீழ்
வாடாத வாழ்க்கை வளம்பட நான் கண்டுகொண்டேன்
சேடார்ந்த துங்க சிவானந்தம் பொங்கவே.

1559. மதர்க்கலுற்ற மோக மதத்தருக்கர் கூறும்
குதர்க்கவா தங்கள் குலைந்திடவென் னுள்ளத்
ததர்க்கமா வார்ந்த வருட்பெருஞ் சோதிப்
பதக்கணே வாழப் படைத்தேன் சிவமே.

குறிப்பு :—அதர்க்கம் - தர்க்கத்தாலே சாதிக்க வேண்டாதது; தர்க்கத்தாலே மட்டும் சாதிக்க வொண்ணாததுமாம். பிரத்தியட்சத்திலும் பிரத்தியட்சமாகப் பிறங்கு மனுபவத்தால், உள்ளத் ததர்க்கமா வார்ந்த வருட்பெருஞ் சோதிப் பதம் என்றது.

"ஏதுக்க ளாலு மெடுத்தமொழி யாலுமிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள் சோதி"

என்னும் திருஞான சம்பந்தர் தேவாரப் பகுதியோ டொப்பிட்டுணர வேண்டுவதாம்.

சிவம் - நன்மை, பாக்கியம்.

1560. மோத மகிழ்ச்சிகூர் மோனஞா னுபவஞ்
சார்தலால் வாழ்வு சதாசிவமாப் பொங்கவகம்,
பேதமற்ற சுத்தப் பிரம்ம சொரூபவியற்
பாதமே யுண்மைப் பரகதியா வுய்ந்தேனே.

1561. பரம சிவத்திற் பயின்றெழுகு சித்தம்
பரமசிவத் தன்மையே பற்றலான் மோனப்
பரமசிவ வாழ்வகத்திற் பற்றியது சுத்தப்
பரமசிவச் செம்பதத்திற் பாசமறக் கெட்டே.

1562. கொள்ளலுற்ற மோகக் கொடும்பாழ் வறுமையற
நல்லசிவ ஞானநிதி நல்கினன் வெல்கழற்கீழ்த்
தொல்லைசேர் வெம்பிறவித் துன்பகல்பே ரின்பமாய்
மல்லலுற்ற சாந்தவியல் வாழ்வுசிவ மானதே.

1563. பாச வலைக்குட் படாதடியேன் சுத்தசிவ
நேசமெய் யன்புணர்வென் னெஞ்சந் தருளினன்;
தேசன் சிவலோகச் செம்பிரான் சேவடியில்
வாசமெனக் கெய்தலால் வாழ்வுசிவ மானதே.

1564. ஆதவனா வாண்டவரு ளங்குருவன் சேவடியில்
யாதுமெனக் கூன வெழுச்சியின் றேவொழிய
ஓதுணர்வா மோன முழுமுதல்வாழ் வாயினது
வேதமுடி யான விசுத்தப் பரசிவமே.

குறிப்பு:—ஆதவன் - அறிவுருவான அமலான்ம சூரியன்; பரசிவம் எனினும் பரப்பிரம்மம் எனினும் ஒக்கும்.

1565. சுவர்சமாத் துன்று சொரூபமெய்ஞ் ஞானத்
தவத்தியலென் னுள்ளந் தழைத்தொளிர்வால், யாது
மவச்செயலின் றாக வருள்வெளியாப் பொங்கு
சிவச்செம் பதத்திற் சிறக்கலுற் றேனே.

1566 சும்மா விருப்பே சொரூபானு பூதியா
அம்மா னகந்தெளியக் காட்டிக் கொடுத்தவருட்
செம்மாண் பதமே சிவபதமாய் நானெனும்பாழ்
வெம்மாய மோக விடாய்தணியத் தங்கியதே.

1567. வஞ்சமனக் கற்பனையின் மாழ்காது சுத்தவருள்
விஞ்சையா லுண்மை விளக்கமுறத் தேற்றினன்
செஞ்சரண நீழல் சிவச்செம் பதவாழ்வாத்
தஞ்சனை யுய்ந்தேன் சதாசிவமோ னந்தெளிந்தே.

1568. பாசத்தை வெட்டவருட் பட்டடைவா ளீந்தவிறை
நேசத்தல் வாழ்வு நிரம்பலுற் றேன்; யாதிலுமோ
ராசந்தி யில்லேன்; அகந்தைமுனைப் பற்றொளிர்மெய்த்
தேசத் திருப்பதத்திற் சேர்ந்தேன் சிவத்துவமே.

1569. ஈனமற்ற வுண்மை யியல்விளங்கக் காட்டியமெய்ஞ்
ஞான சொருபகுரு நம்பன் பதத்திலருள்
வானமாத் துன்றுபர வாழ்வலர்மோ ஞனுபவப்
போனகமே சத்தசிவ போகமாப் பொங்கியதே.

1570. புரணமாத் துன்றுசிவ போகவாழ் வந்தக்
கரணத் தியல்பாக் கலந்து விளங்க
மரணக் கலக்கமற மாற்றினன் கண்ணுர்
சரணத்திற் சாசுவதச் சார்புகண் டேனே.

குறிப்பு :—வாழ்வு விளங்கச் சார்புகண்டேன் என வினை முடிவுசெய்க. கண்ணுர் சரணம் - கண்ணுர் கழல் (திருவாசகம்).

1571. உண்மைத் தவவொளியா லுள்ளங் கிளர்சொருப
வண்மைசே ராண்டான் மலர்ச்செம் பதநிழலிற்
றண்மைசேர் சாந்தி சதாசிவசற் போகமா
நுண்மைசே ரன்புணர்வு நோக்கமகம் பற்றியதே.

1572. இரண்டறவென் னுள்ளத் தியற்சிற் பரமாத்
திரண்டொளிர்பே ரின்பச் செழும்பிரான் ருட்கீ
ழிருந்துவாழ் கின்றேன் எதன்கணுமோர் மோகம்
பொருந்துகிலேன் சுத்தசிவ போகமுண்கின் றேனே.

கரு. சற்கதி

(குறள்)

1573. தொண்டுகொண் டாண்ட சொருப குருபதத்திற்
கண்டுகொண் டேன்சற் கதி.

(வெண்பா)

1574. பொய்காட்டு மோகப் புலக்கலக்கம் போயொழிய
மெய்காட்டு ஞான விழியாளன்—கைகாட்டி
யாற்கீ ழமர்ந்தா னருள்வடிவாங் கோரமணன்
காற்கீழே கண்டேன் கதி.

(கொச்சகக் கலிப்பா)

1575. ஓர்த்தோர்த் துளத்தைநோக் குண்மைநோக் காலுலகை
நீத்தா ரிதயத்து நீக்கமில்பே ரின்பவருட்
கூத்தாடுங் கோமான் குகேசன் குருரமணன்
மாத்தாளே சற்கதியா மாண்புறவாழ் கின்றேமே.

1576. தன்னைத் தவிரச் சரணெனக்கு வேறில்லை
யென்னத் தெரிந்தாங் கிதயத் தியற்பரமாத்
துன்னுசற் போத சொரூபப் பிரானருட்செம்
பொன்னடியே புக்கிலாப் புக்குவாழ் கின்றேமே

௪௭. கிருத கிருத்தியம்

(வெண்பா)

1577. சும்மா விருக்கவே தோய்ந்த தனுபூதி
யெம்மான் பதத்துணைநான் பேணலால்—அம்மா
இயற்றக் கடவ வியற்றிமுடித் துள்ளம்
முயற்றியற்ற மோனநிலை மூண்டு.

1578. ஆண்டவன் பாத மடைதலே யாருயிருக்
கீண்டலருஞ் செய்தவப்பே றென்பரால்—ஆண்ட
முனிவரனுந் தெய்வ முழுமுதலைச் சார்ந்தேன்
இனிநான் செயக்கடவ தென்.

1579. சிந்தை கவர்ந்தவருட் செல்வன் சிவசொருபன்
புந்திக் கொளிதருசற் போதமயன்—அந்தமில்சீ
ரம்மா னமுத சொரூப வருட்பதத்திற்
சும்மா விருத்தல் சுகம்.

(கொச்சகக் கலிப்பா)

1580. பேய்முழுவதைப்பற் றேயப் பிரான்பதத்தில் வாழ்தலார்
சேமநன வானவருட் சீர்மை துலங்கவகத்
தோமெனுமவ் வொண்பொருட்பே றுற்றேன்; ஒருசேரக்
காமனையெல் லாமினிதாக் கைகூடி யதாங்கே.

௬௫. தன்னுண்மை யறிதல்

(வெண்பா)

1581. மற்றொரு பற்றும் மருவா வொருமனத்தா
னுற்றொருமு மன்ப ருணர்வூடு—முற்ற
வொருதன் மயமா வொளிர்மெய்ப் பதமே
*யொருதன்மை நல்கிற் றெனக்கு.

*ஒருதன்மை—"தன்மையறின் முன்னிலை படர்க்கை
முடிவுற்று ஒன்றுயொளிருந் தன்மை."
(உள்ளது நாற்பது-14)

1582. உறுதி யுணர்த்து முடையான் பதமே
யுறுதியாப் பற்று முணர்வால்—உறுதிசேர்
மோனப் பதமே முழுமுதலாப் பொங்குமதிஷ்
டானமாந் தன்னியல்சார்ந் தேன்.

குறிப்பு:—மோனப் பதமே முழுமுதலாக விளங்கப்
பெறுகின்ற உறுதிசேர் அதிஷ்டானமான
தன்னுண்மை நிலை.

(கொச்சகக் கலிப்பா)

1583. மத்தமனக் கற்பனைசேர் மாயவகப் பாழ்கரக்க
இத்தமியே னுள்ளத் தெழுந்தான் பரஞ்சோதி;
சுத்தவருட் பார சொரூபப் பிரானடியில்
வித்தகவாழ் வாக விளங்கிற்றென் னுண்மையே.

1584. மானுபி மான மயக்கவகப் பேயகன்று
தானுன சுத்தசிவத் தற்பரமெய் வாழ்வுபெற
மோனுனு பூதி முடித்துக் கொடுத்தபர
ஞானு ரியன்பதத்து நண்ணியதென் னுண்மையே.

1585. என்னிலிருந் தென்னை யியற்பரமாக் காண்டலுற்ற
தன்னிலிருந் தென்னையொரு தன்மயமாக் காண்டலுற்
என்னிலே யான்போலத் தன்னிலே தான்போலத் [றேன்
துன்னுமே கான்ம சொருபகுரு மாண்பதத்தே.

௬௬. சிறப்புற்றேன்

(குறள்)

1586. அறிவனை வாண்டா னருட்சிற் பதத்திற்
செறிவதா லார்ந்தேன் சிறப்பு.

(கொச்சகக் கலிப்பா)

1587. சுவர்ச்சமா வோங்கு துரிய சொரூபன்
சுவச்சமா மோனத் துலக்கங் கிளர்வால்
அவிச்சை யனுதியே யற்ற விசுத்த
சிவச்செம் பதத்திற் சிறக்கலுற் றேனே.

குறிப்பு:—சுவர்ச்சம் - மங்கலவொளி; கிளர்வாற் சிறக்க லுற்றேன் என வியையும்.

1588. கொடியனே னை குடில மனப்புன்
மிடியனேன் மிக்க விசுத்தப் பரமா
அடியரோ டென்னை யகப்பட வாண்ட
வுடையா னடிக்கீ ழொளிர்தலுற் றேனே.

1589. உண்டுண் டுறங்கிநா னுழ்ந்தொழியா நங்கணுற்
கண்டுகொண்டா னென்னைக் கருணைக் கிலக்காகத்
தொண்டுகொண் டாண்ட துரியப் பிரான்பதத்து
மண்டியின் சொந்த மனேதீத மாட்சியே.

1590. கருதன் மறத்தல் கலந்த மனப்பாழ்ங்
கருவ மயக்கங் கழன்றிட வுள்ளத்
துருவுகண் ணேக்கா லொளிர்மெய்த் துரியப்
பரமன் பதத்திற் பவிசுபெற் றேனே.

1591. ஒன்றுக்கும் பற்று வுடற்சடத்தை மெய்ஞ்ஞான
நன்றிக்கு வித்தான நல்லொழுக்கத் திட்பத்தால்
ஒன்றேக்க மோனவுணர் வொளிமலித் தாண்டபிரான்
வென்றிக் கழற்கண் விளங்கிய தென் மெய்ச்சிறப்பே.

குறிப்பு:—உடற்சடம் - சடவுடல் வடிவாகச் சரிக்கும் உயிர்; ஒன்றேக்க - ஒருங்கோக்க.

1592. விரிஞ்சாதி தெய்வ விபுதர்தம் மாலும்
தெரிஞ்சோத வொண்ணுத் திருவருட்சீர் சான்ற
பரஞ்சோதி யான பகவன் பதத்திற்
சிரஞ்சேர் தவத்தாற் சிறத்தலுற் றேனே.

கஎ. பேரின்பம்.

(குறள்)

1593. சாந்திப் பதமாகச் சார்ந்ததுசற் போதவருட்
காந்தமா வாண்டான் கழல்.

1594. பரிசுத்த மோனவருட் பார்ப்பான் பதச்சீர்
உருசித்த லூற்ற துணர்வு.

1595. சிக்கெனவென் னுள்ளஞ் சிறக்க வமர்ந்தவருட்
சொக்கனடி வாழ்வே சுகம்.

1596. அன்புவைத் தாண்ட வருட்பிரான் ருளிலெனக்
கின்ப வுணர்வூற் றெழும்.

1597. இன்பவுணர் வூற்று வெழுந்ததகத் தாண்டவன்கூ
ரன்புமய மான வருள்.

1598. ஆண்டவன்பா தத்தி லழுந்தலுற்ற சிந்தையால்
ஈண்டலுற்ற தின்ப வியல்.

1599. ஆண்டவன்பா தத்தி லருட்கடல்கண் டாடலால்
ஈண்டினன்பே ரின்ப வியல்.

1600. அன்பா லடியேனை யாண்டபிரான் சேவடிக்கீ
ழின்பா வியைந்தே னினிது.

(வெண்பா)

1601. நலமன்றி யில்லாமெய்ஞ் ஞான குரு பாதத்
தலமென்னும் புத்தி யடைந்தோம்—இலமென்னுஞ்
சிந்தா குலந்தவிரச் சேர்ந்ததருட் பேரின்ப
மந்தா கினியெம் மனத்து.

1602. தெள்ளத் தெளிந்த சிவானுபவஞ் சேரவெனக்
கள்ளித் தெளித்த வறிவுரையால்—உள்ளத்
தொளிபெருக்கி யாண்ட வுடையான் பதத்திற்
களிபெருக்கி வாழுங் கருத்து.

1603. கவற்கடலின் மூழ்கிக் கலங்கியநான் மோன
சிவக்கடலின் மூழ்கித் திளைத்தேன்—சுவர்க்கசுகங்
கீழாக மேலாக் கிளர்சொரூபப் பேரின்பக்
கேழோங் கிறைவனடிக் கீழ்.

1604. கதியாக வாழ்விற் கலந்தபிரா னின்ப
நிதியாக வெங்கு நிறைந்தான்—பதியான
தன்பதமே தக்க சதாகதியா வுள்ளபெரு
நன்பதமா நானறிந் தேன்.

1605. அறிவொளிசே ரற்புதமோ னனுபவ மல்லாற்
பிறவுணர்ச்சி யெல்லாம் பிரிய—நிறைவெளியா
நிற்கவெனைக் கண்ட நிஜானந்த மோனவருட்
சொக்கனடி வாழ்வே சுகம்.

1606. இலக்கணங்கட் கெல்லா மிலக்கியமாய் மோன
நிலைக்களனு வென்னுளுறை நித்தன்—கலக்கமில்சற்
போதவருட் பூரணமாப் பொங்குபதத் தன்னிழலே
மேதகுமெய்ப் பேரின்ப வீடு.

1607. கூறவொணு மோனக் குலாச்சேர் குருபதத்து
டாறவெனக் கெல்லா வவாவுமுற்றத்—தேறத்
தெளிந்தசிவ ஞானத் திருவருளே யுள்ளந்
தளைந்தியல்பே ரின்ப வமுது.

(கொச்சகக் கலிப்பா)

1608. தந்தொயசித் தத்துவத்தின் சாட்சாற்கா ரப்பொருளா
நித்தமியல் பாகவென் னெஞ்சத் தொளிர்சொரூபன்
அத்தமியா மோன வருட்பதவாழ் வாலெனக்குப்
புத்தமுத போகமாப் பொங்கியது புத்தியே.

1609. சுர்த்தீர்த் திதயத் தெனைச்சேர்த் தருளியமெய்த்
தீர்த்தன் குருரமணச் சிற்பரன்சீ பாதத்திற்
கூர்த்தமெய் யன்புணர்வாற் கூடியபே ரின்பநிலை
வார்த்தையாற் சற்றும் வழுத்தவொணு மாட்சிந்தே.

1610. எம்பிரா னுவென் னிதயத்தில் வீற்றிருக்குந்
நம்பிரான் பாதத் தலத்தே யுறைகின்றேன்;
உம்பரார் காணவவ் வுத்தமன்பா தாரவிந்தத்
தன்பனு வாழ்வடியேற் கானந்த மாயிற்றே.

1611. விடுபே றுக விளங்கலுற்ற சுத்தவருட்
பீடுசேர் மோனப் பிரான்பதத்தில், யானெனதென்
றுடுபோ கப்பா மூகட்பேய் முனைப்பறக்கெட்
டீடில்பே ரின்ப வியல்வாழ் வியைந்ததே.

1612. அறிவான வம்மா னடியிணைக்கீழ் மோன
நிறைவான வுண்மை நிலைபெற்றேன்; முற்றச்
செறிவான சுத்த சிவச்செம் பதத்திற்
பிறிவில்பே ரின்பப் பெருவாழ்வுற் றேனே.

1613. பாழைக் கடந்தவருட் பாரப் பரவெளியாச்
சூழத் துலங்கு சொருபானு பூதியா
ஏழைத் தொழும்பனேற் கேய்ந்ததுபே ரின்பவியல்
வாழ்வு வசீகரமா வள்ளற் பிரான்பதத்தே.

1614 விஞ்சும் பரமார்த்த வித்தகத்துக் கெத்தரத்தேன்
வஞ்சக் கனமயக்க வாழ்வினின்று சுத்தவருள்
விஞ்சையா லென்னை விழிப்பித்தான் மெய்ப்பதத்திற்
பஞ்சையே னுற்றப் படைத்தேன் பரசுகமே.

1615. இருத்தியே யென்னை யிதயத்துத்தலத்துத்
திருத்தமா வாண்டவருட் சிற்பிரான் பாதத்
தருத்திகூர் வுற்றேற் கயலவற்றின் முற்ற
விரத்தியுண் டாக விளைந்ததுபே ரின்பே.

1616. பேது வகுந்தைமனப் பேய்க்கலக்கக் கற்பனைதீர்
போதமா வுள்ளம் பொலிய விளங்குகுரு
பாதமே முத்திப் பதமாப் புலந்தெளிந்தேற்
கேதமொன்று மில்லைபே ரின்ப மலாயலே.

1617. புத்திக் குமுதமாப் பொங்கு சொருபவருள்
வித்தைக் கதிபதியா மேவுங் குருரமணன்
சித்திக் கலக்கமறத் தேற்றுந் திருவடியிற்
பத்தியுணர் வூறப் பழுத்ததுபே ரின்பமே.

1618. உறங்கலுற்ற வென்னை யுணர்த்தி யுளத்திற்
பிறங்குசிவ போதவருட் பேறளித்த வாண்டான்
நிறங்கிளர்சீ பாத நிழற்கணே முத்தித்
திறங்கிளர்பே ரின்பந் திளைக்கலுற் றேனே.

1619. அத்துவித மோனஞா னன்ம சொருபவருட்
புத்தமுத வாழ்வு புதுக்கினன் சிற்பதத்திற்
செத்தொழிந்த மோகச் செருக்காற் செழித்ததுசற்
பத்தியுணர் வான பராவமுத போகமே.

1620. துள்ளு மகப்பேய்த் துடிப்பான நானெனும்பொய்க்
கள்ளமகற் றுங்கருணைக் கண்ணேக்காற் பேரின்ப
வெள்ளமா வென்னுளத்தில் வீற்றிருக் கின்றபெரு
வள்ளலடித் தாமரையில் வண்டா யதர்த்தேனே.

1621. உமையே றுயிரை யுணங்காது நோக்கி
மழையாகப் பெய்யருளால் வாழ்வித்த பெம்மான்
அழகியசெம் பொன்னடிக்கீ ழார்வமெழப் பொங்கப்
பழுநியபே ரின்பப் பயன்படைத் தேனே.

1622. வெருட்கலக்க மான வியாகுலந் தீர
அருட்கொலுவா வுள்ளத் தரசிருந்தே மோனப்
பொருட்கலையா லென்னைப் புதுக்கினன் றாட்கீ
ழிருக்கலுற்றேன் வாழ்வுபே ரின்பக் கடலே.

1623. வாடியுணங் குற்ற மனக்கவலை பேர்ந்தொழிய
நீடியபே ரின்ப நிலைக்களநான் கண்டுகொண்டேன்
மூடியமோ கப்பாழ் முனைப்பறவென் னுள்ளத்திற்
கூடியமெய்ஞ் ஞானக் கொழுந்தாங் குருபதத்தே.

1624. உய்யும் படியென் னுயிருக் குறுதியாச்
செய்யும் பரிசொன்றுந் தேர்ந்தியற்ற மாட்டாசேர்
கையன் பதத்தி லருள்விளக்கம் பொங்குசுப
மெய்யன் புணர்வால் விளைந்ததுபே ரின்பமே.

1625. கதந்தருபாழ் வேகக் கடுப்பான நச்சு
மதந்தருபொய்ம் மாயவகச் சூர்மார் பறச்செற்
றதெந்துவென் றுண்ட வருட்பிரான் பாதத்
திதந்தருபே ரின்ப வியற்பதங்கண் டேனே.

1626. உரப்படுமெய்ஞ் ஞான வொளிசேர் சொரூப
வருட்பெருவாழ் வானவென் னம்மா னடிக்கீ
ழிருப்பதனு வுள்ளம்பே ரின்பவெளி யாக
விருப்பமெழா மோன வியனிலையிஞ் சிற்றே.

௬௮. ஞானம்

(குறள்)

1627. அளக்க வொணாத வருட்பரன்சீ பாத
வொளிக்கணே கூடிற் றுணர்வு.

1628. எளியார்க் கிரங்கு மிறைவனருட் பாத
வொளியாற் கிளர்ந்த துணர்வு.

1629. பாத வொளியே பரமார்த்த வுண்மையைஞா
னதைவனுக் காட்டிற் றகத்து.

1630. ஒருவாத மின்றியுளத் தோர்த்துணர்ந்தே னுண்மை
குருபாதங் கூடலால் யான்.

(வெண்பா)

1631. பெருந்தக்க மோனப் பிரான ருட் செந்தே
னருந்திக் கிளர்வுற்ற வாற்றல்—பொருந்துக்க
மானமயல் வாழ்க்கை யகன்றடிக்கீ ழான்றசிவ
ஞானமயம் பெற்றதுவாழ் நாள்.

1632. வெல்லவொண்ணு மோன விறல்வெற்றி யுற்றவருள்
வல்லமையா லாண்டான் மலர்ப்பதத்தே—நல்லபெருந்
தொல்லியல்பா வுள்ள சொரூபசிவ ஞானசித்தி
மல்கியது மன்ற மனத்து.

குறிப்பு:—ஆண்டான் மலர்ப் பதம் - ஆண்டவனுடைய மலர்ப்பதம் என ஆறும் வேற்றுமைத் தொகை.

1633. உய்வுள்ளித் தன்னை யுபாசிப்பா ருள்ளொளிருங்
கைவல்ய ஞானக் கழலாலே—கைவிள்ளச்
சற்று மொணுத சதாசிவஞா னுனுபவப்
பெற்றியுறப் பெற்றேன் பெரிது.

1634. அறிவேநா னுகவகத் தாண்டகுரு பாத
வுறவா லுயிர்க்கு முழையேன்—பிறியா
வருட்பதத்திற் செம்மாந் தனுபவமெய்ஞ் ஞானப்
பருப்பதத்தில் வாழ்வுபடைத் தேன்.

1635. பிழைபடா வாழ்க்கை பெறுதலாற் சித்தங்
குழைவுபடாத் திட்பமீக் கூர்ந்தேன்—பழிபடராப்
பண்புற்ற வாழ்க்கை பரன்பதத்திற் பற்றுமனம்
மண்புக்கு மாய்வதன்று மன்.

1636. ஊனவுடற் பற்றுன வூத்தைமல வாழ்வூடு
நானமுழந்திப் பாழா நசித்தேற்கு—ஞான
வருட்பேற்று வாழ்க்கை யளித்தபிரான் பாதத்
தொருப்பாட் டுணர்வே யுயிர்ப்பு.

(கொச்சகக் கலிப்பா)

1637. கற்பனையா தொன்றுங் கலவாத சுத்தவருட்
சிற்பரமா வுள்ளசிவச் செம்பதத்திற் சிந்தைநீ
ரற்புதவாழ் வானமோ னனுபவத் தாலறிவிற்
பொற்புறுவே தாந்தப் பொருள்விளங்க லுற்றதே.

1638. மண்ணி லுடல்வடிவா மட்காது நானுரென்
றுண்ணுணுகித் தேரு முசாவா லகந்தையறத்
திண்ணமா வாண்டவருட் சிற்பரன்சீ பாதத்து
நண்ணியது சொச்சொருப ஞானனு பூதியே.

1639. வாரா வரத்தாக வந்தென் னிதயத்திற்
ஈரா ணவப்பாழ்ங் கலிகுலையக் கண்டவருட்
சீராளன் சேவடியிற் சேர்ந்தஞா னனுபவப்
பேராழி யாடிப் பெரும்பதவாழ் வுற்றேனே.

1640. நாடற் குரியமெய்ஞ் ஞானப் பிரானடியை
மூடக் கடையனேன் முற்றவத்தா லிப்பொழுது
கூடக் கிடைத்தேன் குலாச்சேர்மெய்ஞ் ஞானமுற்றோன்
வீடிற் றுடலா வெறித்தவகப் பேய்முனைப்பே.

1641. கருமசம் பந்தக் கடைப்பட் டொழிந்தேன்
பரமசிவ ஞானவருட் பாக்கியம் பெற்றேன்,
ஒருவவொணு ஞான வுருவான மோனப்
பெருமனடி தஞ்சமாப் பேணியவா றதே.

1642. மைப்புறுபொய் மோக மனத்தால் வறியனை
அப்பனடிச் சார்ந்த வடியேற் கவலமற
மெய்ப்புலவோர் சிந்தை விரும்பித் நினைக்குமுன்னைச்
செப்பமுறு ஞானவருட் செல்வஞ் செழித்ததே.

1643. எல்லோர் தமக்கு மியல்பா விதயத்துத்
தொல்லை யமர்ந்த சொரூபனருட் சிற்பதத்தில்
பொல்லா மயக்கமனப் பூசலறப் பொங்கியது
நல்லாங் கியல்சாந்த ஞானனு பூதியே.

1644. எண்ணப் படாத வியற்சிற் பரசொருப
வண்ணப் பிரான்பதத்தில் வைகலுற்றே ஞருயிருக்
குண்ணிணக் குருகு முபசாந்த போகமா
நண்ணிற்று நல்லசிவ ஞானனு பூதியே.

1645. நோல்லாங்கு தன்னைத் தொழாதவகப் பேயேனை
வல்லாங் கடிக்கு வணக்கிக்கா ராணவப்பாழ்ம்
பொல்லாங் கடர்த்தவருட் பூரணன்சிற் பாதத்து
நல்லாங் கணைந்ததுமெய்ஞ் ஞானனு பூதியே.

1646. அன்புணர்வில் லாத வகப்பே யடியனேற்
கின்பவுணர் வூற்று விதயத் தியல்சொருபன்
றன்பதத்திற் சற்றுந் தணவா துறைதலால்
அன்புசிவ மானஞா னனுபவந் துன்றியதே.

1647. மூசுங்கா ராவரண மோகமறக் காண்குறுமெய்த்
தேசன் சிவசொருபச் சிட்டனருட் சேவடியிற்
பாசங் கழன்றொளிர்சற் பத்தியாற் புத்தியிலோ
ராசங்கை யற்றஞா னனுபவம் பற்றியதே.

1648. ஊனப் பசையொழித்த வொள்ளியோன் சுத்தவருள்
வானப் பதத்தில் வளம்பொங்க மல்கியது
நானற்ற மோனமெய்ஞ் ஞானனு பூதிநிலை
தீனச் செருக்கனைச் சேர்ந்த வடியேற்கே.

1649. தானாக வென்னைத் தடுத்தாண்ட சுத்தவருள்
வானான வெம்பிரான் மாணடிக்கீழ் யானெனும்பொய்ம்
மானாபி மான மயக்கமறக் கேவலமெய்ஞ்
ஞானனு பூதி நலம்பெறவாழ் கின்றேனே.

1650. மயக்கமுற் றேங்கிநான் மாயக் கனவிற்
கயக்கமுற்ற பிழையறக் கண்டேனோக்கா லுட்புக்
குயிர்க்குயிரா வாண்ட வுடையான் பதத்தில்
அயர்க்கவொண்ணா வுண்மை யறிவுதெளிந் தேனே.

1651. கன்றி யெழுந்தவகங் காரமறக் கூர்விழியால்
என்றுமொன் றுன வியல்விளங்க வென்னகத்துத்
துன்றுமெய்ஞ் ஞான சொரூபனருட் சேவடிக்கீழ்
மன்ற மலர்ந்தபெரு வாழ்வுமனே நீதமே.

௩௪. துரியம்

(கொச்சகக் கலிப்பா)

1652 எல்லாமொன் றாக விதயத் தொளிர்சொருப
நல்லான் றிருவடிக்கீழ் ஞானனு பூதிபெற்றேன்:
அல்லா ணவப்பா ழறக்கரக்கத் துன்றியது
சொல்லான சுத்தத் துரியப் பரவெளியே.

1653. வெற்றிசே ருண்மை விளக்கமாங் கைவல்யப்
பெற்றியா லாண்ட பிரான்சிற் பதவொளியில்
மற்றிலா முற்றமுழு வாழ்வா மடுத்ததுநா
னற்றெழியப் பெற்ற வதீதத் துரியமே.

1654. அகந்தையறச் செற்ற வருட்பிரான் றுட்கீ
ழுகந்துறையப் பெற்ற வுணர்வால், அடியே
னகந்தெளியப் பொங்குமகண் டானுபவ மாக
முகந்ததுசுத் தந்துரிய மோனவியல் வாழ்வே.

௩௫. ஒளிவெளி

(வெண்பா)

1655. அத்தனுக்கே யாட்செய் யருட்பணியால் வாழ்வேனு க
கத்தகவே முத்திக் கருந்தவமாய்—அத்தனருட்
பாதவொளி யாலே பளிச்சிட் டொளிர்ந்ததுசற்
போதவெளி யாமெய்ப் புலம்.

குறிப்பு:—முத்திக் கருந்தவம் - முத்திக் குபாயமான
அருந்தவம்.

1656. ஒரட்சயமா மோன வுணர்வொளிவாய் வுற்றேன்
அருட்செம் பிரான்சே வடிக்கீழ்—மருட்கிசேர்
தொந்தநினைப் பற்ற சொரூபானு பூதியிவென்
சிந்தைக் கிலேசமறத் தீர்ந்து.

1657. ஞானகுரு வானவென் னம்பனருட் பாதவொளி
மோனவெளி யாவகத்து முற்றலால்—ஏனை
ஒளிசேர் விகற்ப வுலகமெல்லாம் சாயைத்
துளிகளாத் தோன்றுவன வாம்.

(கொச்சகக் கலிப்பா)

1658. அளியனே னை வடியனேன் மோக
விளிவரல்சேர் யானெனும்பொய் யேச்சகல வுள்ளத்
தொளிவெளியா வென்னை யுடையான் பதத்திற்
றெளிவுறவாழ் கின்றேன் சிவோகவுணர் வாலே.

1659. முற்ற முழுமுதலா மூண்டமோ னனுபவப்
பெற்றிசேர் சுத்தவருட் பெம்மான் பதவொளியில்
மற்றனைத்துங் கற்பனையா மங்கத்தன் னுண்மையே
யுற்றதுகாண் சுத்த வொளிவெளியா வுள்ளத்தே.

1660. நெறிமுறையால் யாதோர் நியமமும்பற் றுதேன்
அறிவே சொரூபமா வாண்டபிரான் றுட்கீ
முறைதலா வுள்ளத் தொளிவளர்வாழ் வுற்றேன்
பிறிவிலா மோனவருட் பெற்றிநோக் காலே.

1661. அறிவிலே யென்னை யழுத்தியே சற்றும்
பிறிதிலா வத்துவிதப் பெட்பான மோன
நிறைவிலே யென்னை நிறுவினன் பாத
வுறவிலே யுற்றதெனக் கொட்பநுட்ப வாழ்வே.

1662. என்ற னெளிமைக் கிரங்கலுற்ற வெம்பிரான்
என்றுபோல் வீசு மியற்சிற் பதவொளியாற்
பொன்றநா னென்னுமனப் பொச்சாப் பிதயத்து
மன்ற வருள்வெளியா வையமென் னுண்மையே.

1663. எள்ளவே தக்க விழிசினேற் கின்னருளா
லொள்ளியபே ரின்ப வுணர்வூற வுள்ளுணர்விற்
கள்ள வகந்தைமனக் கட்டறக்கண் டானடிக்கீழ்
உள்ளமே சுத்த வொளிவெளியாப் பொங்கியதே.

1664. தெள்ளியபே ரின்பச் சிவமே சொரூபமா
வுள்ளொளியா லென்னை யொளிர்வித்தான் சேவடியிற்
கள்ளமனை மாயக் கலக்கமற்ற சுத்தவருள்
வெள்ளவெளி யாக விளைந்ததுகை வல்லியமே.

குறிப்பு — உள்ளொளி - உள்ளுணர்வாகிய வொளி.

1665. பூண்டமெய் யன்புசிவ போகமாப் பொங்கலால்,
ஆண்டகுரு நாத னருட்சிற் பதமெனக்குத்
தூண்டவேண் டாத சொரூப வொளிவெளியாக்
காண்டற் கினியவருட் கைவல்ய பூமியே.

1666. உறக்க வொணுததோ ரொட்பநுட்ப மாகக்
குறிக்கொள்ளத் தக்கவருட் கோமான் பதத்தில்
உறைக்கவுற்ற மோன வுணர்வாற் குறையொன்
றறிக்கையிடக் காணு வருள்வெளியா னேனே.

1667. அடியனேன் பாலருளி யாண்டா னடியிற்
கொடியமா மோகவிருட் கூட்டங் குலைய
விடியலுற்ற வுண்மை விழிப்பா ந் துரீயச்
சுடர்வொளியில் வாழ்வு சுகித்தலுற் றேனே.

1668. ஈனவிளி வில்லா வியற்சிற் பரசொருபம்
மோனவெளி யாகவகம் முற்றலாற் கண்டுகொண்டேன்
தீனவகங் காரச் செருக்கறக்காண் கேவலமெய்ஞ்
ஞானவொளி வீசுகுரு நாதன் பதத்திலே.

1669. ஞான சொரூபகுரு நாதன் பதத்திலெனக்
கூனமற்ற வுண்மை யுணர்வு விளங்கலால்
ஈன வகந்தையற வென்னியல்பு சுத்தவருள்
வானவெளி யான வளாகமா வைகியதே.

1670. பாச வகப்பேய்ப் பதற்றமறக் காணு(ம்)ஞா
ஞாசிரியன் ஞானி லரணடைந்தே னுக்குவன்
கோசவகங் காரக் கொளைவிடுபட் டொட்பநுட்பத்
தேசவெளி யாகவகச் சீர்மைவெளிப் பட்டதே.

1671. பேத மயக்கவகப் பேயோட்டி யானகுரு
பாதவிலா சத்திற் பசுபாச மாயவிருள்
வீதலால் உள்ளம் விசுத்தப் பரமசிவ
போத வியல்வெளியாப் பொங்கிப் பொலிந்ததே.

1672. காண்டலரு சுத்தசிவக் கைவல்ய ஞானமளித்
தாண்டகுரு நாத னருட்செம் பதவொளியால்
பூண்டபல பேதப் புலவுலகு மாயமாய்
மூண்டதக மாகமுழு மோனப் பரவெளியே.

1673. அறிவெல்லை யாற்சற் றறியப் படாமெய்
யறிவுருவ மான வென் றுண்டான் பதத்திற்
பிரிவறியா மோனவருட் பேற்றுற் றிறங்கு
நிறைவெளியா நின்றதென் னெஞ்சந் திறந்தே.

1674. அதெந்துவென் றுண்ட வருட்செம் பிரான்மெய்ப்
பதந்துலங்கிற் றின்பப் பரவெளியா வுள்ளத்
தெதிர்ந்தறிய யாதோ ரிதமுமில்லை; மோக
மதந்தருநா னென்னுமஹோ மாயமுமங் கின்றே.

1675. கழிவிலா வுண்மைக் கழலே அடியேற்
கெழில்சேர் சொரூபமா வென்று மொளிர்வால்,
பழிசே ரகப்பாழும் பரப்பாங் கரப்பற்
றெழிய வுதார வொளிவெளியோங் கிற்றே.

1676. பாசநா சஞ்செய் பரமனருட் சிற்பதத்தென்
னேசமா றுண்மை நிலையறிந்து நிற்றலாற்
கோசவகப் பூட்டுடையக் கூடியதென் னுள்ளத்துத்
தூசகல்சற் போதத் துரியப் பரவெளியே.

௫. உய்ந்தேன்

(குறள்)

1677. துயிலுணர்த்தி யாண்ட சொருபகுரு பாதந்
துயலுற்ற தென்னு ருயிர்.

1678. சுயம்புவா வுள்ள சொரூப சிவத்தில்
உயும்பரிசு கண்டே னுயிர்க்கு.

1679. உள்ளே யிருக்கு முடையா னருட்பாதத்
துள்ளேவாழ் வுற்ற துயிர்.

1680. இதயம்புக் காண்ட விறைரமணன் பாதத்
துதயமாய் மல்கிற் றுயிர்.

1681. மறதியறச் செற்றவருள் வாலறிவன் பாதத்
துறுதிகண்டே னென்னு ருயிர்க்கு.

(வெண்பா)

1682. அடைக்கலமா வென்னை யடிகளுக்கே முற்ற
அடைவித்த வாற்ரு வடியேன்—அடைக்கலங்காத்
தோம்புமியல் சான்ற வுடையா னடியிலுயிர்த்
தேம்பலகன் றேம்பலுற் றேன்.

(கொச்சகக் கலிப்பா)

1683. மத்தமனந் தாரறிய மாட்டாத சுத்தவருள்
வித்தகவாழ் வாக விளங்கலுற்றென் னுள்ளத்து
டித்தகவே நில்லென் றிறைபணியிற் சேர்த்தபிரான்
சித்துவச்செம் பொன்னடியிற் செத்துவாழ் கின்றேனே.

1684. களிசே ரகந்தைமனக் காரை விழுங்கி
வெளியாக வுண்மை விளங்கு சொரூபத்
தெளிவான மோனவருட் சீர்மையா லாண்டான்
ஒளிசேர் திருவடிக்கீ ழுய்திகண் டேனே.

1685. மறம்பயிற்று மோக மனப்பா முகந்தைக்
குறும்படர்த்த ஞானவருட் கோமான் பதத்திற்
றிறம்படவென் னுண்மை தெளிந்தேன் சிவமா
வுறும்பரம சாந்தியா லுய்தியுற் றேனே.

உஉ. உள்ளம் மலர்ந்தது

(குறள்)

1686. உலகங் கடந்ததோ ருண்மையா வுள்ளத்
திலகலுற்ற தீசன் கழல்.

(கொச்சகக் கலிப்பா)

1687. சடங்கப் படாடோபச் சர்ப்பணையி னின்று
மடங்கிமனக் கற்பனு பாவனையும் மாற்றி
அடங்கடங்கக் கொண்டுய்த்த வாண்டவன்சிற் பாதந்
தொடுங்கலுற்ற வாற்றலென் னுள்ளம் மலர்ந்ததே.

1688. உள்ளமே யான வுணர்வொளியால் யாவெனும் பொய்க்
கள்ளமனு மாயமறக் கண்ட பிரானடிக்கீழ்
உள்ளலரு மோன வுறைப்பாலவ் வொட்பநுட்ப
வுள்ளமே யாக வுறைவதென் சிந்தையே.

1689. தெற்கு வடக்குத் தெரியாத மூடனேன்
சற்குரு பாதந் தலைப்படலும் மெய்ஞ்ஞானப்
பொற்குன்ற மாகப் பொலிவுசேர் சத்துவத்தா
லொற்கமறு தற்பரமா வுள்ளங் கிளர்ந்ததே.

1690. தோன்றுலக சொப்பனத்தின் சூதிலே வேறுபட்டு
மான்றொழிந்த தன்னடியேன் மாட்டிரங்கித் தானவமி
தான்றசிவ பூரணமா வாண்டபிரான் சேவடியி லூக்
கூன்றலுற்ற வுள்ளத் தொளிர்ந்ததுசிற் பூரணமே.

உங. உலகு பொய்யாயிற்று

(வெண்பா)

1691. தொக்கவொளி சூழ்ந்த சொருபகுரு நாதனடிப்
பக்கலுற நாளும் பயின்றதால்—மிக்க
சதாசார மோனந் தழைத்தொளிர வுள்ளத்
துதாசீன மாயிற் றுலகு.

(கொச்சகக் கலிப்பா)

1692. சித்த விகாரத் தெருமரல்சேர் ருண்டுகொண்ட
அத்தனருட் சேவடிக்கீ ழார்வமெழப் பொங்கவெனக்
கொத்த வியற்பரவாழ் வுள்ளுணர்வின் மீக்கிளர்வாற்
பொய்த்ததுபொய் மாயப் புலமா முலகியலே.

1693. பராற்பரமா வென்னைப் பணித்தான் பதத்தில்
இராப்பகலில் லாத வியல்கண் டமைந்தேன்
உராத்துனைத்தே ராக வுலாமுலக மாயத்
தொராற்பதமில் லாமை யுணர்ந்துகொண் டேனே.

குறிப்பு:—உராத்துனைத்தேர் - பேய்த்தேர், கானல்நீர்; "பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக் கருதிப் பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே தீர்த்தாய்" என்னும் திருவாசகம் ஈண்டு சிந்திக்க வேண்டுவதாம்.

உச. உலகு பரமாயிற்று

(கொச்சகக் கலிப்பா)

1694. ஞானவருள் வெற்றி நடத்தா னடித்தலத்து
மோன வுணர்வுருவா முத்திநலங் கண்டுகொண்டேற்
கீனமில்பே ரின்ப வியல்சான்ற சுத்தவருள்
வான வளாகமா வைகியதிவ் வையகமே.

1695. தன்மெய் யலாதபிற தத்துவப்பொய்க் குப்பைகளை
என்னறிவிற் சேரா திகந்தொழியத் தெள்ளுகழற்
பொன்னொளியால் வையம் புதுப்பொலிவு பெற்றொளிரத்
துன்னியது சுத்த சொருபவருட் சூழலே.

உரு. உபசாந்தி

(குறள்)

1696. அலைத்தவகப் பேயகற்றி யாண்டான் பதத்திற்
பலித்ததுப சாந்திப் பயன்.

(வெண்பா)

1697. உருவு பெயரற் றுளிர்மெய்ப் பொருளா
மருவுகுரு பாதவருள் வாழ்வால்—வெருவரலற்
றோங்கு சதாசிவமா வுள்ளதோர் சாந்தியெனக்
கீங்குறுவ தாயிற் றினிது.

1698. சேர்ந்தபிர மாநச் செருக்கா மகந்தையறப்
பேர்ந்தொழிய வாண்ட பிரான்பதத்தே—ஆர்ந்தவருட்
சித்தோப சாந்தித் தெளிவா மதுவுண்டு
மத்தோக மானேன் மதர்த்து.

1699. வரம்பிலா மோனவருள் வாழ்வான சாந்தி
உரம்படவென் னுள்ளத் துறவே—நிரம்பியசற்
பத்தியளித் தாண்டகுரு பாதவுணர் வூற்றெடுத்தாக்
கொத்தொழுக லூற்ற துளத்து.

1700. குருரமணன் பாதங் குறிக்கொண்டார் மோகத்
தெருமரல்சேர் சிந்தையறத் தீர்வார்—குருரமணைத்
தஞ்சமுற்றுச் சஞ்சலம்போய்ச் சார்ந்ததுகாண் இச்சி
நெஞ்சமுப சாந்த நிலை. [யியேன்

(கொச்சகக் கலிப்பா)

1701. பங்கமார் மோகவகப் பாழ்ங்கற் பனையகலப்
பொங்கலுற்ற சுத்தவருட் புண்ணியன்செம் பொன்னடி
றங்கலுற்ற சிந்தையாற் சஞ்சலந்தீர் சாந்திநிலை [யிர்
எங்குமியற் சிற்பரமா வென்னை வளைத்ததே.

1702. விளங்குசிவ ஞான விபூதியா லூனக்
களங்கவகப் பேயைக் கடிந்தபிரான் றாட்கீழ்
உளங்கிளரப் பொங்குமுப சாந்த வுணர்வு
வளங்குலவு முந்தியா வாழ்வுநிரம் பிற்றே.

1703. கள்ளமா மாயமனக் கற்பனை சத்தியைச்செற்
றுள்ளமா வுற்ற வுடையா னருளடிக்கீ
ழுள்ளலறப் பொங்கு முபசாந்த போகமாத்
தெள்ளமுத வாழ்வு திளைக்கக் கிடைத்ததே.

1704. மாழ்குறுபொய்ம் மாய மனக்கற் பனையகல
வாழ்வுசிவ மாக வகுத்தபிரான் சிற்பதத்தில்
வாழ்வுறுபே ரின்பமகிழ் வாழ்வா லிதயத்துத்
தாழ்வகன்ற சாந்தி சதாமுந்தி யானதே.

1705. களங்கமற்ற சுத்தவருட் கைவல் லியமா
விளங்குசிவ ஞான விபூதியளித் தாண்டோன்
வளங்குலவு மாண்பதத்தில் வைகலா லுற்றேன்
உளங்குளிர மீப்பொங் குபசாந்த வாழ்வே.

1706. குருரமண நல்லோனைக் கூடலாற் பெற்றேன்
பரசிவத்தோ டொன்றும் பரமோப சாந்தி;
திருவருட்கண் ணோக்காற் சிவானுபவஞ் சேர்த்த
குருபரன்பா தத்திற் குலாவியதென் வாழ்வே.

1707. நானற்ற சுத்தமெய்ஞ் ஞான சொரூபவருள்
வானத்தே வாழ்வு வழங்கினன் மாணடிக்கீழ்
ஊனக் கவல்செற் றுளம்பொங்கு சாந்தியா
வானப் பரபோகம் மல்க மடுத்ததே.

குறிப்பு:—உபசாந்த வுணர்வே உண்மைப் பரபோகமாக
அறியத்தக்கதாம்.

1708. அருளே வடிவா வமைந்த சிவச்செம்
பொருளா லுபசாந்த போகவாழ் வுற்றேன்.
மருளிலே மாழ்கலுற்ற மத்தனே னுள்ளந்
தெருளுமா நோக்கியமெய்ச் சிற்பரன்பா தத்தே.

1709. மாழ்கா தகத்தே நான் மல்குறுபே ரின்பமகிழ்
வாழ்வா விளைந்தவருள் வள்ளற் பிரானடியே
சூழ்வா லகந்தைமனத் துன்பமறக் கெட்டொழியப்
பாழ்வா தனைகழன்றேன் பற்றியது சாந்தியே.

1710. பதியாங் குருரமணன் பாதமே யுண்மைக்
கதியாக வாழ்விற் கடைப்பிடித்த வாற்றால்
விதியால் வியரா மதியான் மயராச்
சதிரார் பரமோப சாந்திபெற் றேனே.

1711. கற்பனைதீ ருண்மைக் கடவுட் பரசொருபத்
தற்பனே னுக்கோ ரமுத்தமளித் தாண்டபிரான்
சிற்பதத்தே வாழ்தலாற் சித்தோப சாந்தியெனக்
கற்புதமா மோன வருள்வெளியாப் பொங்கியதே.

1712. சுத்தப் பரசிவமாத் தொக்க சொரூபவருள்
வித்தையா லென்னை வெளியொளியாக் கண்டபிரான்
சித்தக் கலக்கமறத் தேற்றுந் திருவடியிற்
புத்திக் கமுதமாப் பொங்கியது சாந்தியே.

1713. உள்ளத் தொளிர்சொருப வுண்மைப் பிரானடியிற்
கள்ளக் கருத்தான கற்பனைமுற் றக்கரக்கத்
தெள்ளத் தெளிந்தவருட் சிற்பரமோ னானுபவ
வெள்ளக் கடலா விளைந்ததுப சாந்தியே.

1714. முத்திப் பெருக்கமா மூண்டபிரான் சேவடியிற்
கர்த்தத் துவவகங் காரமுனைப் பற்றொழிவாற்
றித்திப்ப தாகத் திளைக்கலுற்றேன் சுத்தவருட்
பத்திச் சுவைததும்பப் பற்றியதோர் சாந்தியே.

1715. முற்றமுழுச் சிற்பரமா மூண்டபிரான் சேவடியிற்
கற்றறிய யாதுமிலாக் கைவல்யங் கண்டுகொண்டேற்
கற்றமில்சற் போத வருள்வெளியா வுள்ளத்திற்
பற்றியது சுத்தப் பரமோப சாந்தியே.

1716. ஏட்டறிவு சற்று மிலாதே னிதயத்தில்
வாட்டமற்ற வுண்மை வளம்பொங்கத் தன்சொரூப
நாட்டமளித் தாண்டகுரு நாதனருட் சிற்பதத்தில்
வீட்டியல்வாழ் வாக விளைந்ததுப சாந்தியே.

1717. நுட்பவொட்ப மானகண் ணேக்கா லடியனே
னுட்புக் குறைந்த வுடையான் பதத்திலெனக்
கொட்பநுட்ப மான வொளிவெளியாப் பொங்கியது
திட்பமார் சுத்தவருட் சித்தோப சாந்தியே.

1718. மூசுற்ற மோக முனைப்பா மகந்தை தயா
லூர்சுற் றுளங்கெட் டுபசாந்தி யுற்றதுகாலை
ஏசற்ற வுண்மை யியல்பா விதயத்துத்
தேசுற் றொளிர்சொருபர் செம்மலர்நட் பாதத்தே.

1719. பரமா வியல்சொருபன் பாதார விந்தத்
துரமாப் பதிந்த வுணர்வால் உளத்துத்
திரமான மோனந் திளைக்கலுற் றேன் வாழ்விற்
பரமோப சாந்தி படைக்கலுற் றேனே.

1720. முற்றுமுழுச் சீர்மையா மூண்டமோ னைபவம்
பெற்றி பிறர்க்கரிய பெர்மா னருட்பதத்திற்
சற்று மெனக்கினிமேற் சாரக் கடவதின்றாம்
பற்றியது சுத்தப் பரமோப சாந்தியே.

1721. இறைவனு வாண்ட வியற்பிரான் பாத
நிறைவுணர்வா மோன நிம்மதியிலே யூன்றி
யுறைவதா லுற்ற வுபசாந்த போகச்
செறிவுசிவ மாகச் செழிக்கலுற் றேனே.

1722. ஒள்ளியபே ரின்ப வுணர்வான மோனவியல்
வள்ளியான் பாதநிழல் வாழ்விலியான் கண்டுகொண்
துள்ள வொருமைச் சதாசிவமாம் போகமா [டேன்
அள்ளமெழப் பொங்கு முபசாந்தச் சீர்மையே.

1723. ஐயனு(ம்) மெய்ய னருட்பதத்தே மோகவகப்
பொய்யிலையா வுண்மை புணர்தலாற் புத்தியிற்சஞ்
சையந் திரிபறுநா னனுபவ சாந்தியுயிர்க்
குய்யவொர் போங்கிற் றெளிவெய் யாக் காண்டேனே.

1724. அலைவற்ற சாந்திநா னாப் படைத்தேன்
உலகமா மோக வவரிக் கடலூ
டலைதுபே ரின்ப வியல்விளக்க மாகக்
குலவலுற்ற சுத்தவருட் கோமான் பதத்தே.

குறிப்பு:—உவரிக்கடலான மோக வுலகத்தூடு.

௨. மோனம்

(குறள்)

1725. நயன்மலிந்த சுத்தசிவ ஞானமா மோனப்
பயன்மலிந்த தாண்டான் பதத்து.

1726. ஆண்டான் பதமே யருள்வெளியா வென்னகத்திற்
காண்டவாற் கற்பனையற் றேன்.

1727. கற்பனையற் றேயக் கலந்தசிவ ஞானவருட்
பொற்பதத்திற் புந்திபொதிந் தேன்.

1728. குருத்துவஞ்சேர் சுத்தவருட் கோமான் பதத்தி
லிருத்தலுற்றேன் மோனமுற் றேன்.

1729. இற்றெனவொண் ணாத விறைவனருட் சிற்பதத்திற்
கற்றலுற்றேன் மோனக் கலை.

1730. ஆணவப்பே யோட்டி யருளிறைவன் பாதத்திற்
காணலுற்றே னுண்மைக் கலை.

(வெண்பா)

1731. அவப்படா தென்னை யருட்குருவா மண்ணல்
சிவப்படந்தன் றுணிழலிற் சேர்த்தான்—பவப்படர்
வற்றுப்பே ரின்ப வளஞ்சுரக்கு மோனவுள [போய்
முற்றுங்கே நானேய்ந் துளேன்.

1732. திரோதமற வெங்குஞ் செழிப்பாக வோதப்
புரோதமாப் பொங்கும் புராணன்—சொரூப
குருப்பதமே மோனக் குலாவான வுண்மை
யருட்பரமா வார்ந்த தகத்து.

(கொச்சகக் கலிப்பா)

1733. தீன மயக்கச் செருக்காலே கற்பனையூ
டீனனேன் மாழ்கா திதயத்தே சுத்தவருள்
வானமா வென்னை வளைத்தபிரான் சிற்பதத்த
ஞானமோ னைடவ நற்பெருவாழ் வுற்றதே.

1734. சற்றுமே தான்சலியாத் தற்பரமோ னானுபவ
வெற்றியாற் செம்மாக்க வீற்றிருக்கின் றேனடியேன்;
அற்றமில்பே ரின்ப வருள்வெளியாந் தன்சொரூபப்
பெற்றிசேர் வித்த பிரான்சிற் பதத்திலே.

1735. தருவான சுத்தவருட் கோமானால் அன்ப
சொருபானு பூதி துலங்க விளைவால்,
வெருவாத வுண்மை விறல்சான்ற மோனப்
பெருவாழ்வு பெற்றேன் பிரானடிக் கீழே.

1736. கண்டவருள் வாழ்வா விதயத் தொளிர்பரமா
ஆண்டவன் றாளை யடைந்தவினைக் கூர்மையைச்
கண்டவுறு துன்பவின்ப மெல்லா மவன்பரமா
முண்டொழியத் துன்றியது மோனானு பூதியே.

1737. நித்தமா மோனநிலை நெஞ்சமுறப் பற்றியது
மத்தனேன் கற்பனையின் மாழ்கிக் கலங்காத
சுத்த வறிவுத் துலக்கமளித் தாண்டவருள்
வித்தகன்பா தத்தில் விளைந்தநற் பத்தியிலே.

1738. சாதலையே வாழ்வாத் தடுமா றியவனையேற்
கேதமில்பே ரின்ப மெய்ப்பாவாழ் வுள்ளமைந்
தாதரமா நல்கியநல் லாண்டவன்சேய்ச் சேவடிக்கீழ்
ஓதருமோ னானுபவ வுண்மைநிலை யுற்றதே.

1739. தற்பரமா மெய்ம்மைக் தடுத்தாண்டு கொண்டவருட்
சிற்பரன்பா தத்திற் செருக்கற் றொழிசலாற்
கற்பனையா மெல்லாங் கடந் தூரியக் கைவல்யப்
பொற்புறமோ னானுபவம் புக்கிநிறைபொங் குற்றதே.

1740. அவிர்துரியப் பேரறிவா மாண்டவன்றன் பதத்திற்
றவிதமனக் கற்பனையைத் தூரறிய மாற்றிக்
கவலைதீ ரின்பக் கடல்காக்க வென்னைச்
சிவமயமா மோனத் திறந்தெளிந் தேனே.

1741. பங்கமில்பே ரின்பப் பரசொரூபப் பார்வையளித்
தெங்களையாட் கொண்ட விறைவனருட் செய்பதத்து
மங்கலவாழ் வாக மகிழ்ச்சிமிக் கூர்சொரூபத்
துங்கபோ தானுபவந் துய்த்தே தா மடியோமே.

1742. அத்துவித மான வருட்செய் பிரான்பதத்தில்
வித்தகமெய்ஞ் ஞான விளக்கத்தால் யானென்னும்
மத்தவகங் கார மனக்கலக்கம் பொய்த்தொழிய
முத்த சொரூபமோ னானுபவம் மூண்டதே.

1743. அப்பனோ டம்மைமட்டோ ஆரியனுந் தேவுமொருங்
கொப்பவே தானா முடையான் சொருபவருட்
செப்பமா மோனந் தெளிந்தேன் பரமசுப
வைப்பா வளங்கிளரவ் வள்ளற் பிரான்பதத்தே.

1744. நம்பனருட் சீபாத நன்னிழற்கீ ழார்ந்ததெனக்
கிம்பரும்ப ரற்றொளிர்பே ரின்பவியற் கைவல்யச்
செம்பரமாச் சித்தந் தெளிந்தமோ னானுபவம்,
பம்பியமோ கக்கற் பனைசத்தி பாழ்படவே.

1745. மீளநா னென்று விசைத்தெழா வாறுதனக்
காளா வென்னையாண் டான்சொருபச் சேவடிக்கீழ்க்
கேளிராக் கூடிக் கிளர்ந்தேன்மெய் யன்பரொடு
மூளமேன் மேலகத்து மோனா னுபூதியே.

குறிப்பு :—வெளிப்படாவாறு என்றும் பாடம்.

1746. நன்றிசே ரெல்லா நலன்களுமாச் சேர்சொருப
வென்றிசேர் மோனவியல் வித்தகவாழ் வார்தலுற்றேன்
என்றென்று மென்னோ ரிதயத்துந் தான்றானே
வொன்றியுள்ள வுண்மை யுணர்வுருவன் பாதத்தே.

64. ஆண்டவன திருவடியில் அற்றவை

௧. குறையறல்

(குறள்)

1747. ஆண்டவன்சீ பாதத் தறிவுதிளைக் கின்றேனுக்
கீண்டவினி மற்றொன் றிலை.

1748. ஏதங் கழன்றேன் எனையாண்ட சற்குரு
நாதன் பதத்திலே நான்.

(வெண்பா)

1749. குறையிரந்து கொள்ளக் குறையொன்றுங் காணேன்
நிறையுணர்வா மோன நிகழ்வால்—இறைவனருட்
பாதநிழல் வாழ்வாம் பரமோப சாந்தத்தால்
ஏதமொன்று மில்லை யெனக்கு.

(கொச்சகக் கலிப்பா)

1750. அறிவா விளங்கலுற்ற வாண்டவன்பா தத்திற்
செறிவா லடைந்தவருட் சித்தோப சாந்த
நிறைவிலே யாதோர் குறைநிகழக் காணேன்
பிறைசே ரகந்தையுடன் பிச்சையற் றேனே.

1751. மூன்றுமொன் றாக முடிந்தொழியத் தன்னையாய்த்
தான்றலுற்ற றுள்ளத் துணர்வுருவா யோமென்று
தோன்றுமதி சாந்தத் துரீய சொரூபமா
வேன்றுகொண் டானடிக்கீழ் யானோர் குறையிலனே.

1752. நலம்பெற வாண்டமெய்ஞ் ஞானப் பிரானுள்ளக்
கலம்புத்தி சால வளித்தான் பதத்திற்
குலம்பெற்ற தொண்டர் குழாஞ்சேர்ந் துலகத்
திலம்பாட் டுணர்ச்சி யினைதொழிந் தேனே.

1753. ஏழுலகுங் காத்தோய் பிறையோன் றிருவடிக்கீழ்
வாழுமுயர் பாக்கியத்தால் வற்கடமோர் சற்றுமில்லோம்
பாழிலுழன் றெய்த்த பழங்கதைதீர்ந் துய்ந்தோங்காண்
சூழலுற்ற சுத்தத் துரியவெளிச் செம்பதத்தே.

உ. அகந்தை யறல்

(குறள்)

1751. ஆண்டவன்பா தத்தி லகங்கிளைப் பொங்கலால்
மாண்டதகங் கார மயல்.

1755. ஞான வருட்பார்வை நல்கினான் சேவடிக்கீழ்ப்
போனதுநா னென்னும் புணர்ப்பு.

1756. உடையா னடிக்கீ ழுணர்வோ டுறையா
வடியே னகந்தையற் றேன்.

(வெண்பா)

1757. ஒருமையா லென்னை யுடையான் பதத்தில்
இருமைசேர் பேத மிலையாய்ப்—பெருமைசேர்
சுத்தவெளி யான சொருபவருட் கேவலத்திற்
பொய்த்ததுநா னென்னும் புலம்.

1758. தொடர்ந்ததோ ருண்மைத் துலக்கமா மோனம்
படர்ந்த சொருபப் பதத்தே—மடந்தருபொய்
யாணவப்பா ழான வவிச்சை மயக்கமற
வீணகப்பேய் மாய்ந்தது வீழ்ந்து.

(கொச்சகக் கலிப்பா)

1759. ஐயன் பதத்தி லடியேனுக் கார்வமுறு
மெய்யன் புணர்ச்சி விளைந்தவாற் றுலகத்திற்
பொய்யும் புரட்டும் பொதிந்தவுல காசைமயற்
குய்யம் படுமகப்பேய்க் கோட்டாலே கெட்டதே.

1760. மறவிசேர் மாய மயக்கமறு சுத்தத்
திறவிலே கண்டவருட் சிற்பர மா மோன
நிறைவிலே யென்னை நிறுவினான் பாத
வுறவிலே யற்றதுபா ழானவகப் பேயே.

1761. ஈண்டு சொருப விறைவனு லல்லாமற்
றூண்டலரு சுத்தத் துரீய வொளிப்பிழம்பா
வாண்டவன்பா தத்தி லடங்கி யொடுங்கிப்பின்
மீண்டெழவொண் ணாது விளிந்ததகப் பாழ்முனைப்பே.

1762. நானவனே யானமெய்ஞ் ஞானனு பூதிபொங்கத்
தானென்னையாட் கொண்ட தயாபரன்பொற் பாதத்தில்
யானென்னையே முற்ற விழந்தொழிந்தேன் சுத்தவருள்
வானமே யென்சொருப வாழ்வாக மன்னவே.

1763. தராதலத்தே யோருருவாத் தான்சரிக்குங் காலும்
ஒராளெருதன் னுண்மை யொளிவெளியே யான
பிரானடியே யென்னுருவாப் பேணலுற்றே னுள்ளத்
திராதொழிந்து போனதுநா னென்னுமகப் பேயே.

1764. ஒடுங்கொடுங்க வுள்ளத் தொளிவளர்பே ரின்பத்
தடங்கடலா மோனந் தழைத்திடமெய்ஞ் ஞான
நடங்குமிற்று சுத்தான்ம நாதன் பதத்து
முடங்கியது நானெனும்பாழ் மோகவகப் பேயே.

1765. என்னியல்பா வுள்ளத் திலகு சொருபவிறை
தன்னடியே கைவல்யத் தற்பரசாம் ராச்சியமா
நன்னா ரலர்ந்தமெய்ஞ் ஞானநு பூதியால்
என்னதுநா னென்னு மிலம்பா டொழிந்ததே.

1766. இரக்கலுற்ற வேழைபா லின்னருட்கண் பாலித்
தொருக்கவென் னுள்ளத் தொளிர்தலுற்ற ஞான
குருக்களின் பாதக் குலாவால் அறவே
யுருக்குலைந்த தாணவப்பா ழந்தையகப் பேயே.

1767. கல்லாதேன் கற்றுலுங் கற்றுங்கு நில்லாதேன்
அல்லார்ந்த மோகா ணவப்பா ழகந்தைமனப்
பொல்லாங்கு நீங்கிப் பொலிதலுற்றேன் குற்றமற்ற
நல்லேன்போ லென்னை நயந்தாண்டான் பொற்பதத்தே.

1768. போன்று ரிலாதான் புகலடைந்தேன் புந்திக்குட்
சான்று வொளிர்சொருபத் தன்மைநான் சார்வகையாற்
றான்றனே யாகத் தழைத்தொளிர்பெம் மானமைக்கிற்த்
தோன்று தொழிந்ததுபொய்ச் சூதா மகந்தையே.

குறிப்பு:—சார்வகையால் - சாரும்படியாக; "போன்றுரிலா தான் தான்றனேயாகத் தழைத் தொளிர் பெம் மான்" எனவும், "நான் சார்வகை தழைத் தொளிர் பெம்மான்" எனவும் இருவிதத்தும் பொருள் கொள்க

1769. தன்னடையொளி வண்ணத் தொருவன் பதத்திலுள்
வண்மைசேர் சாந்தசிவ வார்மு மலர்தலால்
விண்மைபோற் றேன்றுலக வேட்கையோ டற்றதெனைக்
கண்மையா வுள்ளத் துறந்தவகப் பேய்முனைப்பே.

1770. உள்ள முவக்கவெனக் குண்ணு ரமுதமாத்
தெள்ளத் தெளிந்தவருட் சிற்பதத்திற் பேரின்ப
வெள்ள வெளியா விளங்கு மனுபவத்தாற்
கள்ள வகந்தைமனக் கட்டற் ருெழிந்ததே.

௬. நானறல்

(வெண்பா)

1771. படிந்து கிடந்த பரமார்த்த வாழ்வைத்
தொடர்ந்து விளங்கத் துலக்கி—மடந்தெறுசுத்
தானந்த மோன வருட்பதத்தில் யானெனுமவ்
வீனந் தவிர்ந்த தெனக்கு.

(கொச்சகக் கலிப்பா)

1772. ஞானமோன் றற்ற வொளிவெளியாப் பொங்குசுப
மோனமே வாழ்வா முடித்துக் கொடுத்தமெய்ஞ்
ஞான சொரூபகுரு நாதனருட் செம்பதத்திற்
போனதுநா னென்னுமயற் புன்கலக்க வாஞ்சையே.

1773. ஊன வுடல்வடிவா வூழ்த்துணர்வு பாழ்த்தேற்கு
மோனவருள் வாழ்வான முத்திப்பே ரின்பவியல்
வானமா வென்னுருவை மாற்றினன் சிற்பதத்திற்
போனதுநா னென்னுமந்தப் புன்கலக்க வாதனையே.

. ஆணவமறல்

(கொச்சகக் கலிப்பா)

1774. எல்லாமோன் ருன வியற்சிற் பரசொருப
நல்லான் பதத்தொளிர்மெய்ஞ் ஞானனு பூதியாற்
பொல்லா வகந்தைமனப் புன்பிறவித் துன்பஞ்சே
ரல்லா ணவப்பா முடியோ டகன்றதே.

1775. தேரா மனத்தாற் செருக்கிநான் செத்தொழியா
தாரா வமுதமா வாண்ட வருட்பிரான்
சீரார் திருவடியிற் சிந்தந் தெளிதலாற்
காரா ணவப்பாழ்ங் கலித்ருந் தொழிந்ததே.

1776. ஆவலித்துப் பாழி லதோமுகமா மூழ்கியவென்
னூழ்வலியைச் செற்றுங் குணர்வுருவா வுட்கலந்து
கேவலத்தி லுண்மை கிளர்வித்த சுத்தவருட்
காவலன்பா தத்திற் கழன்றதென்மோ காணவமே.

௫. செருக் கறல்

(குறள்)

1777. முத்தி சொரூபமா மூண்டபிரான் சிற்பதத்திற்
செத்ததுநா னென்னுஞ் செருக்கு.

1778. அத்துவித வுண்மையா வாண்டபிரான் சேவடியிற்
செத்ததுநா னென்னுஞ் செருக்கு.

(கொச்சகக் கலிப்பா)

1779. அத்தகுவாழ் வாக வகங்கிளர்மோ னனுபவத்
துய்த்தலா லென்னை யொருங்குய்யக் கொண்டபிரான்
சுத்தத் துரீய சொரூபவருட் சிற்பதத்திற்
சித்தமல மான செருக்கற் றொழிந்ததே.

௬. கர்த்தவ்விய மறல்

(வெண்பா)

1780. மெய்த்த வுதாரவருள் வித்தகன்பொற் பாதத்தே
நெய்த்தொழுகு நெஞ்சத்தி னின்றகலப்—பொய்த்தது
சித்த விகாரத் தெருமரலோ டாணவஞ்சேர் [காண்
கர்த்தவிய புத்திக் கலி.

௭. பசுத்துவ மறல்

(கொச்சகக் கலிப்பா)

1781. மூண்ட சொரூப முழுமுதலாந் தன்மையெனக்
கீண்ட விளங்க விதயத்தில் மான்யானென்
றாண்டுகொண்ட சுத்த வருட்பிரான் சிற்பதத்து
மாண்டதுநா னென்னும் மடக்கப பசுத்துவமே.

1782. கரவுசேர் மோகமனக் கற்பனைசெற் றென்னைப்
பரவெளியாக் கண்டவருட் பார்ப்பான் பதத்து
நிரதிசயா னந்த நிலையான வுண்மைப்
பரவியல்வாழ் வுற்றேன் பசுத்துவமற் றேனே.

அ. வாதனை யறல்

(குறள்)

1783 வாழ்வாக வாய்த்தவருள் வள்ளற் பிரானுக்கென்
பாழ்வா தனைகாண் பலி.

க. மோகமறல்

(குறள்)

1784. சிறந்தொளிர்சீ பாதவருட் சீர்மையால் உள்ளந்
திறந்ததுமோ கப்பா ழிருள்.

(வெண்பா)

1785. அறிவே சொரூபமா யாண்டகுரு நாத
னுறவே துறவா யுணர்வாற்—பிறவற்றின்
மோகந் தொடர்பை யறுக்கினேன் மூண்டமாயம்
வேகமறத் தன்மெய்ப் பதத்து.

(கொச்சகக் கலிப்பா)

1786. மலந்தருவெவம் பாசத்து மாழ்கலுற்றேற் கென்னைக்
குலந்தருமெய் யன்பர் குழாத்தோடு கூட்டி
நலந்தருமெய்ஞ் ஞானவொளி நல்கினன் பாதத்
துலந்ததுபொய்ம் மோக வுணர்வான தீங்கே.

1787. சிற்குறிசே ராண்டவனைச் சேர்ந்தேற்குக் கல்லாதே
கற்குறுமெய்ஞ் ஞானக் கலானுபவ மாகவருட்
பொற்கழலென் னுள்ளம் புணர்ந்தாங் குலகியலிற்
சொக்கியவென் மோகச் சுவைகெட் டொழிந்ததே.

ய. மன மறல் (மனோநாசம்)

(குறள்)

1788. உள்ளமே யாக வொளிர்சொருபன் சேவடியிற்
கள்ளமனங் காண்கின் றிலேன்.

(கொச்சகக் கலிப்பா)

1789. அடக்க வொணுத வகப்பேய் முனைப்பை
அடக்கி யொடுக்கியகத் தாண்டான் பதத்திற்
கடக்கவொணு மோனவருட் கைவல்ய வாழ்வு
மடுக்கலுற்றே னுக்கு மனஞ்செத் தொழிந்ததே.

1790. என்னை யணைந்தபே ரின்பப் பிரான்பதத்து
நன்னர் விளைந்தமெய்ஞ் ஞானனு பூதியால்
என்னியல்வே ருக வியற்சிற் பரமேயா
மன்னியது நானெனும்பொய்ம் மாயமனக் கட்டறவே.

1791. சற்போத மாகவொளிர் சற்குருவின் காருண்யச்
சிற்பூ ரணமான சேவடிச்செந் தீப்பிழம்பிற்
கற்பூரம் போலக் கரைந்ததென்பொய்ம் மாயமனம்
பொற்பூ ரருள்வெளியாப் பொங்கவென் னுள்ளமே.

கக. தாப மறல்

(வெண்பா)

1792. ரமணன் பதத்தை ரமித்தேனுக் காங்கே
சமனமாத் தீர்ந்ததுயிர்த் தாபம்—யமநியம
சாதனையோய்ந் தன்பு தழைத்தே னகந்தைமயல்
வாதனையோய்ந் தின்ப மயத்து.

(கொச்சகக் கலிப்பா)

1793. ஒடுங்கலுற்ற வுள்ளத் துணர்வுருவா வின்ப
நடங்குயிற்று கின்றவென் னம்பன் பதத்திற்
கொடுங்கலியற் றேயக் குலாவலுற்ற சாந்தித்
தடங்கடலிற் றோய்தலாற் றுபயற் றேனே.

1794. பண்ணியவென் முற்றவத்தின் பாக்கியமா வுள்ளத்து
நண்ணலுற்ற சுத்தமெய்ஞ் ஞானப் பிரான்பதத்தில்
வண்ணவொளி சான்ற வசீகரமோ னனுபவத்
தண்ணிலவு சார்ந்ததாற் றுபமறத் தீர்ந்ததே.

கஉ. வேட்கையறல்

(குறள்)

1795. சேட்டையைத் தட்குஞ் சிவபோதச் செம்பதத்தில்
வேட்கைக் கலக்கமற் றேன்.

குறிப்பு:—சேட்டை-ஜீவபோதம்; வேட்கைக் கலக்கம் மானபிமான மயக்கம்.

(கொச்சகக் கலிப்பா)

1796. கொடியமா மோகக் குணங்கெட் டொழியப்
படியிலே ஞானப் பதமளித்த வாண்டான்
அடியிலே யான்கண் டனுபவித்த வின்பால்
அடியனே னுக்குலக வாசையற்ற வாறே.

1797. வேர்த்துப் புலத்தில் விதுவிதுப்புற் றேங்காது
சீர்த்த வியல்பாத் திகழ்சொரு பானுபவத்
தார்த்தென்னை வைத்த வருட்பிரான் சேவடியிற்
கூர்த்தமெய் யன்பாற் குலைந்ததுபா ழாசையே.

கக. அச்சமறல்

(கொச்சகக் கலிப்பா)

1798. வாலறிவாத் துன்றுசுப மாட்சியா யுள்ளத்திற்
சாலவொளிர் சுத்த சதாசிவச்செம் பொற்பதத்திற்
காலபய மானவகங் காரமயற் பிழையகன்
றேலவிளங் குற்றே னியற்பரமோ னந்திளைத்தே.

1799. வஞ்சவே தாள மயக்கவலைப் பட்டேனை
நெஞ்சிலே புக்கு நிரந்தரமாந் தன்னிலையிற்
செஞ்செவே யாண்டவருட் சிற்பரன்மெய்ச் சேவடிக்கீழ்
அஞ்சவே தன்னி னயற்புலமொன் றில்லையே.

கச. புலவின்பமறல்

(கொச்சகக் கலிப்பா)

1800. கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றுருங் களிநுகர்ச்சி
தொண்டுபட்டு நான்வயிரத் தூணடியைப் பற்றுதலாற்
றிண்டுமுண் டாடச் செருக்கைக் குலைத்தகத்து
மண்டுபர வெள்ளத்தில் மாயமாய்ப் போயதே.

1801. சுத்தசச் சித்தாத் துலங்கு சொரூபவருட்
பத்தியளித் தாண்ட பரஞ்சோதி பாதத்திற்
புத்தமுத வார்வாகப் பொங்குசிவ போகங்களென்
பொய்த்தொழிய மோகப் புலநசையைப் போக்கியதே.

கரு. பந்த மறல்

(குறள்)

1802. அறிவா வகந்திளைக்க வாண்டவன்சீ பாதத்
துறைவா லொழிவுகண் டேன்.

(கொச்சகக் கலிப்பா)

1803. சித்தக் கலக்கமறத் தேற்றியவாற் றாலடியேன்
புத்திக் கமுதமாய்ப் பொங்கு பரஞ்சோதி
முத்தித் தலக்கமா மூண்டொளிருஞ் சிற்பதத்திற்
பத்தனா னென்னுமகப் பாழ்மயக்கந் தீர்ந்ததே.

1804. திட்டமே சிட்டமயாத் தேற்றலாற் பாசமனச்
சுட்டறிவற் றோயத் துரியசொரூ பானுபவ
நிட்டையிலே யென்னை நிறுவினான் சிற்பதத்திற்
பட்டிமனக் கற்பனா பந்தமறக் கெட்டதே.

கசு. பற்றறல்

(வெண்பா)

1805. எம்மையிம்மை யேவந் தினிதாக வாண்டவருட்
செம்மையம்மை யப்பன் சிவரமணன்—மெய்ம்மைசேர்
வாழ்முதலாஞ் சிற்பதத்து வாழ்க்கையிலே யற்றது
பாழ்மயலா வுற்றவகப் பற்று. [பொய்ப்

1806. பாதமே யான்றவருட் பற்றுக்கோ டாகவெய்திற்
றேதமில்வாழ் வானபே ரின்பநிலை—போதவியல்
பான சொரூபஞா னானுபவக் காட்சியாற்
போனதுவெம் பாசப் புலம்.

கஎ. உறவறல்

(கொச்சகக் கலிப்பா)

1807. கற்கலுற்ற வெல்லாக் கணக்குகளும் போதுமினிக்
கற்கலுற்ற நின்னுண்மை காண்டியென வாண்டுகொ
சற்குருவாந் தன்னடியே தஞ்சமாப் பற்றலுற்றுங் [ண்
கெற்றுறவா மற்றெதுவு மில்லா தொழிந்ததே.

கஅ. பாசமறல்

(குறள்)

1808. பிரானடிக்கே மெய்யாப் பிணைப்பட்டா லிங்கென்
ஓரானொருபொய்ப் பாச வுறவு.

1809. பாசம் படீரெனப் பாறப் பரமசிவ
நேசங் கிளர்ந்ததென் னெஞ்சு.

1810. பட்டன் குருரமண நிட்டன் பதவொளியிற்
கெட்டதுவெம் பாசக் கிறி.

(வெண்பா)

1811. சிவசத்திக் கூறுந் தெளிந்தவருட் சிந்தைத்
தவிர்தந் துவமான வாண்டான்—பவிசொத்த
மோனப் பெருமிதஞ்சேர் முத்திப் பதவொளியால்
போனதுவெம் பாசப் புணர்ப்பு.

(கொச்சகக் கலிப்பா)

1812. மங்கிக் கலங்கி மலப்பாழிற் கெட்டு நான்
பொங்கிப் பொலியவென் புந்தியிற்புக் காண்டபிரான்
துங்கப் பதஞான சூரிய காந்தியிற்
பங்கப்பட் டற்றதுவெம் பாச விருட்குலமே.

1813. இடக்கரா மோகத் திடர்ப்படா துண்மைச்
சுடர்க்கழல் காட்டிய சுத்த சொருபன்
அடிக்கம லத்தி லரும்புணை கண்டேன்
கடக்கரும் பாசக் கடல்கடந் தேனே.

1814 ஒக்கத் தொழுகிற்பா ருள்ளத்து மோகவிருள்
போய்க்கச் சுடர்விடுசற் போதவருட் பொன்னடிகள்
சிக்கெனவென் னுள்ளுணர்விற் சேரப் பெறுதலாற்
பொக்கமனப் பாசப் புணர்ப்பற் றொழிந்ததே.

1815. அடியாரோ டென்னை யழுகிதாச் சேர்த்து
மிடிதீர வாண்டவருள் வித்தகன்பா தத்திற்
குடியேற லுற்ற குலாவா லடியேன்
படிமீது டாசப் படர்தீர்வுற் றேனே.

1816. வாழ்வே தவமாத் தவமேயாழ் வாகவெனக்
கூழ்வகையா லுள்ளத் தொளிர்வித்த சிற்பரன்மெய்க்
கேழ்கிளர்பா தத்திற் கிளர்சொரு பானுபவ
வாழ்விலே தீர்ந்ததுபொய்ம் மாயமனப் பாசமே.

கூ. பிறப்பிறப் பறல்

(வெண்பா)

1817. உயிர்க்கா வலுறை முடையான் பதத்தி
லுயிர்த்தலா லுண்மை யுணர்ந்தேன்—மயர்க்களுக்
காணுமதே மெய்யாக் கலங்கலுற்ற வாழ்க்கையினிப்
பூணுமா றில்லேன் புலத்து.

(கொச்சகக் கலிப்பா)

1818. பரணமோ ராது பதைத்தேன் பரிவா
லரணமா வாண்டா னருட்சிற் பதத்திற்
சரண மடைந்தேன் சதாசிவவாழ் வுற்றேன்
மரண ஜனன மயக்கமற் றேனே.

1819. ஆளாக வாண்ட வருட்பிரான் சற்போதத்
தாளே சொரூபமாச் சாட்சாற் கரித்தலால்
மாளேன் பிறவேன் மதிமயங்கேன் மற்றெங்கும்
மீளேன் அகண்டசிவ மெய்ப்பதம்விட் டென்றுமே.

1820. ஞான சொரூபகுரு நம்ப னருட்பதத்தில்
யானதுவா வுள்ளத் தியன்றொளிர்மெய்க் காட்சிசேர்
வானளவு மோன வசீகரவாழ் வொன்றலாற்
போனதுமற் றானவுயிர்ப் புன்பிறவித் துன்பமே.

1821. மைத்தவகங் கார மயக்கமனைக் கள்ளந்தீர்
சுத்தவருள் வித்தையாத் துன்றுந் திருவடியென்
புத்தியுள்வாழ் வாகப் புணர்ந்து சதோதயத்திற்
பொய்த்ததுமா யக்கனவாப் புக்க பிறப்பிறப்பே.

1822. மெய்த்தத் துவமே விரும்பு மடியனேன்
பத்திக் கமுதாப் பயின்ற விறைவனடி
முத்திப்பே ரின்பமா மூண்டதா லுள்ளத்திற்
பொய்த்துக் கழிந்ததுகாண் புன்பிறவித் துன்பமே.

௨௦. மரண மறல்

(கொச்சகக் கலிப்பா)

1823. கைகடக்க வொண்ணாவெங் காலையப் பிடையிலின்
றுய்யவென் னுள்ளந் துலங்கொளியாத் தான்கலந்தான்
பொய்கலந்த போகவகைப் புன்கலைக்கம் போகனால்
ஐயனருட் பாதந் தவிர்ந்ததமிர் தத்துவமே.

1824. காரணவு போகமெனக் கற்பனைதீர் சுத்தவருட்
பூரணவாழ் வாகப் பொருந்தினேன் சிற்பதத்திற்
சீரணவு சித்தோப சாந்தி செழித்தலால்
ஆரமுதத் தன்மை யடைந்ததென் சீவியமே.

1825. கருப்புச் சுவையெனக்குக் காட்டியசற் போத
வருட்பிரான் பாதத் தமுதவாழ் வுற்றேன்
குருப்பதமெய்ஞ் ஞானக் குலாவு சொரூபப்
புரிப்புணர்வா லுள்ளமெழப் பொங்குறுமாற் றுமே.

1826. நித்தமுத்தி யான நிரதிசயா னந்தவருட்
புத்தமுத வாழ்வு பொருந்தலுற் றேன் கற்பனைதீர்
சுத்தப் பரவெளியாத் தொக்க சொரூபவருள்
வித்தகப்பார்ப் பான்றெரித்த மெய்ப்பதமாஞ் சிற்பதத்தே.

1827. எய்த்தே யிறந்தநான் யானெனும்பொய்ம் மாயமற்ற
மெய்த்தேற்ற மாக விளங்குசொரூ பானுபவத்
துய்த்த பிரான்றன் னொளிசேர்ந்த மெய்ப்பதத்திற்
புக்கமுத வாழ்வு பொருந்தலுற்றேன் சாவறவே.

1828. ஆவாவென் றன்பா லருளியவான் டாணடிக்கீழ்ச்
சாவாமெய்த் தன்மை சதிர்ப்படநான் கண்டுகொண்டே
ஓவாதென் னுள்ளத் தொளிவெளியாப் பொங்குசுப [ன்;
வாழ்வா லகந்தைமனோ மாயங் கரந்ததே.

குறிப்பு:—ஆவா - இரக்கக் குறிப்பு; (திவ்ய - திருவாய் - மொழி 6, 10, 4).

1829. சாற்றரிய சுத்த சதாசிவமோ னுனுபவந்
தேற்றவென் னுள்ளத்திற் சேர்ந்தொளிர்சச் சிற்பிரான்
கூற்றுதைத்த பாதக் குறிக்கோளாற் சாவகன்று
மாற்றரிய சுத்தசிவ மாண்பதத்தில் வாழ்ந்தேனே.

1830. உறுதிசே ருண்மை யுணர்வோ டிதயத்
தறிவே சொரூபமா வாண்டவன் றாட்கீ
முறைவா லகந்தை யுதியா தழிந்த
விறவிலே சாவா வியலறிந் தேனே.

1831. மாவாக் கியத்தின்செம் மாண்பொருளாக் காண்பா
சாவாப் பிறப்பாற் சதிர்ந்தேன், சமாதியுணர் [தோங்
ஓவா வியல்பா லுடையா னருட்பதத்திற்
பாழ்வா தனைதீர் பரமசிவப் பான்மையுற்றே.

குறிப்பு:—'பிறந்த தேவன்றன் பிரம்மமூ லத்தே' என்னும் உள்ளது நாற்பது கண்டு சிந்திக்கத் தக்கது.

உக. மல மறல்

(கொச்சகக் கலிப்பா)

1832. ஆர்த்தியோ டுற்றேன் அகங்கலந்த மெய்யன்பர்
சேர்ந்தியாற் செல்வத் திருவருட்சீர் வாழ்வுபெற்றேன்
சார்ந்தமோ னக் கான நறிக்குறுறக் கூர்மவுன
வார்த்தையாற் கட்டிமல மாசறுத்தான் மாண்பதத்தே.

குறிப்பு:—மலம் - ஆணவமலம்.

. மயக் கறல்

(குறள்)

1833. கடவுட் பதத்திற் கலந்த கருத்தாற்
படர்வற் றதுமயக்கப் பற்று.

(வெண்பா)

1834. கூகா வெனச்சுற்றங் கூவியழ நான்குலைந்து
போகாது சாந்தானு பூதியுற—ஏகான்ம
ஞானவருட் பார்வை நயந்தளித்த நம்பணாடிக்
கூனமயக் கற்றே னுளத்து.

1835. கள்ளமன மாயையறக் கண்டகுரு பாதவொளி
வெள்ளமெங் கெங்கும் வியாபகமாய்த்—துள்ளுமனக்
கோட்டவகங் காரங் குலைந்தொழியப் பாழ்மயக்கக்
கோட்டையையும் பாழ்செய் தது.

(கொச்சகக் கலிப்பா)

1836. திருக்கணு லென்னைத் திருத்திப் பணிகொண்
டருக்கனு வாண்ட வருட்பிரான் பாதத்
திருக்கலா லான விருட்பாழ் மயக்கக்
கருக்கிலே சந்திர் கதிதுலங் கிற்றே.

1837. திரண்ட வுருவெளியிற் சித்தங் கலங்கி
மருண்டு வெருண்டேன்; மயக்கந் தெளிந்தேன்
இருண்ட வகப்பா ழிகப்பவென் னுள்ளத்
திரண்டற் றெளிர்மெய் யிறைவன் பதத்தே.

உகூ. மயலறல்

(குறள்)

1838. உயிர்க்குறுதி காட்டு முடையான் பதத்கே
மயர்க்கறுதி கண்டுவாழ்ந் தேன்.

1839. ஆண்டுகொண் டான்சே வடியே யுணர்ந்துணர்ந்து
மாண்டதுநா னென்னும் மயல்.

(கொச்சகக் கலிப்பா)

1840. கன்ம மயக்கக் கலியிலகப் பட்டேற்குத்
தன்மெய் யுணர்வு தழைத்தொளிர்சாட் சாற்கார
நன்மையா வாண்டகுரு நாதனருட் சிற்பதத்தில்
வன்மைசேர் வஞ்சமயல் வல்லாண்மை கொட்டதே.

உச. இரட்டையறல்

(கொச்சகக் கலிப்பா)

1841. அன்பி லணைந்த வருட்பிரான் ஆர்வங்கூர்
முன்பில் விளைந்தசுப மோனனு பூதியாற்
றன்பதமே சற்கதியாச் சார்ந்து தரித்தேனுக்
கின்பதுன்ப மான விரட்டையறக் கெட்டதே.

உரு. பேதமறல்

(குறள்)

1842. பரன்பதத்தே யாழப் படிந்தேன் சொரூப
வரன்படைத்தேன் பேதமொழிந் தேன்.

(வெண்பா)

1843. நடுநா யகமாமெய்ஞ் ஞானப் பிரானுக்
கடிநா யடிநாள்செய் யன்பால்—உடனு
வுளத்துறையு மம்மா னொளிர்செம் பதத்திற்
புளித்ததுபல் வேற்றுப் புலம்.

(கொச்சகக் கலிப்பா)

1844. ஒன்றான மோன வுணர்வே சொரூபமா
நின்றா னடியே நினைந்துநினைந் தன்னியமொன்
றின்றாக வெல்லா விரட்டை யொடு முப்புடியும்
வென்றே விளங்கலுற்றேன் வித்தகமோ னப்பதத்தே

1845. செப்பமார் சுத்தவருட் செல்வச்சீ மானடிக்கீழ்த்
தப்பருமெய்ஞ் ஞான சமாதி தலைப்படலால்,
மைப்புறுபொய்ம் மாய மயக்கான முப்புடியின்
கற்பனை பேதக் கலக்கங் கழன்றதே.

உசு. அலைவறல்

(கொச்சகக் கலிப்பா)

1846. கலக்கமற வென்றுங் கருத்தன் பதத்திற்
றுலக்கமா நின்ற சொரூபானு பூதி
திலக்கணோ வாழ்வு நிரம்பவுற் றேனுக்
கலைக்கழிவற் றோய்ந்த தகனசிற் பரத்தே.

உஎ. இடரறல்

(குறள்)

1847. அறிவான வாண்டா னடிக்கீ ழகங்கெட்
டுறைவா லொழிந்த திடர்.

உஅ. துன்பமறல்

(கொச்சகக் கலிப்பா)

1848. யாதோர் துவித வியைபுமற்ற தற்பரமெய்
யிதே யெனத்துலங்கு மெம்பிரான் சிற்பதத்திற்
போதானு பூதிசிவ பூரணமாப் பொங்கலாற்
சூதான மோகமனத் துன்பமறப் பேர்ந்ததே.

உகூ. துடிப்பறல்

(கொச்சகக் கலிப்பா)

1849. உள்ளும் புறமுமொன்று வூன்றுபர மோனவருள்
வெள்ளம் பரந்த விசுத்த வெளிக்கமலத்
துள்ளந் திளைத்துமது வுண்டு மதர்த்தவண்டாய்த்
துள்ளும் பதைப்பாந் துடிப்பற் றெழுந்ததே.

௩0. கவலையறல்

(கொச்சகக் கலிப்பா)

1850. அடியோங் களைத்தன் னடியிலே காவற்
கொடியோங்க வைத்தான் கிளர்சொருபப் பெம்மான்
குடையோங்கு சாந்தக் குளிர்நிழலிற் சற்றும்
மிடியாங் கவலையற மிக்கொளிர்கின் றோமே.

1851. பற்றேது மின்றிப் பரமனையே பாவிக்கக்
கற்றேன் பிறிதொன்றுங் கல்லேன் உபசாந்த
நற்றேன் பிலிற்றுமெய்ஞ் ஞானவருட் சேவடிற்
செற்றேன் மயக்கமனச் சிந்தா குலங்களே.

1852. மனக்கவலற் றுய்ய மகிழ்ந்தேன் எனக்குந்
தனக்குமுள்ள வத்துவிதத் தன்மை துலங்க
நுனிக்கலரு நுட்பவொட்ப நோக்கமா வுள்ளத்
தினிக்கவுற்ற வாண்டா னியற்செம் பதத்தே.

௯௩. கரும மறல்

(கொச்சகக் கலிப்பா)

1853. பரம சிவச்செம் பதத்திலே நானென்
கரும மனைத்துங் கழன்றெழுந்தேன்; மிக்க
வருமைசேர் சுத்த வருள்வெளியா மங்குத்
தெருமரல்சேர் கற்பனையாத் தீர்ந்ததெல் லாமே.

1854. குருவாக வென்னைக் குறிக்கொண்ட வாண்டான்
ஒருதாலு வுள்ளத் தொளிர்தலுற் றுன் பாதத்
திருவே றலாவென் னியல்கண்டு கொண்டாங்
கருவான வல்வினைநோ யற்றெழுந்த வாறே.

௯௪. ஊழறல்

(கொச்சகக் கலிப்பா)

1855. சூழ்வுற் றெனைக்கெடுத்த சூனியமா மோகவகப்
பாழ்கெடுத்தாட் கொண்டவருட் பார்ப்பான் பதநிழ
றுழ்வுற்ற வாழ்வு தலைப்பட்ட மெய்யுணர்வால் [லிற்
ஊழ்கெட் டதுதன் னுடையானைக் காணுதே.

௯௫. ஊனமறல்

(வெண்பா)

1856. அளித்தக்க நானல்லே னுண்டான் பதத்திற்
களித்துத் திளைத்த கருத்தேன்—களங்கமில்சுத்
தாகாய மான வகண்டானு பூதியிலே
தேகாதி யூனமகன் றேன்.

௯௬. வேசறல்

(கொச்சகக் கலிப்பா)

1857. தோளாச் சுரையாக வாளா கழிந்தேனைச்
சூள்சாற்றி மோகமனச் சுட்டறிவோ டாணவஞ்செற்
றுளாக வாண்டவரு ளங்கனான் சேவடிக்கீழ்
மீளாக் கதிகண்டு வேசாற லுற்றேனே.

௫௫. இருளறல்

(கொச்சகக் கலிப்பா)

1558. பூண்டமனந் தாமறப் போக்கு முயாமதியா
மூண்டொளிர்பே ரின்ப முகட்பொலிவால் உள்ளமெலாம்
காண்டகுரு நாத னருட்செம் பகத்தில்வாழ்
வீண்டளா விய்லை யிருட்பாழ்நீ காக்கமே.

௫௬. ஆவரண மறல்

(கொச்சகக் கலிப்பா)

1559. ஆதரமெய் யன்புக் கதிதூர மானகூசா
டாதனேன் டாலருவி யாண்டவன்சற் போதவுரு
பாதவொளி யாலிதயப் பாசவிருட் பாழ்கொள்
பேதமைக் கற்பனை விட்சேபம் பேர்ந்ததே.

௫௭. பொய்யறல்

(வெண்பா)

1560. அதியாச் சிரமியா வாண்டகுரு பாதங்
கதியாகக் காத்தேன் கருத்தில்—இதயப்
பதியா மவன்சொருபப் பார்வையின்மற் றெல்லாம்
கதையாக் கழிந்தன காண்.

௫௮. இரவு பகலறல்

(வெண்பா)

1561. மொழியதற்கொன் றில்லாத மோனமா முத்தப்
பழமுதற்கென் சிந்தை பறிபோய்க்—கழிதலாற்
சொல்லும் பொருளுமறத் துன்றுபரஞ் சோதியகத்
தல்லும் பகலுமற் றேன்.

௫௯. கற்பனையறல்

(கொச்சகக் கலிப்பா)

1562. அன்றிமற் றொன்றில்லா வற்புதசுத் தாத்துவித
வென்றிசே ருண்மை விளக்கமாங் கண்ணேனைக்காவ்
லொன்றினன் பாத வுணர்வொளியிற் பொன்றியது
குன்றியமோ காணவைப்பாழ்ங் கற்பனை சொப்பனமே.

கலக்க மறல்

(கொச்சகக் கலிப்பா)

1563. தூண்டுசிவ ஞானச் சுடரொளியா லுள்ளத்து
மாண்டொழிய மோக மனப்பேயைக் கூர்விழிக்க
ஆண்டவன்பா தத்தி லநட்பரமோ னநுபவங்
காண்டலால் வாழ்விற் கலக்கமறப் போயதே.

மலை வறல்

(வெண்பா)

1564. நிலையிலே யென்னை நிறுத்தியபொற் பாத
மலையிலே யென்மலைவு தீர்ந்தேன்—உலைவிலா
மோனமா மென்னகத்து மூண்டே யொளிவளர்மெய்ஞ்
ஞான சொரூபமாய் நான்.

மானாபிமான மறல்

(கொச்சகக் கலிப்பா)

1565. அடர்ந்தமயற் பாழா ணவவிருளை முற்றக்
கடந்தொளிர்மெய்ஞ் ஞானக் கழலால் அகந்தை
மடந்தருபொய்ம் மானாபி மான மயக்க
நடந்தருபேய்க் கூத்து நலிந்தொழிந்த வாறே

மெய்த் துறவு

(கொச்சகக் கலிப்பா)

1566. அறிவாக வாண்ட வருட்பரன் தானே
நிறைவான வுண்மை நிதியமாய் உள்ளத்
துறைவதாக் காட்டி யுதவினன் பாத
வுறவிலே யுண்மைத் துறவுபெற் றேனே

65, இயற்பர வாழ்வு

(கொச்சகக் கலிப்பா)

1567. உம்பரார் காணா வொருத்தன் அருட்குருத்தா
னிம்பரோங் காண வெழுந்தருளி மிக்கசிவச்
செம்பரமா மெய்ம்முண்மை தேற்றினாற் சேவடிக்கீ
ழெம்பரமன் றானா மியற்பரவாழ் வார்ந்தோமே.

1868. வியக்க வொண்ணுதவருள் வித்தகன்சீ பாத
நயப்புணர்வென் னுள்ளத்து நண்ணலால் வாழ்விற்
கயப்பு முவப்புங் கழன்றொழியப் பொங்கு
மியற்பரமார்த் தத்தி லிகபரமொன் றின்றே.

1869. ஏலவென் னுள்ளத் தெழுந்தருளி யானென்னும்
மாலகற்றி யாண்ட மனோதீதன் வண்பதத்தில்
வாலறிவா வாழ்வு வளர்தலால் வற்கடமெக்
காலுமற்ற வுண்மைக் கடவுளியல் பற்றியதே.

1870. வாதனையாற் கெட்டழிந்த வஞ்சவகப் பேயனேன்
கேதவகங் காரக் கிறியகற்றி யாண்டவனால்
ஏதமில்பே ரின்ப வியற்பரவாழ் வார்தலுற்றேன்
போத வருள்வடிவாப் பொங்குசிவச் செம்பதத்தே.

1871. நாடக் கிடைத்தமெய்ஞ் ஞானத் திருப்பதத்திற்
கூடக் கிடைத்தேன் குருத்துவமா மோனவியல்;
பாடக் கிடைத்தசிவ பாரம் மியவுண்மை
நீடக் கலந்தியல்பா நெஞ்சத் தொளிர்ந்ததே.

1872. குறைவிலாச் சிற்சொருபக் கோமான் பதத்து
நிறைவிலே வாழ்வு நிரம்பலுற்றேன்; உண்மை
யறிவிலே பொய்ச்சுட் டறிவறலாற் பாச
விறவிலே சொந்த வியற்பதம்பெற் றேனே.

1873. ஒளிகாட்டி யாண்ட வொருத்தனென் னுள்ள
வெளியாந் துலங்கலுற்றான் வேறுபா டின்றித்
தெளிவா வொளிர்சொருபச் செம்மலடிக் கிழ்நான்
இளிவரலொன் றில்லா வியற்பதம்பெற் றேனே.

1874. கலக்கமின் றாகக் கலந்த சொருபத்
துலக்கமே சுத்தத் துரீயவாழ் வான
நிலைக்கணென் னெஞ்சை நிறுவினான் பாதத்
திலக்கமாத் தன்று மியற்பரஞ்சார்ந் தேனே.

1875. காரா ணவஞ்சேர் கடும்பிறவித் துன்பமற
ஆரா வமுதனா னுனுபவங் கூட்டுசிவப்
பேரா சிரியப் பிரானருட்செம் மாண்பதத்திற்
சீரார் சுவத்தநிலை சேர்ந்தேன் செழிக்கவே.

1876. அயர்ச்சிதீர் சுத்தஞா ஞனுபவம் பொங்க
வுயர்ச்சிசே ருண்மைநிலே யுற்றே னடியேன்
முயற்சிசேர் மோக முனைப்பறச்செற் ருண்ட
வியற்சிற் பரமான வெம்மான் பதத்தே.

1877. ஆண்டவன்பா தத்தி லரண்கண்டேன் மோகமறப்
பூண்டவருட் போதப் பொலிவால் அகந்தைமனம்
மாண்டொழியப் பொங்கும் மகத்தான வாழ்விநயத்
தீண்டப்பெற் றின்ப வியல்வடிவா வுள்ளேனே.

66. பரமானேன்

(வெண்பா)

1878. முன்னே மடம்பட்டேன் மூவாசைக் கற்பனையிற்
பின்னே சதிர்த்தேன் பிரானடியில்—என்னேயம்
கோன்ளைகொண்ட கோமான் குருரமணன் கூரருளால்
ஒள்ளியே ஞனே னுளத்து.

1879. ஞானமளித் தாண்டகுரு நாதன் பதத்திலருட்
போனகமுண் டுள்ளுணர்வு பூரித்து—மோனவெளி
தானேநா ஞகத் தழைத்துச் செழித்தலால்
யானே பரமா யினேன்.

(கொச்சகக் கலிப்பா)

1880. தொடங்குமுயற் கர்த்தத் துவமுனைப்பற் றேய
உடங்கென் மனத்தை யுளத்தி லொடுக்கி
மடங்கொன்ற சுத்தவருள் வாலறிவன் பாதத்
தடங்கலுற்றேன் மோன வகன்பரமா னேனே.

67. அருள் வாழ்வு

(குறள்)

1881. கடைக்கணித் தாண்டவருட் கண்ணுடைய வள்ளல்
அடிக்க ணமைத்தே னரண்.

1882. ஊனமனக் கற்பனு மோகமற வுள்ளத்துத்
தானவிர்மெய்த் தாளே சரண்.

1883. அரும்பயன்செய் யாண்டா னருட்செம் பதவார்
வரம்படவுள் ளூன்றிற் றுணர்வு.

1884. பந்தமுற வாழ்வா வுளங்கிளரப் பொங்கியது
சுந்தசிவ பத்தி யுணர்வு.

1885 என்னிலே யாறு விருந்தொளிரும் மாணப்பகுத்து
மன்னியது சுத்தவருள் வாழ்வு.

1886. வாய்வெனக்கு மாட்சிபெற வாய்த்தது நானென்றும்
பாழ்கெடுத்த வாண்டான் பதத்து.

1887. அறிவை விளக்கியநல் லாண்டா னடிக்கீழ்ச்
செறிய வுறைதல் சிறப்பு.

1888. மங்கா வருள்வாழ்வு வாய்த்ததனைக் காண்டா னென்
பங்கே ருகச்செம் பதத்து.

1889. அடக்கீ ழருள்வாழ் வடைந்தேன் உடையான்
குடைக்கீ ழடைந்த *குடி.

*குடி - குடியேன் எனத் தன்மைக்கண் வந்தது

1890. மோனவுணர் வாயகத்து மூண்டபிரான் சிந்தத்தில்
வானளவப் பொங்கியது வாழ்வு.

1891. மருந்தா மடுத்தவருள் வாலறிவன் பாதம்
விருந்தா விளைந்த தகத்து.

1892 அதெந்துவென் றுண்ட வருட்சிற் பரன்செம்
பதந்தனில் வாழ்வடைத் தேன்.

(வெண்பா)

1893. மோனமலிந் தாண்ட குருமூர்த்தியருட் பாதமலர்
வானாவ வென்னுள் விளைத்தலால்—ஊனவகப்
பேய்க்கலக்க மான பெருங்கனவு பேர்ந்தொழிய
வாய்க்கலுற்ற தற்புதமெய் வாழ்வு.

1894. உண்மை யுணர்த்து முடையான் பதத்தெருள
வண்மைசேர் வாழ்வு மலர்ந்தனால்—உண்மயல்சேர்
கற்பனையு டாடிக் கலங்கா தொளிருமுயிர்
தற்பரமே யாகத் தழைத்து.

1895. நிருவிகற்ப மோன நிகழ்ச்சியா மென்னுட்
பெருவிருப்ப மாகப் பிறங்கும்—குருவருட்பா
தாரவிந்தத் தேனருந்தி யாரா வியற்கையவா
பேரவிந்தை வாழ்வுபெற் றேன்.

1896. இருள்வா யழுந்தி யிடர்ப்படா தின்ப
வருள்வாழ்வு பற்றி யமைந்தேன்—குருவா
யெழுந்தருளி யாண்டா னியற்செம் பதத்தி
லழுந்தலே வாழ்வா வறிந்து.

1897. அருட்கா ருணியனு வாண்டான் பதத்திற்
பெருக்கமுற்ற மோனப் பிரசம்—செருக்குற்று
வெம்புமனத் தாபவிட வேகங்கூர் வேட்கைகெட்டுத்
தன்புணர்வாப் பாய்ந்த தகத்து.

1898. ஆழப் படிந்த வறிவா லகந்தெளியப்
பாழைக் கடந்தொளிர்மெய்ப் பாதத்தே—ஏழைப்
தொழும்பனேன் ஞான சொரூபானு பூதிச்
செழும்பயன்சேர் வாழ்வுதினைந் தேன்.

1899. பற்பல் விதமாகப் பாராட்டி நான்மகிழக்
கற்பளித்த ஞானவருட் கற்பகத்தின்—பொற்பதநீ
ணிழலிலே கூடி நிலாவுசொரூ பானந்த
வாழ்வளைந்தே னன்பு மலர்ந்து.

1900. ஓதப் புரோதமா வூடுருவி யெங்குமுள
போதப் பொருளாம் புராணனடி—ஏதப்
படாமலென்றன் பாழ்மயக்கப் பற்றறுத்த வாழ்வு
அடாதவகப் பேயற் றது.

1901. நானென்னு மூனகந்தை நட்டமாய்த் தன்சொரூப
மோனானு பூதி முகக்கவே—தானப்
பொலிந்தகுரு பாதச்செம் பொன்னுலக வாழ்வு
மலிந்ததெனக் கென்றும் மனத்து.

1902. உள்ளமா வோங்கு முடையான்பே ரின்பவருள்
வெள்ளமா மோன வியன்பதத்தே—கள்ளமனப்
புன்கவலை யற்றவருட் பூரணஞா னுபவத்
துங்கவியல் வாழ்வுதோய்ந் தேன்.

1903. சுட்டறிவாம் பேதச் சுழற்சிசேர் மோகமனங்
கெட்டொளிர்தல் சுத்தவருட் கேவலமா—நிட்டையொளி
வீச வுளத்தில் விளைத்தகுரு பாதநிழல்
வாசமே பேரின்ப வாழ்வு.

1904. பிச்சைக் குழன்று நான் பிழை யுறு துற்றுழியே
பிச்சையளித் தாட்டும் பிரான்பதத்தே—மிச்சையாந்
தைன்னியச்சிந் தாகுலந்தீர் சாந்த சிவானுபவ
மெய்ந்நிறைவென் வாழ்க்கை விருந்து.

குறிப்பு :— உற்றுழி - இருந்தவிடத்து. தைன்னியம் - தைன்
யம் என்பதன் விரித்தல்.

(கொச்சகக் கலிப்பா)

1905. கல்லா முருட்டுக் கசட்டுக் கடைநாயேன்
பொல்லா மயக்கப் புலவாழ்விற் புக்கழுந்தி
அல்லாப் புருதென் னறிவைத் தெளிவித்த
வல்லாளன் வண்மையால் வாழ்ந்தே னருட்பதத்தே

1906. அத்தமியா தென்று மமிர்சொரூப மாகவகந்
துத்தமசற் போத வொளிபரப்பிப் பொய்ம்மயக்கு
மத்தவகங் காரமற மாற்றினென் மாணமக்கீழ்ப்
புத்தமுத மானவருட் பூரணவாழ் வுற்றதே.

1907. குருபாத பக்திக் குலாவா விதயத்
தொருவாத வுண்மை யுணர்வுநித்த வாற்றுற்
கருவா தனைசேர் கலக்கமறப் பொங்கும்
பெருவாழ் வியல்பாப் பெருகியது மன்றே.

1908 மூலபண் டாரமா மோனப் பெரும்பொருள்
சால நிரம்பியதன் சந்நிதியா லாண்டபிரான்
கோலமே முற்றக் குறிக்கொண்டேற் றான்றவருள்
வாலறிவா வாழ்வு மலர்ந்ததுதன் மாண்பதத்தே.

1909. பாழுக் கிறைத்தவிவ் வேழைத் தொழும்பனேன்
ஊழிக்கோ ரூழியா வுற்றபரஞ் சோதியாற்
பாழைக் கடந்து பராற்பரமாப் பொங்குசிவ
மாழைப் பதத்தில் வளம்படவாழ் கின்றேனே.

1910. பாழ்வா தனைசேர்வெம் பாசமன வேசறவால்
மாழ்கா தடியேன் மனத்தூடு சுத்தவருள்
வாழ்வா வளர்சொருப வள்ளற் பிரானடியின்
கேழ்வா லறிவொளியிற் கேமநிலை கண்டேனே.

குறிப்பு:—மனத்தூடு வளர் என்பதேயன்றி, மனத்தூடு கண்டேன் எனவு மாம்.

1911. துட்டவகங் காரமனச் சூதான கற்பனையின்
சுட்டறிவு கெட்டொழியத் துன்னெனுநோக் காலகந்த
நட்டமா டுற்றமெய்ஞ் ஞானப்பே ரின்பவருட்
சிட்டப் பிரானடியிற் சேமவாழ் வுற்றதே.

1912. தாழ்வா மகந்தைமனத் தாபஞ்சேர் கற்பனையின்
மாழ்கா தளங்குளிர வைகலுற்றேன், மோகவுகப்
பாழ்வா தனையின் பதைப்பகல்சாந் தானுபவ
வாழ்வா வொளிர் சொருப வள்ளற் பிரான்பதத்தே.

1913. விளக்கமா மோனவருள் விண்ணேக்கம் பாலித்
துளக்கலக்க மோட்டியமெய் யொள்ளியோன் ருட்கிற்
அளக்க வொணுதபே ரற்புதவாழ் வுற்றேன்
முளைக்கலுற்ற நானென்னும் மோகமனஞ் சேத்தே.

1914. விந்தையா நன்கு விரும்பி எனைத்தனக்கே
சொந்தமா வாண்ட சொருப குருபதத்திற்
சிந்தையறத் தீர்ந்த சிவத்துவமா மோனவருட்
புந்தியாற் பொங்கிப் பொலிந்ததென் ஜீவியமே.

1915. பொய்ம்மா வுலகப் புலக்கலக்கம் பேர்ந்தொழியச்
செம்மா ணடிக்கீழ்ச் சிவாயநமச் சிந்தனையாற்
பெம்மான் சொரூபவருட் பேறுபெற்று வாழ்கின்றேற்
கெம்மா நிலத்துமினி யெய்தற்கொன் றில்லையே.

1916. இளிப்பட்ட தீன வெளியனேன் ஞான
வொளிப்பட்ட சூழ லுடையானைச் சேர்ந்தேன் :
களிப்பட்ட மோகக் கருத்தற் றொழிய
வளப்பட்ட தொட்பருட்ப வொண்பதத்து வாழ்வே

1917. கரவான மோகமனக் கற்பனைதீர் சுத்தப்
பரவாழ்வு வாழப் பணித்தான் பதமே
வரமான சுத்தவருள் வைப்பாக வுள்ளத்
தரமான வுண்மைவாழ் வொட்பமுற் றேனே.

1918. ஆண்டா னருளைக் கதீனமா வுற்றவென்பால்
ஈண்டா தொழிந்தகெவ் வெவ்வழுமெய் வாற்றுழப்
பூண்டான் கழலுணர்வே புந்தியிற் பொக்கசமா
மூண்டார்வர் முற்ற முழுப்பரவாழ் வுற்றதே.

1919. வாளா பிறந்திறந்த மத்தனேன் சற்குருமெய்த்
தாளே சரணைத் தலைப்படலாற் சற்றும்பின்
மீளாக் கதியா விளங்குசிவக் கேவலத்து
மாளா வியற்பரமெய் வாழ்வு படைத்தேனே.

1920. சூடிலா மோன விறைவனருட் சேவடிநான்
கூடலா லுண்மைக் குலாச்சே ரிதயமே
நீடியபே ரின்ப நிலயமுந்தி யானபெருந்
தீயல்வாழ் வுற்றேன் பெறலரும்பே றாகவே.

1921. தோளா முழுமணியாத் தோக்கு செருபமச்
காளா வடைந்த வடியனே னுள்ளத்து
மீளாக் கதியா வொளிப்பட்ட சிற்பதத்தில்
மாளா வருளமுத வாழ்வு மடுத்ததே.

1922. எம்பிரா னாக விதயத் தொளிர் சொருபத்
தம்பிரான் பாதஞ் சரணைகப் பற்றலால்
உம்பரார் காணா வுலகான சுத்தவருட்
செம்பதவாழ் வுற்றுச் செழித்தே னடியேனே.

1923. ஆண்ட பிரான்றன் னருட்பதத்தா டாழ்ந்தடியேன்
காண்டலான் மோனவியற் கைவல்ய வுண்மைநிலை
பூண்டமயற் பாசபந்தப் பூட்டற் றொழியவொன் ற
நிண்டவியற் பார நிலைக்களவாழ் வெய்தியதே.

குறிப்பு:—ஒன்றுநிண்ட - ஏகாண்ட மாகப் பரந்த.
நிலைக்களவாழ்வு - பரவெளி வாழ்வு.

1924. மூடு மறைதிமல மோகவசுப் பாழிருள்விட்
டோடவென் னுள்ளத் தொளிர்சொருப சற்குருவால்
விடுபே ருக விளங்குசிவச் செம்பதத்திற்
பீடுசேர் மோனப் பெருவாழ் வடைந்ததே.

1925. கல்லா வறிவிற் கடைப்பட் டொழிந்தபாழ்ம்
பொல்லேனை யாண்டவருட் புண்ணியன்செம் பொன்
[னடிக்கீழ்
எல்லா நலனுமொருங் கேய்ந்தவியற் சிற்பரவாழ்
வெல்லே யடியே னிதயந் திளைத்தேனே.

1926. இகமும் பரமும்மற் றெல்லா நலமும்
தொகவியல்சுத் தான்ம சொரூபமா வாண்டான்
அகமுடையா ருன வருட்பிரான் பாத
மகிமையில்யா னுற்றேன் மகத்தான வாழ்வே.

1927. சிவத்திலென் னுண்மை திளைக்கமெய்ஞ் ஞானத்
தவத்தியல் காட்டிய சற்குரு பாதத்
தவத்தக் கலக்க மறக்கண்டு கொண்டேன்
சுவத்நமாத் துன்று சுவானுபவ வாழ்வே.

1928. நானுக வுள்ளமெய்ஞ் ஞானப் பிரானடிக்கீழ்
மோனனு பூதி முகப்பாற் பரமசுப
வானன சுத்த வளஞ்சே ரருட்பெருவாழ்
வானு வியல்பா வகங்கிளரப் பொங்கியதே.

1929. உன்மாத மானபா ழூத்கையகப் பேய்ச்செருக்கின்
பொய்ம்மாய மாமுப் புடிக்கலக்கக் கற்பனையற்
றம்மா னருளா லகந்தெளியப் பொங்குசிவச்
செம்மாண் பதத்திற் செழிக்கவாழ் கின்றேனே.

1930. கற்றையாத் தோன்றுமனக் கற்பனையைச் செற்றவந்நாள்
வெற்றியா லென்னுள் விளங்கு சொரூபவிறை
அற்றமற்ற சுத்த வருள்வெளியாங் கைவல்யப்
பெற்றிசேர் தாவிற் பெருகவாழ் கின்றேனே.

1931. ஏதக் கலக்கமில் பே ரின்பவெளி காட்டியகத்
தாதிக்கங் கொண்ட வருட்பிரான் சேவடிக்கீழ்
மாதுக்க மான மயக்கப் பிறவிதீர்
மேதக்க வாழ்வு விளைந்ததென் னுருயிர்க்கே.

1932. துளங்கு மகந்தைத் துடிப்பான வேகக்
களங்கமற வாண்டான் கழல்சேர் கருத்தில்
விளங்கலுற்ற மோன வெளியிலே யுண்மை
வளங்குலவு சுத்தவருள் வாழ்வுபெற் றேனே.

1933. சந்ததமு மென்னைத் தலையளித்த தம்பிரான்
பந்தமோட் சக்கற் பனையறச்செற் றாண்டுகொண்டான்.
சொந்த சொரூபமாத் தோன்றுமவன் சோதிபதத்
தந்தமில்பே ரின்ப வருள்வாழ் வடைந்ததே.

1934. "என்னவொன்று வொட்டநட்ப வுண்மைப் பரமான
தன்னருளாற் றன்னடிக்கீழ்த் தானே வொடுங்கலால்
என்னதுநா னற்ற வியலே சொரூபமா
மன்னியபே ரின்பவருள் வாழ்வு மலர்ந்ததே.

1935 சிற்பரமா வுள்ள சிவத்திலே நானழிந்து
நிற்பதா முண்மைநிலை நெஞ்சிலுற வாண்டபிரான்
பொற்பதமென் சென்னியிலே பொங்கலா லாள்கின்
அற்புதமா வுள்ள வருட்பரசாம் ராச்சியமே. [றேன்

1936 பாழைக் கடந்த பரஞ்சோதி யெங்கெங்குஞ்
சூழத் துலங்கு சொரூபானு பூதியால்
ஏழைத் தொழும்பனை யெம்பிரான் சிற்பதத்தில்
வாழக் கிடைத்தேன் வரையிலா வூழியே.

1937. பரமான சுத்தவருட் பார்வையென் னுள்ளத்
திரமாக வூன்றுவித்த வொளியான் றுளிர்
வரமான மோனவியல் வைப்புணர்த்து முற்றச்
திரமான வாழ்வு செழிக்கவுற் றேனே.

1938. அம்மா னருட்சே வடியுணர்வு டாழ்ந்தேறுங்
கெம்மா நிலத்துமினி யெய்தக் கடவதின்றாப்
பெம்மான் சொரூபப் பெருமிதஞ்சேர் சிற்பாவாழ்
வம்மா வெனைச்சேர்ந் துக்கிளரப் பொங்கியதே.

1939. அற்பத் தியேனு மடியேனை நாலுதித்த
வுற்பத்தி யெங்கென் றுசாவியுளத் தூன்றுவது
சற்பத்தி யாகத் தலைப்படுவித் தாண்டவன்சச்
சிறபதத்திற் கூடியது சிற்பரவாழ் வென்னுயிர்க்கே.

1940. கரண(ம்)மூன் றுழலுங் களங்கமில்லேன் ஆண்டான்
சரணசம் பந்தச் சரியையே சார்வால்
மரணவாழ் வான மயக்கமனம் பொன்றப்
புரணவாழ் வுற்றுப் பொலிந்துநின் றேனே.

1941. தொன்றுதொட் டுள்ள சொரூபமா வுள்ளத்து
நின்றொளிர்மெய்ஞ் ஞான நிலையிலே யென்னறிவை
யொன்றுவித் தாண்ட வுடையான் பரமார்த்த
வென்றிசேர் சிற்பதத்தில் வேறறவாழ் கின்றேனே.

1942. கரவான மோகக் கலக்கமற வுள்ளத்
துரஞான வுண்மை யொளிவளர மோனப்
பரமான சாந்திப் பதத்திலே என்னைத்
திரமாக வைத்தபிரான் சேவடியென் வாழ்வே.

1943. சருவுமனக் கற்பனை சத்திச் சுழலிற்
பருவரலுற் றேங்கிநான் பாழ்த்தொழியா வாறு
குருவடிவா வென்னைக் குறிக்கொண்ட கோமான்
றிருவடியே வாழ்வாத் திளைக்கலுற் றேனே.

68. கைவல்யம்

(குறள்)

1944. பரம னருட்சிற் பதத்திலே கண்டேன்
வரமென்னுங் கைவல்ய வைப்பு.

(வெண்பா)

1945. மோகங் கெடுத்தகுரு மூர்த்தி பதத்திலெனக்
கேகத் துவவுணர்ச்சி யெய்தலால்—மோகக்
கலக்கமில்சற் போதவருட் கைவல்யப் பேறு
துலக்கமுற்ற தென்னியல்பாத் தொக்கு.

(கொச்சகக் கலிப்பா)

1946. தெள்ளத் தெளிந்த சிவானுபவச் சீர்மைபெற்றேன்
உள்ளத் துணர்வொளியா வுள்ள சொரூபவியல்
வள்ளற் பிரானடியில் வாழ்தலால் யானெனும்பொய்க்
கள்ளமறத் துன்றுசிவக் கைவல் லியத்திலே.

1947. பரவுற் றடிபணிந்தேன் பாழ்படா துள்ளத்
துரமுற்ற வுண்மையுணர் வூட்டினன் றுட்கீழ்க்
கரவற்ற சுத்தவருட் கைவல் லியமே
திரமுற்ற வாழ்வாத் தெளிந்தியல்கின் றேனே.

1948. யானெனும்பொய்ம் மோக மிகக்க வுளத்தொளிர்மெய்ஞ்
ஞான சொரூபகுரு நாத னடித்தலத்தில்
வானமா வெங்கும் வளைத்தவருட் கைவல்ய
மோனவியல் வாழ்வு முயங்கியதென் னுருயிர்க்கே.

1949. கூரறிவா மோனக் குலாவாலே சுத்தவருட்
பூரணவாழ் வுள்ளத்திற் பொங்க வளித்தபிரான்
பாரவெளி யான பராற்பரமாங் கைவல்யச்
சீரணவு பாதவொளி சிக்கெனச்சேர் வுற்றதே.

1950. காணாத சுத்தவருட் கைவல்யக் காட்சிநான்
மாணாத் துவித மயக்கமறக் கண்டுகொண்டேன்
பேணாநின் றேனைப் பெரிதளிப்பான் போற்றேன்றி
யூணா வுயிரையே யுண்டா னெளிப்பதத்தே.

1951. சொற்கலையே யாய்ந்து சுழன்று கலங்குறுங்காற்
றற்குறியா வென்னைத் தலைப்படுவித் தாண்டுகொண்ட
சற்குருபா தத்தியல்சாட் சாற்கார மெய்த்தெளிவாற்
கற்குறயா தொன்றுமிலாக் கைவல்யந் துன்றியதே.

1952. தெழிக்கவே தக்க செருக்கனேன் மெய்யன்
பொழுக்கமோர் சற்றுமற்ற வூத்தையேன் வாழ்வு
செழிக்கவே யாண்டவருட் சிற்பிரான் செம்பொற்
கழற்கணே கைவல்யங் கண்டுகொண் டேனே.

1953. முற்றமுழுச் சிற்பரமா மூண்டமோ னுனுபவப்
பெற்றிமையிற் பேராப் பெருவாழ் வளித்தபிரான்
மற்றுவமை யற்ற மனோதீதன் மாணடியிற்
கற்றிடமற் றென்றில்லாக் கைவல்யங் கண்டேனே.

1954. அத்துவித மான வருட்சிற் பரசொருப
வித்தையா வென்னுள் விளங்குங் குருபதத்திற்
சித்துவங்கூ ரந்தத் திருவருட்கை வல்யமன்றி
வித்தையாக் கற்றறிய வேறென்றுங் காணேனே.

1955. ஆயப் படுபல் லறிவுகளுங் கற்பனு
மாயக் கனவா மடங்கிடவென் னுள்ளத்து
ஞாயிரு நண்ணலுற்ற ஞானப் பிரானடிக்கீழ்
வாயலுற்றேன் சுத்தவருள் வானக்கை வல்லியமே.

1956. ஈண்டக் கடவதினி யாதுமெனக் கின்றாகக்
காண்டலுற்ற வாண்டான் கழலிற் கதிகண்டேன்;
பூண்டசிவ பூரணமாப் பொங்குஞா னுனுபவங்
காண்டலுற்ற வாழ்வெனக்குக் கைவல்ய மானதே.

1957. தெள்ளிய சுத்தத் திருவருட்கண் ணேக்கத்தால்
உள்ளம்புக் காண்ட வுடையான் பதவொளியிற்
கள்ள வகந்தைமனக் கற்பனு பேதமறத்
தள்ளநமெய் வாழ்வாத் தழைத்ததுகை வல்லியமே.

1958. சுவத்தமாத் துன்று துரீய சொருப
சிவத்திலே வாழ்வு திளைத்திட ஞானத்
தவத்தியல் காட்டிய சற்குரு தாளில்
விவத்தைசேர் கைவல் லியந்தெளிந் தேனே.

1959. பாசமறக் கண்டவருட் பார்ப்பான் பதவுணர்வே
நேசமுறப் பொங்குபர ஞேயநிஷ்டை யாகவெனக்
கேசறவு தீர்ந்தேன் இதயம் பரவெளியாத்
தேசுறுகை வல்யச் சிறப்பியல்வாழ் வுற்றதே.

1960. நெஞ்சகத்து மோன நிராமயமெய்ஞ் ஞானவொளி
விஞ்சலுற வென்னை வெறுவெளியாக் கண்டபிரான்
சஞ்சலங்கள் போகச் சதிர்த்தசொரூ பானுபவக்
கஞ்சமலர் செம்பகத்திற் கைவல்யங் கண்டேனே.

1961. அருட்பார வாழ்வளித்த வாண்டான் சொரூபத்
திருப்பாத சோதித் திறத்தால் அகந்தைக்
கருப்பா ழிருள்கரக்கக் கைவல்ய வுண்மைப்
பரப்பா விளங்கியதென் பார்வை பகாதே.

1962. மறதிதீர் சுத்தவருள் வாலறிவா வாண்ட
வுறுதிசே ருண்மை யுடையான் பதத்திற்
பிறிதொன் றறியேன் பிரம்மகை வல்ய
நிறைவு சொரூபமா நீடலுற் றேனே.

1963. வீணிற் கலங்கி வெறும்புலமே மெய்போலப்
பேணிக் கிடந்தவகப் பேயேனைப் பேரருளான்
மாணத் திருவடிக்கே மாற்றினுன் சிற்பதத்திற்
காணப் பிறங்கியது கைவல்யச் செம்பதமே.

69. அறிதுயில்

(குறள்)

1964. இமையா விழியளித்த வெம்மான் பதத்திற்
றமியே னறிதுயிலார்ந் தேன்.

(வெண்பா)

1965. துன்னு முடலுலகத் தோற்றமாம் பொய்க்கனவூ
டென்னதியா னென்றலசி யேங்கியநான்—என்னை
வெறுவெளியா வாண்டகுரு வேந்தனருட் பாதத்
தறிவொளியாத் தூங்குகின் றேன்.

70. பெருமிதம்

(கொச்சகக் கலிப்பா)

1966. வாட்டமுற்று மாழ்காத வாறு சிவானுபவ
ஊட்டமென் னுள்ளத் துதவியவாண் டானருளாற்
றேட்டமொன் றின்றிமனஞ் செம்மாந் திருக்கின்றேன்
நாட்டமியல் பாநடக்க ஞான குருபதத்தே.

1967. அடியேனைத் தன்மெய் யடியரொடு கூட்டித்
தடையாது மற்றசிவ சாம்ராச் சியத்திற்
குடியேற வைத்தவருட் கோமா னடிக்கீழ்
அடியே னடைந்தே னபரிமித வாழ்வே.

1968 வேதப் பொருளா மிகவிளங்கு சுத்தவருட்
போத சொரூபப் புமான்செஞ் சரணத்தில்
மேதக்க ஞான விபூதியா முண்மைநலன்
போத விளைதலாற் பூரித்த துள்ளமே.

குறிப்பு :—போத - மிக

71. முடிவுரை

(வெண்பா)

1969. கூடக் கிடைத்த குருத்துவஞா னானுபவம்
பாடக் கிடைத்தவருட் பாக்கியத்தால்—தேடக்
கிடையாப் பெருந்தெய்வக் கீர்த்திகிளர்ந் தோங்கக்
கடையே னடைந்தேன் கனம்.

1970. நீடுபர வுண்மை யிலே நெஞ்சுரமில் லாவெனக்குக்
கூடியது ஞான குருநாதன் கூரருளே;
பீடுபெறு சுத்தப் பிரம்மபதங் காட்டியவன்
சேடுயர்மெய்ஞ் ஞானத் திருவடிச்சீ ரோங்குகவே.

சுபம் சுபம் சுபம்